# அபுல்கலாம்
# பழீல் மௌலானா
## வாழ்வும் பணியும்



றுடானி ஸாஹிர்



பழீல் மௌலானா பவுண்டேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அபுல்கலாம்'
# ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா
# வாழ்வும் பணியும்

***(1920-2013)***

**சட்டத்தரணி றுடானி ஸாஹிர்**

*வெளியீடு:*

*பழீல் மௌலானா பவுண்டேஷன்*

*மருதமுனை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா
வாழ்வும் பணியும்
ஆசிரியர்: றுடானி ஸாஹிர்
பக்கங்கள்: 228+XXXIV
ச.த.நூ.இல. : 978-624-5496-00-6
பதிப்புரிமை : வெளியீட்டாளருக்கு
முதல் பதிப்பு : 2021, ஏப்ரல்
வெளியீடு: பழீல் மௌலானா பவுண்டேஷன், மருதமுனை, இலங்கை
தளக்கோலம்: அப்துல்லாஹ் அஸ்ஸாம்
அட்டைப் படம் : எம்.எஸ்.எம். ஸினான்
அச்சுப் பதிப்பு : ஐபீஸி அச்சகம், கொழும்பு

**Title** : AbulKalam I.M.S.M. Faleel Moulana Vazhvum Panium
**Editor** : Rudane Zahir
**Pages** : 228+XXXIV
**Copyright** : Publishers
**ISBN** : 978-624-5496-00-6
**Layout** : Abdullah Azzam
**Cover Designing** : M.S.M. Sinan
**Publishers** : Faleel Moulana Foundation,
Noor Mahal, Mashoor Moulana Road,
Maruthamunai 04, Tel 067 22 20734
faleelmoulanafoundation@gmail.com
**Printed by** : IPC, Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா
*(1920 - 2013)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கௌரவ பணிப்பாளர் ஏ.பீ.எம். அஷ்ரப் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

மருதமுனையின் மூத்த கல்விமான், சமயப் பெரியார் மர்ஹூம் அல்ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களது வாழ்க்கை சரிதையைத் தொகுத்து பழீல் மௌலானா பவுண் டேஷன் சார்பில் வெளியிடப்படும் 'அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா வாழ்வும் பணியும்' என்ற நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மர்ஹூம் மௌலானா அவர்கள் எனது தந்தை மர்ஹூம் ஆதம் பாவாவின் நெருங்கிய நண்பராவார். 1970களில் மௌலானா அவர்கள் ஓர் அதிபராக அநுராதபுரம் இஹல கொட்டியாவ பகுதிக்கு வருகை தந்து பல உன்னத கல்விப் பணிகளையும், சமய, சமூகப் பணிகளையும் மேற்கொண்டவர் என்பதில் ஐயமில்லை. இவரது வருகையின் பின்னர்தான் கொட்டியாவ, கோழிபந்தாவ, அசரிக் குளம், இக்கிரிகொல்லாவ, கஹடகஸ்திகிலிய போன்ற அனுராதபுர முஸ்லிம் கிராமங்கள் கல்விரீதியில் எழுச்சி அடைந்தன என்பதை இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது மாணவர்கள் சாட்சி யாளர்களாக பெருமையாகப் பேசிக் கொள்வர்.

மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் எனது சொந்த ஊரான இஹல கொட்டியாவ மாணவர்களின் அறிவு, திறன், மனப்பான்மை என்பவற்றைக் கட்டியெழுப்பியதோடு நின்று விடாமல், பொது மக்களின் ஆத்மீகத் தேவையை உணர்ந்து முகைய்யதீன் ஜும்ஆ மஸ்ஜிதையும் 'நூறாணிய்யா' மத்ரஸாவையும் ஆரம்பித்து, அம் மஸ்ஜிதில் முதலாவது குத்பாவையும் ஆற்றியமை குறிப்பிடத் தக்கது. இதனால் அம்மக்கள் மிகுந்த ஆத்மீகப் பயனை அடைந்து 'நூறாணிய்யா மௌலானா' என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கி அன்னாரை வாழ்த்திப் போற்றியமை பசுமரத்தாணி போல் இன்றும் மக்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆசிச் செய்தியை எழுத முன்னர் இந்நூலின் வரைவுப் பிரதியை வாசித்தபோது, மர்ஹூம் மௌலானா பன்முக ஆளுமை கொண்ட ஒரு கல்விமான் மட்டுமல்ல, ஓர் ஆத்மீகப் பெரியார் என்ப தையும் நான் புரிந்து கொண்டேன். செல்லும் இடங்களிலெல்லாம் 'ஆளிடைத் தொடர்புகளை' உருவாக்கி மக்களை தன் வயப்படுத்தி, தன்னிசைவாக்கும் காந்த சக்தியுடைய மனிதராக (Charismatic Person) அவரை என்னால் மதிப்பீடு செய்ய முடிகின்றது.

எனது குடும்பத்திற்கும் பழீல் மௌலானாவின் குடும்பத்திற்கும் இடையே ஓர் ஆத்மார்த்தமான உறவு எப்போதும் இருந்து வருகிறது. எனது குடும்பத்தார் தமது பிள்ளைகளின் பெயர்களாக மௌலானா வின் பிள்ளைகளது பெயர்களை சூட்டி மகிழும் அளவுக்கு அவ்வுறவு மிக நெருக்கமாக இருந்தது. பழீல் மௌலானாவின் இரண்டாவது மகள் 'தாஜுல் ஐன்' என்ற பெயர் எனது சகோதரிக்கும் அவரது கடைசி மகன் முஹம்மது அலி ஜின்னா மௌலானாவின் பெயர் எனது தம்பிக்கும் சூட்டப்பட்டது. இவ்வாறு மருதமுனைக்கும் கொட்டியாவயிற்கும் இடையே ஓர் உறவுப் பாலம் உருவாகக் காரணமாக அவர் இருந்தார் என்பதன் மூலம் ஒரு மானிடவியல் பண்பாளராக நான் அவரைக் கருதுகின்றேன்.

உத்தியோகபூர்வமாக, மருதமுனைக்கு நான் செல்லும் போதெல்லாம் மர்ஹூம் பழீல் மௌலானாவின் பிள்ளைகளுடைய வீடுகளுக்கு நான் விஜயம் செய்வதோடு, அன்னார் உயிர்வாழும் போதெல்லாம் விட்டுச் சென்ற இனிய, மறக்க முடியாத நினைவு களைப் பகிர்ந்து கொள்வதுண்டு. அல்லாஹ் அன்னாருடைய பாவங்களை மன்னித்தருளவும் அவரது கப்ருடைய வாழ்வு சுவர்க்கப் பூஞ்சோலையாக மாறவும் துஆ செய்கின்றேன்.

***ஏ.பீ.எம். அஷ்ரப்***
***பணிப்பாளர்***
***முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்***
***2020.10. 07***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் வழங்கிய விசேட செய்தி

**Embassy of the State of Palestine**
**Colombo- Sri Lanka**

سفارة دولة فلسطين
كولومبو- سريلانكا

No: EMB/MOFA/02/2021/12
Date: February 8, 2021

الرقم:
التاريخ:

## MESSAGE FROM AMBASSADOR OF THE STATE OF PALASTINE

I have went through the translated copy of chapter- 4 of this book 'Abulkalam I.M.S.M.Faleel Moulana Vazhvul Paniyum' edited by Brother Rudane Zahir (Attorney-at-Law), which proved very interesting and informative reading.

I admire the contribution of 'Abulkalam' I.M.S.M.Faleel Moulana has made to his country his people and his community in all spheres of his life especially on education, Social and political level.

I deeply appreciate his stand and support for the Palestinian people's struggle against the Zionist movement from the inception of the occupation of Palatine before 1948, along with the crimes committed by the Zionist criminal gangs and organization. This indicates the belief of liberty, freedom and struggle against occupation which was also the main pillar of the national movement in Sri Lanka, at the time suffering under colonial rule like Palestine, where British supported the Zionist Movement in all aspects including military and financial support.

I take this opportunity to wish Sri Lanka and its people unity and prosperity and progress which can be achieved through understanding mutual respect and harmony.

Sincerly,

**Dr. Zuhair M.H. Dar Zaid**
**Ambassador of the State of Palestine**

110/10 Wijerama Mawatha, Colombo 7, Sri Lanka
P.O. Box 204.
Email: palembsrilanka@gmail.com
Tel: +94 11-2695991, Fax: +94 112695992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமுனை ஜம்இய்யதுல் உலமா, அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் பொதுநலன்சார் அமைப்புக்களின் சம்மேளனம் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷனினால் வெளியிடப்படும் 'அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா வாழ்வும் பணியும்' எனும் நூலுக்கு மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா, அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் பொதுநலன்சார் அமைப்புக்களின் சம்மேளனம் சார்பாக ஆசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

'அபுல்கலாம்' ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் மருதமுனையின் தலைமகன்களில் ஒருவராகவும் மூத்த கல்விமானாகவும் தீவிர இறைநேசராகவும் வாழ்ந்து இறைவனடி சேர்ந்ததையிட்டு முதலில் அவரின் மறுமை நல்வாழ்வுக்காக எல்லாம் வல்ல இறைவனிடம் இருகரமேந்திப் பிரார்த்திக்கிறோம்.

பழீல் மௌலானா அவர்கள், இம்மருதமுனைக் கிராமத்தின் நற்குடும்பத்தில் பிறந்து, தனது ஆரம்ப காலத்தில் இருந்தே கல்வி மேம்பாட்டுடன் சேர்த்து, தீவிர இறைநேசராகவும் செயற்பட்டு வந்தார். தனது உயர்கல்வியை முடித்து ஆசிரியப்பணியில் இணைந்த இவர், இலங்கையின் பல பாகங்களிலும் கல்விப் பணியுடன் இணைந்ததாக கிராமங்களின் பௌதிக, கலாசார அபிவிருத்தியிலும் பெரும் பங்காற்றியுள்ளார். தனது கல்விப் பணியின் இறுதிக்காலத்தில் தனது சொந்த ஊரான மருதமுனைக்குத் திரும்பிய அவர், மருதமுனையின் கல்வி அபிவிருத்தியிலும் மருதமுனையின் பழம்பெரு இறையில்லங்களான மஸ்ஜிதுல் கபீர், மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆ பள்ளிவாசல்களின் புனர்நிர்மாணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளிலும் அதிக ஈடுபாடு உடையவராகவும் திகழ்ந்தார். விஷேடமாக, அன்னார் இறைவனடி சேரும் வரையும் மருதமுனை மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலில் நூற்றாண்டு காலமாக நடைபெற்றுவரும் புஹாரி மஜ்லிஸ் சிறப்பு நிகழ்வுகளில் தவறாது சமுகமளித்து நிகழ்ச்சியை சிறப்பித்து வந்தமையை இன்றும் மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் சமூகம் நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றது.

இக்கிராமத்தின் சமய, சமூக, கலாசார விடயங்களில் முக்கிய பங்காளியாக இருந்த இவர், மற்றவர்களை மதிக்கும், கண்ணியப் படுத்தும் ஒரு மாமேதையாகத் திகழ்ந்தார். சகல மக்களினதும் இன்ப துன்பங்களினதும் பங்கு கொண்ட இவர், மருதமுனை ஜம் இய்யத்துல் உலமா சபையோடும் பள்ளிவாசல்களுடனும் தனது இறுதிக் காலம் வரை தொடர்புகளோடு திகழ்ந்தார். குறிப்பாக, மருதமுனை அல்-மினன் பள்ளிவாசல் அபிவிருத்தியில் கூடுதலாக கவனம் செலுத்திவந்த நிலையிலேயே இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் வாழ்நாள் சேவைகளை நினைவுகூர்ந்தும் நமது அடுத்த தலைமுறையினருக்கு அவர் குறித்த வரலாற்றுத் தகவல் களைக் கொண்டு சேர்க்கும் வகையிலும் பழீல் மௌலானா பவுண்டேஷனினால் வெளியிடப்படும் இந்நூலுக்கு எமது சம் மேளனம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அஷ்ஷெய்க் எம்.ஐ. ஹுஸைனுத்தீன் (றியாழி)**
**தலைவர்**

**ஜனாப். எம்.எல்.எம். ஜமால்தீன் J.P.**
**இணைச் செயலாளர்**
***01.03.2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழீல் மௌலானா பவுண்டேஷனின் கௌரவ தலைவர் சட்டத்தரணி எப்.எம். அமீறுல் அன்சார் மௌலானா (B.A, LLB) வழங்கிய

# ஆசியுரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து, நமது தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தைக் கூறிய வனாக இந்நூல் வெளியீட்டுக்கான ஆசிச் செய்தியை வழங்கு கின்றேன். என் தந்தை செய்யித் இதுரூஸ் மௌலானா செய்யித் பழீல் மௌலானா அவர்களின் நினைவாக 'அபுல்கலாம் பழீல் மௌலானா வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் நூல் ஒன்று தொகுக்கப்பட்டு நமது தாய்மண் மருதமுனையில் வெளியிடப் பட வேண்டும் என்ற அவா இன்று நிறைவேறுவதையிட்டு பழீல் மௌலானா பவுண்டேஷன் தலைவர் என்ற வகையில் அக மகிழ்கின்றேன்.

அன்பிற்கு தாய் என்றும் அறிவுக்கு தந்தையென்றும் சான் றோர்கள் மொழிந்து சென்றனர். அதனை எமது பெற்றோர் தம் வாழ்வில் கடைப்பிடித்து நிலைநாட்டி மறைந்தும் சென்றனர். இந்நூல் ஒரு நீண்டகால முயற்சியின் (8 வருடங்கள்) பெறு பேறாக எழுத்துருவம் பெற்று வெளிவரும் நிலையில், இந்நூலின் உள்ளடக்கமாக இருக்கின்ற ஆய்வுரைகள், கவிதைகள், நினைவுக் கட்டுரைகள் என்பன அன்னாரின் ஆளுமை, தமிழ்ப் புலமை, கல்விப் பணிகள், சன்மார்க்கப் பங்களிப்புக்கள் மற்றும் அவர்களின் வாழ்வியல் அறங்கள் பற்றிப் பேசுகின்றன.

***31.12.1920*** முதல் ***25.02.2013*** வரையான ஏறக்குறைய **92** வருடங்கள் இவ்வையகத்தில் வாழ்ந்த எமது தந்தை அவரது மறைவுக்குப் பின்னரும் பலரால் சிலாகித்துப் பேசப்படுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் பாராட்டப்படுவதையும் அன்னாருக்காக பலரும் கரம் ஏந்தி துஆக் கேட்பதையும் என் வாழ்க்கைப் பாதையில் அனுபவரீதியில் பலமுறை கண்டுள்ளேன்.

நான் இன்னாரின் மகன் எனக் கூறியதும் "நீங்கள் பழீல் மௌலானாவின் மகனா?" என புருவம் உயரக் கேட்டு, அவரின் குணநலன்கள், சேவைகள், மார்க்கப் பணிகளை நினைவுகூரும் போது அன்னாரின் பிள்ளையாக நான் பிறந்ததை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்ததுண்டு.

இந்நூல் வெளியீட்டின் நோக்கம் தந்தையின் புகழ்பாடுவதோ, குடும்ப குலபெருமை பேசுவதோ அல்ல. வாழும் தலைமுறையும் அடுத்துவரும் தலைமுறைகளும் அன்னார் போன்ற முன்னோர் களின் வாழ்க்கை சரிதைகளைக் கற்றறிந்து தெரிந்துகொள்வதன் மூலம் தமது சமூகத்தையும் ஊரையும் முன்கொண்டு செல்வதற் கான நன்னெறிமிக்க புத்திஜீவித தலைமைகளை உருவாக்க வேண்டும் என்பதே ஆகும்.

இறுதியாக, இந்நூலை வெளிக்கொணர்வதில் மிகுந்த ஆர்வம் காட்டிய எனது அன்புக்குரிய சகோதரர் அஷ்ஷெய்க் அஹ்மத் அன்சார் மௌலானா (நளீமி), M.A, தொகுப்பாசிரியர் சட்டத் தரணி றுடானி ஸாஹிர் மற்றும் கட்டுரையாசிரியர்கள், நூல் வெளியீட்டு விழாக் குழுவின் உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர் கள், நலன் விரும்பிகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மறைந்த எம் தந்தையின் கப்றுடைய வாழ்வும் மறுமை வாழ்வும் அல்லாஹ்வின் பேரருள் பொருந்தியதாக அமைய வல்ல இறைவனை உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

***சட்டத்தரணி எப்.எம். அமீறுல் அன்சார் மௌலானா***
***மருதமுனை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எப்.எம். அஹ்மத் அன்சார் மௌலானா (நளீமி) அவர்கள் வழங்கிய

# பதிப்புரை

'மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் வாழ்வும் பணியும்' என்ற ஆய்வு நூல் 2013இல் நிகழ்ந்த அன்னாரின் வபாத்தைத் தொடர்ந்து கருக்கட்டிய ஒரு குடும்பச் சிந்தனையாகும். அன்னாரால் நிறுவப்பட்ட 'பழீல் மௌலானா பவுண்டேஷன்' ஊடாக மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சிகளின் பின்னணியில் இன்று அம்முயற்சி, சுமார் 8 வருடங்களில் நூல் வடிவில் பெறுபேறாக செயலுருப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் எமது குடும்பம் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைகின்றது.

எமது தந்தை மர்ஹூம் பழீல் மௌலானா ஒரு சமயவாதியாக, சமூகவாதியாக கல்விமானாக... பல்வேறு பரிமாண ஆளுமைச் சிறப்புகளைக் கொண்டிருந்தார் என்பதை இந்நூலில் உள்ளடங்கியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் துலாம்பரமாக எடுத்தியம்புகின்றன. 'பண்பாட்டின் சிகரம் பழீல் மௌலானா' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற அதிபர் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. சமது அவர்கள் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை அன்னார் ஓர் சமயப் பற்றாளர் என்பதையும், அட்டாளைச் சேனை தேசிய கல்வியியல் கல்லூரியின் தொழில்சார் கற்கைநெறி விரிவுரையாளர் ஜனாப் ஏ.ஜே.ஏ. வஸீல் அவர்கள் எழுதியுள்ள 'இலங்கை முஸ்லிம்களின் கல்வி எழுச்சியில் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஒரு வரலாற்று ஆய்வு' என்ற ஆய்வுக் கட்டுரை அன்னார் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் தடம்பதித்த நாடறிந்த கல்விமான் என்பதையும் இலக்கிய உசாவுகைகள், ஆய்வு முறையியல் மூலம் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

பல்கலைக்கழகங்களில் கலைப் பிரிவுகளில் கற்கும் மாணவர்கள் மட்டுமல்ல; பொதுவான ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவோருக்கும் நாளாந்த மரபுரீதியான வாசகர்களுக்கும் உசாத்துணைத் தேடலாக அமையக் கூடிய அரிய பல தகவல்கள் இந்நூலில் விரவிக் காணப்படுவது இதன் முக்கிய சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடும்பத்தின் இளம் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் இந்நூலை வெளிக்கொணர்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். மர்ஹூம் பழீல் மௌலானாவின் பூர்வீகம், யெமன் நாட்டின் தொடர்பு 'அல்-அஹ்தல்' அரேபிய குடும்பம் மருதமுனையில் காலூன்றிய விதம் என்பவற்றை நிரூபிப்பதற்கான 'இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுச் சான்றாதாரங்கள்' என்ற அம்சத்தை எழுத்திலும் புகைப்படத்திலும் வெளிக்கொணர இலங்கை சுவடிக்கூடங்கள் திணைக்களம் வரை பல தடவைகள் சென்று, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, கலாநிதி எம்.ஐ.எம். அமீன், பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் ஆகியோரின் வழிகாட்டல், ஆலோசனைகளைப் பெற்று, இந்நூல் சமுதாய மட்டத்தில் அங்கீகாரம் பெறுவதற்கான முயற்சிகளில் நானும் சட்டத்தரணி றுடானி ஸாஹிர் அவர்களும் இணைந்து பணியாற்றியமை ஆத்ம திருப்தியைத் தருகின்றது.

வருடா வருடம் நினைவுக் கட்டுரைகளை தேசிய பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் இணையதளங்களிலும் எழுதி வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் 'கலாபூஷணம்' பி.எம்.எம்.ஏ. காதர் அவர்களின் ஊடகப் பங்களிப்பை 'பழீல் மௌலானா பவுண்டேஷன்' இக்கட்டத்தில் மனமார்ந்த நன்றியறிதல்களுடன் நினைவுகூர்கின்றது.

அத்தோடு இந்நூல் அச்சகத்திற்கு செல்லும் முன்னர் செவ்வை பார்த்த 'பழீல் மௌலானா பவுண்டேஷன்' தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எப்.எம். அமீருல் அன்ஸார் மௌலானா மற்றும் 'அல்-மருதமுனை' சஞ்சிகை ஆசிரியர் சமூக ஆர்வலர் ஜனாப் எம்.ஏ. ஸி.எம். அப்துல் காதர் அவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய 'ஜெஸா கிரபிக்ஸ்' உரிமையாளர் சகோதரர் ஜெஸீம் அவர்களுக்கும் இந்நூல் இறுதி வடிவம் பெற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகோதரர் அப்துல்லாஹ் அஸ்ஸாம் (இஸ்லாஹி) அவர்களுக்கும் பதிப்பாசிரியர் என்ற வகையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எப்.எம். அஹ்மத் அன்ஸார் மௌலானா (நளீமி)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**ஆசிரிய வாண்மை விருத்தி நிலையம்,**
**சம்மாந்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் வழங்கிய அணிந்துரை

இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் பரந்த கண்ணோக்கில் பார்ப்பதனால் கிழக்கு மாகாண முஸ்லிம் ஆசிரியர்கள் மற்றும் தமிழ் ஆசிரியர்களின் வகிபாகம் பற்றி கிழக்கு மாகாணத்தவர் எப்போதும் பெருமைப்பட முடியும்.

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்த முஸ்லிம் பிரதேசங் களின் பின்தங்கிய பாடசாலைகள் முதல் முன்னணிப் பாட சாலைகள் வரை இவ்வாசிரியப் பரம்பரையினரின் அயராத முயற்சியினாலும் தன்னலமற்ற சேவையினாலும் ஆற்றிய கல்வி மற்றும் சமூகப் பணிகள் பற்றி நாம் அறிந்துள்ளோம். இலக்கிய பதிவுகள் இல்லாத குறையைத் தவிர அவை இன்னும் எமது மனங்களில் நிறைவான இடத்தைப் பெற்றுள்ளன.

பல முஸ்லிம் பிரதேசங்கள் கல்வியில் பின்தங்கி, ஆசிரியர் பற்றாக்குறையினால் தவித்த காலங்களில் இவ்வாசிரியர்கள் தமது கல்விச் சேவையை வழங்கி உள்ளார்கள். தாம் ஆசிரியப் பணி புரிந்த கிராமங்களின் வளர்ச்சிக்கும் தமது நேரத்தை அவர்கள் செலவிட்டுள்ளனர். பரந்த அளவில் தமிழ் முஸ்லிம் ஆசிரியர்களின் இப் பணி பல பாகங்களில் நடந்துள்ள போதும் தமது வாழ்நாளில் சிறந்த காலப்பகுதியை சொந்த ஊர்களை விட்டு வெளியேறிப் பணி செய்தமை பற்றிய பதிவுகளோ வரலாறோ நம்மிடமில்லை.

இன்றிருப்பதைவிட 1970களுக்கு முற்பட்ட கால கல்விச் சூழலும் எதிர்பார்க்கப்பட்ட அர்ப்பணிப்புகளும் வேறுபட்டவை. உதவி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களின் பொறுப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரியவை. கிராமப்புறப் பாடசாலைகளை கீழ் மட்டத்தி லிருந்து படிப்படியாக மேலெழச் செய்யும் பொறுப்பை அவர் களும் சுமக்க வேண்டி இருந்தது. பாடசாலைக்கான மாணவர் வரவையும் அவர்களே கண்காணித்தனர். மாணவர்களின் பெற்றோரைச் சந்தித்து பாடசாலைக்கு பிள்ளை அனுப்பப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். கிராம வளர்ச்சி யிலும் பங்கேற்றனர்.

அதனால் ஊர் மக்கள் இவர்களை ஆசிரியர்கள் என்பதற்கும் மேலாகவே மதித்தனர். கல்வியோடு சமூக, குடும்ப விடயங்க ளிலும் கிராம மக்கள் ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர். பல்வேறு பொறுப்புக்களைச் சுமந்து கல்விக்காக அர்ப்பணிப்புக்களைச் செய்வது தவிர்க்க முடியா திருந்த காலப்பகுதி 1970 கள் வரை நீடித்ததையே முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் நாம் பார்க்கிறோம். பழீல் மௌலானா இந்தக் காலப்பகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் ஆசிரியப் பரம் பரையைச் சேர்ந்தவர். இங்கு கூறப்படுபவை பற்றி ஒரு வரலாறு எழுதப்படும் பொழுது பளீல் மௌலானா போன்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னுதாரண ஆளுமைகள் பற்றி மேலும் செய்திகளைப் பெற முடியும்.

கிழக்கு மாகாணத்தில் கல்வி வளர்ச்சியை இன அடிப்ப டையில் பார்க்கும்போதுதான் ஏற்ற இறக்கம் பற்றி அனுமானிக்க முடிகிறதே ஒழிய, கிறிஸ்தவ மிஷனறிப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் இப் பிரதேசத்தில் முக்கியமான கல்விப் பணிகளை இங்கு ஆரம்பித்து விட்டன. புளியந்தீவு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி 1814 ஆரம்பிக்கப்பட்டு விட்டது. 1820இல் மட்டக் களப்பு வின்சன்ற் கல்லூரி ஆரம்பிக்கப்படுகிறது. நாம் தெரிந் திருக்கும் வரலாற்றின்படி நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் கல்முனை உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியத்தில் ஆரம்பிக் கப்பட்டு விட்டன. 1920களாகும்போது இந்துக்கள் மத்தியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10க்கும் அதிகமான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அதேவேளை, முஸ்லிம்களுக்கு என்று முழு மட்டக்களப்பு மாவட்டத்திலும் முஸ்லிம் பாடசாலை என்று கூற எதுவும் இருக்கவில்லை. சமயச் சார்பற்றதாக அரசினர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் அங்கும் முஸ்லிம் மாணவர்களின் தொகை கவலைக்கிடமானதாகவே இருந்தது.

இவை தமிழ் மொழிப் பாடசாலைகள். முஸ்லிம் மகா வித்தியாலயங்கள் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கிராமக் கல்வியில் எவ்வித முன்னேற்றமும் நிகழவில்லை.

மட்டக்களப்பிலும் கல்முனையிலும் இந்த மிஷனறிப் பாடசாலைகளுக்கு சென்று குறிப்பிட்டளவு முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொண்டனர். கல்லடி உப்போடையில் சுவாமி விபுலாநந்தரினால் நிறுவப்பட்டிருந்த சிவானந்தாவிலும் குறிப்பிட்ட அளவு முஸ்லிம் மாணவர்கள் கல்வி பெற்றுள்ளனர். பொதுக் கல்வியில் தடைகள் இருந்தபோதும் ஆங்கிலக் கல்வி ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டதை இந்த வரலாறுகளில் இருந்து உணர முடிகிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை பொதுக் கல்வி வளர்ச்சியில் சில தடைகள் இருந்தன.

அதனால் கிராமங்களை உட்படுத்திய, போது மக்கள் சார்ந்த கல்வியையும் நவீன கல்விச் சூழலையும் உருவாக்குவதில் எல்லாப் பிரதேசங்களைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம்கள் பல சாவால்களை எதிர்நோக்கினர். கல்வி முன்னேற்றம் ஏற்பட அடுத்த 3 தசாப்தங்கள் முஸ்லிம்கள் காத்திருக்க வேண்டி இருந்தது. இதன் ஒரு கட்டத்தில்தான் பளீல் மௌலானாவின் கல்விப் பிரவேசம் அல்மனாரில் 1925 களில் ஆரம்பமாகிறது

கிழக்கு மாகாணத்தில் அப்போது முஸ்லிம்களிடையே மெல்ல ஆரம்பித்திருந்த ஆங்கிலக் கல்வித் தூண்டுதலின் விளைவாக மௌலானாவின் அடுத்த கட்ட கல்வி கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாஹிராவில் ஆரம்பிக்கிறது. கல்வித்துறையில் சாதனைகள் புரியக் கூடிய எதிர்காலத்தை ஸாஹிராவின் வழிகாட்டல்கள் அவருக்குத் தந்திருக்க வேண்டும். 'கல்வி' அவரது வாழ்நாளின் இலட்சியமாகியதையே அவரது வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'நல்லாசிரியர்' உயர்ந்த 'கல்வியாளர்' என்பன பெரிய தகுதிகள். அவற்றைப் பெற நினைப்போருக்கு பழீல் மௌலானா போன்றவர்களின் வரலாறுகள்தான் கண் முன்னால் உள்ள வழி காட்டுதல்கள். கல்வி வளர்ச்சிக்கு உரமானவர்களின் சாதனை களையும் சேவைகளையும் பொதுமக்களும் மாணவர் சமுதாய மும் தெரிந்திருப்பது அவசியம்

1940, 1950களில் கொழும்பு ஸாஹிராவில் கல்வி கற்றவர் களிடம் காணப்பட்ட அர்ப்பணிப்புமிக்க சேவை உணர்வையும் கல்வி மேம்பாடு பற்றிய தீவிர அக்கறையையும் சமூக உணர்வை யும் மௌலானாவும் வெளிப்படுத்தி உள்ளார். அன்றைய முஸ்லிம் சமூக மற்றும் அரசியல் தலைவர்களின் கோரிக்கைகளும் இந்த உணர்வுகளுக்கு அதிகம் இடமளித்து வந்ததையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆசிரியராகத் தொழிலை ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய பொறுப்பு உண்டு. அது ஆசிரியத் தொழிலை சரிவரச் செய்வதும் தாம் பணியாற்றும் கிராமத்தின் முன்னேற் றத்திற்கும் கல்விச் சூழல் விருத்திக்குப் பணி செய்வதுமாகும். அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்ற சிந்தனையாளர்கள் இந்தக் கருத்துக் களைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். கல்வியும் அறிவு வளர்ச்சியும் கிராம முன்னேற்றமும் சமமாக நடைபெற வேண்டும். கல்வியின் வெற்றி பின்னர் குறிப்பிட்ட இரண்டையும் நிலை நாட்டுவதில் தான் தங்கியுள்ளது. இன்றும்கூட இவற்றை நோக்கிய தாகத்தான் கல்விச் செயற்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்கமற்ற நிலையில் ஆசிரியப் பணியையும் அவற்றையும் கடந்து முழு சமூகத்துக்குமான கல்வி மேம்பாட்டுக்குமான பணியையும் மேற்கொண்டவர்களின் கைகளில்தான் அன்றைய முஸ்லிம்களின் கல்விச் சாதனை தங்கியிருந்தது. பதியுதீன் மஹ்மூத் ஆசிரியப் பரம்பரையில் இருந்து வந்தவர்தான் - அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தாபகர் ஷாபிமரைக்கார் ஸாஹிரா கல்லூரியின் அதிபர், ஆசிரியத் தந்தை மஷூர் இவ்வாறு கல்வி யோடு கல்வி மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவை யாற்றிய பலரைப் பற்றி இங்கு பேசலாம். இவ்வாறு வரையறுத் துக் கூறக்கூடிய கல்வி இலட்சியவாதிகளின் இலக்கைப் போன்ற தாகத்தான் மௌலானாவின் கல்விப் பயணமும் அமைந்துள்ளது.

அகில இலங்கை கல்வி மாநாட்டிலும் இன்னும் பல தேசிய பிராந்திய சபைகளிலும் அமைப்புக்களிலும் பழீல் மௌலானா அங்கத்தவராக இருந்தும் பல சேவைகளை ஆற்றியுள்ளார்.

மௌலானா அவர்கள் அகில இலங்கை கல்வி மாநாடு **1964**இல் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஸ்தாபக உறுப்பினராகவும் அந்த மாநாட்டின் உப தலைவர்களில் ஒருவராகவும் ஷாபி மரைக்கா ருடன் இணைந்து பணியாற்றியமை அந்த இலக்குகளை அடைவ தற்காகவே என்று கூறலாம். முஸ்லிம் சமூகத்தின் பொதுவான மேம்பாட்டிற்கும் தரமான கல்விச் சூழலைப் பாதுகாப்பதற்கும் அரசின் கல்விக் கொள்கைகளை ஆராய்ந்து தேவையான தீர்வு களை வழங்குவதற்கும் இவை போன்ற கல்விச் சேவைகளுக்காகவும் தேசிய மட்டத்தில் அந்த மாநாடு செயற்பட்டது. அதில் அவர் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியும் சமூக முன்னேற்ற மும் என்ற நோக்கில் செயற்பட்டதோடு சமய ஆன்மிக நடவடிக்கை களில் சேவை செய்வதிலும் மௌலானா முன்னணியில் இருந் துள்ளார். தமது சொந்த ஊரான மருதமுனையின் வளர்ச்சியிலும் அவர் தமது பங்கை வழங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலானா ஒரு நல்லாசிரியர், மூத்த கல்விமான், சமூக சேவையாளர். சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். மருதமுனை மக்கள் பெருமை கொள்ளக்கூடிய ஆளுமையாகத் திகழ்ந்தவர் பளீல் மௌலானா. அவரை நினைவுகூர்ந்து வெளி யிடப்படும் இந்த நூல் எதிர்காலச் சந்ததியினருக்கும் பயனுள்ள தாகவே அமையும். நாட்டிற்கும் சமூகத்திற்கும் சேவையாற்றி கல்விச் சேவையிலும் தம்மை அர்ப்பணித்தவர்களை நினைவு கூர்வது மிகப் பெரிய சமூகப் பணியாகும். இவர்களிடம் இருந்து சமூகம் தெரிந்து கொள்ள வேண்டிய பல பாடங்கள் உள்ளன. அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

**பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்**
**ஹீரஸ்ஸகல, பேராதெனிய**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கின்றேன்.*

*மருதமுனைத் தாய் பெற்றெடுத்த தவப் புதல்வர்களுள் 'அபுல் கலாம்' பழீல் மௌலானா அவர்கள் தனியான இடத்தை வகிக்கின்றார். மருதமுனை மண்ணிலிருந்து தோற்றம் பெற்று தேசிய மட்டத்தில் இயங்கிய ஓர் ஆளுமையான அவர், சுய ஒழுக்கமும் இறைபக்தியும் நிரம்பப் பெற்ற கர்ம வீரர். தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை கல்வி அபிவிருத்தியிலும் சமூக, சமய விருத்தியிலும் அர்ப்பணித்தவர்.*

*மருதமுனையில் பிறந்து வளர்ந்த அவருக்கு புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களைத் தவிர்த்து வேறு முன்னோடிகளைக் கண்டு கொள்ள முடியாதிருந்த காலத்தில், தனது தந்தையார் கலீபத்துஷ் ஷாதிலி இதுரூஸ் மௌலானா (பாக்கவி) அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கும் பெருமதிப்பும் அவர் கொழும்பு ஸாஹிராவில் சேரவும் டாக்டர் ரீ.பி. ஜாயா, சேர் ராஸிக் பரீட் போன்ற தேசியத் தலைவர்களின் கீழ் நேரடியாகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தது.*

*அரசியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் கிழக்கு மக்கள் பின்னடைந்திருந்த, சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில், அவர் சர்வதேச முஸ்லிம் சமூகம் குறித்து கொண்டிருந்த பிரக்ஞையும் ஆர்வமும் அச் சிந்தனையை இளைஞர்மயப்படுத்த தன் பதின்ம வயதுகளில் 'இளைஞர் முஸ்லிம் லீக்' எனும் இயக்கத்தினை மருதமுனையில் நிறுவி எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவர் கொண்டிருந்த தீரமும் எமது தலை முறையை வியப்பூட்டுகின்ற விடயங்களாகும்.*

*சமூக, சமய மறுமலர்ச்சிப் பணிகள் தவிர்த்து, இலக்கியத்துறையில் அவருக்கிருந்த ஆர்வம் குறிப்பிட்டு சொல்லக்கூடிய இன்னுமோர் அம்சமாகும். பழீல் மௌலானா பெரும் கவிஞராக அல்லது எழுத்தாளராக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டிராத போதும் அவரது கவிதைகளை வியந்து பாராட்டும் அருட் சகோதரர் கலாநிதி எஸ். ஜே. யூ. மத்தியூ அவர்கள் பழீல் மௌலானாவை 'தமிழறிஞர்' என சிறப்பித்துக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

மருதமுனையின் வரலாறு குறித்து பழீல் மௌலானா அவர்கள் பல குறிப்புக்களை விட்டுச் சென்றாலும் **1995**இல் 'மருதமுனை மாண்மியம்' எனும் தலைப்பில் தொகுக்கப்பட்ட குறிப்புக்களை நூலாக விரிவுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சியை முழுமைப்படுத்த அவரால் முடியவில்லை. இம்முயற்சி வெற்றிபெற்றிருக்குமேயானால் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் தொகுத்தளித்த 'மருதமுனை வரலாறு' போன்ற இன்னுமொரு வரலாற்றாவணம் மருதமுனைக்கு கிடைத்திருக்கும்.

**2013**இல் நிகழ்ந்த அன்னராரது மரணத்தின் பின் அவரது மாணவரும் அன்பருமான என்.எம்.எம். இஸ்மாயில் அவர்களால் தொடங்கப்பட்ட பழீல் மௌலானா அவர்களின் சரிதையை நூலாக்கும் முயற்சி என்.எம்.எம். இஸ்மாயில் அவர்களின் திடீர் மறைவையடுத்து தடைப்பட்டது. பின்பு பலர் எடுத்த முயற்சிகள் தொய்வு நிலைக்கு வந்து, ஒரு கட்டத்தில் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்தன. பல்வேறு நூல்களிலும் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் குறிப்புகளும் நினைவுக் கட்டுரைகளும் கடந்த பத்தாண்டுகளுள் பழீல் மௌலானா அவர்கள் குறித்து வரையப்பட்டுள்ளபோதும் அன்னாரின் நிறைவான ஆளுமையை வெளிப்படுத்த ஒரு முழுமையான நூலின் தேவையை பழீல் மௌலானா பவுண்டேஷன் உணர்ந்ததன் வெளிப்பாடே இம் முயற்சியாகும்.

எனது பாட்டனாரான அன்னாருடன் சிறு வயது முதலே நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியதை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகிறேன். இந்நூலில் வெளிக்கொணரப்பட முயற்சிக் கப்பட்டுள்ள அவரது பன்முக ஆளுமையையும் அவரின் பணிகளையும் என்னால் நேரடியாகப் பார்க்க முடியாது போனாலும் கூட, அவரது அந்திம காலத்தில் தனிப்பட்ட உதவியாளரைப்போல் நெருங்கிப் பணியாற்றியபோது நேரடியாக அன்னாரிடமிருந்தே அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்தது. அதுவே அவரது சரிதையைத் தொகுத்தளிக்க வேண்டும் எனும் எண்ணத்தை என்னுள் ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றாருக்கு உதவுவதும் உறவினர்களின் நலனோம்புவதும் அன்பர்களை குசலம் விசாரிப்பதும் அவரது அன்றாட விடயங்கள். பத்திரிகை வாசிக்காது தன் அன்றாடக் கருமங்களை ஆரம்பிக்க மாட்டார். அன்றாட நேரசூசியும் நிகழ்ச்சிநிரலும் அன்னாரிடம் எப்போதும் கைவசம் இருக்கும். தூரப் பிரதேச உறவுகளைத் துண்டித்துவிடாது தனது அன்பர்களுக்கு மடல்கள் வரைந்தோ அல்லது தொலைபேசி அழைப்பெடுத்தோ அவ்வுறவுகளைப் பேணுவார். முக்கிய நிகழ்வுகளெனின், சிரமம் பாராது தொலைதூரத்திற்கும் பயணம் செய்வார். தனது சிறிய, பெரிய விவகாரங்களையும் பின்னிரவில் நாட் குறிப்பேடுகளில் குறித்துக் கொள்வதை நான் அருகிலிருந்து அவதானித்திருக்கின்றேன். அவர் அணியும் ஆடைகளும் கையிலிருக்கும் ஊன்றுகோலும் அவரது வசீகரத்தை மேலும் அதிகரிப்பவை. முதிர்ந்த வயதிலும் அவர் இளைஞரைப் போல் எம் முன்னே சுற்றிக் கொண்டிருந்தார். சுறுசுறுப்பு அவரின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளிலொன்று.

முன்மாதிரியான அன்னாரது வாழ்க்கைச் சரிதையை ஆய்வு முறையினூடாகக் கொண்டுவரும் இம்முயற்சி அவ்வளவு இலகுவானதாக அமையவில்லை. 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் அன்னாரும் நானும் இணைந்து தொகுத்த புகைப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள், கடிதங்கள், ஆவணங்கள் உள்ளடங்கலான அன்னாரது சுயவிபரத் திரட்டு இம்முயற்சிக்கு அடிப்படையாய் அமைந்தன. எனது சகோதரி பெனாஸிர் ஸாஹிர் நீண்டநாள் பாதுகாத்து வைத்திருந்த, 1975, 1976ஆம் ஆண்டுகளில் அவரால் எழுதப்பட்ட டயரிக் குறிப்புகள் மேலும் பல அரிய தகவல்களை உள்ளடக்கிய மைய ஆவணமாகும். அதேபோல், அஷ்ஷெய்க் அஹ்மத் அன்சார் மௌலானா (நளீமி) அவர்களினால் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருந்த பத்திரிகைக் குறிப்புகளும் பல்வேறு நபர்களிடமிருந்து பெறப்பட்ட நினைவுக் கட்டுரைகளும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி தகவல்களையும் குறிப்புக்களையும் ஒப்புறுதிப்படுத்தும் நோக்குடன் பல நூல்களை தேடிக் கற்க வேண்டியிருந்தது... அன்னாருடன் தொடர்புபட்ட அல்லது சம்பவங்களுடன் தொடர்புபட்ட நபர்களுடன் பல நேர்காணல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது... அவர் பணியாற்றிய நாட்டின் பல பாகங்களுக்கும் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களையும் பாடசாலை சம்பவத் திரட்டுப் பதிவுகளையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது... இம்முயற்சிகள் யாவும் எனது தேடலை மேலும் வலுப்படுத்தியதுடன் அவர் குறித்து ஒரு புதிய பார்வையையும் எனக்களித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் பொதுமையான அரசியல், சமூக, கலாசார வரலாற்றை சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தொகுப்பதற்கு மருதமுனை மண் பெற்றெடுத்த தவப் புதல்வர்களது சரிதைகள் ஆய்வுரீதியாக முன்வைக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. எனினும், அவ்வாறாக முறையியல் ரீதியாக எழுதப்பட்ட ஆய்வுகள் நம்மிடையே இல்லாத நிலையை ஓரளவேனும் இந்நூல் நிவர்த்தி செய்யும் என நம்புகிறேன். இந்நூலினைத் தொடர்ந்து மருத முனையின் ஏனைய ஆளுமைகளினதும் சரிதைகளை விரிவாகவும் ஆய்வுரீதியாகவும் வெளிக்கொண்டுவர வேண்டியது கற்றறிந்த மருதமுனை சமூகத்தின் கடமையாகும்.

முடங்கியிருந்த இம்முயற்சியானது மீண்டும் தொடங்கப்பட்டு நூல் வடிவில் வெளிவருவதற்கு அஷ்ஷெய்க் அஹ்மத் அன்சார் மௌலானா (நளீமி) பிரதான ஊக்குவிப்பாளராக இருந்தார். அவரின் முயற்சியும் ஊக்கமும் இல்லாதிருப்பின் இந்நூலாக்கம் சாத்தியப் பட்டிருக்க மாட்டாது என்றே எண்ணுகிறேன்.

இந்நூலாக்கத்திற்கு பின்னூட்டங்களைத் தந்துதவிய எனது தந்தையார் எஸ்.எம். ஸாஹிர், சிரமம் பாராது தட்டச்சு செய்து தந்த நண்பர் அஷ்ஷெய்க் ஏ.எம். அர்ஷத் (நளீமி), எம்.ஐ.எம். பாரிஸ் (அபிவி ருத்தி உத்தியோகத்தர்), மாமனார் பீ.எம். அஸார்தீன் (தபால் அதிபர்), பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய நண்பர் சட்டத்தரணி முபாரக் முஅஸ்ஸம் (நளீமி) மற்றும் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நஜ்ஜாஸ் (நளீமி), சகோதரி இம்திஸா ஹஸன், பர்ஹத் பரகதுல்லாஹ் ஆகியோர், அதுபோல் சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம். அமீருல் அன்சார் அவர் களின் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கும் பழீல் மௌலானா பவுண்டேஷன் உறுப்பினர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

ஐதுரூஸ் மௌலானா குறித்த குறிப்புக்களையும் புகைப்படத்தையும் தேடித் தந்த சுவடிகள் திணைக்களத்தின் பொதுசன தொடர்பு அதிகாரி திரு. மஹிந்த தர்மசிரி அவர்களுக்கும் சுவடிகள்கூட உத்தியோகத்தர் களுக்கும் விசேட நன்றிகள். அதேபோல், ஐதுரூஸ் மௌலானா அவர்களின் புகைப்படத்தை கணினித் தொழில்நுட்பத்தில் பிரதி யெடுத்துத் தந்த கல்கத்தா ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகலைமாணி (Faculty of Visual Arts) மாணவன் சுபாஜித் திபார், நண்பர் ஏ.ஏ.எம். நாஸிப் ஆகியோருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

பொறுமையுடன் இந்நூலாக்கத்தினை மேற்பார்வையிட்டு திருத் தங்களைச் செய்து தந்த எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (ஓய்வு நிலை அதிபர்), தேசகீர்த்தி ஏ.எம்.ஏ. ஸமது (ஓய்வு நிலை அதிபர்), பல அரிய தகவல்களைத் தந்துதவிய 'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன், விரிவுரையாளர் ஏ.ஜே.எல். வஸீல் மற்றும் ஆலோசனையும் பேருக்கமும் நூல் வடிவாக்கமும் செய்து தந்த ஊடகவியலாளர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் அஸ்ஸாம் (இஸ்லாஹி), சிறப்பாக அச்சிட்டுத் தந்த IPC அச்சகத்தினர் ஆகியோரது பங்களிப்புக்கள் ஈண்டு குறிப்பிடத்தக்கவை.

அத்துடன், தனக்குரிய நேரங்களை இந்நூலுக்காக ஒதுக்கி பெரும் ஒத்துழைப்பு நல்கிய அன்பு மனைவி ரிஷ்டா அஸார்டீன் பெரும் நன்றிக்குரியவர்.

இறுதியாக... கல்வி, சமூக, கலாசார, வரலாற்றுத் தகவல்களை பரந்தளவில் உள்ளடக்கிய ஆவணம் என்ற வகையில் இந்நூல் தொடர் பான ஆக்கபூர்மான விமர்சனங்கள் மற்றும் காத்திரமான கருத்துக் களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். அவை நமது எதிர்கால முயற்சிகளை இன்னும் செம்மைப்படுத்த உதவும் என நாம் நம்புகிறோம்.

இறைவன் நமது முயற்சிகளைப் பொருந்திக் கொள்வானாக!

***சட்டத்தரணி றுடானி ஸாஹிர்***
***rudanezahir@gmail.com***
***15.03.2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பழீல் மௌலானா எனும் அறிவாளுமையை பெற்றெடுத்த*
*அன்னை*
*முஹம்மது இஸ்மாயில் மரைக்காயர் ஆயிஷாவுக்கும்*
*தந்தை*
*கலீபத்துஷ் ஷாதுலி செய்யது ஐதுரூஸ் மௌலானாவுக்கும்*
*ஆசிரிய சிரோன்மணி வே. சாமித்தம்பி*
*அவர்களுக்கும்*
*பழீல் மௌலானா எனும் ஆளுமையை சமூகத்திற்கு*
*பெற்றுத்தர வாழ்க்கைத் துணையாய் நின்றுழைத்த*
*எங்கள் அன்னை*
*ஆமினா உம்மாவுக்கும்*
*இந்நூல் சமர்ப்பணமாகட்டும்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## அத்தியாயம்- 1

## ஆய்வுரைகள்


1. பழீல் மௌலானா: பூர்வீகமும் குடும்பப் பின்னணியும் 1

2. இலங்கை முஸ்லிம்களின் கல்வி எழுச்சியில் பழீல் மௌலானா ஒரு வரலாற்று ஆய்வு 13

3. சமூக, சமய மறுமலர்ச்சிப் பணியில் பழீல் மௌலானா: ஒரு வரலாற்றுத் தொகுப்பு 74

4. பழீல் மௌலானாவின் அரசியல் சிந்தனையும் போராட்டமும் ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை 106


## அத்தியாயம்- 2

## அனுதாபச் செய்திகளும் இரங்கற் கவிதைகளும்


1. மருதமுனையின் கல்வி வளர்ச்சியில் முதன்மைமிக்கவர் பழீல் மௌலானா- முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் 124

2. மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர் - செனட்டர் மசூர் மௌலானா 126

3. பழீல் மௌலானாவின் மறைவு கல்வித் துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும் - பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் 128

4. சமூகத் தலைவர்களை உருவாக்க கல்வியை கருவியாகக் கொண்டு கருமமாற்றியவர் பழீல் மௌலானா -மாகாண சபை உறுப்பினர் இராஜேஸ்வரன் 129

5. தமிழறிஞர் பழீல் மௌலானா பாரம்பரியத்தினாலும் செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர் - அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ 130




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*6.* பழீல் மௌலானாவின் மறைவு முஸ்லிம் கல்விச் சமூகத்திற்கு பெரும் இழப்பு
**-எம்.வை.ஏ. பாவா, பொதுச் செயலாளர், முஸ்லிம் கல்வி மகாநாடு** *132*

*7.* மஸ்ஜிதுல் மினன் உருவாக்கத்தில் மர்ஹூம் பழீல் மௌலானாவின் பங்களிப்பு காத்திரமானது
**-கே.எல்.ஏ. வாஹித் (ஓய்வு பெற்ற அதிபர்)** *133*

*8.* இரங்கற்பா
**-மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி கல்விச் சமூகம்** *135*

*9.* ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா சேர் அவர்களின் மறைவையொட்டி
**- மருதமுனை அல்-மனார் ம.க. அனுதாபம்** *138*

*10.* விழிநீர் அஞ்சலி
**-கல்முனை கார்மெல் பாத்திமா கல்லூரி அனுதாபம்** *140*

*11.* சிறந்த வாழ்வுக்கு நீங்கள் ஒரு சிறப்பு
**-மருதமுனையை நேசிக்கும் அனைத்துப் பொதுமக்கள்** *141*

*12.* இரங்கல் குறிப்புக்கள்
**-மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகம்** *143*

## அத்தியாயம்- 3
## நினைவுக் கட்டுரைகள்

*1.* Faleel Moulana- A Beacon Light
**- I.A. Hameed, (Ex Chairman, Kalmunai Pradeshya Sabha)** *145*

*2.* பண்பாட்டின் சிகரம் பழீல் மௌலானா
**-தேசகீர்த்தி அல்ஹாஜ்.ஏ.எம்.ஏ. சமது (ஓய்வுநிலை அதிபர்)** *147*

*3.* அன்பாளர்களின் மனம் ஆதங்கம் அடைய ஆசி வழங்கி அருகூட்டும் மழைமனத்தான் அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்கள்.
**-எம்.எச். காதர் இப்றாஹீம் (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்)** *152*

*4.* மருதமுனை லஜ்னதுல் உலமாவின் வழிகாட்டலில் சன்மார்க்க சேவை செய்த பெருந்தகை- மர்ஹூம் பழீல் மௌலானா
**-அல்ஹாஜ் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (ஓய்வுநிலை அதிபர்)** *157*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எனது ஆத்மார்த்த வழிகாட்டி மர்ஹூம் அல்ஹாஜ் பழீல் மௌலானா
- பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம். ஜலால்தீன் 159

6. A Message from Professor Dr. M.A.M. Siddique 162

7. Father of Human Values
-'Kalabhooshanam' Abdul Majeed.M. Parouque, J.P. 164

8. கள்-எலிய கண்ட பழீல் மௌலானா...
- எம்.வை.எம்.நஸீர், கள்-எலிய 166

9. நிறைவான ஆளுமை கொண்டவர் மர்ஹூம் பழீல் மௌலானா
-கலாபூஷணம் பீ.எம்.எம். ஏ. காதர் 169

10. எனது மனத்திரையில் பழீல் மௌலானா
- கலாநிதி எம்.ஐ.எம். அமீன் 171

11. பொலநறுவை மாவட்டத்தில் கல்விப் பணிபுரிந்த மர்ஹூம் பழீல் மௌலானா
-அஷ்ஷெய்க். எஸ்.எச். ஆதம்பாவா, (மதனி), MA 173

12. அக்கரைப்பற்று மன்பஉல்-கைறாத்தின் வளர்ச்சியில் பழீல் மௌலானாவின் பங்களிப்பு
-அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹனீபா (மதனி) 176

13. எனது கல்வி வாழ்க்கையில் மறக்க முடியாத பேராளுமை பழீல் மௌலானா
-அல்ஹாஜ் எம்.வை.எம். முஸ்லிம் ஜே.பி 179

14. கல்வியும் கலாச்சாரமும் செழித்தோங்க தம்மை அர்ப்பணித்த செம்மனத்தான் மர்ஹூம் பழீல் மௌலானா
- எம்.சி.எம். அப்துல் காதிர் 182

15. மௌலானா நீங்கள் பெருமகன்...
- திருவாளர் காசுபதி தெய்வநாயகம் J.P, ஓய்வு பெற்ற அதிபர் 184



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்- 4**

## பழீல் மௌலானாவினால் பாடப்பட்ட கவிதைகள் சில


| | |
|---|---|
| 1. அல்குர்ஆன் தீன் வழி நிற்போம்... | 187 |
| 2. விளங்கி வரும் திருக்குர்ஆன் | 189 |
| 3. மருதூரின் முதல் ஆசான் | 191 |
| 4. சிறிய மகனுக்கு பெரிய தந்தையிடமிருந்து | 192 |
| 5. அல்லாவின் நல்லருள் நேசர் அஸ்வர் ஹாஜியார் | 193 |
| 6. S.L.M. Shafee Marikkar | 194 |
| 7. கலாநிதி எஸ். முகைதீன் பாவா-வாழ்த்து மடல் | 195 |
| 8. மருதூர் மண்ணின் மூதறிஞர் | 197 |
| 9. மருதூரின் மணிக் கவிஞன் மருதூர் கொத்தன் | 198 |
| 10. மர்ஹூமா பாத்திமா ஹிஷாமா | 199 |
| 11. மருதமுனை அல்-ஹம்றா | 200 |
| 12. வித்தியாஜோதி | 201 |
| 13. கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் | 202 |
| 14. மருதூரின் முதலாவது பெண் சட்டத்தரணி | 203 |
| 15. கள்-எலிய அலிகார் பவள விழா வாழ்த்துப்பா | 204 |


**பின்னிணைப்புகள்**


| | |
|---|---|
| 1. ஆசாரக் கோவை- ஆய்வுக் கட்டுரை | 205 |
| 2. மர்ஹூம் மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்கி) | 212 |
| 3. நட்புக்கு இலக்கணமான நற்றோழன் முஸ்தபா அதிபர் | 217 |
| அரும்பதச் சொற்கள் | 224 |
| உசாத்துணைகள் | 227 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால அட்டவணை

*1865* – செய்யித் உத்மான் அல்-அஹ்தல் மௌலானா அவர்களின் மருதமுனை வருகை

*1869* – செய்யித் ஐதுரூஸ் மௌலானா பிறப்பு

*1882* – அன்னை இஸ்மாயில் மரைக்கார் ஆயிஷா உம்மா பிறப்பு

*1920* – பழீல் மௌலானா பிறப்பு

*1929* – வித்தியாரம்பம் (மருதமுனை வடக்கு அரசினர் தமிழ் பாடசாலை)

*1933* – சேர் முகம்மது மாகான் மாக்காரிடமிருந்து வெள்ளி நாணயப் பரிசு

*1940* – S.S.C பரீட்சையில் சித்தி

*1940*– பழீல் மௌலானாவைக் கைது செய்யுமாறு பிரிட்டிஷ் அரசு பிடியாணை

*1942*– அளுத்கம ஆசிரியர் பயிற்சி கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர்

*1945*– அல்-அஹ்தல் ஸ்டோர்ஸ் விற்பனைப் பிரதிநிதி

*1947* – ஆமினா உம்மா கரம் பிடிப்பு

*1947*– கொழும்பில் ஸியோனிச எதிர்ப்பு மாநாடு; பொலிசாரால் தடுத்து வைப்பு

*1948*– கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் முதல் நியமனம்

அகில இலங்கை முஸ்லிம் லீக் சம்மேளனம்- மருதமுனை கிளையை நிறுவுதல்

*1950*– மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி தலைமை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1950* – ஹாஜி ஐதுரூஸ் மௌலானா மரணம்

*1951* – மருதமுனை YMMA தலைவர்

கள்-எலிய முஸ்லிம் பாடசாலை தலைமை ஆசிரியர்

*1952* – தேசபிதா D.S. சேனநாயக்கா தலைமையில் கள் எலிய அலிகார் மகா வித்தியாலய பாராட்டு விழா

*1956* – 5ஆம் குளணி வீரத்திடல் மகா வித்தியாலய தலைமை ஆசிரியர்

All Ceylon Muslim Youth Conference

*1957* – மருதமுனை தெற்கு R.D.S தலைவர்

மருதமுனை தப்லீக் ஜமாஅத்தின் முதலாவது அமீர்

*1960* – அரசியல் பழிவாங்கல் அநுராதபுரம் இடமாற்றம்

*1962* – சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு

முன்னைநாள் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களால் மீலாத் மேடையில் 'அபுல்கலாம்' பட்டம் வழங்கி கௌரவிப்பு

*1963* – கொட்டியாவெவ முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் திறப்பும் முதலாவது குத்பா உரையும்

*1965* – கல்முனை சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பொறுப்பேற்பு

*1966* – மருதமுனையில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ஆய்வுரை

*1970* – குருநாகல் சுற்று வட்டக் கல்வி அதிகாரி

*1971* – கேகாலை சுற்று வட்டக் கல்வி அதிகாரி

*1972* – பொலன்னறுவை சுற்று வட்டக் கல்வி அதிகாரி

*1974* – கல்முனை சுற்று வட்டக் கல்வி அதிகாரி

*1976* – மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாயல் புனர்நிர்மாணக் குழு பொருளாளர்

*1978* – திருச்சி அகில உலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் பங்கேற்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1979* – மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் முதலாவது அதிபர்

*1980* – அரச சேவையிலிருந்து ஓய்வு

*1981* – கிழக்கிலங்கை போக்குவரத்துச் சபை ஆலோசனை சபைத் தலைவர்

கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி நிருவாகச் செயலாளர்

*1983* – மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசல் உருவாக்கம்

*1984* – மனைவி ஆமினா உம்மா மரணம்

*1986* – இஹல கொட்டியாவெவ கிராமத்தில் நூராணியா குர்ஆன் மத்ரஸா திறப்பு

அக்கரைப்பற்று மன்பஉல் கைராத் அரபுக் கல்லூரி நிருவாகச் செயலாளர்

*1987* – புனித ஹஜ் யாத்திரை

சமாதான நீதவானாக நியமனம்

*1990* – மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் நம்பிக்கையாளர் சபை செயலாளர்

*1996* – 'அல்குர்ஆன் ஞானமணி கோவை' நூல் வெளியீடு

*2000* – பழீல் மௌலானா பவுண்டேஷன் நிறுவப்படல்

*2002* – 'இறைநேசச் செல்வர்' பட்டமளிப்பு

*2004* – 'சமூக ஜோதி' பட்டம் வழங்கி கௌரவிப்பு

*2006* – 'சமூக மாமணி' பட்டம் வழங்கி கௌரவிப்பு

*2013* – மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்- 1**

**ஆய்வுரைகள்**

# பழீல் மௌலானா:
# பூர்வீகமும் குடும்பப் பின்னணியும்

பெனாசிர் ஸாஹிர்
B.A. (Hons) Sociology, PGDE, Dip. in. Psy. Counseling
ஆசிரிய ஆற்றுப்படுத்துனர், ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை

1865 ஆம் ஆண்டளவில் தென் அரேபிய நாடான யெமனின் ஹழ்ர மௌத் பள்ளத்தாக்கிலிருந்து செய்யித் உத்மான் அல்-அஹ்தல் அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மருதமுனை கிராமத்திற்கு வருகை தந்தார்கள். அன்னார் நபிகளாரின் வழித் தோன்றல்களான செய்யித் மரபின் முனைப்பான கிளையினரான 'அல்-அஹ்தல்'[1] குடும்பத்தைச் சார்ந்தவர். அவரை மருதமுனை அவக்கலியப்பா (தற்போது மஸ்ஜிதுந் நூர்) பள்ளிவாசல் ஜமாஅத் வரவேற்று உபசரித்து இருப்பிடம் அளித்தது.[2] அன்னார் அப்பள்ளி வாசலை மத்திய தளமாகக் கொண்டு சன்மார்க்க சேவை புரிந்தார்.

மருதமுனை அவக்கலியப்பா பள்ளிவாசல் ஜமாஅத்தின் 'யாகுவ'[3] குடி'[4]யைச் சேர்ந்த ஷரீபா உம்மா எனும் பெண்மணியை செய்யித் உத்மான் அல்-அஹ்தல் திருமணம் முடித்து இல்வாழ்க்கை நடத்தினார்.

1. இறைத் தூதரது வழித்தோன்றல்களான செய்யித் மரபினரில் அல்-அஹ்தல் குடும்பம் முக்கியமானதாகும். அவர்கள் பிரதானமாக தென்மேற்கு அரேபியாவில் வசிக்கின்றனர்... செங்கடல் எல்லையை ஒட்டிய சமவெளியான யெமனின் திஹாமா பிராந்தியத்தில் 13ஆம் நூற்றாண்டில் செய்யித் மரபினரின் முனைப்பான ஒரு கிளையாக அல்-அஹ்தல் குடும்பம் தோற்றம் பெற்றது. (Voll, John O., "al Ahdal Family", in: Encyclopedia of Islam, Three, Edited by: Kate Fleet, Gudrun Kramer, Denis Matringe, John Nawas, Everett Rowson, Scholarly Publishers, 2010)

2. மஜீத், ஏ.எச்.எம்., எனது கிராமத்தை தேடுகிறேன், மருதமுனை வாசகர் வட்டம் வெளியீடு, 2005, பக். 156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தம்பதியினருக்கு ஒரே மகனாக 1869இல் ஐதுரூஸ் மௌலானா அவர்கள் பிறந்தார். செய்யது இஸ்மாயில் மௌலானா பக்தாதி (பெரிய மௌலானா அப்பா) அவர்களது வழிகாட்டலில் வளர்ந்த அவர், மார்க்கக் கல்வியை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென பேரார்வம் கொண்டு, தமிழ்நாடு வேலூரில் அமைந்துள்ள பாக்கியாத் துஸ் ஸாலிஹாத் அரபுக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து இஸ்லாமிய கற்கைகளை சிறப்பாகக் கற்று மருதமுனையின் முதலாவது மௌலவியாகப் பட்டம் பெற்று நாடு திரும்பினார். 'அரபி ஆலிம்' என மக்கள் அவரை கண்ணியத்துடன் அழைத்து வந்தனர். மருதமுனை தென் தெரு மீரா பெரிய பள்ளிவாசலின் (தற்போது மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல்) தலைமை மரைக்காயராகக்[5] கடமையாற்றிய முஹம்மது இஸ்மாயீல் மரைக்காயரின் மூத்த மகளான ஆயிஷாவை திருமணம் செய்து இல்லற வாழ்க்கை நடத்தினார்கள்.

வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக கொழும்பில் செல்வாக்குப் பெற்றிருந்த இவர், மருதானை டீன்ஸ் வீதியில் 'அஹ்தல் ஸ்ரோர்ஸ்' எனும் பெயரில் தனது வியாபார ஸ்தாபனத்தை நிறுவினார். இலங்கை முஸ்லிம்களின் சமூக சமய அரசியல் விவகாரங்களில் தரீக்காக்கள் அக்காலத்தில் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தன. ஷாதிலிய்யா தரீக்காவின் கலீபாவாகவும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் உப தலைவராகவும் கடமையாற்றி நாடறிந்த சன்மார்க்க அறிஞராக பிரபலமானார்கள்.[6] மேலும், முஸ்லிம் சமூகத்தின் சமூக சமய மறுமலர்ச்சியில் முஸ்லிம் தேசியத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றினார்கள். 1945ஆம் ஆண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள்.

1950ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி (ஹிஜ்ரி 1396 துல்ஹஜ் மாதம் பிறை 6, செவ்வாய்க்கிழமை) 80 ஆவது வயதில் செய்யித் ஐதுரூஸ் மௌலானா இறையடி சேர்ந்தார். மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அருகில் அமைந்திருந்த அவரது மூத்த மகளின் இல்ல வளாகத்தில் அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது. 'ஹாஜி ஐதுரூஸ் மௌலானா மகாம்'[7] என அம்மக்பரா அழைக்கப்படுகிறது.

---

3. யாகுவக் குடி- பெரிய ராசா அப்பாவின் சந்ததியினர் ஜாவாவிலிருந்து வந்தோராதலால் ஜாவாக்குடியினர் என்றழைக்கப்படுகின்றனர். (ஷரிபுத்தீன், ஆ.மு., மருதமுனை வரலாறு, அன்னை வெளியீட்டகம், 2009, பக்: 9)

4. குடி- தாய்வழி வம்சம் 'குடி' என்ற பெயரால் இன்றும் அழைக்கப்படுகின்றது. தமிழ்ப் பெண்களின் பரம்பரை வழக்கத்தையொட்டி முஸ்லிம்களிடையேயும் இந்த வழக்கம் இருந்து வருகிறது. (மேலது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலீபத்துஷ் ஷாதுலி செய்யித் உத்மானுல் அஹ்தல்
செய்யித் ஐதுரூஸ் மௌலானா (பாகவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்யித் முஹம்மத் பழீல் மௌலானா

*31.12.1920*ஆம் ஆண்டு வியாழக்கிழமை ஹாஜி ஐதுரூஸ் மௌலானா–ஆயிஷா தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக செய்யித் பழீல் மௌலானா பிறந்தார். குழந்தை பிறந்தபோது தந்தை ஐதுரூஸ் மௌலானா ஊரில் இல்லை. சுகம் பெற்ற பின்பு அவரது தாயாரே 'தோம்புதோர்' மஸ்ஹூத் லெப்பையிடம் பிறப்பை பதிவு செய்தார். பெருமானாரின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான 'தாஹா' எனும் பெயரை நினைவுபடுத்தும் விதமாக 'தாஹாத்தம்பி' என்றே குடும்பத்தினர் பழீல் மௌலானாவை அழைத்து மகிழ்ந்தனர்.

தனது இளமைக்கால நினைவுகளைப் பின்வருமாறு அவர் பதிவு செய்கிறார்: *"சாம்பல் பூத்த மைப்பொடியனாக ஓடியாடித் திரிந்த என்னை நான் கறுப்பாக இருந்ததனால் மற்றவர்கள் விரும்பி அணைப் பதில்லையாம். 1926ம் ஆண்டு எனது தாய் வீட்டில் கட்டப்பட்ட கிணற் றிற்கு கல் எடுத்துக்கொடுத்த நினைவு இன்னும் இருக்கின்றது."8*

## தந்தை முறப்பியாக

பழீல் மௌலானா தனது வழிகாட்டியாக பயிற்றுவிப்பாளராக அவரது தந்தை ஐதுரூஸ் மௌலானா அவர்களையே குறிப்பிடுகிறார். இளம் பராயம் முதலே தந்தையின் முழுமை யான வழிகாட்டலின் கீழ் அவர் வளர்ந்தார். தந்தை ஐதுரூஸ் மௌலானா அவர்கள் கலீபத்துஷ் ஷாதுலி என்பதோடு சமூக அரசியல் பிரக்ஞையுள்ள, மார்க்கத்தை முறையாகக் கற்றுத் தேர்ந்த ஓர் அறிஞராகவும் பிரசாரகராகவும் பணிபுரிந்தார். அதுவே பழீல் மௌலானா ஒரு சிறந்த சன்மார்க்க வாதியாகவும் பன்முக ஆளுமையாகவும் பின்னாளில் வருவதற்கான பின்புலத்தை அளித்திருக்கிறது. அதனை பின்வருமாறு அவர் பதிவு செய்திருக்கிறார்:

---

*5. குடி அமைப்பு முறை- மரைக்காயர் முறை. வயது, கல்வி, செல்வாக்கு, நேர்மை, மார்க்க அறிவு ஆகியவற்றில் கூடிய தகைமை உள்ளவரை மக்கள் மரைக்காயராகத் தெரிவர். இம் மரைக்காயருக்கு மக்கள் தொகையைப் பொறுத்து உப மரைக்காயரும் இருப்பர். ஒரு குடி அமைப்பு ஓர் ஒழுங்கான சங்க அமைப்பு போல் நடைபெறும். இவ்விதம் தெரிவுசெய்யப்படும் மரைக்காயர்மாரே அக்கிராம பள்ளிவாசலின் பாரம்பரிய தர்மகர்த்தாக்கள் ஆவர். இவ்வாறு அமையும் மரைக்காயர் சபை அதீத செல்வாக்கும் ஆளுமையும் கொண்டது. நீதி விசாரணை களையும் இச்சபை நடத்தும். (ஷம்சுத்தீன் மவ்லானா ஜே.எம்., "வாழ்வியலும் பண்பாடும்", அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, 1997, பக்: 183)*

*6. "காலஞ்சென்ற ஐதுரூஸ் மௌலானா", தினகரன், 16.10.1950, பக். 5*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"...எனக்கு என் தந்தையே ஆன்மிக வழிகாட்டி. இளமையில் இருந்தே நான் சன்மார்க்க வழி நின்றதால் என்மீது அன்பு கொண்டு அடிக்கடி என் தலையைத் தடவி "பாரகல்லாஹ்" என பிரார்த்திப்பார்கள். தொழுகையின் பின் ஓதும் அவ்ராதுகளை கற்பித்து தந்தார்கள். "கன்ஸுல் அர்ஸ்" எனும் நாமம் கொண்ட சிறியதோர் கிரந்தத்தை மருதானை பஞ்சிகாவத்தை ஸாவியாவில் வைத்து 1938ஆம் ஆண்டு கையளித்து தினமும் ஓதி வரும்படி 'வஸிய்யத்' செய்தார்கள். "யா லதீப்" எனும் அல்லாஹ்வின் திருநாமத்தை சுபஹ் தொழுகையின் பின் தவறாது 100 தடவை ஓதி வரும்படி கற்பித்தார்கள். "அஸ்மாஉல் ஹுஸ்னா" எனும் இறை திருநாமத்தை விளக்கி தினமும் 5 நேரத் தொழுகையின் பின் ஓதி வரும்படி கற்பித்தார்கள்.*

*...நானும் தமையன் யாஸீன் மௌலானாவும் தம்பி லாபிர் மௌலானாவும் பகல் இரவு போசனங்களை தந்தையோடு சேர்ந்திருந்தே எடுத்து வந்தோம். அதனால் உணவுண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகளை தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டோம்."[9]*

## தாயின் பயிற்சி

பழீல் மௌலானாவின் தாய் முஹம்மது இஸ்மாயில் மரைக்காயர் ஆயிஷா உம்மா அவர்கள் சிறந்த மார்க்கப்பற்றுள்ள பெண்மணியாக வாழ்ந்தார். தனது அந்திமக் காலம் வரையும் ஐங்காலத் தொழுகையை கிரமமாக பேணி நிறைவேற்றி வந்தார். தனது தாயின் மார்க்க பற்றுதலையும் பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்த விதத்தினையும் பின்வருமாறு பழீல் மௌலானா குறிப்பிடுகின்றார்:

*"...எனது தாய் இளமையில் என்னை நேசித்து மத்ரஸாவில் சேர்த்து தொழுகை, நோன்பு இரண்டிலும் பயிற்சியளித்து பேணிக் காத்தார். காலை நான்கு மணிக்கே விழித்தெழுவார். என்னையும் சகோதரர் யாஸீன், லாபிர் இருவரையும் "எழுங்கள், பள்ளிக்குப் போங்கள்" என விழித்தெழச் செய்து பள்ளி வரை விளக்குடன் என்னை கொண்டு சேர்ப்பார்."[10]*

---

7. அலியார், யூ.எல்., "மஸ்ஜித்கள், மத்ரஸாக்கள், ஸியாரங்கள்", அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, 1997, பக். 140

8,9,10. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம், எனது டயரிக் குறிப்புகள், (1976)

11. நிருவாக, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய காலனித்துவக் கால கிராமத் தலைவர் பதவி (Wikipedia, Retrieved on 23.02.2021)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவிற்கு ஐந்து சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். அவர்களது விபரம் வருமாறு.

## செய்யித் முஹம்மத் ஸாலிஹ் மௌலானா (பஹ்ஜி)

பழீல் மௌலானாவின் மூத்த சகோதரர் செய்யித் முஹம்மத் ஸாலிஹ் மௌலானா. காலி பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா அரபுக் கலாசாலையில் கற்றுத் தேர்ந்த மருதமுனையின் முதல் மகன். கரைவாகுப் பற்று வடக்கு கிராம சபையின் அங்கத்தவராக இருபது ஆண்டுகள் பணியாற்றியதுடன் *1956*ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று முதலாவது முஸ்லிம் அக்கிராசனராகத் தெரிவுசெய்யப்பட்டார். வரலாற்றில் அக்கிராசனராக தெரிவுசெய்யப்பட்ட முதலாவது மருதமுனை மகனும் இவராவார். இவர் ஹசனுல் பாரி மௌலானா (அதிபர்) அவர்களின் தந்தையாரும் பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் எம்.ஏ.எம். சித்தீக் அவர்களின் பாட்டனாரும் ஆவார்.

## செய்யித் செயின் மௌலானா

பழீல் மௌலானாவின் இரண்டாவது சகோதரரான, செய்யித் செயின் மௌலானா கிராமத் தலைவராக (Village Headman)[11] *21* வருடங்கள் கடமை புரிந்தார். 'விதானை[12] மௌலானா' என கௌரவமாக அழைக்கப்பட்டார். செனட்டர்[13] மசூர் மௌலானா மற்றும் சக்காப் மௌலானா ஆகியோரின் தந்தை இவராவார்.

## எஸ்.ஐ.எஸ்.ஏ. பாரி மௌலானா (பஹ்ஜி)

பழீல் மௌலானாவின் மூன்றாவது சகோதரரான எஸ்.ஐ.எஸ்.ஏ. பாரி மௌலானா காலியில் அமைந்துள்ள பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யாவில் பட்டம் பெற்ற ஆலிம் ஆவார். இலங்கையின் முதலாவது மௌலவி ஆசிரியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.[14] மள்வானையில் செய்யத் யூசுப் ரிபாயி யெமனி மௌலானாவின் (பாம்பு மௌலானா) பேத்தியை விவாகம் செய்தார். இவர் எப்.ஆர். மௌலானா, புஷ்ரத்து நயீமா ஆகியோரின் தந்தையாவார்.

---

*12.* அரச அதிபரினால் நியமிக்கப்படும் காலனித்துவக் கால உள்ளூர் தலைவர்கள் படிநிலையில் செல்வாக்கான பதவி. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள மக்களை பெருமளவில் கட்டுப்படுத்தி ஆளக்கூடிய, குற்றவியல் நியாயாதிக்கம் உடைய பதவி என்பதுடன், பிரதேச அமைதி, வரி வசூலிப்பு ஆகியவற்றுக்குப் பொறுப்பானவராகச் செயற்படுவதுடன், நீதி நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குபவருமாவார். (Wikipedia, Retrieved on 08.02.2021)

*13. 1947*ஆம் ஆண்டு சோல்பரி அமைப்பு யாப்புக்கமைய அமைக்கப்பட்ட மூதவையின் ஓர் உறுப்பினர் (யோதிலிங்கம் சி.அ, குமரன் புத்தக இல்லம், *2004*, பக். *84*)

*14. நவமணி, 23.01.2000, பக். 7*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்யித் யாஸீன் மௌலானா

பழீல் மௌலானாவின் நான்காவது சகோதரர் செய்யித் யாஸீன் மௌலானா ஆவார். மருதமுனை 2ம் குறிச்சி கூட்டுறவு முகாமை யாளராகக் கடமையாற்றினார். இவர் செய்யித் இஸ்மாயில் மௌலானா (கொழும்பு வர்த்தகர்), செய்யித் இப்றாஹிம் மௌலானா (துறைமுக உத்தியோகத்தர்) ஆகியோரின் தந்தை ஆவார்.

## செய்யத் லாபீர் மௌலானா

இவர் பழீல் மௌலானாவின் இளைய சகோதரர். உப-தபால் அதிபராகக் கடமை புரிந்தார். இவர் செய்யித் முனவ்வர் மௌலானா, செய்யித் ஜஃபர் மௌலானா ஆகியோரின் தந்தையாவார்.

மௌலானாவுக்கு மூன்று சகோதரிகள். இவர்களுள் சித்தி சக்கீனா இப்றாலெப்பை வைத்தியரின் மனைவி ஆவார். கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்த எம்.ஐ.எம். அமீனுடைய தாயாருமாவார். அடுத்தவர், சித்தி ஷரீபாஹ். இவர் முஹம்மது ஷம்சுதீனின் மனைவியும் கல்முனை பிரதேச செயலாளர் ஜனாப் ஜே.எம். லியாகத் அலி அவர்களின் பாட்டியுமாவார். மூன்றாமவர், உம்மு ஷுஹதா. இவர் நெய்னா முஹம்மத் புலவனார் அவர்களின் மனைவியும் முகர்ரமா ஆசிரியையின் பாட்டியுமாவார்.

## ஐதுரூஸ் மௌலானா குடும்ப மரவரிப் படம்

செய்யித் மரபினர்
↓
அல்-அஹ்தல் குடும்பம்
(13ஆம் நூற்றாண்டு)
↓
செய்யித் உத்மான் அல்-அஹ்தல் யெமனி + ஷரீபா உம்மா (யாகுவக் குடி)
↓
செய்யித் ஐதுரூஸ் மௌலானா + முஹம்மது இஸ்மாயில் ஆஇஷா

செய்யித் ஸாலிஹ் மௌலானா
செய்யித் செயின் மௌலானா
செய்யித் பாரி மௌலானா
செய்யித் யாஸீன் மௌலானா
செய்யித் பழீல் மௌலானா
செய்யித் லாபிர் மௌலானா

சித்தி சகீனா
சித்தி ஷரீபா
உம்மு ஷுஹதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழீல் மௌலானாவின் மனைவி ஆமினா உம்மா

காலியில் அமைந்துள்ள 'தடல்ல' எனும் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட மதார் சாஹிபு அவர்கள் வியாபாரம் காரணமாக மருதமுனையில் குடிபதியானார். அவரது ஒரே மகனான சின்ன லெப்பை ஹாஜியார் அவர்கள் 'மூத்தவர்' என அழைக்கப்பட்ட பிச்சைத் தம்பி பக்கீர் தம்பி மரைக்காயரின் ஆறாவது மகளான அவ்வா நாச்சியை திருமணம் செய்து கொண்டார். மூத்தவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக்காலத்தில் கனவான்களாகவும் ஊரை ஓரளவு கட்டுப்படுத்தி நிர்வகிக்கக்கூடிய பொலிஸ் தலைமைகளாகவும் இருந்தனர்.[15] பெரும் செல்வந்தராகவும் நிலச் சுவாந்தராகவும் அக்காலத்தில் விளங்கிய மூத்தவர், மருதமுனை தென் தெரு மீராப் பள்ளிவாசலுக்கு பெரும் பகுதி[16] நிலத்தை வக்பு செய்தார். 'மங்கலங் கேணி'[17] மூத்தவர் குடும்ப நிலமாகும்.

சன்மார்க்கப் பற்றாளராக விளங்கிய சின்ன லெப்பை ஹாஜியார் அரபுத் தமிழ் கிரந்தங்களைப் படித்து மார்க்க அறிவை வளர்த்துக் கொண்டார். மார்க்க விளக்கங்களைப் பெறுவதற்காக காலி கோட்டையில் அமைந்துள்ள 'பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யா', மஹரகமையில் அமைந்துள்ள 'கபூரிய்யா' அரபுக் கலாசாலைகளின் அதிபர்களுடனும் மருதமுனையில் குத்பால் அப்பா, செய்யது ஐதுரூஸ் மௌலானா, செய்யது அப்துல் காதர் மௌலானா ஆகியோருடனும் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார்.[18]

மருதமுனை பெரிய பள்ளிவாசல் மரைக்காயராகவும் தலைவராகவும் கடமை புரிந்த அவர், மருதமுனையிலிருந்து முதலாவது ஹஜ் யாத்திரை மேற்கொண்டவர் எனும் சிறப்புப் பெறுகிறார்.[19] 1927ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரையை மேற்கொண்டார். மத்ரஸா மௌலானாவுடன் இணைந்து மருதமுனை மக்களை மூட நம்பிக்கைகளிலிருந்து விடுவித்து, தூய இஸ்லாமிய மார்க்கத்தை நிலைநாட்டப்

---

15 மஜீத், ஏ.எச்.எம், எனது கிராமத்தைத் தேடுகிறேன், மருதமுனை வாசகர் வட்டம் வெளியீடு, 2005, பக். 170

16. இஸ்மாயீல் மௌலானா எஸ்.ஏ.எஸ்., நேர்காணல், 29.03.2020

17. அல்-மருதமுனை, 2000, பக். 15

18. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம்., எனது டயரிக் குறிப்புகள், 1976

19. ஷரிபுத்தீன், ஆ.மு, மருதமுனை வரலாறு, அன்னை வெளியீட்டகம், 2009, பக். 126



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் நடத்தினார். பல்லாண்டு காலமாக இருந்து வந்த கொடியேற்ற விழாவை பள்ளி வாசலில் இருந்தும் கிராமத்திலிருந்தும் ஒழித்துக்கட்டப் பாடுபட்டார். கல்முனையில் வியாபாரம் செய்து பொருளீட்டிய அவர், மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். 1949ஆம் ஆண்டு மரணித்தார்.

சின்ன லெப்பை ஹாஜியார்–அவ்வா நாச்சி தம்பதியருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைகள். அப்துர் ரஹீம், அப்துல் காதர், மௌலவி அப்துல் கனி, முஹம்மது புர்ஹான், அப்துஸ் சமீஉ ஆகியோர் ஆண் பிள்ளைகள்; உம்மு ஸபிய்யா, உம்மு ஆமினா ஆகியோர் பெண் பிள்ளைகள்.

சின்ன லெப்பை ஹாஜியார் மார்க்க விளக்கம் பெறுவதற்காக ஐதுரூஸ் மௌலானாவை அடிக்கடி சந்திக்க வருவார். இவ் ஆன்மிக உறவு குடும்ப உறவாக மாறியது. சின்ன லெப்பை ஹாஜியாரின் இரண்டாவது மகள் உம்மு ஆமினாவை பழீல் மௌலானாவுக்கு திருமணம் செய்து வைக்க தீர்மானமாகியது. இரு குடும்பத்தார், ஜமாஅத்தினர் முன்னிலையில் 1946.03.05 ஆம் திகதி 200 ரூபா மஹர் கொடுத்து பழீல் மௌலானா (வயது 25) ஆமினா உம்மாவை (வயது18) திருமணம் செய்தார். அ.மு. ஷம்சுத்தீன் ஆலிம் அந்நிகாஹை நடத்தி வைக்க, செய்யித் செயின் மௌலானா விதானையார் திருமணத்தைப் பதிவு செய்தார்.[20]

தம்பதியர் இருவருக்குமிடையே நிலவிய அன்பும் காதலும் பரஸ்பர புரிந்துணர்வும் இனிய இல்லற வாழ்வாக அமைந்தது. பழீல் மௌலானா பெரும்பாலும் வெளியூர்களிலேயே தனது சேவைக் காலத்தைக் கழித்தார். கணவன் துணையாக இல்லாத போதும் மிகவும் பொறுமையுடனும் அன்புடனும் தனது பிள்ளைகளை வளர்த்து வந்தார். ஆமினா உம்மா ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கற்றிருந் தாலும் தனது பிள்ளைகளுக்கு மார்க்க அறிவையும் ஒழுக்கத்தையும் கல்வி அறிவையும் கொடுப்பதில் முன்னின்றார். ஆமினா உம்மா தனது 57 ஆவது வயதில், 1986இல் வபாத்தானார்.

20. மஸ்ஜிதுல் கபீர் விவாகப் பதிவேடு, இல. 7, தொடர் இல. 385, பதிவு இல. 492



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழீல் மௌலானா குடும்ப மரவரிப் படம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவி ஆமினா உம்மாவுடன்
பழீல் மௌலானா



புதல்வர்கள் அஹமதுல்
அன்ஸார் மௌலானா,
ஜின்னா மௌலானா உடன்
பழீல் மௌலானா



மனைவி ஆமினா உம்மா



மருமகன் மௌலவி ஏ.எம். ஹஸன்(ஷர்கி),
மகள் நூருல் ஐன்





இடமிருந்து வலமாக ஜின்னா மௌலானா, அமீருல் அன்ஸார் மௌலானா, அஹமதுல் அன்ஸார் மௌலானா இஸ்ஸத்துல் ஹினாயா, பௌஸுல் ஹினாயா, தாஜுல் ஐன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து வலம்: மருமகன்கள் எஸ்.எம். ஸாஹிர் (கூட்டுறவு முகாமை யாளர்), மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்க்கி), ஏ.எம். முஸ்தபா (அதிபர்), ஏ.வி.எம். மஹ்தூம் (விளையாட்டு அதிகாரி) உடன் பழீல் மௌலானா



சகோதரர்களின் புதல்வர்களான ஹஸனுல் பாரி மௌலானா (அதிபர்), செனட்டர் மசூர் மௌலானா உடன் பழீல் மௌலானா. உடனிருப்பவர் ஏ.எச்.எம். மஜீத் (அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் கல்வி எழுச்சியில் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஒரு வரலாற்று ஆய்வு

ஏ.ஜே.எல். வஸீல் (M.Ed, M.Phil.)

தொழில்சார் விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி அட்டாளைச்சேனை

வருகைதரு விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம்

## அறிமுகம்

பழீல் மௌலானா நாடறிந்த கல்விமான். இலங்கையின் நாலா புறமும் இருக்கின்ற வேறுபட்ட பிரதேசங்களில் அவர் கல்விச் சேவை யாற்றியுள்ளார். மருதமுனையில் அவர் பிறந்தாலும் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் அவர் பாரபட்சமற்ற கல்வித் தொண்டாற்றி உள்ளார். உதவி ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த அவர் அதிபராக, கல்வி அதிகாரியாக பரிணமித்திருக்கின்றார். அவரது கல்விப் பணிகளை அவரது வாழ்க்கைச் சரிதையுடன் இணைத்து, இலங்கையின் கல்வி அபிவிருத்தியின் வரலாற்றோட்டத்தில் அவரது பங்களிப்பை இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கின்றது.

## ஆரம்ப, இடைநிலைக் கல்வி

பழீல் மௌலானா 1929ஆம் ஆண்டு தை மாதம் நான்காம் திகதி தனது ஆறாவது வயதில் ஆரம்பக் கல்விக்காக மருதமுனை வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் (தற்போது அல் மனார் மத்திய கல்லூரி) சேர்க்கப்பட்டார். தனது அரிவரி வகுப்பு முதலே திறமையும் கீர்த்தியும் வாய்ந்த ஆசான்களிடம் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவருக்குக்குக் கிடைத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவரி, முதலாம் வகுப்பு- பெரிய கல்லாறு திருமதி. கணபதிப் பிள்ளை நாச்சியக்கா ஆசிரியை

இரண்டாம் வகுப்பு- நற்பிட்டிமுனை திரு. வசந்தராச பிள்ளை

மூன்றாம் வகுப்பு- பாண்டிருப்பு திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி

நான்காம் வகுப்பு- திருக்கோயில் பரநிரூபசிங்கம், புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்

ஐந்தாம் வகுப்பு- கலந்தர் பரிகாரி ஷம்சுதீன்

6,7,8ஆம் வகுப்புகள்- ஆரையம்பதி திரு. ரீ. சீனித்தம்பி

9ம் வகுப்பு- பெரிய கல்லாறு வே. சாமித்தம்பி

இவர்களோடு பாண்டிருப்பு திரு. கே.எஸ். வைரமுத்து, பெரிய கல்லாறு வே. சாமித்தம்பி ஆகியோர் இவருக்கு தலைமை ஆசிரியர்களாக வாய்த்தனர். இவர்களுள் 'ஆசிரிய சிரோண்மணி' வே. சாமித்தம்பி அவர்கள் பழீல் மௌலானாவின் ஆற்றல்களையும் திறமைகளையும் இனங்கண்டு ஊக்குவிப்பதிலும் கற்றுக் கொடுப்பதிலும் அதிக சிரத்தை காட்டினார். உயர்ந்த குணமும் அன்பான சுபாவமும் கொண்ட அன்னார் மீது பழீல் மௌலானா அவர்களும் மிகுந்த நேசமும் மரியாதையும் வைத்திருந்தார். அன்னாரின் இறுதிச் சடங்கில் மாணவர்கள் சார்பாக பழீல் மௌலானாவே இரங்கலுரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆரம்பக் கல்வியினை சிறந்த தமிழ் ஆசிரியர்களிடம் கற்று, இடைநிலைக் கல்வியை ஆசிரிய சிரோண்மணி வே. சாமித்தம்பி, புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் ஆகியோரிடம் கற்று அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் நிலைமாற்றம் பெற்று கல்வியில் தெளிந்தார்.

## மருதமுனை பாடசாலைக் கல்வி வளர்ச்சியின் ஆரம்ப அறுவடை

1938இல் அப்போதைய பாடசாலைமட்ட கனிஷ்ட இரண்டாம் நிலை (Junior Secondary Certificate- J.S.C) பரீட்சைக்கு பழீல் மௌலானா தோற்றினார். பின் 1940இல் சிரேஷ்ட இரண்டாம் நிலை சான்றிதழ் (Senior Secondary Certificate- S.S.C) பரீட்சையில் ஆங்கில மொழியில் தோற்றி சித்தியடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை ஆசிரியர் வே. சாமித்தம்பி அவர்களின் பிரியாவிடை வைபவம்



முதல் வரிசை: 1. ஆதம்பாவா 2. .... 3. ம.சா. சின்னலெப்பை ஹாஜியார் 4.செய்யித் ஸாலிஹ் மௌலானா (கிராம சபைத் தலைவர்) 5. வே. சாமித்தம்பி (தலைமை ஆசிரியர்) 6. வன்னியனார் மஜீத் 7. அகமது லெப்பை ஆலிம் 8.செய்யித் செயின் மௌலானா ( கிராமத் தலைவர்) 9. மஜீத் **இரண்டாவது வரிசை:** 1.... 2. யூ.எல். இஸ்மாயில் 3. செல்லத்துரை மாஸ்டர் 4. ஆ.மு. ஷரிபுத்தீன் (ஆசிரியர்) 5. ஷம்சுத்தீன் ஆலிம் 6.இஸ்மாயில் மாஸ்டர் 7. எம்.எம். அப்துல் காதர் (அதிபர்) 8... 9.... 10. .... **மூன்றாவது வரிசை:** 1. .... 2. .... 3. ..... 4. அகமது லெப்பை மாஸ்டர் 5. உதுமா லெப்பை மாஸ்டர் 6. **ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா** 7. ... 8. .... 9. செய்யித் லாபீர் மௌலானா **நான்காவது வரிசை:** 1. ... 2. ... 3. ... 4. முஹம்மது இப்றாஹிம் (இளம்பிறை) 5. மீரா லெப்பை டைலர் 6. .... **(படமும் தகவலும் : காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு பரீட்சைகளிலும் பழீல் மௌலானா உட்பட ஐந்து பேர் மருதமுனையில் சித்தியடைந்தமை மருதமுனையின் ஆரம்பகால கல்வி முன்னேற்றத்தில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது என எம்.சீ. அஹமது முகைதீன் ஆசிரியர் பின்வருமாறு பதிவிடுகிறார்:

*"மருதமுனை அல்-மனார் வரலாற்றில் பரீட்சை தொடர்பான ஆய்வுகள் 1927ல் இருந்தே ஆரம்பமாகின்றது. 1927-1931 வரை ஜே.எஸ்.சி. பரீட்சை இருந்தது. 1931க்கு பின்னர் (எஸ்.எஸ்.சி) பரீட்சைக்கு தோற்றினர். மேலும் 1927-1935 வரை மாணவர் உபாத்தியாயர் பரீட்சை, ஆசிரியர் தராதரப் பரீட்சை என்பனவும் நடைபெற்றது. இதில் (எஸ்.எஸ்.சி) பரீட்சை பாடசாலைக் கல்வி முடிந்த பின்னர் பிரத்தியேகமாக அரசினால் நடாத்தப்படும். இதில் ஜே.எஸ்.சி. எட்டாம் தரத்தை நிறைவு செய்த மாணவர்களுக்கு உரியது. இதில் 1935ல் ஏழு மாணவர்கள் தோற்றினர். ஏழு மாணவர்களும் சித்தியடைந்தனர். இப்பரீட்சை பெறுபேறு மருதமுனையின் கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் பாடசாலையின் அப்போதைய மாணவர் சேர்வு வீதம் அதிகரிக்கவும் காரணமாகியது. இதனால் 1935ல் அல்-மனாரில் 24பேர் புதிதாக சேர்ந்தனர். அதேபோல் 1938ல் ஜே.எஸ்.சி. பரீட்சைக்கு ஐவர் தோற்றினர். ஐவரும் சித்தியடைந்தனர். அவர்களது விபரம் வி. வேலாயுதன், ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா, ஜே.எம்.எம். அப்துல் காதர், கே. முஹம்மது இப்றாஹிம், ஏ. முஹம்மது இப்றாஹிம். இவர்களில் நால்வர் பிற் காலத்தில் தலைமை ஆசிரியர்களாக சிறப்பெய்தினர். பழீல் மௌலானா அதிபராக இருந்து வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார்."*[21]

மருதமுனை கல்வி வளர்ச்சியின் ஆரம்ப அறுவடைகளுள் ஒருவராக பழீல் மௌலானா குறித்துக் காட்டப்பட வேண்டியவர் என்பதை வெள்ளிடைமலையாகக் காட்டும் ஆதாரம் இது.

## அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (1942-1944)

1942ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பழீல் மௌலானா இணைந்து கொண்டார். ஐ.எல்.எம். மசூர் B.A (English) அதிபராகவும் நாவலப்பிட்டியைச் சேர்ந்த மௌலவி ஏ.எச்.எம். ஹபீப் முஹம்மத் (பஹ்ஜி), யாழ்ப்பாணம் பண்டிதர்

21. அஹமது முகைதீன், எம்.சீ., 'பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள்', கலங்கரை, அல்-மனார் 75வது வருட நிறைவு மலர், 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீ. திருநாவுக்கரசு (B.Sc) எம்.ஏ. பாரி (B.A.) ஆகியோர் அப்போது போதனாசிரியர்களாகக் கடமையாற்றினர். அங்கு கற்கும் காலத்தில் கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸின் செயலாளராக பழீல் மௌலானா தெரிவு செய்யப்பட்டார். 1944ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கலாசாலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 9 பேர்களுள் அவர் முதலாவது தடவையிலேயே இரண்டாம் தர (Second class) சித்தி பெற்று மருதமுனைக்கு பெருமை சேர்த்தார்.

## கொழும்பு ஸாஹிராவில் முதல் நியமனம்

பழீல் மௌலானாவின் தந்தை ஐதுரூஸ் மௌலானாவுக்கு கொழும்பில் அரசியல் தலைவர்களிடமும் சமயத் தலைவர்களிடமும் இருந்த மதிப்பும் செல்வாக்கும் பழீல் மௌலானாவின் முன்னேற்றத் துக்கு வழிவகுத்தன. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (தற்போதைய பல்கலைக்கழகத்துக்குச் சமமான) சிறப்புச் சித்தி எய்தியதாலும் தந்தையின் அரும்பெரும் முயற்சியாலும் டாக்டர் டி.பி. ஜாயாவின் தலைமையில் இயங்கிவந்த கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 1945ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி ஆசிரியராக இருபது ரூபா சம்பளத்தில் கடமையேற்றார். சமகாலத்தில் மாளிகாவத்தை டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலையிலும் (ஆங்கிலேயர் பாடசாலை) 1947 வரை கடமையாற்றும் சந்தர்ப்பமும் அவருக்குக் கிட்டியது.

தலைநகரில் ஆசிரியப் பணியை மேற்கொள்ள கிடைத்த சந்தர்ப்பம் அவரது ஆளுமையும் ஆங்கில மொழிப் புலமையும் பன்மடங்கு விருத்தியடைவதற்கு காலாய் அமைந்தது. இதன் மூலம் ஆங்கிலத்தை சரளமாகப் பேசிய பழீல் மௌலானா, கொழும்பில் இயங்கிய முக்கிய இயக்கங்கள், சங்கங்களின் செயற்பாட்டாளராக மாறினார். தான் பெற்ற ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி அவரது தினக் குறிப்பு புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"நான் கொழும்பு ஸாஹிரா இராப் பாடசாலையில்[22] கற்ற ஆங்கிலக் கல்விதான் எனது வாழ்க்கையை மகிழ்ச்சிக்கும், மதிப்பிற்கும் உள்ள தாக்கியது."[23]*

---

22. 1962ஆம் ஆண்டுக்கு முன்பு சாஹிராக் கல்லூரியில் இரண்டு பாடசாலைகள் நடத்தப்பட்டு வந்தன. ஒன்று சாஹிராக் கல்லூரி அது இலவசமானது. மற்றது தனிப்பட்ட ஆங்கிலப் பாடசாலை, அது பணங் கட்டிப் படிக்க வேண்டியது. (ஹன்ஸீர், ஏ.டபிள்யூ.எம், எங்கள் தலைவர் பதியுத்தீன், தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1989)
23. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம். எனது டயரிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1945ஆம் ஆண்டில் 'கொழும்பு ஸாஹிரா சமூக சேவை லீக்' இன் தலைவராக தேர்வு செய்யப்பட்டமை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை, அகில இலங்கை சோனக சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெற்றமை, அவற்றின் மூலம் தேசிய அரசியல் தலைவர்களுடன் தொடர்பு, இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி கல்வி, சமய, சமூகப்பணி ஆற்றவும் துணிச்சலும் வல்லமையும் அவரது ஆங்கிலப் புலமை காரணமாகக் கிடைத்தவை எனலாம். அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுபவங்களும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அனுபவங்களும் அவரது பேச்சாற்றலின் ஆளுமையை அதிகரிக்க வழிகோலின. இவரது ஆங்கில அறிவுதான் மருதமுனைக்கு அப்பால் முழு இலங்கை தழுவியதாக கல்வி, சமய, சமூகப் பணியாற்றுவதற்குத் தேவையான ஆளுமையைத் தோற்றுவித்தது எனலாம்.*

## *உதவி ஆசிரியர் (1945-1950)*

*கொழும்பில் தனியார் பாடசாலையில் கடமையாற்றிய பழீல் மௌலானா, 1947 ஜுலை மாதத்தில் மூதூர் கனிஷ்ட பாடசாலையிலும் 1948 ஜுலையில் காத்தான்குடி பழைய ரோட் முஸ்லிம் பாடசாலையிலும் (தற்போது அல்-ஹிறா முஸ்லிம் மகா வித்தியாலயம்) உதவி ஆசிரியராகக் கடமையேற்றார். 1947ஆம் ஆண்டு மூதூரில் கல்வி மறுமலர்ச்சி மன்றத்தை நிறுவி அதன் தலைவராக செயற்பட்டு அங்கும் ஓர் கல்வி எழுச்சிக்கு வித்திட்டார். இவ்வாறாக கொழும்பு, மூதூர், காத்தான்குடி, மருதமுனை என சுமார் 6 ஆண்டுகள் உதவி ஆசிரியராகக் கடமை புரிந்தார்.*

## *மருதமுனையின் முதலாவது பயிற்றப்பட்ட தலைமை ஆசிரியர்*

*உதவி ஆசிரியராகக் கடமை புரிந்த பழீல் மௌலானா, 1950ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று தலைமை ஆசிரியரானார். அப்பதவி பெற்று மருதமுனையின் முதலாவது பயிற்றப்பட்ட தலைமை ஆசிரியராக முதன் முதலில் தனது சொந்த ஊரான மருதமுனையில் தான் கல்விகற்ற பாடசாலையான அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதைய கமு/அல்-மனார் ம.க.) கடமையோற்றார் என அல்-மனாரின் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில்* (Log Book) *பின்வருமாறு புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன் பதிவிட்டுள்ளார்:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18.04.1950**

*"நான் நாளை அட்டாளைச்சேனை கலாசாலைக்கு போவதற்கான முன்ஆயத்தம் செய்வதால் இன்று பாடசாலை பொறுப்புக்களை பிரதம உதவி ஆசிரியர் ஜனாப். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களிம் ஒப்படைத்து செல்கிறேன்."*

(ஒப்பம்)
ஏ.எம். ஷரீபுத்தீன்
தலைமை ஆசிரியர்

இதன் மூலம் மருதமுனையின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியர், பயிற்றப்பட்ட முதலாவது தலைமை ஆசிரியர் எனும் இரட்டை அந்தஸ்த்தையும் பழீல் மௌலானா உரித்தாக்கினார். மேலும், முதலாவது ஆங்கில தலைமை ஆசிரியர் என்ற மதிப்பும் அவருக்கு இருந்தது. அவர் பாடசாலைக்கு செய்த சில சேவைகளை பின்வருமாறு சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் அவர் எழுதி ஒப்பமிட்டுள்ளார்.

**26.07.1950**

*"இன்று பாடசாலையில் ரேடியோ அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றன."*

**07.03.1951**

*"பாடசாலையில் முதன் முதலாக பார்ளிமென்ட் நடைமுறை புகுத்தப்பட்டது. மகா தேசாதிபதி- தலைமை ஆசிரியர் பழீல் மௌலானா, சபாநாயகர்- கே. தெய்வநாயகம், பிரதம மந்திரி- எஸ். ஆதம்பாவா"*

தலைமையாசிரியர் பொறுப்பு கனதியானது. அக்காலத்தில் கற்பித்தலில் வகுப்பாசிரியர் முறையே பின்பற்றப்பட்டது. வகுப்பாசிரியரே எல்லாப் பாடங்களையும் கற்பிப்பார். ஜே.எஸ்.சி., எஸ்.எஸ்.சி. இறுதி வகுப்புக்களுக்கு தலைமையாசிரியரே எல்லாப் பாடங்களையும் கற்பித்தல் வேண்டும். அதுவே தலைமையாசிரியருக்கு கௌரவமாகவும் கருதப்பட்டது. எண் கணிதம், பாஷையும்-வியாசமும், சுகாதாரம், பூமி சாஸ்திரம், சரித்திரம், குடியியல், சித்திரம் என்பன அவையாகும். இவ்வனைத்துப் பாடங்களையும் கற்பிக்கும் வல்லமையும் பரந்த அறிவும் கொண்டவராக பழீல் மௌலானா திகழ்ந்ததுடன் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் இலகுபடுத்தி கவர்ச்சியாகவும் நேர்த்தியுடனும் அவர் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அல்-மனாரில் தலைமை ஆசிரியராக பழீல் மௌலானா ஆற்றிய சேவைகளை மருதமுனை 'அல்-மனார் மத்திய கல்லூரி வரலாறு' எனும் தலைப்பில் ஓய்வு நிலை அதிபர் ஏ.எல். மீரா முகைதீன் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்:

*"பயிற்றப்படாத ஆசிரியரான ஏ.எம். ஷரீபுத்தீன் அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தபோது ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா பயிற்றப்பட்ட தலைமை ஆசிரியராக (அதிபர்) கடைமை யேற்றார். அவருடைய காலத்தில் தான் தற்போதைய அல்-மனார் "அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை" என பெயர் மாற்றம் பெற்றது. மேலும் இவரது காலப்பகுதியில் ஊரில் வானொலிப் பெட்டி இல்லாத காலத்தில் பாடசாலைக்கு வானொலிப் பெட்டி அமைக்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட பழீல் மௌலானாவின் கல்விச் சேவை அக்காலத்தில் பெருமதிப்பு பெற்றது."*

## மருதமுனையின் முதல் ஆங்கில அதிபர்

பழீல் மௌலானாவின் மறைவையொட்டி அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் இணைந்து வெளியிட்ட இரங்கல் கவிதை *"ஆங்கிலத்தில் ஓர் அதிபராய் முதற் கண்டது உன்னையே என இன்று ஊர் பேசுகின்றது"* [24] என இவரது ஆங்கில ஆளுமையை சிலாகித்துப் பேசுகிறது.

## அதிபர் காலத்தில் ஆக்கபூர்வ செயற்பாடும் புத்தாக்கமும் (Creativity)

அல்-மனாரில் பழீல் மௌலானா அறிமுகம் செய்த பாராளுமன்ற முறைமையை ஒப்பீடு செய்து 'மருதூர் கொத்தன்' வீ.எம். இஸ்மாயில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்:

*"பழீல் மௌலானா அவர்கள் அல்-மனாரின் தலைமை ஆசிரியராக இருந்தபோது பாடசாலையில் மாணவர்களைக் கொண்ட*

---

24. பழீல் மௌலானாவின் மறைவையொட்டி 25.02.2013இல் மருதமுனை அல்-மனார் மகா சபையினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாராளுமன்றம் இயங்கியது. கல்வி, சுகாதாரம், உணவு, விவசாயம், விளையாட்டு, கலாசாரம் முதலான அமைச்சுக்கள் மூலம் சகல காரியங்களும் ஆசிரியர்களுடனான வழிநடாத்தலுடன் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது."*[25]

இதன்படி **1951**இல் பழீல் மௌலானாவினால் அறிமுகப்படுத்தப் பட்ட இணைப் பாடவிதான செயற்பாடானது தற்கால இணைப் பாட விதான கலைத்திட்டத்தில் மாணவர்களின் வினைத்திறனை அதிகரித்து மாணவர்களின் ஆளுமையை விருத்தியடையச் செய்யும் நோக்குடன் பாடசாலை பாராளுமன்றம், மாவட்டப் பாராளுமன்றம், மாகாண பாராளுமன்றம், தேசிய பாராளுமன்றம் என ஆசிரியர்களின் வழிகாட்டலோடு நடைபெற்று வருகிறது. இத்தகைய திட்டத்தை பழீல் மௌலானா **50** வருடங்களுக்கு முன்பே மாணவர்கள் மத்தியில் நடை முறைப்படுத்திக் காட்டியிருக்கும் அவரது சிந்தனை தூர நோக்கானதும் ஆக்கபூர்வமானதுமாகும்.

## மருதமுனையின் சாரணியத் தந்தை

அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதி எம்.எச்.எம். மன்சூர் அவர்கள் பழீல் மௌலானா மருத முனையின் சாரணிய உருவாக்கத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

*"இக்கல்லூரியின் சாரண இயக்க வரலாறு மிகப் பழைமையானது. **1948**ம் ஆண்டு இங்கு உதவியாசிரியராக கடைமையாற்றிய ஜனாப். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் முதன் முதலாக சாரணி யத்தை இப்பாடசாலையில் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த இயக்கத் தின் பெறுமதிமிக்க பேறான ஜனாப். பழீல் மௌலானா சிறந்த சாரண ராகவும், மாவட்டரீதியாக அதன் வளர்ச்சியில் உதவி செய்யும் துணை யாளராகவும் இருந்து சேவையாற்றியுள்ளார். இன்று வரை அல்-மனாரில் ஆரம்பித்த சாரணியம் உயிர்ப்போடே உள்ளது."*[26]

---

25. இஸ்மாயீல், வீ.எம், 'நவீன பாடசாலை முகாமைத்துவம் அல்மனாரிற்கு புதியதல்ல', கலங்கரை, கமு/ மருதமுனை அல்மனார் மகா வித்தியாலய வெளியீடு, 1987

26. மன்சூர் எம்.எச்.எம், 'அல்மனாரும் சாரணியமும்', கலங்கரை, கமு/ மருதமுனை அல்மனார் மகா வித்தியாலய வெளியீடு, 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலங்களில் பழீல் மௌலானா அவர்கள் பெற்ற வெற்றிகளுக்கு சாரண இயக்கத்தின் பாசறைகளின் மூலம் அவருக்குக் கிடைத்த பயிற்சிகளே காரணம் என தனது நாட்குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

## தலைமை ஆசிரியர்
## கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயம் (1951-1955)

1950இல் தந்தை ஐதுரூஸ் மௌலானா மரணித்து ஓராண்டினுள் மீண்டும் குடும்பத்தைவிட்டும் தாயைவிட்டும் பிரிய வேண்டும் என்ற பெரும் கவலைக்கு மத்தியில் 1951 இல் கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக பழீல் மௌலானா பொறுப் பேற்றார். அவரின் வேகம் மாணவர்களையும் ஊர் மக்களையும் கவர்ந்தது. மட மடவென முன்னேற்றம் ஏற்பட்டு 3ஆம் தரத்திலிருந்த பாடசாலையை SSC தரம் வரை உயர்த்தினார். கல்வி அபிவிருத்தியின் உச்சகட்டமாக SSC பரீட்சையில் முதன் முறையாக இரு மாணவர்கள் (ஹில்மி, அனஸ்) சித்தியடைந்தனர். இம்மாணவர்களை கௌரவிக்கு முகமாக கள்-எலிய மக்களினால் பாராட்டு விழா 1954ஆம் ஆண்டு பிரதமர் டட்லி சேனநாயக தலைமையில் வெகு விமரிசையாக நடை பெற்றது. இவ்விழாவில் சேர். ராசிக் பரீத் அவர்களும் கலந்து சிறப்பித் திருந்தார். இவ்விழாவின் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமருக்கு 'மத்ரஸா மௌலானா' அவர்கள் மூலம் யானைக்குட்டி ஒன்று இறக்காமத்திலிருந்து வரவழைக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டது. விழாவில் DS என்பதை 'Double Sons' என பழீல் மௌலானா தனது உரையில் விளித்துப் பேசியதை பிரதமர் அவர்கள் சிலாகித்துப் பேசினார். இப்பெருவிழா கள்-எலிய வரலாற்றில் புதிய உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியது.[27]

பழீல் மௌலானா பெரிதும் மதித்த தனது தாயாரை 1952இல் இழந்தார். தூர இடத்தில் பணியாற்றியதால் தாயின் மரணச் சடங்கில் கூட கலந்து கொள்ளமுடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டு பெருந் துயர் கொண்டார். எனினும், நிறைவான கல்விச் சேவைகளையும் சமயப் பணிகளையும் கள்-எலியவில் அவர் மேற்கொண்டிருந்தார். 1951-1956 காலப் பகுதியில் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா தலைமையாசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் இப்பாடசாலை பல துறைகளில் அபிவிருத்தி கண்டது.[28]

27. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம்., டயரிக் குறிப்புகள், 2007
28. அமீன், எம்.எச்.எம், புஹாரி, எம்.எச்.எம்., கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள், கல்வியும் கலாசார நிலையங்களும், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1998, பக்: 167



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மலேரியா ஒழிப்பினை நோக்காகக் கொண்டு 1952ஆம் ஆண்டு கள்எலியவில் அனுஷ்டிக்கப்பட்ட 'சுகாதார வாரம்' நிகழ்வுகளின் பின்னர் எடுக்கப்பட்ட படம். தலைமையாசிரியர் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா உடன் கள்எலிய அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தற்போது கள்எலிய அலிகார் தேசிய பாடசாலை) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர். (1952.05.26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிறைவான பிரியாவிடை வைபவம் ஒன்று கள்-எலிய மக்களால் அவருக்கு அளிக்கப்பட்டது. ரெலி சைக்கிள், பொற்கிழி, பிள்ளைகளுக்கு உடைகள் என்பவற்றுடன், பழீல் மௌலானாவை வழியனுப்புவதற்கு கள்-எலியவிலிருந்து பொல்கஹவெல புகையிரத நிலையம் வரை *36* கார்களுடன் ஊர்மக்கள் அங்கு வந்து கண்ணீர் மல்க வழியனுப்பிய விதம் அவரது மனதில் நீங்கா நினைவாக உள்ளதாக தனது நாட்குறிப்பேட்டில் குறித்துள்ளார்.[29] இப் பிரியா விடை வைபவம் இன்றைய அமைச்சர்களுக்கு நிகரான அங்கீகாரத்தை அவருக்கு வழங்கியிருந்ததைப் புரிந்து கொள்ள முடிகின்றது.



கள் எலிய மினு/ அலிகார் மகா வித்தியாலய வாசிகசாலை, கணினி கூட திறப்புவிழாவுக்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட பழீல் மௌலானா அவர்கள், பாடசாலை அதிபர் ஜனாப் அஷ்ரப் அவர்களுக்கு நூல்களை அன்பளிப்பு செய்கிறார். *(19.02.2007)*

*29.* பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம்., எனது டயறிக் குறிப்புகள், *1976*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவி அஞ்ஞான் உம்மா

பழீல் மௌலானாவின் மாணவியான கள்-எலியவைச் சேர்ந்த அஞ்ஞான் உம்மா பிற்காலத்தில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பின ராக தேர்வு செய்யப்பட்டார். கிழக்கிலங்கை முஸ்லிம்களை காணும் போதெல்லாம் *"நான் பழீல் மௌலானாவின் மாணவி, நான் இந்நிலைக்கு வருவதற்கு அவரின் பங்கும் உண்டு"*[30] எனக் கூறுவார். அம்பாறை மாவட்ட விஜயம் ஒன்றின்போது பழீல் மௌலானாவை அவர் வீடுதேடி வந்து நலம் விசாரித்துச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வீரத்திடல் அல்ஹிதாயா வித்தியாலயம் (1956-1960)

## நவீன கற்பித்தல் முறைமையைப் பயன்படுத்திய தலைமை ஆசிரியர்

கல்லோயா அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மருதமுனை மக்கள் குடியேறிய 5ஆம் குளனி வீரத்திடல் அல்-ஹிதாயா மகா வித்தியால யத்தின் மூன்றாவது தலைமை ஆசிரியராக 1956.01.01இல் பழீல் மௌலானா கடமையேற்றார். 1956ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தினால் பாடசாலைக் கட்டடம் சேதமுற்றிருந்தது. மக்கள் அப் பிரதேசத்தைவிட்டும் குடிபெயர்ந்திருந்தனர். இவ்வாறான நிலை மையிலேயே பாடசாலையை பொறுப்பேற்ற அவர் ஐந்தாம் வகுப்பை மீள ஆரம்பித்தார். கடுமையாக உழைத்து 6,7,8,9ஆம் வகுப்புக்களை புதிதாக இணைத்தார். வீட்டில் முடங்கிக்கிடந்த பெண் மாணவிகளை யும் பாடசாலையில் சேர்க்க அரும்பாடுபட்டார். அவரது முயற்சிகள் காரணமாக அவ்வூரின் கல்வி முன்னேற்றம் கண்டது. பழீல் மௌலானா அவ்வூர் மக்களால் பெரிதும் மதிக்கப்பட இக் கல்விப் பணி பிரதான காரணமாகியது. இதனை தினகரன் பின்வருமாறு பதிவிடு கின்றது.

*"இப் பாடசாலையின் வளர்ச்சிப்படிகளில் தடம் பதித்த அதிபர் களில் ஒருவராக மருதமுனையைச் சேர்ந்த ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவை குறிப்பிடலாம். 1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடமையாற்றிய இவர் பல்வேறு சமூக விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத் தினார். இவர் பளீல் வட்டவிதானை என்பவரின் துணையுடன் வீடு*

30. நவமணி , 2003.10.26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீடாகச் சென்று மாணவர்களை அழைத்துவந்து கற்பித்தல் பணிகளை மேற்கொண்டதன் பயனாக மாணவர் தொகை 92ஆல் அதிகரித்தது இவரது காலத்தில் முதன் முதலாக கலாசார பாரம்பரி யங்களைச் சித்தரிக்கும் வகையிலான கண்காட்சியொன்றும் நடாத் தப்பட்டது. மேலும் திரேஸா என்ற பெண் ஆசிரியரின் உதவியுடன் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடாத்திய பெருமையும் இவரையே சாரும். 1959ஆம் ஆண்டு இப்பாடசாலை வரலாற்றில் ஒரு திருப்பு முனையான காலமாக அமைந்தது. இதற்குக் காரணம் இப்பாட சாலையில் கல்வி பயின்ற ஐ.ஏ. ஹமீட் என்பவர் 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமையாகும். இச்சித்தியின் பெருமையும் பழீல் மௌலானாவையே சாரும்."*[31]

பழீல் மௌலானாவின் பெருமைமிகு மாணவரும் கல்முனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான மர்ஹூம் ஐ.ஏ. ஹமீட் (IPT) 'டெய்லி நியூஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் பழீல் மௌலானா பற்றியும் அவரது ஆசிரியம் பற்றியும் அவரது கற்பித்தல் நுட்பம் பற்றியும் பின்வருமாறு வியந்து எழுதியுள்ளார். (தமிழ் மொழி பெயர்ப்பு).

*"நான் வீரத்திடல் அல்-ஹிதாயாவில் தரம் 4இல் கற்கும்போது பழீல் மௌலானாவுடன் தொடர்பு ஏற்பட்டது. அங்கு தலைமை ஆசிரியராகக் கடமை ஏற்றார். கல்விக்கும் இணைப் பாடவிதானத் துக்கும் சம முக்கியத்துவம் கொடுப்பார். ஆசிரியர்களும் மாணவர் களும் அவரது முன்மாதிரியால் கவரப்பட்டனர். அவரது நெறிப்படுத் தலில் பல்வேறு மேடை நாடகங்களில் பாடசாலைக் காலத்தில் நடித் திருக்கின்றேன். அந்நினைவுகள் இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளது. இவரிடம் ஒரு திறமை காணப்பட்டது. அது ஒரு பிள்ளையை அவதானித்தவுடன் அப்பிள்ளையிடம் என்ன திறமை ஒளிந்துள்ளது என்பதைக் கணித்து விடுவார். அப்போது நடுத்தர வயதுடைய இவர் சிறப்பாக உடையணிந்து வருவார். அவரது வயதை ஒத்த ஆட்களைவிட இவர் வித்தியாசமானவர். எனது இலக்கிய ஆர்வத்தை அவதானித்த அவர், தமிழில் கவிதை எழுதும்படி ஆர்வமூட்டினார். எனக்கு புனித அல்-குர்ஆனை முறையாகவும் சரளமாகவும் ஓதத் தெரியாது என அறிந்ததும் கவலையடைந்தார். பின்னர் எனக்கு புனித அல்-குர்ஆன்*

---

31. வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயம் பொன் விழா சிறப்புக் கட்டுரை, தினகரன், 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிரதியொன்றை அன்பளிப்புச் செய்து இலகுவாக ஓதக் கற்றுத் தந்தார்."*[32]

பழீல் மௌலானா ஒரு சிறந்த ஆசிரியர். ஒரு மாணவனில் ஒளிந்திருக்கும் ஆற்றலையும் திறமைகளையும் மதிப்பீடு செய்வதிலும் ஓர் இலக்கை நோக்கித் தூண்டிவிடுவதிலும் வல்லவர் என்பதை பல்வேறு நிகழ்வுகளினூடாக அறியலாம். பழீல் மௌலானா வட்டாரக் கல்வி அதிகாரியாக பணிபுரிந்த வேளையில் உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நிகழ்வொன்றிற்கு பிரதம அதிதியாக அழைக்கப்பட்டார். அன்றைய தினம் ஒரு மாணவனால் நிகழ்த்தப் பட்ட உரையைக் கூர்மையாக அவதானித்த மௌலானா அம் மாணவனை ஆரத் தழுவி *"இம்மாணவன் சாதாரண மாணவன் அல்ல; இவர் நிச்சயமாக ஒரு உயர்தகைமை கொண்ட அரசியல்வாதியாக இந்நாட்டில் உருவாகுவார்"*[33] என தீர்க்கதரிசனமாகக் கூறினார். அம்மாணவனே முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் ஆவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வீரத்திடலில் கடமையாற்றியபோது திறமையான ஒரு மாணவரின் முன்னேற்றம் சிறு உடல் உபாதை காரணமாக தடைப்படுவதை பழீல் மௌலானா அவதானித்தார். உடனடியாக செயலில் இறங்கிய அவர், ஸாஹிரா கல்லூரியின் அதிபராக அப்போது கடமையாற்றிய செனட்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களினூடாக வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு அம்மாணவன் S.S.C பரீட்சை எழுதுவதற்கான தடையை நீக்கி வைத்தார். பரீட்சையில் சித்தியடைந்த அம்மாணவன் பின்னாளில் அதிபராக உயர்ந்தார்.[34]

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எம்.ஏ. சமது பழீல் மௌலானாவின் ஒழுக்க முன்மாதிரிகள் பற்றி குறிப்பிடுகையில், *"கடமையின்போது காற்சட்டை, கோர்ட்டுடன் தலைக்கு தொப்பியும் அணிவார்"* என விவரித்து கற்பித்தலின்போது கடைபிடிக்க வேண்டிய உடையின் அழகு, நேர்த்தி முக்கியத்துவத்தை பழீல் மௌலானா ஊடாக சுட்டிக்காட்டுகிறார்.

32. Hameed I.A., A Beacon Light, Daily News, 17.04.2013
*33. பழீல் மௌலானா, நேர்காணல், 2002*
*34. பழீல் மௌலானா ஐ.ம்.எஸ்.எம். சுயவிபரத் திரட்டு, 2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவின் கற்பித்தல் மற்றும் கல்வி நிருவாக முகாமைத்துவ நுட்பங்களையும் முன்மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்யும் போது, அவர், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஆக்கபூர்வ சிந்தனையாளராகத் திகழ்ந்த ஒருவர் என்பதைக் கண்டுகொள்ளலாம். மாணவர் மையக் கற்பித்தல், 21ம் நூற்றாண்டின் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய ஆசிரியர்-மாணவர் நேர்மறை உறவும் ஆளுமைப் பண்புகளும், ஆசிரியர்கள் கைக்கொள்ள வேண்டிய உளவியல், தத்துவ, சமூகவியல் முன்மாதிரிகள், மாணவர்களின் தனியாள் வேறுபாடு அறிந்து ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டியதன் அவசியம் முதலான நுட்பங்களை அரை நூற்றாண்டுக்கு முன்னரே அவர் வெளிப்படுத்தியுள்ளமை புலனாகின்றது.

ஆரம்ப காலத்தில் கற்பித்தல் முறை ஆசிரியர் மையப்பட்டதாகவும் பின்பு மாணவர் மையப்பட்டதாகவும் இருந்து இப்போது தனியாள் மையப்படுத்திய கற்பித்தல் முறையாக மாற்றம் பெற்றுள்ளது. கற்போனின் சூழலை மையப்படுத்திய நவீன கற்றல்-கற்பித்தல் உத்திகளை 1960களில் பழீல் மௌலானா பிரயோகித்திருக்கிறார். அவரது மாணவரான ஐ.ஏ. ஹமீட் இன் அனுபவம் அதற்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

ஒருவரது சிறந்த தலைமைத்துவமும் அது ஏற்படுத்தும் தாக்கங்களும் அவரது பதவிக் காலப்பகுதியோடு முற்றுப்பெற்று விடுவதில்லை. அவரது குறிக்கோள்களையும் பணிகளையும் தொடர்வதற்கான புதிய தலைமுறை ஒன்றை உருவாக்குவதிலேயே அதன் வெற்றி தங்கி நிற்கின்றது. பழீல் மௌலானாவின் சேவைகள் தலைமுறை தாண்டியவை. அவர் உருவாக்கிய மாணவர் பரம்பரை இலங்கையின் நாலா பாகங்களிலும் பரவி இலங்கை முஸ்லிம்களின் கல்வி, அரசியல், சமூக, கலை, இலக்கிய, சன்மார்க்க அபிவிருத்தியில் தடம்பதித்துள்ளது. அவர்கள் ஆற்றிய சேவைகள் பிரத்தியேகமானவை என்றபோதும் அத்தலைமுறையின்மீது பழீல் மௌலானா எனும் ஆளுமை ஏற்படுத்திய செல்வாக்கு கனதியானது. அம்மாணவப் பரம்பரையின் வரலாற்று வகிபாகங்களில் பழீல் மௌலானா போன்ற ஆசிரியப் பெருந்தகைகளின் ஆளுமையின் செல்வாக்கும் சேர்த்துக் கணிக்கப்பட வேண்டும் என நிச்சயமாகக் கூறலாம்.

அவ்வாறு தனது தனிப்பட்ட வழிகாட்டலில் வாழ்வில் உயர்ந்த மாணவர்களாக பின்வருவோரை அவர் தனது டயரிக் குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1. வீ.எம். இஸ்மாயில் (மருதூர் கொத்தன்)*
*2. கே.எல்.ஏ. வாஹிட் (அதிபர்)*
*3. எம்.வை.எம். முஸ்லிம் (மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கண்டி)*
*4. ஏ.எச்.எம். மஜீட் (மாகாண உதவிக் கல்வி பணிப்பாளர்)*
*5. ஐ.ஏ. ஹமீட் (முன்னாள் கல்முனை பிரதேச சபை தவிசாளர்)*
*6. ஏ.கே.எம். அல்லாபிச்சை (ஆசிரியர்)*
*7. எஸ்.எம்.எஸ்.எம். ஹசனுல் பாரி மௌலானா (அதிபர்)*
*8. எம்.ஐ.எம். அமீன் (கல்வி அதிகாரி)*
*9. என்.எம். ஸாஜஹான், கள்–எலிய (முகாமையாளர், மக்கள் வங்கி)*
*10. எம்.சீ. அக்பர், மூதூர் (பட்டயக் கணக்காளர்)*
*11. ஏ.எம். அசாம் தாஹிர், கள்–எலிய (தபாலதிபர்)*
*12. எம்.சீ.எம். யூசுப் (சட்டத்தரணி)*
*13. எஸ்.எச். இஸ்மாயில், கொட்டியாவெவ (அதிபர்)*
*14. எம்.எம். அஸீஸ், கொட்டியாவெவ (அதிபர்)*
*15. ஏ.எஸ். நிஸாம், கேகாலை (வைத்தியர்)*
*16. எஸ்.எம். இஸ்மாயில், வீரத்திடல் (ஆசிரியர்)*
*17. எஸ்.எம். அபுல் ஹஸன் (கோழிபந்தாவ)*
*18. கே. கணபதிப்பிள்ளை (கிராம சேவகர்)*
*19. கவிஞர் நீலாவணன்*
*20. ரீ.எம். ஹனீபா, மாணிக்கம்பிட்டி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

*1960ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் அரசியல் பழிவாங்கல் காரணமாக பழீல் மௌலானா அனுராதபுரத்திற்கு இடமாற்றப்பட்டார். வீரத்திடலில் இடம்பெற்ற பிரியாவிடை வைபவத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர் மக்கள் கண்ணீர்மல்க, அவரை வழியனுப்பி வைத்தனர். ஆசிரியர் அப்துல் ஸமதின் பிரியா விடைப் பேச்சில், "குளனியில் திரண்ட கார் மேகம் கல்வி வரட்சியை நீக்கி இப்போது அநுராதபுரக் காட்டை நோக்கி பறந்து போகின்றது"[35] எனக் கூறி மனதை உருக்கி சபையை அழச் செய்தார் என தனது டயரிக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1960ஆம் ஆண்டு தொடக்கம் 1962வரை இஹல கொட்டியாவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார்.*

*இவ்வாறு, 1951இல் மருதமுனை அல்-மனாரில் தொடங்கி 1962யில் கொட்டியாவெவ முஸ்லிம் மகா வித்தியாலயம் வரை சுமார் 11 வருட கால தலைமை ஆசிரியர் சேவையை அவர் நிறைவு செய்தார்.*

## மருதமுனையின் முதலாவது கல்வி நிர்வாகி (1962-1978)

## சுற்று வட்டக் கல்வி அதிகாரி (Circuit Education Officer)

தற்போது கல்வி நிர்வாக நடைமுறையில் உள்ள DEO- Divisional Educational Officer, ADE- Assistant Director of Education, ZDE- Zonal Director of Education போன்ற கல்வி நிர்வாக பதவிநிலைகளிலிருந்து பழீல் மௌலானா வகித்த 'சுற்று வட்டக் கல்வி அதிகாரி' எனும் பதவி மிகவும் கனதியானது; அதிகாரம் பொருந்தியது. முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ அவர்கள் ஒரு கல்வியதிகாரியாக பழீல் மௌலானா அவர்களது பாத்திரத்தை பின்வருமாறு விவரிக்கிறார்:

*"கல்வியதிகாரிகள் மத்தியில் அன்று அவர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர். இன்றைய கல்வியதிகாரிகளுக்கு அவர் ஓர் இலக்கணம். இன்று அவர் தொல்காப்பியம். புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், வித்தகர் சுவாமி விபுலானந்தரின் மாணவர். அவர் வழிவந்த பழீல் மௌலானா ஓர் கல்வி விருட்சம்."*[36]

## சுற்று வட்டக் கல்வி அதிகாரி பதவியின் பின்னணி

இலங்கையில் 1960களில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விக் கொள்கை ஊடாக கல்வி நிர்வாகம் பரவலாகியது. பழீல் மௌலானா விடம் இருந்த அனுபவம், செயற்றிறன், வேகம் மற்றும் ஆங்கில மொழிப் புலமையும் நன்மதிப்பும் முதலானவை பழீல் மௌலானா இப்பதவி உயர்வை அடைய காரணமாகின. இப்பதவி வகித்த காலத்தில் இலங்கையின் கல்வி அமைச்சராக டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத்

35. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம், எனது டயரிக் குறிப்புகள், 1976
36. மத்தியூ எஸ்.ஏ.ஐ., 'தமிழறிஞர் பழீல் மௌலானா பாரம்பரியத்தாலும் செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர்' தினகரன், 28.02.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இப்பதவியை பெற்றதன் மூலம் முஸ்லிம் அமைச்சர்களோடும் முக்கியஸ்தர்களோடும் இருந்த அவரது உறவுகள் உத்தியோகபூர்வ தொடர்புகளாக மேலும் வலுவடைந்தன.

இலங்கையின் கல்வி முறையில் சிறந்த முகாமைத்துவமும் *1960*இன் பின்னரே ஏற்பட்டது. கல்வித் தேவையும் அக்காலத்தில் வெகுவாக அதிகரிக்கத் தொடங்கியது. கொழும்பில் மையப்படுத்தப் பட்டிருந்த கல்வி நிருவாகக் கட்டமைப்பு இத் தேவையை நிறைவேற்றப் போதுமானதாய் இருக்கவில்லை. எனவே, புதிய கல்விப் பதவிகளை உருவாக்கி அதிகாரங்களை அதிகரித்து, பரவலாக்கம் செய்து கல்வி அபிவிருத்தி செய்யவென *1960.07.21* இல் பாராளுமன்றத்தில் விசேட சட்டங்கள் இயற்றப்பட்டன. அவை, *1960*ஆம் ஆண்டு *5*ம் இலக்க நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் விசேட சட்டம் (Assited schools and training colleges (special provisions) Act No.05 Of 1960), *1961*ஆம் ஆண்டு *8*ஆம் இலக்க நன்கொடை பெறும் பாடசாலை கள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் குறை நிரப்புச் சட்டம் (Assited schools and training colleges (supplimentery provisions) Act No.08 Of 1961) என்பனவாகும். இவ்விரு சட்டங்கள் மூலம் நன்கொடை பெறும் பாட சாலைகள் யாவும் அரச பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டிய தேவை உருவானது.

கல்விச் சேவைக்கு அரசே நேரடிப் பொறுப்பு எனவும் ஏனைய நிறுவனங்கள் இனி கல்விச் சேவையினை வழங்க முடியாது என்ற முடிவுக்கும் இலங்கை அரசாங்கம் வந்தது. இதன் விளைவாக *2649* உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசு சுவீகரிக்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்வி அமைச்சின் மீது சுமத்தப்பட்டது. இத்தகைய கல்வி நிருவாகத் தேவையை அரசின் பிரதிநிதியாக அமுல்படுத்தவே ஆங்கிலப் புலமை கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியர், தலைமை ஆசிரியர் எனும் இரட்டை அனுபவங்களைக் கொண்ட ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா எனும் மருதமுனை மகன் சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக (Circuit Education Officer) புத்தளம், குருநாகல், கேகாலை, பொலன்னறுவை, பண்டாரவளை, கல்முனை போன்ற கல்வி வட்டாரங்களுக்கு நியமிக்கப்பட்டார்.

இதனால் அவரது பெயர் வர்த்தமானியில் அடிக்கடி பிரசுரிக்கப் பட்டு *"கீழ்வரும் பாடசாலைகள் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வினால் பொறுப்பேற்கப்படும்"* என்ற அரச கட்டளையின் கீழ் பல பாடசாலைகள் அவரினால் பொறுப்பேற்கப்பட்டது மட்டுமன்றி, அவற்றின் புதிய பெயர்கள், தரமுயர்த்தல், அதற்கான வளப் பகிர்வு என்பனவும் அவராலேயே மேற்கொள்ளப்பட்டன. இவ்வேலைத் திட்டங்களை சிறப்பாக மேற்கொள்ள கல்வி அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களும் கல்விப் பணிப்பாளர் நாயகம் கே.டீ. ஆரியதாச, பரீட்சைகள் ஆணையாளர் பீ.பி. ரத்நாயக அவர்களும் அவருக்கு உறு துணையாக இருந்தனர். பதியுதீன் மஹ்மூத் அவர்கள் முஸ்லிம் பாடசாலைகள் குறித்து விஷேட கவனம் செலுத்தினார்.

பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அவர்களால் கொண்டுவரப்பட்ட 'தனியார் பாடசாலைகளை அரசாங்கமயப்படுத்தல்' சட்டம் இலங்கை கல்வி வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தனியார் நிறுவனங்களினதும் மிஷனறி களினதும் ஆதிக்கத்திலிருந்த கல்வி பொதுச் சொத்தாக மாறியது. இதனால் உதவி நன்கொடை பெறும் பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்கும் இடையே இருந்த ஏற்றத் தாழ்வுகளை அகற்றி எல்லோருக்கும் சம வாய்ப்பினை இச்சட்டம் அளித்தது.[37]

இந்த வரிசையில் பழீல் மௌலானா அவர்களின் நாட்குறிப்பில் புத்தளம்- ***96*** பாடசாலைகள், கல்முனை- ***33*** பாடசாலைகள், குருநாகல்- ***54*** பாடசாலைகள், குளியாப்பிட்டி- ***18*** பாடசாலைகள், கேகாலை- ***101*** பாடசாலைகள், பொலன்னறுவை- ***19*** பாடசாலைகள், சம்மாந்துறை- ***36*** பாடசாலைகள் என மொத்தமாக ***357*** பாடசாலைகள் அரசின் பிரதிநிதியாக அவரால் பொறுப்பேற்கப்பட்டன என அவர் பதிவுசெய்துள்ளார். இதன் ஊடாக ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா எனும் கல்வி நிர்வாகி ***148,650*** மாணவர்கள், ***3,656*** ஆசிரியர்கள், அவற்றுக்கான மனித, பௌதிக வளங்கள் என்பவற்றை நிருவகிக்க வேண்டி இருந்தது.

மருதமுனை வரலாற்றில் இத்தகைய பாரியதொரு கல்வி, நிருவாகப் பதவியை முதன் முதலில் வகித்தவர் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவே என்பதில் மருதமுனை மண்ணும் மக்களும் பெருமிதம் கொள்ள முடியும்.

---

*37. முஹம்மது சமீம், அ, விமர்சனக் கட்டுரைகள், ரிஸானா வெளியீட்டகம், கொழும்பு, 1999 பக்: 81*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு விழா

மருதமுனையைச் சேர்ந்த

ஜனாப் I.M.S.M.பழீல் மௌலானா அவர்கள்

வித்தியாதரிசகராகப் பதவி உயர்வு பெற்றமையைக் கௌரவிக்குமுகமாக நிகழவிருக்கும் பாராட்டு விழாவுக்குச் சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

**காலம்: 04-11-62 ஞாயிறு பி.ப.3மணி**

**இடம்: மருதமுனை தெற்கு, அ.மு.க.பாடசாலை - மண்டபம்.**

**தலைமை: M.C.அகமத் J.P., M.P**

(கல்முனைப் பட்டின சபைத் தலைவர்)

## நிகழ்ச்சிகள்.

கிறாஅத்: ஜனாப். M.C.செயினுலாப்தீன் மௌலவி

பாராட்டி வாசித்தளித்தல்: கவிஞர். 'நீலாவணன்'

## பேச்சாளர்கள்:

1. திரு: ஏ.சாமித்தம்பி (தலைமை ஆசிரியர்)
2. ஜனாப்: M.I.M.மீராலெவ்வை அவர்கள் (விரிவுரையாளர், அ.ஆ.ப.க)
3. ஜனாப்: A.M.சரிபுத்தீன் அவர்கள் (வித்தியாதரிசகர்)
4. ஜனாப்: M.M.முகைதீன் மீராசாய்வு J.P. அவர்கள்
5. ஜனாப்: J.M.M.அப்துல் காதிர் அவர்கள் (அதிபர்)
6. ஜனாப்: மௌலவி: A.M.சம்சுதீன் அவர்கள்
7. ஜனாப்: மௌலவி: K.L.சாகுல் ஹமீது அவர்கள்
8. ஜனாப்: S.Z.M.மஷ்ஹூர் மௌலானா அவர்கள்

நன்றியுரை: கதாசிரியர் 'மருதூர்க் கொத்தன்'

பாத்திஹா: மௌலவி. S.M.அப்துல் கரீம் அவர்கள்

முக்கிய குறிப்பு:- கரைவாகு வடக்கு கிராமச் சபைத் தலைவர் ஜனாப்: S.M.S. அகமது மௌலானா J.P. அவர்களால் பொன்னாடை போர்த்தி அன்னாரைக் கௌரவிக்கப்படும்

| | | |
|---|---|---|
| M.M.L.கனி | இவ்வண்ணம் | E.L.அபூபக்கர் |
| பாராட்டுக்குழுத் தலைவர் | மருதமுனை<br>1-11-62 | பாராட்டுக்குழுச் செயலாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் கல்வி நிருவாக உயர் பதவியில் முதல் மருதமுனை மகன்

*மேற்கூறிய பின்னணியில் கல்வி நிருவாக முகாமைத்துவத்தை சிறப்பாக முன்னெடுக்க 1961ல் முழு இலங்கையும் 10 கல்விப் பிராந்தி யங்களாகவும் 13 உப காரியாலயங்களாகவும் கல்வி அமைச்சினால் பிரிக்கப்பட்டது. பின் 1966இல் கல்விப் பிராந்தியங்களின் தொகை 14 ஆக அதிகரிக்கப்பட்டது. 1968இல் 15 கல்விப் பிராந்தியங்களும் 9 உப காரியாலயங்களும் இயங்கின. 1968இல் பிரிக்கப்பட்ட கல்வி பிராந்தியங்கள் வருமாறு:*

*கொழும்பு வடக்கு, கொழும்பு-தெற்கு, களுத்துறை, கண்டி-மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை-ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, அம்பாறை, குருநாகல், சிலாபம், அநுராதபுரம்-பொலநறுவை, பண்டாரவளை, மொனராகல, இரத்தினபுரி, கேகாலை*

*இவ்வாறு பிரிக்கப்பட்ட 15 கல்விப் பிராந்தியங்களில் கல்முனை, புத்தளம்-சிலாபம், குளியாப்பிட்டி, கேகாலை, குருநாகல், அனுராத புரம்-பொலநறுவை, சம்மாந்துறை என்பவற்றில் பழீல் மௌலானா சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பணியாற்றக் கிடைத்தமையானது மருதமுனை மகனுக்கு இலங்கையின் கல்வி நிருவாகத்துறையில் கிடைத்த அங்கீகாரமும் நன்நம்பிக்கையுமாகும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது.*

*இப்பதவிக் காலத்தில் ஏறக்குறைய 2500 ஆசிரியர்களின் தராதரப் பத்திரத்தில் சேவைக் குறிப்பு எழுதி கையொப்பமும் இட்டுள்ளார் என்பதை அவரது நாட்குறிப்பில் பதிவுசெய்துள்ளார். அவ்வாறான அவரது ஒப்பத்துடனான குறிப்பு ஒன்று மருதமுனையைச் சேர்ந்த மறைந்த ஏ.எம்.ஏ. ஜெலீல் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் இலங்கை வித்தியாபகுதி, பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் புத்தகத்தில் காணப்படு கின்றது. அதில் பழீல் மௌலானா பின்வருமாறு சான்றுரை வழங்கியுள்ளார்.*

*"ஏ.எம்.ஏ. ஜெலீல் என்பவர் (402943 எனும் இலக்கமுடைய)* KM/Al-Manar, KM/Al-Hira Vidyalaya *என்பவற்றில் 1.3.1966-1.10.1968 வரை மிகத் திருப்தியாக கடமையாற்றினார்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் ஒப்பத்தின் கீழ் ஏற்கனவே அச்சாகி இருந்த Inspector of School என்பதை வெட்டிவிட்டு C.E.O என எழுதி ஒப்பமிட்டுள்ளார். அவ்வாறாயின், Inspector of school எனும் அதிகாரி ஏற்கனவே ஒப்பமிட்ட இடத்தில் C.E.O எனும் உயர் அதிகாரி ஒப்பமிடுவதற்கு அப்போது அதிகாரமளிக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது.

பழீல் மௌலானாவின் நாட்குறிப்பேட்டை ஆவணப் பகுப்பாய்வு செய்கையில் அவர் வகித்த சுற்று வட்டக் கல்வி அதிகாரி பதவி ஊடாக அவருக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் அவரால் ஆற்றப்பட்ட சேவைகளை பின்வருமாறு நிரற்படுத்த முடியும்:

## சுற்று வட்டக் கல்வி அதிகாரி- புத்தளம்-சிலாபம் (1962-1965)

1962இல் இலங்கையின் தனியார்துறை பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற காலகட்டத்தில் புத்தளத்துக்கு சுற்று வட்டக் கல்வியதிகாரியாக ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா நியமிக்கப்பட்டார். கொச்சிக்கடை கோணவத்தை பாலம் முதல் மன்னார் எல்லையான இலவன் குளம் ஈறாக மொத்தமாக 96 பாடசாலைகள் இவரது பொறுப்பின் கீழ் வந்தன. மேலும் அங்கிருந்த 40 கிறிஸ்தவ மிஷனறிப் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் அரச பிரதிநிதியாகவும் பழீல் மௌலானா செயற்பட்டார். பொறுப்பேற்கும் பாடசாலைகளின் பெயர்களும் பொறுப்பேற்கும் அரச பிரதிநிதி ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா (C.E.O) எனவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் கல்வி அமைச்சினால் பிரதிகள் அனுப்பப்பட்டு அவை பேணப்பட்டு வந்தன. இந் நடவடிக்கை மூலம் ஆரம்பத்தில் கிறிஸ்தவ சகோதரர்களின் பலத்த எதிர்ப்புக்கும் பழீல் மௌலானா உள்ளானர். பின்னர் தமிழ் ஆசிரியர்களினால் இவரது மகத்தான சேவை பாராட்டப்பட்டு பிரியாவிடை வைபவமொன்று அவர்களது சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தளம்-சிலாபம் வட்டாரத்தில் இவர் ஆற்றிய சேவைகளை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

1. புத்தளம்-கற்பிட்டி வீதியில் அமைந்துள்ள நரக்களி கிராமத்தில் இயங்கிய கிறிஸ்தவ மிஷன் பாடசாலையை புதிய அரச பாடசாலையாக மாற்றியமைத்து திறந்து வைத்தார். அதன் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஆசிரியராக தனது ஆசிரிய நண்பரான பீ.எஸ். பிள்ளைக்கு நியமனம் பெற்றுக் கொடுத்தார்.

2. புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியையும் புத்தளம் சென். மேரீஸ் கல்லூரியையும் தரமுயர்த்தியமை.

3. 1963 செப்டெம்பரில் புளிச்சாக்குளத்தில் உமர் பாறுக் மகா வித்தியாலயம் எனும் பாடசாலையை நிறுவி, கல்வியமைச்சர் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களைக் கொண்டு திறந்து வைத்தமை.

4. சிலாபம் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு 'நஸ்ரியா மகா வித்தியாலயம்' எனப் பெயரிட்டு அதற்கு புதிய இரண்டு மாடிக்

**சிலாபத்தில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவின் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் புத்தளம், சிலாபம் ஆசிரியர்களுடன்**



**முன்வரிசை:** 1. அமீருல் அன்சார் மௌலானா (மகன்) 2. பழீல் மௌலானா 3. திரு. லம்பேர்ட் (ஆசிரியர்) 4. பௌசுல் ஹினாயா (மகள்) **பின்வரிசை:** 1. ஏ.என்.எம். சாஜஹான் (அசிரியர்) 2. ...... 3. எச்.எம். சேகுலாப்தீன் (ஆசிரியர்)

(தகவல்: இஸட்.ஏ. ஸன்ஹீர்- முன்னாள் பணிப்பாளர், தமிழ்ப் பிரிவு, புத்தளம் கோட்டக் கல்வி அலுவலகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் - சிலாபப் பகுதி வட்டார வித்தியாதரிசியாயிருந்து 1. 6. 65 உடன் கல்முனை வட்டாரத்திற்கு மாற்றலாகிச் சென்ற

## ஜனாப். I. M. S. M. பளீல் மௌலானா

அவர்கட்குத்

தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடாத்தப்படும் பிரியாவிடை உபசார வைபவத்தின்போது உளமுவந்து அளிக்கப்பட்ட

# உபசாரப்பத்திரம்.

---

### அன்பே உருவான ஐயன்மீர்!

[illegible]

### ஆற்றலிற் சிறந்த அறிஞர் திலகமே!

[illegible]

### இரக்கம் படைத்த ஈகையாளரே!

[illegible]

### உயர் குடிப் பிறந்த உத்தமரே!

[illegible]

### ஊரார் மெச்சும் உன்னத பெருமா!

[illegible]

### எல்லோருக்கும் நல்லவரான எங்கள் தலைவ!

[illegible]

### ஒழுக்கம் குன்றா ஒப்பற்ற பெரியீர்!

[illegible]

இங்ஙனம்,

தங்கள் சேவைக் குழுவும்,

புத்தளம் - சிலாபம் வட்டாரத் தமிழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடம் பெற்றுக் கொடுத்து அதனை டாக்டர். பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை அழைத்து திறந்து வைத்தமை.

5. கற்பிட்டி கண்டல்காடு முஸ்லிம் வித்தியாலயத்தை தரமுயர்த்தி ஆரம்பித்து வைத்தமை.

6. கொட்டாரமுல்லை முஸ்லிம் வித்தியாலயத்துக்கு அல்-ஹிறா மகா வித்தியாலயம் எனப் பெயர்சூட்டி கல்வியமைச்சர் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களால் அதனைத் திறந்து வைத்தமை. மேலும், பலத்த எதிர்புகளுக்கு மத்தியில் அப் பாடசாலைக்கு 5 ஏக்கர் வயல் நிலத்தை சுவீகரித்து விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்தமை.

7. கொட்டாரமுல்லை கிராமத்திற்கு அண்மையில் உள்ள ஒரு முஸ்லிம் கிராமத்தில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி புதிய முஸ்லிம் பாடசாலையை நிறுவியமை. இதனால் நடைமுறைச் சட்ட விதிகளை மீறினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு உயர் அதிகாரிகளினால் பழீல் மௌலானா விசாரணைக்கு உட்படுத் தப்பட்டார். அவ்வூரின் கல்வித் தேவையை விளக்கி தனது நடவடிக்கையை நியாயப்படுத்தியபோது அக்குற்றச்சாட்டிலி ருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

புத்தளம்-சிலாபம் வட்டாரக் கல்வி அதிகாரியாக சேவையாற்றி 1965இல் கல்முனை வட்டாரத்துக்கு மாற்றலாகிச் சென்ற ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவுக்கு புத்தளத்தில் அவர் ஆற்றிய சேவைக்காக புத்தளம்-தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் 19.06.1965இல் நடத்தப் பட்ட பிரியாவிடை உபசாரப் பத்திரத்தில் பின்வருமாறு அவரது பாரபட்ச மற்ற அருஞ் சேவைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பே யுருவான ஐயன்மீர்!
ஆற்றலிற் சிறந்த அறிஞர் திலகமே!
இரக்கம் படைத்த ஈகையாளரே!
உயர் குடிப்பிறந்த உத்தமரே!
ஊரார் மெச்சும் உன்னத பெருமகனே!
எல்லோர்க்கும் நல்லவரான எங்கள் தலைவரே!
ஒழுக்கம் குன்றா ஒப்பற்ற பெரியீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மதம் பாராது, கைம்மாறு கருதாது, தன்னலம் நோக்காது எவருக்கும் சமத்துவமாக நன்மை பயக்கும் வகையில் உத்தியோகக் கடமைகளை செம்மையாகச் செய்ததோடு இன்முகம் காட்டி நன்மையாகப் பேசி தமிழ்ப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் அரசாங்கத்துடன் பரிந்து பேசி ஊர்கள் தோறும் செய்துள்ள சீரிய தொண்டுகளை எம்மால் என்றும் மறக்க முடியாதிருக்கின்றோம்.

## கல்முனை வட்டார கல்வி அதிகாரி (1965-1969)

புத்தளத்தைத் தொடர்ந்து *01.06.1965*இல் கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கல்முனை பழீல் மௌலானா அவர்களின் சொந்த வட்டாரம். இவ்வரிய சந்தர்ப்பம் அவரது ஊக்கத்தை மேலும் அதிகரித்தது. அவரது வருகையை அடுத்து கல்முனை வட்டாரம் உப வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு புதுப் பொலிவு பெற்றது. பின்வரும் சேவைகள் தனது காலத்தில் இடம் பெற்றதாக அவர் பதிவிட்டுள்ளார்.

### பின்வரும் கல்முனை வட்டாரப் பாடசாலைகளுக்கு பெயர் சூட்டப்பட்டமை

**சாய்ந்தமருது**

1. ஸாஹிரா கல்லூரி
2. அல்-ஜலால் வித்தியாலயம்
3. அல்-கமர் வித்தியாலயம்
4. ரியாலுல் ஜன்னாஹ் வித்தியாலயம்
5. அல்-அமான் வித்தியாலயம்

**கல்முனை**

1. கல்முனை மாமாங்க தமிழ் வித்தியாலயம்
2. பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயம்

**கல்முனைக்குடி**

1. அல்-பஹ்ரியா வித்தியாலயம்
2. அல்-அஸ்கர் வித்தியாலயம்
3. அல்-மிஸ்பாஹ் வித்தியாலம்

**மருதமுனை**

1. மருதமுனை அல்-ஹிறா வித்தியாலயம்
2. மருதமுனை ஷம்ஸ்-உல்-இல்ம் வித்தியாலயம்
3. மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நற்பிட்டிமுனை**

1. அல்-அக்ஸா வித்தியாலயம்

**பெரிய நீலாவணை**

1. விஷ்ணு வித்தியாலயம்
2. சரஸ்வதி வித்தியாலயம்

**வரிப்பத்தான்சேனை**

1. அல்-அமீன் வித்தியாலயம்

**பெயர் மாற்றப்பட்டு, தரஉயர்வு பெற்ற பாடசாலைகள்**

1. இறக்காமம் குடுவில் அல்-ஹிறா வித்தியாலயம்
2. சம்மாந்துறை கல்லரிச்சல் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயம்

**வளங்கள் பகிர்ந்தளிப்பும் ஏனைய சேவைகளும்**

1. கல்முனை ஸாஹிரா மகா வித்தியாலயம், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை என்பவற்றுக்கு 'சியவஸ' திட்டத்தின்கீழ் கல்வி நூற்றாண்டு வாசிகசாலை அமைத்துக் கொடுத்தமை. 'சியவஸ' டிக்கட் விற்பனையில் கல்முனை வட்டாரம் இலங்கையில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2. கல்முனை ஸாஹிரா கல்லூரியில் கல்வி அதிகாரி காரியாலயம் அமைத்தமை.

3. துறை நீலாவணை துரைவந்திய மேடு தமிழ் பாடசாலைக்கு அரசியல்வாதிகளின் எதிர்ப்பையும் மீறி ஒரு புதிய கட்டடம் பெற்றுக் கொடுத்தமை.

4. மருதமுனை ஷம்சுல் இல்ம் வித்தியாலயம், மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயம் என்பவற்றுக்கு இரு புதிய கட்டடங்கள் பெற்றுக் கொடுத்தமை.

5. கல்முனை கல்வி வட்டாரத்தில் முதன் முதலாக 'அனுபவம்' எனும் சஞ்சிகையை வெளியிட்டு அதன் ஆசிரியராகவும் கடமையாற்றியமை.

6. மருதமுனை அல்-ஹிறா வித்தியாலயத்துக்கு தற்காலிக கட்டடம், மலசலகூட வசதி என்பவற்றைக் பெற்றுக் கொடுத்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கல்முனையில் வட்டாரரீதியான வகுப்பு உயர்வுப் பரீட்சை இவரால் அறிமுகப்படுத்தப்பட்டு நடத்தப்பட்டது.

8. 1968ஆம் ஆண்டில் வட்டாரம் தழுவிய மீலாத விழா, அல்குர்ஆன், ஹதீஸ் போட்டி நிகழ்ச்சிகளை முதன் முதலில் நடத்தி மாவட்ட நீதிபதி ஹுசைன் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் மீலாத் பெருவிழா ஒன்றை நடத்தியமை.

9. கரைவாகு முஸ்லிம் பாடசாலைகளின் பெற்றார்-ஆசிரியர் சம்மேளனம் ஏற்படுத்தப்பட்டமை.

10. மருதமுனையின் கல்வி வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு ஆசிரியர் சங்கச் சம்மேளனம் ஒன்றை அமைத்தமை.




1965 இல் கல்முனை மஹ்மூத் பாலிகா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது திருமதி எம்.சி. அஹ்மது, சுற்று வட்டக் கல்வியதிகாரி பழீல் மௌலானா, எம்.சி. அஹமது (பா.உ), பிரதம கல்வியதிகாரி ஷரீப்.

(மூலம் : எம். நினைவில் எம்.சி. அஹமது, 2007, பக். 34)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கல்முனை கல்வி மாவட்ட பொது நல சங்கம் உருவாக்கியமை.

12. அல்-அமான் கலவன் பாடசாலையை (தற்போதைய கல்முனை மஹ்மூத் பாலிகா மகளிர் கல்லூரி) பெண்கள் மகா வித்தியால யமாக மாற்றி அமைக்கப்பட வேண்டிய தேவையை எடுத்துக் காட்டி முதல் அறிக்கையை கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி. அஹமதுக்கு சமர்ப்பித்தமை.

குருநாகல் வட்டாரக் கல்வி அதிகாரியாக பழீல் மௌலானா அவர்கள் 13.12.1969 அன்று இடமாற்றம் பெற்றார். அவரது சேவை நலன் பாராட்டி 1970ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் கல்முனை கல்விச் சமூகத்தினால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பொற்கிழி (550/- பணம்) வழங்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனைக்குடி அல்-அஸ்கர் பாடசாலையில் பழீல் மௌலானா 1966இல் பாடசாலை பரிசோதனைக்குச் சென்றபோது அப்பாட சாலையின் சம்பவ பதிவுப் புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"இப்பாடசாலையை இன்று 10.45க்கு தரிசித்தேன். வகுப்புகளுக்கு சென்று வகுப்பாசிரியர்களின் பாடவிதானம் முதலான குறிப்புக்களைப் பார்வையிட்டேன். ஆசிரியர்களின் நாளாந்த வேலைகளுக்கு பதிவுகள் சில வகுப்புக்களில் இல்லாமல் இருப்பதைக் கண்டேன். இது விரும்பத் தக்கதல்ல என்றும் நாளை முதல் பாடப்பதிவு நடைமுறைக்கு வர வேண்டும் எனவும் ஆசிரியர்களுக்கு வலியுறுத்தியுள்ளேன். தினமும் பாடப்பதிவுகளை பார்வையிடும்படி தலைமை ஆசிரியரைக் கேட்டுள் ளேன். இன்று $^{266}/_{387}$ மாணவர்களும் $^{10}/_{12}$ ஆசிரியர்களும் சமுகமளித் திருந்தனர். இப்பாடசாலைக்கு இன்னொரு சிங்கள ஆசிரியரும் நியமிக்கப்படுதல் அவசியமென சிபாரிசு செய்கிறேன்."*

**(ஒப்பம்)**
**ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா (CEO)**

கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக அவர் ஆற்றிய சேவைகள் அவர் மரணித்த பின்னும் நினைவுகூரத்தக்களவு காத்திர மானவை. அந்த சாதனைகளின் பின்னணியில் பழீல் மௌலானா வின் அயராத உழைப்பு, தூரநோக்கு, அபார துணிச்சல், அர்ப்பணம் முதலானவை ஆணிவேரோடு பின்னிப் பிணைந்த பக்க வேர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளன. அவரது மறைவின் பின் வெளியிடப்பட்ட அனுதாபச் செய்திகளில் அவரது சேவைகள் காய்தல் உவத்தலின்றி வெளிக் கொணரப்பட்டுள்ளன.

முன்னாள் வர்த்தக வாணிப அமைச்சரும் கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆர். மன்சூர் அவர்கள் பழீல் மௌலானா பற்றிக் குறிப்பிடுகையில்...

*"...மருதமுனையின் கல்வி வளர்ச்சியில் பழீல் மௌலானா ஆற்றிய பங்களிப்பு காலத்தால் அழியாதது. இவரைப் போன்ற கல்வி மான்கள் மருதமுனையில் உழைத்ததன் காரணமாகவே இன்று அக் கிராமம் கல்வியில் சிறந்து விளங்குகின்றது."*[38]

மூத்த பத்திரிகையாளர் பேரின்பராஜா (துறைநீலாவணை) தனது அனுதாபச் செய்தியில்,

*"பழீல் மௌலானா கல்முனை கல்வி மாவட்டத்தில் பல புதிய பாடசாலைகளை நிறுவி கல்விக்கு புத்துயிர் அளித்த பெருமகன்."*[39] என்கிறார்.

மருதமுனை ஷம்ஸ் சமூகமும் அதன் அதிபரும் தமது இரங்கல் செய்தியில் வட்டாரக் கல்வி அதிகாரி ஊடாகப் பெற்றுக் கொண்ட சேவைகளை பின்வரும் வரிகள் மூலம் உணர்த்துகின்றார்கள்.

*"கல்முனை நகரமர்ந்து கல்விப்பணி புரிந்தபோது*
*ஷம்சுல் இல்ம் பெயரும் சூட்டி சரித்திரம் படைத்து நின்றார்*
*ஷம்சுல் இல்ம் தரமுயர்ந்து மகா பெயர் தரித்தபோது*
*தம்பெரும் பதவி நீங்கி எம்பெரும் அதிபரானார்.*
*ஷம்சுல் இல்ம் தடம்பதிக்க தூங்காது பணிபுரிந்தீர்*
*ஷம்சுல் இல்ம் கல்வி வாழ ஆசிரியர் பெற்றுத் தந்தீர்."*[40]

'மருதமுனையின் கல்விப் புரட்சி' எனும் தலைப்பில் ஏ.ஆர்.எம். ராஸிக் (ஜே.பி) எழுதிய கட்டுரையில் மருதமுனை கல்வி வரலாற்றில் பழீல் மௌலானாவின் வகிபாகம் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

---

38. மன்சூர். ஏ.ஆர்., "மருதமுனையின் கல்வி வளர்ச்சியில் முதன்மைமிக்கவர் பழீல் மௌலானா", சுடர் ஒளி, 2013, பக்:

39. பேரின்ப ராஜா, வீரகேசரி, 2013

40. பழீல் மௌலானாவின் மறைவையொட்டி ஷம்ஸ் மத்திய கல்லூரியினால் 25.02.2013இல் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மருதமுனையின் உயர்கல்வி முன்னேற்றம் குறித்து 1968ம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கிவந்த கல்வி நலன்புரி சபை அல்-மனார் மகா வித்தியாலயத்தின் மேற்பிரிவை கமு/ ஷம்சுல்-இல்ம் மஹா வித்தியாலயத்துடன் இணைக்கும் முயற்சியை மேற்கொண்டது. அதில் முதன்மையாளர்களாக அல்ஹாஜ். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவின் வழிகாட்டலில் ஜனாப். ஏ.ஆர்.ஏ. அஸீஸ், ஏ.எச்.எம். மஜீத், கே.எல்.ஏ. வாஹிது, எல்.எம்.எம். பழீல், ஏ.எம்.ஏ. ஜெலீல், யூ.எம். ஹனீபா, வீ.எம். இஸ்மாயில், ஏ.எம். அபூபக்கர் போன்ற ஆசிரியர்கள் செயற்பட்டனர். இதற்கு 1968ல் தேர்தலில் வெற்றி பெற்ற எம்.சி. அஹமது எம்.பி தடை இட்டார்."*

எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (அதிபர்) அவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரி பழீல் மௌலானாவின் சேவை பற்றி...

*"மர்ஹூம் அல்ஹாஜ் பழீல் மௌலானா அவர்கள் செயற்திறன் மிக்க ஓர் வட்டாரக் கல்வி அதிகாரி என்ற வகையில் மருதமுனை கல்வி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை நல்கியுள்ளார். கரைவாகு வடக்கு முஸ்லிம் பாடசாலைகளின் பெற்றார் ஆசிரியர் சம்மேளனம்* (PTTA) *உருவாகவும் அதன் மூலம் 1975இல் முஸ்லிம் கல்விச் சகாயநிதி தோற்றம்பெறவும் பாடுபட்டமையை மறக்க முடியாது."*[41]

'கல்முனை கல்விச் சகாய நிதியம்' அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் கல்முனை அவசரகால கச்சேரியின் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் (1942 இல்) அமைக்கப்பட்டதாகும்.[42] பின்னர் **1945** இல் நாடு தழுவியதாக இலங்கை முஸ்லிம் சகாய நிதி எனும் பெயரில் அவர் அதனை விஸ்தரித்தார். **1965** இல் கல்முனை சுற்று வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவியேற்ற பழீல் மௌலானா அவர்கள், ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களின் சிந்தனைகளை அடியாகக் கொண்டு வறுமையினாலும் கல்வி அறிவின்மையாலும் உழன்று கொண்டிருந்த கல்முனை வட்டார மாணவர்களின் நலன் கருதி மீண்டும் அந் நிதியத்திற்கு கல்முனையில் புத்துயிர்ப்பூட்டினார்.

41. இஸ்மாயில் மௌலானா, எஸ்.ஏ.எஸ். 'மருதமுனை லஜ்னதுல் உலமாவின் வழிகாட்டலில் சன்மார்க்க சேவை செய்த பெருந்தகை மர்ஹூம் பழீல் மௌலானா', அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா வாழ்வும் பணியும், பழீல் மௌலானா பவுண்டேஷன், மருதமுனை, *2021*, பக்: *155*

42. ஜமீல், எஸ்.எச்.எம்., அலி அஸீஸ், எம், அறிவோர் பார்வையில் ஏ.எம்.ஏ. அஸீஸ், டொக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேஷன், *2014*, பக். *26*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Ak/MARUTHAMUNAI EAST G. M. M. SCHOOL
ANNUAL INTER HOUSE
SPORTS MEET
24-9-65

தலைமை: ஜனாப் M. S. M. ஹத்தாத் அவர்கள்
(வித்தியாதிகாரி, அக்கரைப்பற்று)
கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி
திரு. L. R. பெரேரா அவர்கள்
பிரதம அதிதியாகவும், பரிசளிப்பாளராகவும் கலந்து
சிறப்பிப்பார்கள்.
கல்முனை வட்டார வித்தியாதரிசி
ஜனாப் I. M. S. M. பளீல் மௌலானா
அவர்கள்
கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்

டம்: மருதமுனை கிழக்கு அ. மு. க.
பாடசாலை மைதானம்.

லம்: 24-9-65 பி. ப. 3 மணி

னைவரும் சமுகமளித்து சிறப்பிக்குமாறு
அன்புக்கரம் நீட்டி அழைக்கிறோம்.

இவ்வண்ணம்
ஜனாப் I. M. A. குத்தூஸ் தலைமையாசிரியர்
அவர்களும் சக ஆசிரியர்களும்

இவ்விளையாட்டு விழாவிலேயே மருதமுனை கிழக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு ஷம்சுல் இல்ம் வித்தியாலயம் என சுற்று வட்ட கல்வி அதிகாரி பழீல் மௌலானா அவர்களால் பெயர் சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*(மூலம்: சுய விபரத் திரட்டு: ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா, 2002)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம மத்தியஸ்தர்கள்

ஜனாப் A. M. A. மஜீது D. I. அவர்கள்
திரு. S. சிதம்பரப்பிள்ளை O. A. அவர்கள்
ஜனாப் அல்ஹாஜ் A. M. ஷரிபுத்தீன் C. I. அவர்கள்
„ A. அகமது லெப்பை அதிபர் அவர்கள்
திரு. K. கனகசபை C. C. அவர்கள்

## மத்தியஸ்தர்கள்

ஜனாப் B. அலியார் த. ஆ. அவர்கள்
„ M.M இஸ்மாயில் த. ஆ. அவர்கள்
„ A. M. A. ஜெலீல் ஆ. „
திருமதி S. செல்வத்துரை ஆ. „
ஜனாப் A. A. சமத் ஆசிரியர் „
ஜனாப் A. A றஹீம் த. ஆ. அவர்கள்
„ M.P முஹியீதீன் ஆ. „
„ U. M. ஹனிபா ஆ. „
செல்வி S. பொன்னம்பலம் ஆ. „
ஜனாப் S. M. மூசா ஆசிரியர் „

## ஆரம்பிப்போர்

திரு S. D. கிருபைநாயகம் P. T. I. அவர்கள்
ஜனாப் S. M. M. பளீல் ஆசிரியர் அவர்கள்

## கௌரவ வைத்தியர்

Dr. C. சின்னத்தம்பி அவர்கள்
ஜனாப் M. அகமதுலெப்பை ஆயுள் வே. வை.

## முதலுதவியாளர்

ஜனாப் E. M றசீக் ஆசிரியர் அவர்கள்
„ A. M. ஷாபி „ „
ஜனாப் S. A. S. ஹசன் மௌலானா ஆசிரியர் அவர்கள்
„ I. H. முகம்மது ஆ. அவர்s

## பதிவு செய்வோர்

ஜனாப் A. H. M. மஜீத் ஆசிரியர் அவர்கள்
ஜனாப் P. மீராலெப்பை ஆ. அ
ஜனாப் S. M. மதீன் ஆசிரியர் அவர்கள்

## புள்ளியிடுவோர்

ஜனாப் A. M. முஸ்தபா ஆ. அ.
ஜனாப் M. C. இப்றாகீம் ஆசிரியர்
ஜனாப் M. A. M. ஜெலீல் ஆசிரியர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் வட்டாரக் கல்வி அதிகாரி (1970-1971)

குருநாகலில் சேவையாற்றிய பழீல் மௌலானாவின் கல்விச் சேவையின் விபரம் வருமாறு:

1. 54 பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை.
2. குருநாகல் மாவட்டத்தில் மிரிஹம்பிட்டிய கிராமத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் இருந்த தமிழ் மொழிமூல (முஸ்லிம்) பிரிவை வேறாகப் பிரித்து புதிய காணியும் பெற்றுக் கொடுத்து புதிய முஸ்லிம் பாடசாலையை உருவாக்கியமை. (இவ்வாறு செய்யத் தவறியிருப்பின் அம் முஸ்லிம் பிரிவு அழிந்து போயிருக்கும் என அவரது டயரிக் குறிப்பில் குறிக்கிறார்)
3. குளியாப்பிட்டிய தோறாக்கொட்டுவ முஸ்லிம் வித்தியாலயத்தை நிறுவி தரமுயர்த்தியமை.
4. தெலியாகொண்ண மகா வித்தியாலயத்தில் கல்விக் காரியாலயம் அமைத்து அங்கு சிறந்ததொரு விளையாட்டுப் போட்டியையும் நடத்தியமை.
5. குருநாகல் வட்டாரத்தை தனி வட்டாரமாக மாற்றியமை.
6. பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் பொல்கஹவெல அல்-இர்பான் மகா வித்தியாலயத்திற்கு 2 ஏக்கர் காணியை பெற்றுக் கொடுத்தமை.

## கேகாலை வட்டாரக் கல்வி அதிகாரி (1971)

01.04.1971ம் திகதி கேகாலை கல்வி வட்டாரத்தின் கல்வி அதிகாரியாக பழீல் மௌலானா கடமையேற்றார். அக்காலப் பகுதியில் தென்னிலங்கையில் இடதுசாரிப் புரட்சி காரணமாக அசாதாரண சூழ்நிலை நிலவியது. புரட்சி இயக்கத்தின் தலைமைப்பீடமாக கேகாலை விளங்கியது. கேகாலை மாவட்டம் முற்றிலும் ஸ்தம்பிதம் அடைந்து பிரதேசம் முழுவதும் பீரங்கிகள், இராணுவ டாங்கிகள், சடலங்கள் என யுத்த பூமியாகக் காட்சியளித்த காலமது. எனினும், இத்தடைகளை மீறி கல்விச் சேவையை அங்கு சிறப்பாக நிறைவேற்றினார். 40 அரச பாடசாலைகளும் 71 தோட்டப் பாடசாலைகளும் அவரால் பெறுப்பேற்கப்பட்டன.

கேகாலை வட்டாரத்தில் இவரால் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சேவைகளை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எட்டியாந்தோட்டை நூரி தோட்டப் பாடசாலைக்கு பெயர் சூட்டியமை.

2. அரணாயக்க கட்டபேரிய அல்-ஜலால் வித்தியாலயம் இவரால் தரம் உயர்த்தப்பட்டு பெயர் சூட்டி திறந்து வைக்கப்பட்டது.

3. கிருங்கதெனிய முஸ்லிம் ஆண்கள் பாடசாலை அந்-நூர் வித்தி யாலயம் என்ற பெயரில் இவரால் தரமுயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

4. உயன்வத்தை நூராணியா மகா வித்தியாலயம், ருவன்வெல்ல முஸ்லிம் வித்தியாலயம், ஹொரம்பாவ பனாபிடிய முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு புதிய பெயர் சூட்டப்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

5. கேகாலை பொது மைதானத்தில் மாவட்ட விளையாட்டுப் போட்டி, தேகப் பயிற்சி கண்காட்சி நடத்தி அனைவரதும் பாராட்டினையும் பெற்றார்.

6. உயர் நீதிமன்ற நீதியரசர் எம்.எம். அப்துல் காதர் தலைமையில் பெரு விமர்சையாக கிருங்கதெனிய வித்தியாலயதில் மீலாத் விழா நடத்தப்பட்டது.

மேற்கூறிய சேவைகளால் கேகாலை வட்டாரத்தில் குறுகிய காலத்தில் கல்வியில் ஓர் எழுச்சியைக் காணமுடிந்ததாக அவரது தினக்குறிப்பு பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கேகாலை மாவட்ட அரணாயக்க கெடபேரிய அல்-ஜலால் கனிஷ்ட வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவுகளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"இப்பாடசாலைக்கான பெயரானது ஊர்களின் பெயரைக் கொண்டு அழைக்கப்படாமல் தனித்துவமான முஸ்லிம் பெயரில் அமைய வேண்டியதன் முக்கியத்துவத்தை அன்றைய கேகாலை காரியால யத்தில் கல்வியதிகாரியாக கடமையாற்றிய கிழக்கு மாகாணத்தின் மருதமுனையைச் சேர்ந்த அபுல் கலாம் அவர்கள் உணர்த்தி இப்பாட சாலைக்கு அல்-ஜலால் (அல்லாஹ்வின் வல்லமை) என்று பெயர் வைத்தார்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரநாயாக்க கடபேரிய அல்ஜலால் வித்தியாலயத்தின் சம்பவத் திரட்டுப் புத்தகத்திலிருந்து பெறப்பட்ட குறிப்புக்கள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரணாயக கடபேரிய அல்ஜலால் வித்தியாலயத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின் ஒரு தோற்றம். இடமிருந்து வலம் எம்.எஸ்.எம். ரம்ஸான், ஏ.எம். மன்சூர், எம்.எஸ்.எம். சுலைமான் லெப்பை (ஆசிரியர்), அபுல்கலாம் பழீல் மௌலானா, எம்.ஆர்.எம். முஸீன் (பழைய மாணவர் தலைவர்), எம்.எஸ்.எம். ஸாதிக் (வை.எம்.எம்.ஏ. கிளைத் தலைவர்), எம்.ஆர்.எம். ஹஸனுல் பஸ்ரி (ஹாபிஸ்)



அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அரணாயக கடபேரிய அல்ஜலால் வித்தியாலயத்தில் உரையாற்றுகின்றார். பின்னணியில் 'பைபிள் ரொக்' என பிரசித்தமான கூம்புக் குன்றின் தோற்றம்

(13.10.1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகவல் பழீல் மௌலானா கேகாலை மாவட்டத்தில் பணியாற்றிய காலப் பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றிய முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக அரபு இஸ்லாமியத் துறையின் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம். அமீன் அவர்கள் சேகரித்து வைத்திருந்த கேகாலை மாவட்ட முஸ்லிம் பாடசாலை வரலாறுகளின் தகவல் திரட்டிலிருந்து பெறப்பட்டது.

*1972*இல் பண்டாரவளைக்கு இடமாற்றப்பட்டார். அங்கு சில மாதங்களே கடமையாற்றியுள்ளார். இக்குறுகிய காலப் பகுதியில் நாவலப்பிட்டி, கந்தபொல பாடசாலைகள் உட்பட தோட்டப் பாடசாலைகள் பலவற்றுக்குப் பெயர்சூட்டி தரமுயர்த்தினார் எனத் தெரிய வருகின்றது.

## வட்டாரக் கல்வி அதிகாரி அனுராதபுரம்-பொலனறுவை (1972-1973)

*01.09.1972*இல் அனுராதபுரம்-பொலனறுவை வட்டாரக் கல்வி அதிகாரியாக பழீல் மௌலானா கடமையேற்றார். பொலனறுவை வட்டாரத்தில் *30* முஸ்லிம், தமிழ் பாடசாலைகளும் அனுராதபுர மாவட்டத்தில் *41* பாடசாலைகளும் இவரது பொறுப்பின் கீழ் வந்தன. இக் காலப்பகுதியில் வீரச்சோலை அந்-நூர் வித்தியாலயம், பொலனறுவை வகராப்பொல தமிழ் வித்தியாலயம், பொலனறுவை அஹங்கம முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவை தரமுயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. மோட்டார் சைக்கிளில் ஆபத்தான காட்டுப் பாதைகளில் பயணம்செய்தே இச்சேவைகளை அவர் ஆற்றியிருந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்முனை அலுவலக கல்வி அதிகாரி (1974-1979)

கல்முனை அலுவலக கல்வி அதிகாரியாக 1974ஆம் ஆண்டு தொடக்கம் 1978ஆம் ஆண்டு வரை பழீல் மௌலானா கடமையாற்றினார்.

இவ்வாறு நாட்டின் பல பாகங்களிலும் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய பழீல் மௌலானாவின் கல்விச் சேவைகள் குறித்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இராஜேஸ்வரன் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்:

*"...ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வியதிகாரி பழீல் மௌலானா நாட்டின் நாலா திசைகளிலும் காத்திரமான கல்விப் பணியாற்றியவர், சமூகப் பொருத்தப்பாடுமிக்க தலைவர்களை உருவாக்க கல்வியை கருவியாகக் கொண்டு கருமமாற்றியவர், மூத்த அரசியல்வாதி மசூர் மௌலானாவின் சிறிய தந்தையாக விளங்கிய அன்னாரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்."*[43]

## மருதமுனை ஷம்ஸ் மகா வித்தியாலயத்தின் முதல் அதிபர் (1979)

1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தத்திற்குப் பின் மருதமுனையில் இரண்டாவது மகா வித்தியாலயம் ஒன்று

43. இராஜேஸ்வரன் எம், 'சமூகத் தலைவர்களை உருவாக்க கல்வியைக் கருவியாகக் கொண்டு கருமமாற்றியவர் பழீல் மௌலானா', வீரகேசரி, 26.02.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட வேண்டிய தேவை பொதுமக்களாலும் புத்திஜீவிகளினாலும் உணரப்பட்டது. இம்முன்னெடுப்பு தொடர்பாக மருதமுனை மக்கள் மத்தியில் வாதப் பிரதிவாதங்களும் கருத்து முரண்பாடுகளும் உருவாகி பெரும் முரண்பாட்டு நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்களினால் **1979.02.28**ஆம் திகதி இடப்பட்ட தரமுயர்வுக்கான அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது. ஏனைய பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் புதிய மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டனர். இதன் விளைவாக முரண்பாடு மேலும் உக்கிரமடைந்து மருதமுனைக் கிராமம் பிளவுபடும் நிலையேற்பட்டது.

இச்சூழ்நிலையை சமரசப்படுத்துமுகமாக அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்களின் தலைமையில் சமரசக் கூட்டம் ஒன்று அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஐயூப் (ஜே.பி.) அவர்களது இல்லத்தில் **19.03.1979**ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் "புதிய மகா வித்தியாலயத்தின் அவசியம் தற்போது இல்லை" எனும் அணியைத் தலைமை தாங்கினார். பழீல் மௌலானா அவர்கள் "புதிய மகா வித்தியாலயம் தேவை; அது மருதமுனையின் கல்வி எழுச்சியை எவ் விதத்திலும் பாதிக்காது. மாறாக, மருதமுனையின் கல்வி மென்மேலும் விருத்தியடைய புதிய மகா வித்தியாலய உருவாக்கம் வழிசமைக்கும்" என வாதித்த அணியை தலைமையேற்று வழிநடத்தி நின்றார். கூட்டத்தின் இறுதியில் புதிய மகா வித்தியாலயம் உருவாக்கப்பட வேண்டும் எனும் வரலாற்றுத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஏ.எம்.ஏ. சமது அதிபர் அவர்கள் தெரிவிக்கின்றார்.[44]

புதிய மகா வித்தியாலயம் உருவாகியமை மக்கள் மத்தியில் எழுச்சியையும் புத்துணர்வையும் ஊட்டியது. புதிய ஆசிரியர்களும் மாணவர்களும் பேரார்வம் கொண்ட பெற்றோரும் ஷம்ஸ் அபிமானிகளும் இவ்வெற்றியை முன்கொண்டுசெல்ல அனுபவம்மிக்க வலுவான தலைமைத்துவம் ஒன்றை எதிர்பார்த்தனர். புதிய மகா வித்தியாலயத்தின் தலைமைப் பொறுப்பே அது. இப்பின்னணியில் தன்னார்வமாக உந்தப்பட்ட சுற்றுவட்டக் கல்வி அதிகாரி பழீல் மௌலானா அவர்கள் தரமுயர்த்தப்பட்ட ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் முதலாவது அதிபராகப் பொறுப்பேற்றதன் மூலம் அவ்

---

*44. சமத். ஏ.எம்.ஏ. நேர்காணல், 08.05.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, ஷம்ஸின் முகவெற்றிலையாகவும் அவர் திகழ்ந்தார்.

மிகுந்த சவால்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் உருவாக்கப்பட்ட ஷம்ஸ் மத்திய கல்லூரி தற்போது நிமிர்ந்து நின்று புகழ்பெற்று தனித்துவமான நிலையை அடைய வலுவான அடித்தளத்தையிட்டு அதனை ஸ்திரப்படுத்திய பெருமை ஆரம்ப அதிபராக நியமிக் கப்பட்ட பழீல் மௌலானா அவர்களைச் சாரும். அன்னார் கடமையேற்று சில நாட்களில் (26.03.1979) ஐந்து புதிய இளைஞர்கள் ஆசிரிய நியமனம் பெற்றனர். அவ் ஐவரையும் தனது சாதுர்யத்தாலும் செல்வாக்கினாலும் ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்திற்கே பெற்றுக் கொடுத்தார். எஸ்.ஏ.எஸ். தௌபீக், ஏ.ஆர்.ஏ. றாஸீக், ஏ.அர்.எம். தௌபீக், ரி.எல்.எம். இஸ்மாயில், என்.எம். இஸ்மாயில் ஆகியோரே அவர்களாவர்.

உதவி அதிபர் வீ.எம். இஸ்மாயில் அவர்களையும் ஆங்கில ஆசிரியர் ஏ.எம். அபூபக்கர் அவர்களையும் இதே தினத்தில் இடமாற்றம் பெற்றெடுத்தார். 04.05.1979 இல் உடற்கல்வி ஆசிரியர் எஸ்.எல்.எம். ஜலால்டீன் அவர்களையும் 07.05.1979இல் ஏ.எம்.ஏ. சமது, ஏ.எஸ். உம்முல் பாரியா ஆகிய இரு ஆசிரியர்களையும் இடமாற்றம் பெற்றெடுத்தார். அதேபோல் கணித, விஞ்ஞான பாடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களையும் தனது சாதுர்யத்தினாலும் செல்வாக்காலும் பெற்றெடுத்து ஆசிரியர்வள குறைபாட்டை குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்தார்.

பெண்கள் கல்வித் துறையில் முன்னேற வேண்டும் மார்க்கக் கல்வியிலும் அவர்கள் கூடிய கரிசனை காட்ட வேண்டும் எனும் சிந்தனையில் மிக உறுதியாகவும் செயற்பாட்டாளராகவும் பழீல் மௌலானா விளங்கினார். ஷம்ஸில் கற்க வரும் மாணவிகளின் பாது காப்பினை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதனை நிறைவேற்றுவதற்கு கல்விச் சமூகத்தினதும் இரவு பகலாக செயற்பட்ட தொண்டர்களினதும் பங்களிப்பைப் பெற்றுக் கொண்டார். இரவோடிரவாக நூற்றுக்கணக்கான அடி தூரம் வேலி, கற்சுவருடன் தனியான கழிப்பறைகளையும் அமைத்தார். மேலும், மாணவிகள் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் எதிர் கொள்ளும் அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டு மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகளைச் செய்தார். கல்முனை பாபுஜீஸ் அனுசரணையில், ஒரு மாத காலத்தினுள் கல்லூரி வளாகத்தினுள்ளேயே வலைப்பந்து மைதானம் ஒன்றையும் அமைத்தார்.

மாலை வேளைகளில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட பெற்றோர் அபிமானிகளுடன் சிரமதானப் பணிகளில் தன்னையும் ஈடுபடுத்தி ஒட்டுமொத்த ஷம்ஸ் கல்விச் சமூகத்திற்கு பெரும் இயங்கு சக்தியை அவர் அளித்தார். அவநம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஷம்ஸின் எழுச்சி "முளையிலேயே கருகிவிடும்," "ஆறு மாதம் கூடத் தாக்குப் பிடிக்காது" என சிலர் எதிர்வுகூறிய போதிலும் பழீல் மௌலானா வழங்கிய தலைமைத்துவமும் முன்னெடுத்த சாதுர்யமிக்க நடவடிக் கைகளும் எடுத்த சவாலை வெற்றிகொள்ளும் தீரமும் ஷம்ஸ் சமூகத் தின் உணர்வெழுச்சியுடன் ஒன்றித்து அவ் விமர்சனங்களையும் சந்தேகங்களையும் தவிடுபொடியாக்கி ஷம்ஸை வீறுகொண்டு எழுச்சியுறச் செய்தமை வரலாறாகும்.

சுற்றுவட்டக் கல்வி அதிகாரி எனும் உயர் பதவியிலிருந்து விலகி மீண்டும் ஓர் அதிபராகப் பணியாற்ற பழீல் மௌலானா தீர்மானித்த மையானது, பதவிகள் அவருக்கு ஒரு பொருட்டல்ல; இலக்குகளே முக்கியமானவை எனும் இலட்சியவாதத்தை துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன. இதற்கான முன்னுதாரணத்தை அவர் அவரது இலட்சிய நாயகர்களுள் ஒருவரான அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். கலாநிதி ரீ.பி. ஜாயா அவர்களின் வேண்டு கோளை ஏற்று கண்ணியமும் மதிப்புமிக்க சிவில் சேவை அதிகாரி எனும் உயர் பதவியிலிருந்து விலகி கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபர் பதவியை **1948** இல் ஏ.எம்.ஏ. அஸீஸ் ஏற்றுக் கொண்டார்.

ஷம்ஸ் மத்திய கல்லூரியை 'நீலக்கடலோரத்தில் ஓர் அலிகார்' என்றே பழீல் மௌலானா குறிப்பிடுகிறார். ஷம்ஸ் குறித்து அவருக்குள் ஒரு கனவு குடியிருந்திருக்க வேண்டும். ஷம்ஸில் குறுகிய கால மொன்றில் அவரது தலைமையில் புரட்சியொன்று நிகழ்ந்துள்ள மையை யாரும் மறுக்க முடியாது. தனியார் பாடசாலையொன்றாக ஷம்ஸ் இருந்திருப்பின், அங்கு நீண்ட காலம் பணியாற்றி பெரும் சாதனைகளைப் படைத்திருப்பார் என எண்ணத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









*1979இல் ஷம்ஸ் மகா வித்தியாலய அதிபர் அல்ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்களும் ஆசிரியர்களும் பிரமுகர்களும் தொண்டர்களும் சிரமதானத்தில் ஈடுபடுகின்றனர். (நன்றி: எழுவான், 1995)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர் வீ.எம். இஸ்மாயில் அவர்கள் பழீல் மௌலானா அவர்களின் அதிபர் காலப் பணிகளை பின்வருமாறு விளக்குகின்றார்:

*"கல்முனை கல்விக் காரியாலய சுற்றுவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த ஜனாப் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ. கபூர் அவர்களின் வாய்மொழி அனுமதியுடன் அதிபர் பொறுப்பை ஏற்றார்கள். அன்னாரது தலைமை காப்பரணாக அமைந்தது. என்னையும் ஜனாப் ஏ.எம். அபூபக்கர் (இங்லீஸ்) அவர் களையும் இடமாற்றம் செய்து எடுத்தார். என்னைத் தனது பிரதி அதிபராக வைத்துக் கொண்டார். புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்ற ஆறு இளைஞர்களை ஸம்சுல் இல்மில் நியமித்துக் கொண்டார். தொடர்ந்து ஜனாப்கள் எஸ்.எல்.எம் ஜலால்டீன், ஏ.எம்.ஏ. சமது இருவரையும் இடமாற்றியெடுத்தார். **02.04.79**யில் ஜனாப் பழீல் மௌலானா அவர்கள் உத்தியோகபூர்வமான அதிபராகப் பொறுப் பேற்றார்கள். நான் க.பொ.த. (சா/த) வகுப்பிற்கு தமிழ், சமூகக் கல்வி, வரலாறு ஆகிய பாடங்களைப் படிப்பித்தேன். மாணவர் பெறுபேறும் திருப்தியாக இருந்தது. நினைக்க பிரம்மிப்பாக இருக்கின்றது. மகிழ்ச்சி யாகவும் இருக்கின்றது. தொடர்ந்து ஜனாப்கள் ஐ.எல்.ஏ. றஹீம், எம்.ஏ. ஜப்பார், லத்தீப் முகிதீயின் ஆகிய விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் களையும் பழீல் மௌலானா அவர்கள் முயன்று கொண்டு வந்தார்கள். க.பொ.த. (உ/த) கலை, வர்த்தக வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. ஜனாப் ஏ.எல்.எம். தாஹீர் முழுப் பாடங்களையும் அதிக சிரமத்திற்கு மத்தியில் கற்பித்தார். பின்னர் ஜனாப் எம்.எம். செயினுலாப்தீன் அவருக்கு உதவியாக வந்தமைந்தார்."*[45]

ஷம்ஸ் மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் ஏ.எம்.ஏ. சமது அவர்கள் ஷம்ஸின் வளர்ச்சிப் பாதையில் பழீல் மௌலானாவின் பங்களிப்பினை பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

*"**1979**ல் தரமுயர்த்தப்பட்ட மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தி யாலயத்தின் முதல் அதிபராய் பொறுப்பேற்று துடிப்புடன் செயற் பட்ட பழீல் மௌலானா அவர்கள் பல்வேறு பற்றாக்குறையுடன் ஓலைக்*

---

45. இஸ்மாயீல், வீ.எம்., 'நிகழ்வுகளின் வீதியில் தேரோடும் நினைவுகள்' எழுவான், 03.06.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொட்டில்களில் இயங்கிய இக்கல்லூரிக்கு வளங்களை பெற்றுத் தருவதற்கும், ஆசிரியர்களை பெறுவதற்கும் துரிதமாக செயற்பட்டார். புதிய ஆசிரியர்களை பெறுவதற்கும், பொருத்தமான ஆசிரியர்களை உள்வாங்குவதற்கும் அவர் எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கது. அன்னாருடன் இணைந்து ஷம்ஸில் செயலாற்றும்போது அவரது நிர்வாகத்திறனையும், கண்டிப்பையும், ஆளுமையையும் கண்டு வியந்தேன்."*



ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் 1979இல் நடைபெற்ற அடிக்கல் நாட்டு நிகழ்வொன்றில் ஏ.ஆர்.எம். மன்சூர் (பா.உ) உடன் அதிபர் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா, செனட்டர் எஸ்.இஸட்.எம். மஷூர் மௌலானா, இந்து சமய, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் செல்லையா இராசதுரை, ஆசிரியர் மௌலவி முபாரக், பிரதி அதிபர் வீ.எம். இஸ்மாயில், ஆசிரியர் ஏ.எம்.ஏ. சமது மற்றும் ஏ.எல். தாவூத் மரைக்கார் .

1981ஆம் ஆண்டு ஷம்ஸ்-உல்-இல்ம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சபை ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவுக்கு வழங்கிய சேவை நலன் பாராட்டு விழாவில் அளிக்கப்பட்ட பாராட்டிதழில் பின்வருமாறு அவரது சேவையின் முக்கியத்துவம் குறித்துப் பதிவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மருதமுனை ஷம்சுல்-இல்ம் மகாவித்தியாலயத்தின்

[illegible]

அபுல்கலாம் I. M. S. M. பழீல் மௌலானா J. P.

[illegible]

பாராட்டு விழா.

இடம்:- மருதமுனை ஷம்சுல்-இல்ம் மஹாவித்தியாலயம்.

காலம்:- 30. 10. 1981 வெள்ளி பி. ப. 4. 00 மணி.

தலைமை:- ஜனாப். A. R. A. அஸீஸ் B. A. Dip-in-Edu அவர்கள்.

[illegible]

ஜனாப். A. R. மன்சூர் [illegible] அவர்கள்

ஓய்வு பெற்ற அதிபர் அவர்கட்கு

பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பார்கள்.

பாராட்டுப் பத்திரம் வாசிக்கல்:- ஜனாப். N. M. M. [illegible] ஆசிரியர் அவர்கள்.

பாராட்டுரை வழங்குவோர்

ஜனாப். M. I. M. [illegible] அவர்கள். [illegible]

ஜனாப். M. P. H. [illegible] B.A. அவர்கள் [illegible]

[illegible] அல்-ஹாஜ் [illegible] அவர்கள்.

அல்-ஹாஜ் A. P. M. [illegible] J. P. [illegible] அவர்கள்.

[illegible]

[illegible] அல்-ஹாஜ் I. L. M. [illegible] J. P. [illegible] அவர்கள்.

ஜனாப். M. A. A. [illegible] அவர்கள்.

[illegible] K. L. M. [illegible] அவர்கள்.

ஜனாப். A. R. A. [illegible] அவர்கள். [illegible]

[illegible] P. M. [illegible] [illegible] M. M. [illegible]

பதிலுரை:- அபுல் கலாம் I. M. S. M. பழீல் மௌலானா J. P. அவர்கள்.

நன்றியுரை:- ஜனாப். T. L. M. [illegible] ஆசிரியர் அவர்கள்.

[illegible]

பெற்றோர், அன்பர், ஆதரவாளர் அனைவரையும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஷம்சுல்-இல்ம் மகாவித்தியாலய [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஆசிரியராய், அதிபராய், கல்வி அதிகாரியாய்*
*நாட்டின் பல பாகங்களில் நற்பணி ஆற்றி*
*கல்முனைக் கல்வி காரியாலயத்தில் கல்வி அதிகாரியாய்*
*கடமை புரிந்த உங்கள் ஆற்றலும், மதிப்பும், அருந்தொண்டும்*
*நாமறிந்து*
*மருதமுனைக் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாய்*
*அமைந்த ஸம்ஸ்உல்-இல்ம் மகா வித்தியாலயத்தை*
*கட்டியெழுப்பும் கடும் பணிக்கு உங்களை*
*நாம் அழைத்து வந்து அதன் முதல் அதிபராய் அமரச் செய்தோம்.*
*அதன் மூலம் எங்களது வித்தியாலயம் நாளொரு மேனியும்*
*பொழுதொரு வண்ணமும் வளர்ச்சி மேல் வளர்ச்சி கண்டு*
*வெற்றிமேல் வெற்றிகண்டு*
*கல்முனை கல்வி மாவட்டத்தில் ஓர்*
*முன்னோடி மஹாவித்தியாலயமாய் உயர்ந்ததுவே."*

*மருதூர்க் கொத்தன்*
*30.10.1981*

ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா தனது கல்விப் பணியினை கொழும்பு ஸாஹிராவில் தொடங்கி **1980**ஆம் ஆண்டு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் நிறைவு செய்தார்.

### சேவைக் காலச் சுருக்கம்

உதவி ஆசிரியர்- *06* வருடங்கள் *(1945 -1950)*
தலைமை ஆசிரியர்- *11* வருடங்கள் *(1950- 1961)*
கல்வி அதிகாரி- *13* வருடங்கள் *(1962 -1979)*
அதிபர், ஷம்ஸ் மத்திய கல்லூரி- ஒரு வருடம் *(19.03.1979-17.10.1979)*
*03.12.1980* ஓய்வு
மொத்த சேவைக் காலம் - *31* வருடங்கள்

### ஒழுக்கம்

இலங்கை முழுவதும் கல்விப் பணி, சமூகப் பணி, சமயப் பணி செய்த பழீல் மௌலானாவினதும் அவரது குடும்பத்தினரதும் ஒழுக்க மாண்புகள் பற்றி முன்னாள் மத்திய மாகாண கல்விப் பணிப்பார் எம்.வை.எம்.முஸ்லிம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நான் அறிந்த காலம் தொட்டு மரியாதைக்குரிய ஐதுரூஸ் மௌலானா குடும்பம் மருதமுனைக்கு எப்போதும் மதிப்புத் தேடிக் கொடுத்தே வந்துள்ளது. மத்ரஸா மௌலானா என்றழைக்கப்பட்ட செய்யிது ஸாலிஹ் மௌலானா (கரைவாகு வடக்கு கிராம சபையின் முன்னை நாள் அக்கிராசனர்). விதானை மௌலானா என்று அழைக் கப்பட்ட கிராம சபைத் தலைவர் செய்யத் செயின் மௌலானா, கொழும்பு மௌலானா என்றழைக்கப்பட்ட செய்யிது பாரி மௌலானா, அதிபராகவும் கல்வி அதிகாரியாகவும் சேவையாற்றி ஓய்வுபெற்று இன்று நம்மத்தியில் சுற்றம் சூழச் சுறுசுறுப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அபுல் கலாம் செய்யது பழீல் மௌலானா ஆகியோர் மருதமுனையின் மாண்புறு புதல்வர்கள்."*[46]

இத்தகைய மாண்பும் ஒழுக்கமுமே கற்றலிலும் கற்பித்தலிலும் கல்வி நிர்வாகத்திலும் முக்கியமானதாக, முதன்மையானதாக, முன்மாதிரியானதாக கொள்ள வேண்டியதாகும். இவை அத்தனை யையும் பழீல் மௌலானா கொண்டிருந்ததால்தான் அவர் கல்விச் சேவையிலும் கல்வி நிர்வாகச் சேவையிலும் அப்பழுக்கற்ற ஒருவராக திகழ்கிறார். இதனையே புத்தளம்-சிலாபம் தமிழ் ஆசிரியர் சங்கமும் குறிப்பிட்டுச் சொல்கின்றது.

பழீல் மௌலானாவிடம் காணப்பட்ட முன்மாதிரி பற்றி செனட்டர் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"நேரத்துக்கு காரியமாற்றுதல், குடும்ப உறவை அனுசரித்தல், உற்றார் உறவினர்களை வழிநடத்துதல், சமூகப் பணியாற்றுதல் என்று வாழ்வின் ஒவ்வோர் அம்சங்களிலும் அவர் முன்மாதிரியாக திகழ்ந்தார்."[47]

## அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் உப தலைவர்

முன்னாள் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயீல், புத்தளம் பாராளு மன்ற உறுப்பினர் நெய்னா மரைக்கார் போன்றோருடன் இணைந்து இலங்கை முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மர்ஹூம் சாபி மரைக்காரினால் **1964**இல் 'இலங்கை முஸ்லிம் கல்வி

---

46. முஸ்லிம் எம்.வை.எம்., 'யுக புருஷர்', விடிவெள்ளி இரட்டை விழா சிறப்பு மலர், பக். 111
47. மசூர் மௌலானா எஸ்.இஸட்.எம்., மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர், தினகரன், 28.02.2013
48. பாவா எம்.வை.ஏ., பழீல் மௌலானாவின் மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் இழப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடு' எனும் கல்வி மேம்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் ஸ்தாபக உறுப்பினர்களான டாக்டர். எம்.எம். உவைஸ், எம். ஸெயின், ஏ.எச்.எல்.ஏ. சலீம், சேர். ராசிக் பரீட், சேர். முஹம்மது மாக்கான் மாக்கார், பி.பீ. உம்பிச்சி என்பவர்களோடு பழீல் மௌலானா ஸ்தாபக அங்கத்தவரர்களில் ஒருவராக செயற்பட்டார். அதேபோல், அகில இலங்கை சோனகர் சங்கம், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அமைப்பாளராகவும் அவர் சேவையாற்றினார். அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.வை.ஏ. பாவா பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*"அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 1964ல் ஆரம்பிக்கப் பட்ட போது அதன் ஸ்தாபக உறுப்பினராகவும் அதன் உப தலைவர் களில் ஒருவராகவும், ஸ்தாபக தலைவர் மர்ஹூம் சாபி மரைக்காருடன் இணைந்து நம் நாட்டின் முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற் றியவர் மருதமுனையைச் சேர்ந்த மூத்த கல்விமான் பழீல் மௌலானா. அவரது மறைவு முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் இழப்பாகும்."* [48]



மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு விழா வுக்கு அதிதியாக ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அழைத்து வரப்படும் காட்சி. இடமிருந்து வலமாக பிரதம கல்வியதிகாரி ஷரீப், சட்டத்தரணி றபீக், ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (அதிபர்), ஏ.எச்.எம். மஜீத் (அதிபர்), எச்.எம்.ஏ. வதூத் (அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

ஒரு கல்வி அதிகாரியாக பழீல் மௌலானா வகித்த அதே பதவிகளை வேறு நபர்களும் வகித்திருக்க முடியும். ஆனால் பழீல் மௌலானா அவரது பதவிநிலை, உத்தியோகம் என்பவற்றுக்கு அப்பால் இயலுமான வழிகள், ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தி கல்வி அபிவிருத்தியை தனது வாழ்நாள் இலட்சியமாக மனதில் கொண்டு செயற்பட்டார். சுருங்கக் கூறின், பதவிகள் அவரை அலங்கரிக்காமல் அவரால் அவர் வகித்த பதவிகள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவரது ஆளுமையும் கிடைக்கப்பெற்ற அதிகாரங்களும் ஒருங்கே இணைந்து பெரும் எழுச்சியை இலங்கை கல்விப் பரப்பில் ஏற்படுத்தியிருக்கின்றது. பழீல் மௌலானா எனும் கல்விமானின் வகிபாகம் இலங்கை முஸ்லிம் கல்வி வரலாற்றின் வேகத்தை ஆர்முடுகச் செய்திருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவின் கல்விப் பணிகளை ஆய்வு செய்யும்போது இலங்கையின் கல்வி வரலாற்றை அனுபவரீதியாகக் கற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது. பாடசாலைகளை எப்படி தோற்றம் பெறச்செய்வது, கல்விச் சேவையுடன் சமூக சேவை, சமய சேவை என்பவற்றை எவ்வாறு ஒருங்கிணைத்து மேற்கொள்வது, மனித ஆளுமை விருத்தி, ஆசிரியர் முன்மாதிரி, ஆசிரியர் கல்வி, கல்வி நிர்வாகம், ஊக்கப்படுத்தல், சமூகவியல், சமூக நகர்வு, சமூகமயமாதல், போராட்ட வழிமுறைகள், ஆசிரியர்–சமூக உறவு, ஆசிரியர்–கலாசார உறவு போன்றவற்றில் எடுத்துக்காட்டாக எவ்வாறு திகழ்வது போன்றவற்றில் பழீல் மௌலானாவின் வாழ்வு பல்வேறு செயற்பாட்டு விதிகளைக் கற்றுத் தந்திருக்கிறது. இவ் ஆளுமைப் பண்புகள் யாவும் அவரது தாய், தந்தை, ஆசிரியர்கள் மூலம் பழீல் மௌலானாவுக்கு கிடைக்கப் பெற்றவையாகும்.

இன்று ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவுக்குப் பின்னர் அவரது மாணவர் பரம்பரையினரும் அவரது பிள்ளைகளும் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்கின்றனர். 'பழீல் மௌலானா பவுண்டேஷன்' எனும் நிறுவனத்தை அவரது ஆயுட் காலத்தினுள் தோற்றுவித்துச் சென்றதன் மூலம் அவரது பணிகளை நிறுவனப்படுத்தி முன்கொண்டு செல்ல எண்ணியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இப்பணிகளைத் தொடர வேண்டிய கடமை அவரது குடும்பத்தைச் சார்ந்தது மட்டுமானதல்ல; அது முழு சமூகம் தழுவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு-1

### மருதமுனை ஷம்ஸ் ம.க. சம்பவத் திரட்டுப் புத்தகத்திலிருந்து

### 02.04.1979

19.03.1979ம் திகதி கல்முனை கல்விப் பணிப்பாளரின் அவர்களின் வாய்மொழிமூல கேள்விப்படி இப்பாடசாலையின் அதிபராக கடமை புரிந்த வந்த நான் இன்று KM/A/ 1203ஆம் இலக்க கட்டளைப்படி இலங்கை கல்விச்சேவை ஐந்தாந்தர அதிபராக கடமை ஏற்றுக் கொண்டேன். ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு என்னாலான பணியை நிறைவேற்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருள் வேண்டி இன்று முதல் எனது கடமையை ஆரம்பிக்கின்றேன்.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா

### 04.04.1979

...இவ்வித்தியாலயம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட பின் இங்கு நடைபெற்று வரும் வேலைகளைப் பார்த்து பிரமிப்படைய வேண்டியிருக்கின்றது. பாடசாலைக் காணி விஸ்தரிக்கப் பட்டு சுற்றிவர நாற்பக்கமும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. வடக்குப் புறமாக கல்வேலி ஆசிரியர்களாலும் பெற்றோராலும் கட்டப்பட்டுள்ளது. அதன் நீளம் 195 அடி கிழக்குப்பக்க சுவர் 585 அடி நீளத்தில் கட்டப்பட்டு வருகிறது. தென் பக்கமும், மேற்குப் பக்கமும் முட்கம்பி, ஓலைக் கிடுகுகள் கொண்டு அழகாக வேலி அமைக்கப்பட்டுள்ளது.

### கட்டடங்கள்

தற்காலிக கட்டடங்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன. 120'X18' அளவில் ஒரு கட்டடம் பெற்றோராலும் நலன்விரும்பிகளாலும் கட்டப்பட்டுள்ளது. 100'x18' அளவில் மேலும் ஒரு கட்டடம் அரச ஊழியர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

### மேல் வகுப்புக்கள்

ஏற்கனவே இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்கள் மாத்திரம் இருந்து வந்தன. இன்று முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை 402 மாணவர்களும், 6ம் வகுப்புத் தொடக்கம் 10ம் வகுப்புவரை 186 மாணவர்களும் கற்று வருகின்றனர். மேலும் மாணவர்கள் சேர்ந்த வண்ணம் இருக்கின்றனர். தொழிற் கூடம், நெசவறை, வர்த்தகக் கூடம் போன்ற பலவகை வசதிகளும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. விஞ்ஞானம், கணிதம், மனையியல், வர்த்தகம், விவசாயம் போன்ற பாடங்களைக் கற்பிக்க பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் பட்டதாரி ஆசிரியர்களும் தேவைப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நிருவாகம்

புதிய அதிபர் ஜனாப் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் இம் மகா வித்தியாலய முன்னேற்றத்திற்கு திட்டமிட்டு செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு தற்போது கடமை யாற்றும் ஆசிரியர்கள் மிகுந்த அக்கறையோடும், கடமையுணர்ச்சி யோடும் செயற்படுகின்றமை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சிரமதான அடிப்படையில் நான்கு ஆசிரியர்கள் இங்கு கற்பித்துக் கொண்டிருக்கின்றனர். வகுப்புகளில் தளபாடக் குறைவுகள் இருந்த போதிலும் மிகவும் ஒழுங்காகப் பாடசாலை நடைபெற்று வருகின்றது. இது புதிய அதிபரின் சிறந்த நிர்வாகத்திற்கு ஒரு சான்றாகும்

எம்.பி.எச். முகம்மது
(வட்டாரக் கல்வி அதிகாரி- கல்முனை)

### *02.06.1979*

மருதமுனை-02 கிராம முன்னேற்றச் சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கிணற்று வேலை தொடர்ந்து நடைபெற்றது. கி.மு.ச. உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### *28.06.79*

உபவட்டார விளையாட்டுப் போட்டி மசூர் மௌலானா சதுக்கத்தில் 21,22,28ம் திகதிகளில் நடைபெற்றது. 10 பாடசாலைகள் போட்டியில் கலந்து கொண்டன. அல்-மனார் ம.வி.க்கும் ஷம்சுல் இல்ம் ம.வி.க்கும் கடும் போட்டி இருந்தது.

...இறுதிநாளில் ஷம்சுல் இல்ம் ம.வி 248 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தைப் பெற்றது... இம்முதல் வெற்றி மாணவர்களின் கல்வி, பொதுப் பரீட்சை, புறக்கிருத்தியங்கள் போன்றவற்றிற்கு படிக்கல்லாக அமைந்து இம்மகாவித்தியாலயம் நன்கு வளர்ச்சியடைய வல்ல பெரிய அல்லாஹ் அருள்புரிவானாக. எனது அருமை மாணவர்கட்கும், ஆசிரியர்கட்கும், சிறப்பாக விளையாட்டு ஆசிரியர் எஸ்.எல்.எம். ஜலால்தீன், ஏ.எல்.எம். பரீத், ஏ.எம். அபூபக்கர், ஏ.எம்.ஏ.சமது, ஏ.ஆர்.எம். தௌபீக், என்.எம்.எம். இஸ்மாயில் ஏ.எல்.ஏ. ஜப்பார் உட்பட அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

ஐ.எம். எஸ்.எம். பழீல் மௌலானா

### *18.07.1979*

இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்ட முதல் நாள் இருந்தே இரவும், மாலையும் சிரமதானம் மூலம் நற்சேவை செய்தவரும், முதல் தரமான ஆதரவாளரும் ஆலோசகருமான ஜனாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சீ.எம். சாலிஹு (PM) இன்றிரவு அகால மரணம் அடைந்தார். அவரின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக வெள்ளைக்கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா

*05.09.1979*

இன்று போயாதினம் க.பொ.த. (உ/த) வகுப்பு பூர்வாங்கமாக தொடங்கி வைக்கப்பட்டது.

ஐ.எம். எஸ்.எம். பழீல் மௌலானா

*10.10.1979*

மாணவர்களின் விசேட மன்றக் கூட்டம் நடைபெற்றது. ஜனாப் ஐ.ஏ. ஹமீது (துபாய்) விசேட அதிதியாகக் கலந்து ஆறாம் வகுப்பு ஓ பிரிவு மாணவர்களின் முயற்சியால் வெளியிடப்பட்டுள்ள 'நல்வழி காட்டும் நபிமொழிகள்' நூலை ரூபா 100/- (RS.100) கொடுத்து முதற் பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார். நூல் விமர்சனம் வீ.எம். இஸ்மாயில் D.P அவர்களால் நடாத்தப்பட்டது.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு- 2

**அபுல் கலாமின் அன்பு மாணவன் கவிஞர் நீலாவணன் அவர்கள் பழீல் மௌலானா அவர்கள் சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்றதை கௌரவிக்கும் முகமாக மருதமுனை தெற்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 1962.11.04 அன்று நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் வாழ்த்தி இசைத்த வெண்பா**

*கஞ்சம் மலரும் கழனி நிலமகளைக்*
*கொஞ்சத் துடிக்குக் குணக்கின் கடற்கோமான்*
*கெஞ்சிப் புரண்டெழுந்து கீழ்ச்சரிந்து பின்திரும்பி*
*செஞ்சொற் தமிழ்க் கவிதை செப்புகிற கீழ்கரையின்*
*மக்கா நகர்போல் முகம்மதுவின் நற்கருணை*
*தொக்குத் துவங்குகின்ற தொல்காப்பியம், கற்றவர்கள்*
*மிக்கத், தொழில்வளமே மேவுகின்ற நன்னாடாம்.*
*மாண்பு மிகுந்த மருதமுனையூரின்*
*காண்பரிய எங்களது ஹாஜியார் செய்யது*
*ஐதுரூஸ் மவுலானா ஆயிஷா உம்மாவும்*
*வைத்த இறைவன் வழிபாட்டில் வந்துதித்த*
*புத்திரனே வா வா! புகழ்கொண்டு தாய்நாடு*
*மெத்த மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும்*
*பெறற்கரிய பெற்றுன்னைப் பெற்றெடுத்த தாயைச்*
*சிறக்கவைத்த செல்வனெங்கள் செய்யத் முஹம்மதுவாய்*
*பண்பு பிறழா பழீல் மௌலானா வருக!*

*பெற்ற திருநாட்டைப் பேணிப் புகழ்நிறைத்தல்*
*கற்றறிந்த மாந்தர் கடனென்று காட்டிவிட்டாய்*
*எந்தமொழி வந்தாலும் நொந்தழியா முந்தைமொழி*
*செந்தமிழும், மேற்கே செழிக்குமொழி ஆங்கிலமும்*
*கற்றாய்த் தடங்கிக் கனத்துத் தலைகவிழ்ந்து*
*நிற்குமெழில் நெற்கதிரே! நீணிலமே வான்மலையே*
*தற்பெருமை யற்ற தராசே! நறுமலரே!*
*சொற்பொழியும் கொண்டல்! சுகநலமே நீவருக!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத் தனைய மலர்நீட்டம் உன்னுடைய
உள்ளத் தனைய உயர்வுற்றாய் நீ வருக!

ஆசிரியனாக அமைத்து தமிழ்த்தாயின்
மாசில் பணியாற்றும் மாண்பறிந்து, நின்மாமன்
சின்னலெப்பை ஹாஜியார் செய்தவத்தால் வந்தவளாம்
பொன்மகளை உன்றன் புகழ் சுமக்கும் இல்லாளாய்த்
தந்தார் பெரியார்; தகைமை அறிந்து உம்மு
ஆமினா வோடும் அறவாழ்வு வாழ்ந்தெவர்க்கும்
காமமென்றும் செப்பாக் கலைஞனே! நீ வருக!

பத்திரிகை மூலம் பகுத்தறிவுக் கட்டுரைகள்
தத்துவங்கள் தீட்டும் தகைசால் எழுத்தால்!
அன்பின் உருவே 'அபுல்கலாம்' நீ வருக!

மார்க்கநெறிச் சீர்திருத்தம், மன்னும் கிராமத்தினர்
ஆக்கம் புரியும் அவைத்தலைவா! முற்போக்கு
வாக்கினால் முஸ்லிம் இனமுயர வாலிபரை
ஊக்கி இயக்கி, உயர்ந்த சமுதாயம்
நோக்கிப் பயிற்றியவர் நோய்போக்கும் ஆசிரியா!

பத்திரண்டு ஆண்டாகப் பள்ளிகளில் நீர்புரிந்த
உத்தமமாந் தொண்டை உணர்ந்தே அரசினர்தம்
கல்விப் பயிர்வளர்க்கும் கண்ணியமுறு வித்யா
தரிசகராம் மேல்பதவி தந்தார்கள்; எம்மூர்
வரிசைபெற்ற தின்றே! வராப் பதவி வந்தால்
கருவமுற்று மற்றாரைக் கால்வாரும் தீயோர்
வெள்ளைச் சிரிப்பு விளங்க, முகத்தினிலே
கொள்ளை கனவு குழைய வழக்கம்போல
எல்லா நலமும் இனிதெய்தி நீடூழி
பல்கிப் பெருகிப் படர்ந்து பயன்துய்க்க
எல்லாமே வல்லவனாம் ஈடில் முழுமுதலவன்
அல்லா புரிய அருளென்று பாராட்டி
கையிலே தந்தோம் கவி.

-நீலாவணன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு- 3

புத்தளம் -சிலாபப் பகுதி வட்டார வித்தியாதரிசியாயிருந்து
*01.06.1965* உடன் கல்முனை வட்டாரத்திற்கு மாற்றலாகிச்சென்ற

**ஜனாப் I.M.S.M. பழீல் மௌலானா**

அவர்கட்குத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடாத்தப்படும்
பிரியாவிடை உபசார வைபவத்தின் போது உளமுவந்து
அளிக்கப்பட்ட

## உபசாரப் பத்திரம்

*அன்பேயுருவான ஐயன்மீர்!*

மச்சங்கள் இசைபாடும் மட்டக்களப்பினைச் சேர்ந்த மருதமுனைக் கிராமத்தில் மங்காப் புகழ் படைத்த இஸ்லாமியப் பண்பாடுகள் நிறைந்த மாபெருங் குடியில் உத்தம புதல்வராய் உதித்து "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் என கேட்ட தாய்" என்ற திரு வள்ளுவனாயனாரின் திருவாக்குக்கிணங்கப்பெற்ற குடும்பத்திற்கும் பிறந்தகத்திற்கும் பெருமையை தேடிவைத்த தாங்கள் எமது வட்டாரத் திலும் என்றும் மறக்க முடியாத புகழ் உடையவராய் விளங்குகின்றீர் கள் என்பதை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

*ஆற்றலில் சிறந்த அறிஞர் திலகமே!*

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் ஆரம்பக் கல்வி யாகக் கற்றுத்தேறிய பின் அறிவுப் பணிபுரியும் ஆசிரியனாக வர வேண்டுமென்ற நன்நோக்கத்துடன் அளுத்கம ஆசிரிய கலாசாலை யில் பயிற்சி பெற்று தகைமையுடைய ஆசானாகப் பதினேழு ஆண்டு களாக பலரும் மெச்சத்தக்கவகையில் சேவை புரிந்த காரணத்தி னாலே அரசாங்கம் வித்தியாதரிசி பதவியை அளித்துக் கௌரவித்தது.

*இரக்கம் படைத்த ஈகையாளரே!*

மலர்ந்த முகமும், நிமிர்ந்த நடையும், பொலிந்த மேனியும், களிந்த உள்ளமும், அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும், ஈகையும், இரக்கமும், இறைபக்தியும் இயல்பாகவே அணிகலன்களாய் அமையப்பெற்ற தாங்கள் எமது தமிழ் வட்டாரத்திற்கு வித்தியாதரி சியாய் நியமிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள் இப்பகுதியின் கல்வி அபிவிருத்திக்காக ஆற்றியுள்ள அளப்பெரிய சேவைகள் எவரும் பாராட்டாதிருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர் குடிப்பிறந்த உத்தமரே!**

*சாதி, மதபேதம் பாராது கைம்மாறு கருதாது தன்னலம் நோக்காது எவருக்கும் சமத்துவமாக நன்மை பயக்கக்கூடிய முறையில் உத்தி யோகக் கடமைகளை செம்மையாக செய்ததோடு இன்முகங் காட்டி நன்மையாகப் பேசி எவரையும் கவரும் இயற்கைக் குணமுடைய தாங்கள் தமிழ் முஸ்லீம் ஆசிரிய சமுதாயத்தின் நலனுக்காகவும் தமிழ் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் அரசாங்கத்துடன் பரிந்து பேசி ஊர்கள் தோறும் செய்துள்ள சீரிய தொண்டுகளை எம்மால் என்றும் மறக்கமுடியாதவர்களாய் இருக்கிறோம்.*

**ஊரார் மெச்சும் உன்னத பெருமகனே!**

*நாட்டுப்பற்றும் இன மத மொழி அபிமானமும் மிக்க தாங்கள் கல்விப்பணிகளை மட்டும் தன் கடமையென பாராது உத்தியோக வேளை தவிர்ந்த ஓய்வான சந்தர்ப்பங்களில் சமயப்பணிகளைச் செய்தும் சமூக தொண்டுகள் ஆற்றியும் தமிழ் கலாச்சாரங்களை வளர்த்தும் நாவன்மை மிக்க நல்லுபதேசங்களால் மக்களின் சிந்தையை சீர்திருத்தியும் செய்துள்ள சேவைகட்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.*

**எல்லோருக்கும் நல்லவரான எங்கள் தலைவா!**

*இத்தகைய அரும்பெரும் தொண்டுகளைப் புரிந்து எம் உள்ளத்தில் நீங்காத இடம்பெற்ற தாங்கள் திடீரென மாற்றமாகிச் செல்லும் செய்தியை அறிந்து அடங்காத்துயருள் ஆழ்ந்து நிற்கின்றோம். இதுவரையும் தாங்கள் எமக்குச்செய்த பேருதவிகட்கு பிரதியுபகாரமாக எமது உள்ளத்தடாகத்தில் மலரும் அன்புத் தாமரைகளை ஆரமாகக் கோர்த்துச் சூடிநிற்கின்றோம்.*

**ஒழுக்கம் குன்றா ஒப்பற்ற பெரியீர்!**

*கடமையின் நிமித்தம் தாங்கள் எங்கு செல்லினும் திடகாத்திரமும் தேக சுகமும் பண்புள்ள சேவையும் பதவிஉயர்வும் பேரும் புகழும் குறையறப் பெற்று நிறையுற நீடூழி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி, ஆசிகூறி இவ்வுபசார இதழை முற்றுவிக்கின்றோம்.*

***இங்கனம்,***
***தங்கள் பிரிவால் துயருறும்***
***புத்தளம்- சிலாபம் வட்டாரத் தமிழாசிரியர்கள்.***
***19.06.1965***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு- 4

*மருதமுனை ஷம்சுல் இல்ம் மஹறா வித்தியாலயத்தின் முதலாவது அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் சுற்று வட்டக் கல்வி அலுவலர்*

**I.M.S.M. பழீல் மௌலானா (J.P)** அவர்களுக்கு

*ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலய*

*ஆசிரியர், மாணவர்கள், பெற்றோரால் 30.10.1981 வெள்ளிக்கிழமையன்று எடுக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவின் போது வாசித்தளிக்கப்பட்ட*

# பாராட்டிதழ்

*மருதமுனை பெற்றெடுத்த மதிப்புறு புதல்வனே!*
*ஐதுரூஸ் மௌலானாவின் அருந்தவச் செல்வனே!*
*செய்யிது சாலிஹ் மௌலானா*
*செய்யிது செயின் மௌலானா*
*ஆன சான்றோரின் அன்புத் தம்பியே!*
*நாவலர்*
*அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானாவின்*
*மதிப்புக்குரிய சிறிய தந்தையே!*
*சின்னலெப்பை ஹாஜியார் செய்தவத்துச் சேயிழை*
*ஆமினா உம்மாவின் அன்புக் கணவரே*
*மத்ரசதுல் ஷர்கிய்யாவின்*
*நிருவாக அதிபரே!*
*ஆசிரியராய், அதிபராய், கல்வி அதிகாரியாய்*
*நாட்டின் பல பாகங்களிலும் நற்பணியாற்றி*
*கல்முனைக் கல்விக் காரியாலயத்தில்*
*கல்வி அதிகாரியாய் கடமை புரிந்த உங்கள்*
*ஆற்றலும் மதிப்பும், அருந்தொண்டும் நாமறிந்து*
*மருதமுனையின் கல்வி வரலாற்றில் ஓர் புதிய*
*அத்தியாயமாய் அமைந்த ஷம்சுல் இல்ம்*
*மஹறா வித்தியாலயத்தை*
*கட்டியெழுப்பும் கடும் பணிக்கு உங்களை நாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அழைத்து வந்து அதன் முதல் அதிபராய்*
*அமரச்செய்தோம் அதன் மூலம் எங்களது*
*மகா வித்தியாலயம்*
*நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய்*
*வளர்ச்சிமேல் வளர்ச்சி கண்டு*
*வெற்றி மேல் வெற்றி பெற்று*
*கல்முனைக் கல்வி மாவட்டத்திலோர்*
*முன்னோடி மஹா வித்தியாலயமாய் உயர்ந்ததுவே!*
*அகவை உங்களுக்கு அறுபது ஆனதாலே*
*சட்டபூர்வமாய் ஓய்வுபெற்றீர்கள்*
*ஆத்ம பூர்வமாய் இன்னும் எங்களுக்கு*
*அரும்பணி செய்கின்றீர்கள்*
*உங்கள் திருப்பணிக்கு கைமாறு*
*பொற்குவை குவித்தாலும் போதாது*
*என்றாலும்*
*உள்ளத்து நல்லன்பை வார்த்தை வடிவத்தில்*
*நன்றியாய் இன்று நல்குகின்றோம்*
*சொற்கொண்டால்! திருக்குர்ஆன் ஆய்வு நூல்*
*செய்துள்ள ஆராய்ச்சி அறிஞரே!*
*இன்னும் பல்லாண்டு இவ்வுலகில் வாழ்ந்து*
*எமக்கும் உலகுக்கும் ஏற்றதொண்டாற்றி*
*இருமையிலும் ஏற்றம் அடைந்துயர்க்க வென்றிறையை*
*வேண்டுகின்றோம் அன்பின் வஸ்ஸலாம்!*

***-மருதூர்க் கொத்தன்***

***இவ்வண்ணம்***
***ஷம்சுல் இல்ம் மஹா வித்தியாலய அபிவிருத்திச் சபையினர்***
***மருதமுனை***
***1981.10.30***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு- 5

### முன்னாள் சுற்றுவட்டக் கல்வி அதிகாரியும் தரமுயர்த்தப்பட்ட ஷம்சுல் இல்ம் மகாவித்தியாலயத்தின் முதலாவது அதிபருமான அபுல்கலாம் **ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா** J.P அவர்கள் **ஷம்ஸ் மத்திய கல்லூரி**யின் 35 வருட நிறைவையொட்டி வெளியிடப்பட்ட **"எழுவான்"** சிறப்பு மலருக்கு வழங்கிய **ஆசிச்செய்தி**

கஞ்சம் மலரும் களனி நிலமகளைக் கொஞ்சத்துடிக்கும் குணக்கின் கடற்கோமான் கெஞ்சிப்புரண்டெழுந்து, கீழ்சரிந்த, பின்திரும்பி, செஞ் சொற்தமிழ்க் கவிதை செப்புகிற கீழ்க்கரையில் மக்கா நகர் போல் முகம்மது (ஸல்) நற்கருணை தொக்கத்துலங்கு கின்ற தொல்பதியாம் கற்றவர்கள் மிக்க தொழில்வளமே மேவுகிற நற்பதியாம்: செக்கச்சிவந்த செங்கதிரோனின் பொற்கதிர்கள் செறிந்தேறும் மாண்புமிகு மருதூரின் வங்கக் கடலருகே வளமான பொன்மணலில் தொங்கு விழுதூன்றும் ஆலமரத்து அகல் நிழலில் எங்கள் கலையகம் எழிலுற இனிதே பிறந்ததுவே.

அதுதான் மங்கள மருதமுனை கிழக்குப் பாடசாலை 1959ம் ஆண்டு அதன் முதல் தலைமை ஆசான் வீ.எம். இஸ்மாயிலின் முழு ஆளுமையில் உருவான அச்சிறு கலையகம் இன்று ஆல்போல் தழைத்து. அறுகதுபோல் வேரூன்றி அரசுபோல் கிளைபரப்பி, பொங்கும் கலையமுதினை அலைமேல் அலையாக அள்ளித்தந்து நிற்கும் ஷம்ஸ் மத்திய கல்லூரியாக உயர்வு பெற்று 35 ஆண்டு நிறைவு கண்டுள்ளது.

மர்ஹூம் ஐ.எம். அப்துல் குத்தூஸ் அவர்கள் இக்கலையகத்தின் அதிபராக இருந்த காலத்தில் கல்வியதிகாரியாக பணிபுரிந்த நான் "ஷம்சுல் இல்ம்-கலைக்கதிரவன்" எனத்திருநாமம் சூட்டும் பாக்கியமும் பெற்றேன். மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட போது அதன் முதலாவது அதிபராகவும் பணிபுரிந்து மலைபோல் உயர்ந்து வந்த எதிர்ப்புகளை நலிவுறச் செய்து மலைத்தீபமாக ஆக்கிய பேற்றினை எனக்குத் தந்துதவிய அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரியது.

மருதமுனை கிழக்கு பாடசாலையின் முதல் அதிபர் மருதூர்க்கொத்தனே, ஷம்ஸ் மத்திய கல்லூரியின் முதலாவத அதிபராக கடமை புரியும் நற்பேறு பெற்றுள்ளமை அவரது தன்நலமற்ற ஆசிரிய பணியின் சிகரமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், கல்லூரி ஆசிரியத் திலகங்கள், பெருமைக்குரிய அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் நற்பேறாக "நீலக் கடலோரத்திலே ஒரு அலிகார்" நிலைபெற்று விட்டதையிட்டு மருதூரின் அனைத்து மக்களும் பெருமை கொண்டுள்ளனர். அதிபர், ஆசிரியர்கள், பெற்றார், மாணவ மாணவிகள் எல்லோரையும் பாராட்டுகின்றேன். இவர்கள் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

***ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா***
***03.06.1995***

## இணைப்பு- 6

# Drink water instead of toddy'

CHILAW Monday.

Mr. I. M. S. M. Faleel Moulana, inspector of schools, deplored at a Health Week rally the use of boards in bold letters "Ra bomu" inviting the public to drink toddy.

Instead he said, there should be boards in gold letters "Kiri bomu", "Tambili bomu" or "Watura bomu". This would save many people from the perils of liquor.

Mr. S. D. R. Jayaratne, MP for Chilaw, Dr. W. A. Fonseka, Superintendent of Health Services, Chilaw-Puttalam, Dr. S. C. Sanders, Medical Officer of Health, Chilaw also spoke.

Mr. M. P. D. Pinto, chairman of the Chilaw Urban Council, gave away the prizes.

Daily News 16.06.1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக, சமய மறுமலர்ச்சிப் பணியில் பழீல் மௌலானா ஒரு வரலாற்றுத் தொகுப்பு

இம்திஸா ஹஸன்
BA (Hons) Specialization in Islamic studies,
B.Sc in Psychology (R) Dip.in Psychological Counseling

## அறிமுகம்

பழீல் மௌலானா தனது பணி நிமித்தம் பல்வேறு பிரதேசங்களில் பணிபுரிந்தார். குக் கிராமங்கள் முதல் பெரு நகரங்கள் வரையிலும்; சாதாரண குடிமகன் முதல் மூத்த அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் வரையிலும்; சகல இனத்தவரோடும் நெருங்கிய ஈடுபாட்டையும் உறவையும் கொண்டவர் என்ற வகையில் அவர் ஆற்றிய சமூக, சமய மறுமலர்ச்சிப் பணிகள் மிக வியாபித்தவை. அவை குறித்த ஆய்வே இவ்வாக்கமாகும்.

## விளையும் பயிரை முளையில் தெரியும்

பெரும் சமுதாய மாற்றங்களைச் செய்த தலைவர்கள், ஆளுமைகள் புத்திஜீவிகள் இளம் வயதிலேயே அடையாளம் காணப்படுகின்றனர். பழீல் மௌலானா அவர்களும் அவ்வாறு இள வயதிலேயே இனம் காணப்பட்ட ஓர் ஆளுமை ஆவார்.

பழீல் மௌலானா மருதமுனையில் அப்போது இயங்கிய 'மஜ்மஉல் கைராத்' குர்ஆன் மதரஸாவில் இணைந்து தனது ஆரம்ப குர்ஆனியக் கற்கையை மேற்கொண்டார். அவரது சகோதரரான மத்ரஸா மௌலானா (செய்யது ஸாலிஹ் மௌலானா) அம்மதரஸாவை நிறுவி பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார். மதரஸா கல்வியில் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேர் முஹம்மது மாகான் மாக்கார்

மாணவராக விளங்கிய பழீல் மௌலானா சிறந்த குரல் வளத்தையும் கொண்டிருந் தார். மத்ரஸா மௌலானாவிடம் அல்-குர்ஆனை கற்றுத் தேர்ந்த அவர், அரபு மொழியில் எழுத வாசிக்க கற்றுக் கொண் டதுடன் அரபுத்தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றார்.

*1933*ஆம் ஆண்டு அம் மத்ரஸாவுக்கு வருகை தந்த மட்டக்களப்பு தெற்கு தொகுதி சட்டவாக்க சபை உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சருமான சேர். முஹம்மது மாகான் மாக்கார் அவர்கள் மத்ரஸா மாணவன் பழீல் மௌலானா வின் அல்-குர்ஆன் பாராயணத்தைக் கேட்டு வெள்ளி நாணயம் ஒன்றைப் பரிசளித்தார். தனது வாழ்நாளில் பெற்ற முதல் பரிசாக இதனை பழீல் மௌலானா பேருவகையுடன் குறிப்பிடுகின்றார்.[49]

மத்ரஸா மௌலானா இல்லாத சந்தர்ப்பங்களில் பழீல் மௌலானா அம் மதரஸாவைப் பொறுப்பேற்று நடத்தினார். இதனை பழீல் மௌலானாவின் சன்மார்க்கப் பணியின் ஆரம்பமாகக் கருதலாம். குர்ஆன் மதரஸாவில் முளைவிட்ட அவரது ஆளுமைத் திறன் பின்னாட்களில் பல்துறைகளிலும் பரிணாமம் பெறுகிறது.

## அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

*1940* இல் SSC பரீட்சையில் சித்தியடைந்த பழீல் மௌலானா, *1947*ஆம் ஆண்டு அளுத்கமை ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்படுகிறார். கலாசாலையில் கற்கும் காலத்தில் *(1942-1944)* முஸ்லிம் மஜ்லிசின் செயலாளராக பழீல் மௌலானா தெரிவு செய்யப் பட்டார். அக்காலப் பகுதியில் கலாசாலை மாணவர்களிடையே இஸ்லாமிய உணர்வை விருத்தி செய்வதிலும் ஆன்மிகப் பயிற்சிகளை வழங்குவதிலும் முன்மாதிரி மாணவனாக அவர் திகழ்ந்தார்.

49. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயரிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டாம் தரத்தில் தனது கற்கையைப் பூர்த்தி செய்த பழீல் மௌலானா கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கற்பிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இக்காலத்தில் (1947–1948) மாளிகாவத்தை டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலையில் இரவு நேர மார்க்க வகுப்புக்களை அவர் நடத்தி வந்தார்.

இளைஞர்களை வலுவூட்டுவது, அவர்களை மார்க்க ஈடுபாடுள்ள வர்களாக ஆக்குவது சமூகப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதில் பழீல் மௌலானா கண்ணும் கருத்துமாக இருந்தார். இதனை தனது ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் தனது சகபாடிகளுக்கிடையே செயற்படுத்தினார். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குப் பின்னர் அவருக்கு வாய்த்த ஆசிரியர் பொறுப்பு முதல் வட்டாரக் கல்வி அதிகாரி மற்றும் சமூக அமைப்புகளின் தலைமைத்துவ பொறுப்பு ஈறாக அவரது பணிகள் அனைதிலும் அதனைக் கண்டுகொள்ள முடியும். அந்த வகையில் தான் பிறந்த ஊரான மருதமுனையில் 1948இல் 'முஸ்லிம் யூத் கவுன்சிலை' நிறுவினார். அதன் தலைவராக இரண்டு ஆண்டுகள் செயற்பட்டு பல்வேறு சன்மார்க்கப் பணிகளை மருதமுனை இளைஞர் களை இலக்காகக் கொண்டு முன்னெடுத்தார்.



முதல் வரிசை: ஏ. உதுமா லெப்பை (அதிபர்), மௌலவி யூ.எல்.ஏ. சமத், ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா (வட்டாரக் கல்வி அதிகாரி) இரண்டாம் வரிசை: ஸெய்னுல் ஆபிதீன் (அதிபர்), எம்.எம். இப்றாஹிம் (அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்-எலிய (1951-1955)

கள்-எலிய அலிகார் முஸ்லிம் வித்தியாலய தலைமை ஆசிரியராக 1951ஆம் ஆண்டு பழீல் மௌலானா கடமை ஏற்றார். அவரின் போக்கும் சன்மார்க்க ஈடுபாடும் கள்-எலிய மக்களையும் மாணவர்களையும் வெகுவாகக் கவர்ந்தன. 'மௌலானா மாஸ்டர்' என அவர் மரியாதை யுடன் அழைக்கப்பட்டார். அங்கு பணியாற்றிய காலப் பகுதியில் அதே ஊரில் அமைந்திருந்த கள்-எலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் உதவிச் செயலாளராகவும் அவர் பணியாற்றினார்.

கள்-எலிய சேவைக் காலம் பழீல் மௌலானாவுக்கு நல்ல சக வாசங்களையும் ஆன்மிகப் பயிற்சியையும் பெற்றுக் கொடுத்தது. கள்-எலிய ஜும்மா பள்ளியில் அரபுத் தமிழில் குத்பா உரைகளை அவர் நிகழ்த்தி வந்தார். அத்துடன் பள்ளிவாசல் புனர்நிர்மாணப் பணியில் தனது தந்தையின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவரான 'கோட்டார் பாவா' என அழைக்கப்பட்ட ஷெய்கு சுலைமான் காதிரி அவர்களுக்கு பக்கபலமாக செயற்பட்டார். 'கோட்டார் பாவா' சிறந்த மார்க்க ஞானம் உடையவர், உயர்ந்த கருத்துக்களை வழங்கும் பேச்சாளர். இவரது உபதேசங்களும் விளக்கவுரைகளும் பழீல் மௌலானாவின் ஆன்மிக விருத்திக்கு பக்கபலமாய் அமைந்தன.

சென்ற இடமெல்லாம் அவர் ஆற்றிய பணிகள் காலம் கடந்தும் நினைவுகூரத் தக்கவையாக அமைந்தன என்பதற்கு கள்-எலிய மக்கள் பழீல் மௌலானாவின் சேவைகளை என்றும் நினைவுகூர்பவர்களாக இருந்தமை சான்று. ஆம், அவர் கள்-எலியவில் பணியாற்றிச் சென்று சுமார் ஐம்பது வருடங்களின் பின்னர் 2006.02.12 இல் அலிகார் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற புதிய வாசிகசாலை கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவிற்கு அவர் சிறப்பு அதிதியாக அழைக்கப்படுகிறார்; பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகிறார்.

## குளனியில் திரண்ட கார் மேகம்

**01.01.1956** இல் கமு/வீரத்திடல் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபராக பழீல் மௌலானா பொறுப்பேற்றார். அவர் பதவியேற்று இரண்டு ஆண்டுகளில்- **1958**இல் நிகழ்ந்த இனக் கலவரத்தில் இக்கிராமம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட கிராமத்தின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு **1959**ஆம் ஆண்டு 'ஐந்தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளனி முன்னேற்ற மன்றத்தை' உருவாக்கி அதன் தலைவராகவும் செயற்பட்டார். வீரத்திடல் கிராமத்தின் முன்னேற்றத்தில் ஜும்மா பள்ளிவாசல் புனர்நிர்மாணப் பணிகளை அவர் முதன்மைப்படுத்தினார். இப்பணிகளில் ஹகீம் சாஹிபு என்பவர் மௌலானாவுடன் இணைந்து பணியாற்றினார். இப்பள்ளிவாசல் கட்டட ஆரம்ப விழாவிற்கு கரைவாகு வடக்கு கிராம சபை தலைவர் மத்ரஸா மௌலானா அவர்களின் அழைப்பையேற்று காலி பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா கலாசாலை அதிபர் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் வருகைதந்து அடிக்கல் நட்டு வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை, நற்பிட்டிமுனை, மருதமுனை கிராமங்களில் இருவரும் இணைந்து மிகுந்த சிரமப்பட்டு நிதி வசூலித்து பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்தனர். மருதமுனை இஸ்மா லெப்பை ஹாஜியார் பள்ளிவாசலின் கூரையை அமைத்துக் கொடுப்பதற்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பொதுவான சமூக, சமயப் பணிகளுக்கு அப்பால் தனிப்பட்ட முறையிலும் மாணவர்களின் சன்மார்க்க முன்னேற்றத்திற்கான வழிகாட்டல்களை வழங்கியுள்ளார். தான் கடமையேற்றுச் செல்லும் அனைத்துப் பிரதேசங்களிலும் இப்பணியை அவர் ஆற்றியிருக்கிறார் என்பதை பழீல் மௌலானாவின் மாணவரும் கல்முனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஐ.ஏ. ஹமீட் பின்வருமாறு தனது மாணவப்பருவ அனுபவத்தினூடாக விபரிக்கிறார்:

***"...He was unhappy when he came to know that I was unable to read the Holy Quran easily and flawlessly. Therefore he donated me a copy of the Holy Quran and instructed me to develop myself to be able to read it effortlessly".[50]***

*(...என்னால் இலகுவாகவும் சரளமாகவும் புனித அல்குர்ஆனை ஓத முடியாது என்பது அவருக்குத் தெரிய வந்தபோது அது அவரைக் கவலைக்குள்ளாக்கியது. ஆகவே, எனக்கு ஓர் அல்குர்ஆன் பிரதியை அன்பளிப்பு செய்து சிரமமின்றி அதனை ஓதுவதற்கு என்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.)*

---

*50. Hameed I.A., 'A Beacon Light', Daily News, 17.04.2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பிரிவில் டெல்லியைச் சேர்ந்த மௌலானா றஹ்மதுல் லாஹ் அவர்களால் மருதமுனையில் முதலாவதாக அமைக்கப்பட்ட தப்லீக் ஜமாஅத்தின் முதல் அமீராக செயற்பட்டார். இப்பதவிக் காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த 'மணிமொழி மௌலானா' கலீலுர் ரஹ்மான் (ரியாஜி) அவர்களை அழைத்து வந்து மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலில் ஐந்து தினங்கள் ஹதீஸ் மஜ்லிஸ் தொடரொன் றினை ஒழுங்கு செய்தார். அக்காலத்தில் ஒரு மிகப் பெரும் மார்க்க நிகழ்வாக மக்கள் மத்தியில் இது பிரபல்யம் அடைந்திருந்தது. அத்துடன், அப்பள்ளிவாசலின் பேஷ் இமாமாகவும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலத்தில் வெள்ளிக்கிழமை ஜும்மா உரையொன்றையும் அவர் நிகழ்த்தி உள்ளார்.

*1960*ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து பழீல் மௌலானாவைத் தேடி வந்தது இடமாற்றம். அவர் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கொட்டியாவெவ கிராமத்திற்கு இடமாற்றம் செய் யப்பட்டார். இவ்விடமாற்றம் வீரத்திடல் மக்களை பெரிதும் கவலைக்கு உட்படுத்தியது. தமது கிராமத்தின் அபிவிருத்தியிலும் பாடசாலையின் முன்னேற்றத்திலும் அர்ப்பணத்துடன் செயற்பட்ட ஒருவரை இழப்பது உண்மையில் கவலை தரும் ஒரு விடயமே. பிரியாவிடை நிகழ்வின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை பின்வருமாறு தனது டயறிக் குறிப்பு களில் மௌலானா பதிவு செய்து வைத்துள்ளார்.

*"...குளனி மக்களுடன் ஆசிரியர்கள் கண்ணீர் மல்க குழந்தைகள் கதற இம்மாற்றத்திற்கு நான் ஆயத்தம் செய்தபோது ஆசிரியர் அ.ஷ. அப்துஸ் ஸமது வழியனுப்பிய கூட்டத்தினரை நோக்கி "குளனியில் திரண்ட கார் மேகம் கல்வி வரட்சியை நீக்கி இப்பொழுது அநுராத புரக் காட்டை நோக்கி பறந்து போகிறது" என்று கூறியபோது நானும் கதறினேன்."*[51]

## புலிக்குளம் பெற்றது புதுப் பொலிவு

*1960*ஆம் ஆண்டு அநுராதபுரம் கொட்டியாவெவ முஸ்லிம் மகா வித்தியாலய அதிபராகக் கடமையேற்றார். அங்கு இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளையும் நீங்கா நினைவு களையும் தனது டயறிக் குறிப்புகளில் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

51. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயரிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"...16-3-1960 பஸ் பிரயாணம் மூலமாக நானும் மௌலவி முகையதீன் ஜமாலியும் அநுராதபுரம் பழைய நகரப் பள்ளிவாசலுக்கு சென்று அஸர் தொழுகை நிறைவேற்றினோம். அப்பள்ளியில் கடமை புரிந்து கொண்டிருந்த கதீப் முஹம்மது யூசுபு ஆலிம் உடைய உதவி பெற்று இருவரும் தத்தமது பாடசாலை நோக்கி அன்றே புகையிரதத்தின் மூலம் பிரயாணம் மேற்கொண்டோம். "பறசங்கஹ வெவ" என்ற இடத்தில் இறங்கி வழித்துணை ஒருவருடன் மூன்றே முக்கால் மைல் கால்நடை நடந்து யானைக் காட்டினூடே கோழிபந்தாவை வந்து சேர நேரம் சரியாக மாலை 6 மணியாகியது. மண் குடிசை வைக்கோல் வீடு, உள்நுழைந்து செல்லக்கூடிய வழி அன்றிரவு அங்கு தங்கினேன்.*

*ஒரு மாதம் கோழிபந்தாவை முகையதீன் பிச்சை ஒற்றைக்கால் மனிதனின் இடத்தில் தங்கி கொட்டியாவையில் கடமை புரிந்து வந்தேன். கொட்டியாவை ஒரு சிறு கிராமம். கானகத்தின் மத்தியிலே குளத்தின் பக்கதிலே அமைந்துள்ள பாடசாலை தகரக்கூரை. ஆசிரியர் தங்கவும் ஒரு கூடம். கானகத்தின் காட்சி யானை, புலி, கரடிகளின் உறுமல் மக்களின் கரடுமுரடான வாழ்க்கை இத்தனையும் என்னை ஆரம்பத்தில் அச்சத்துக்குள்ளாக்கின. எனினும், ஊர் மக்களின் பரிதாபகரமான வாழ்க்கை முறையையும் அவர்கள் எந்தவகையிலும் இஸ்லாமிய வட்டத்தினுள் இல்லையென்பதையும் அவதானித்து வந்தேன்.*

*மாதங்கள் சில சென்றன. 28 மாணவர்கள் 52 ஆக உயர பிர்தௌஸி என்ற பெயருடைய யாழ்பாண ஆசிரியர் ஒருவரும் உதவிக்கு வந்தார். மாணவர்களுக்கு கலிமா, இஸ்லாம் கற்பிப்பதில் பெரும் நேரத்தை செலவளித்தேன். கிராம மக்களுடன் நன்கு பழகி அவர்களின் சன்மார்க்க நிலையையும் அறிந்து கொண்டேன். தகரக் கொட்டிலில் உறங்கி அங்கேயே ஐங்கால தொழுகையையும் நிறைவேற்றி வந்தேன். நல்ல உள்ளம் படைத்த அ.மு. காசீம் 40 ரூபா பேசி மூன்று வேளை உணவும் தேநீரும் தந்து கொண்டிருந்தார். மக்களும் என்னை அணுகி சுகம் விசாரித்து தங்களால் முடிந்த அளவு உபசரிப்பும் செய்ய ஆரம்பித்தனர். அவர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களில் மார்க்க அனுஷ்டானங்களை பாடசாலை வளவில், குளக்கட்டில், குளக்கரையில் சொல்லிக் கொண்டே வந்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாணவர் தொகை எழுபத்தாறு, வகுப்புக்கள் 3ல் முடமாகிக் கிடந்தது. 7ஐ எட்டிப் பிடித்து விட்டோம்; சிங்கள ஆசிரியரும் வந்து விட்டார். பிர்தௌஸி இடமாற்றலாகிச் செல்ல நான் மட்டும் வகுப்புக் களை நடத்தி வந்தேன். மக்கள் மிகவும் நெருங்கிப் பழகி மரியாதை தர ஆரம்பித்து விட்டனர். ஒற்றையடிக் காட்டுப் பாதையை வெட்டி போக்குவரத்துக்கு ஏற்றதாக்கியபோதுதான் கிராமம் வெளிச்சம் அடைந்தது. மைத்ரிபால சேனாநாயகவை (பாராளுமன்ற உறுப்பினர்) பலமுறை கண்டு கதைத்தேன், பயனாக வெட்டப்பட்ட காட்டுப்பாதை புல்டோசரால் 2 கிழமைகள் துப்பரவு செய்யப்பட்டது. உடைந்து, பாழடைந்து நீர் தேங்க முடியாத நிலையில் கிடந்த கொட்டியாவெவ புலிக்குளத்தை **65,000** ரூபா செலவில் திருத்தும் வேலையும் ஆரம்பமாகியது. இதே வேளையில் "சீ" கிறேட் தபால் கந்தோர் ஒன்று கொட்டியாவெவயில் "இகள கொட்டியாவெவ உப-தபால் கந்தோர்" என்ற பெயரில் ஒருவரின் வீட்டில் திறந்தும் வைக்கப்பட்டது.*

*மைத்திரியின் சேவையை மேலும் பெற்றதால் முதன் முதலாக அநுராதபுரத்திலிருந்து பஸ் சேவையும் ஆரம்பமாயிற்று. குறுகிய காலத்தில் கொட்டியாவையின் இந்த அதிசயிக்கத்தக்க முன்னேற்றம் பக்கத்து கிராமங்களை அதிர்ச்சியடைச் செய்தன. மௌலானா சேர் இப்போது எங்கட முதிசம் என்று குழந்தைகளும் பெரியவர்களும் கதைக்க ஆரம்பித்தனர். இவ்வளவு சேவைக்கும் எனக்கு உறுதுணை யாக இருந்த அ. அஸனார் லெப்பையும் அ.மு. காசீம் என்பவரையும் ஆதம்பாவாவையும் நான் மட்டுமல்ல; மக்களே மறக்கக் கூடாது. அஸனார் திடீரென மரணமாகியது எனக்கு பேரிழப்பாக இருந்தது. எனினும் சேவையைத் தொடர்ந்தேன்.*

## புகழ்பூத்த புளிய மரம்

*இத்தனை வேலைகளிடையே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற எனது எண்ணத்தை குடிமக்கள் மனதில் படிப் படியாக வளர்த்து வந்தேன். முக்கியமாக இளைஞர்கள் உற்சாகம் காட்டினர். முதன் முறையாக புளிய மரம் ஒன்றின் கீழ் இறைவணக்கம் புரிய ஒரு மனை வேண்டும் என்பதை வலியுறுத்த கூட்டமொன்று கூட்டினேன், விளக்கினேன். "27 குடும்பம் எப்படி பள்ளி கட்டலாம்?", "பல்லாண்டு காலமாக முயற்சித்தும் முடியவே இல்லை", "எங்களால் தூக்க முடியாது" "அடுத்த ஊர்ப் பள்ளி இருக்கிறது". "துவக்கினால் முடிக்க வேண்டுமே!" என்று பல குரல்கள் ஒலித்தன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹு அக்பர்!

# புதிய பள்ளிவாசல் திறப்பு விழா

இஸ்லாமிய சகோதரர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்

அநுராதபுரத்தைச் சேர்ந்த கொட்டியாவெவ என்னும் முஸ்லிம்
கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும்

## முஹையித்தீன் ஜும்ஆ மஸ்ஜித்

இம்மாதம் 22ந் திகதி வெள்ளிக்கிழமை

## ஆலி ஜனாப் அல்ஹாஜ் H. S. இஸ்மாயீல்

பாராளுமன்ற முன்னை நாள் சபாநாயகர்

அவர்களால் இறை வணக்கத்திற்காகத் திறந்துவைக்கப்படும்
அன்று காலை மு. ப 10 மணிக்கு "வக்பு" என்னும் புனித கடமையை
புத்தளம் காஸிமிய்யா அரபிக் கல்லூரி அதிபர்
ஆலி ஜனாப் மௌலானா மவ்லவி அல்ஹாஜ் மஹ்மூத் ஹஸரத் அவர்கள்
நிறைவேற்றி வைப்பார்கள்.

ஹாஜி ஜனாப் மவ்லானா செய்யித் முஹம்மத் பழீல்; மவ்லானா
அவர்களால் முதலாவது குத்பா பிரசங்கம் நிகழ்த்தப்பட்டு
தொழுகையும் நிறைவேற்றி வைக்கப்படும்.

பகல் 1-30 மணியளவில் மதிய போசன விருந்தளிக்கப்படும்

சகல முஸ்லிம் சகோதரர்களையும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு
அன்பாய் அழைக்கின்றோம்.

இப் பள்ளிவாசலைக் கட்டிமுடிப்பதற்கு அருள்புரிந்த எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் உரியதாகும். நிதி உதவி புரிந்த சகல முஸ்லிம் சகோதர சகோதரிகட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

முக்கிய குறிப்பு:-

இப் பள்ளிவாசலுக்கு உபயோகமான 'ஹதியா'க்கள்
நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

இப்படிக்கு தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

I. M. S. M. F. மவ்லானா
வித்தியாதரிசகர்
15-4-66

முஸ்லிம் ஜமாஅத்தினர்
முஹையித்தீன் ஜும்ஆ மஸ்ஜிட்
கொட்டியாவெவ
பறசங்கஹாவெவ

சந்திரன் அச்சகம் கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பல கூட்டங்கள் கூடிக் கலைந்தன. மர்ஹூம் அஸனார் லெப்பை என்ற நல்லடியானும் ஆதம்பாவா என்பாரும் என்னை சளைக்க விடாது ஊக்கம் தந்து வந்தனர். ஒரு நாள் புளியமரத்தின் கீழ் திடீர் கூட்டம் எல்லோரும் வந்திருந்திருந்தனர். "ஐங்காலத் தொழுகையை பாடசாலையில் தொழுது வருகிறேன். பல ஜும்ஆக்களை இழந்து விட்டேன். ஆகவே நான் மாற்றம் பெறப் போகிறேன்" என்று கூறவே ஒரே குரலில் கூடிய **20** பேரும் "வேண்டாம், வேண்டாம் கட்டுவோம் பள்ளியை" என்று சத்தமிடவே வசூலை ஆரம்பித்தேன். அன்றைய தினமே **1650** ரூபா சேர்ந்து விட்டது.*

*கருங்கல் உடைக்கப்பட்டது. செங்கல் சூளை வைக்கப்பட்டு திடும் திடும் என பள்ளி வேலை ஆரம்பமாகியது. சிரமதானம் மூலம் அதிகம் அதிகம் வேலை நடைபெற்றன. முட்டை, பிடி அரிசி, நெல், ஆடு, கோழி, காணிக்கைகள் பிரதி வெள்ளிதோறும் சேகரிக்கப்பட்டன. **1961**ம் ஆண்டு ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் கல்வைக்கப்பட்டது பள்ளிக்கு. கூரை மட்டம் முடியும் தறுவாயில் பேரதிர்ச்சி மக்களை அதிரச் செய்தது. அதுதான் புத்தளத்திற்கு கல்வியதிகாரியாக எனக்கு பதவி உயர்வு வந்தது. பதவி உயர்வு, இடமாற்றம். அங்கு சென்றும் பள்ளி கட்டும் பணியைத் தொடர்ந்தேன். மன்னார் வேப்பங்குளம் அஹ்மத் லெப்பையும் நிதி சேர்த்து தந்தார். இறைவனருளால் புகழ்பூத்த புளியமரத்தின் கீழ் ஆரம்பித்த பள்ளி வேலை **114,700** ரூபா செலவில் ஒரு அழகிய பள்ளிவாசலாக முற்றுப் பெற்றது.*[52]

**1962** ஒக்டோபர் முதலாம் திகதி பழீல் மௌலானாவின் வாழ்க்கைப் பாதையில் இன்னுமோர் ஏற்றப்படி. ஆம், அவர் புத்தளம் வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெறுகிறார். போட்டி, பொறாமை, அரசியல் பழிவாங்கல்களுக்குப் பின்னரும் அவரது வளர்ச்சியை எவராலும் தடுக்க முடியவில்லை. அவரது உளத் தூய்மையான முயற்சிகளுக்கு அல்லாஹ்வின் துணை அவருக்குப் பக்கபலமாக இருந்தது என்று சொல்வதைத் தவிர வேறு காரணங்களை இதற்குக் கற்பிக்க முடியாது.

**1963**ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **22**ஆம் திகதி வெள்ளிக் கிழமை இகள கொட்டியாவெவ முகையதீன் ஜும்ஆ மஸ்ஜித் வக்பு

---

52. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயரிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு முதல் குத்பாவை பழீல் மௌலானாவே நிகழ்த்த இறைவன் அருள்புரிந்தான். சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயீல், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நெய்னா மரைக்கார், எம்.எச்.எம். ஸாலிஹ் மரைக்கார், புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மஹ்மூத் ஹஸரத் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு புதிய பள்ளிவாசலைத் திறந்து வைத்தனர்.


முன்னைநாள் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில்

கொட்டியாவெவ கிராமத்தினை பழீல் மௌலானா மிகவும் நேசித்தார். அவ் ஆத்மார்த்தமான உறவு அவரது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. அவ்வூர் மக்களும் மௌலானாவுடன் தனிப்பட்ட முறையிலும் கிராம ரீதி யிலும் உறவுகளைப் பேணி வந்தனர். 1986இல் முஹைதீன் ஜும்மா பள்ளி யின் 21ஆம் ஆண்டு நிறைவு தினத் தில் பழீல் மௌலானா அவர்களின் இன்னுமொரு பெரு முயற்சியினால் அமைக்கப்பட்ட நூராணியா மத்ரஸா பழீல் மௌலானாவின் மருமகனும் மருதமுனை லஜ்னத்துல் உலமாவின் அப்போதைய தலைவரும் மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளி வாசலின் பேஷ் இமாமா கவும் பணியாற்றிய மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்க்கி) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அஷ்ஷெய்க் அஹ்மதுல் அன்ஸார் மௌலானா (நளீமி) ஜும்ஆ தொழுகையை நடத்தி வைத்தார். மருதமுனை வர்த்தகர்கள் அன்பளிப்பு செய்த அல்குர்ஆன் பிரதிகள், தொழுகை வழிகாட்டி நூல்கள் 75 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசலினால் அன்பளிப்பு செய்யப்பட்ட தொழுகை விரிப்புகள், அல்குர்ஆன் பிரதிகள், 'அஸா' (கோல்) என்பன பள்ளிவாசலுக்கு வக்பு செய்யப்பட்டன.

அனுராதபுரம் கொட்டியாவெவ கிராமத்தில் பழீல் மௌலானா ஆற்றிய சேவைகள் சாதாரணமாக மதிப்பிடப்பட முடியாதவை. ஒரு கிராமப் புரள்வையே அவர் அங்கு நடத்தியிருக்கிறார். மார்க்கத்தைப் பின்பற்றுதலில் தொலைவில் நின்ற, கரடுமுரடான வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொட்டியாவெவ முஹைறதீன் ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் பழீல் மௌலானா குடும்பத்தினர் *(12.04.2004)*



கொட்டியாவெவ முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர். எம்.ஏ. அஸீஸ் அவர்களினால் அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகின்றார். அருகில் ஏ.எம். முஸ்தபா (அதிபர்), நஸ்ருல் இஸ்லாம் (திடீர் மரண விசாரணை அதிகாரி), ஜின்னா மௌலானா (ஆசிரியர்) *(13.04.2004)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹம்து லில்லாஹ்! அல்லாஹு அக்பர்!

அல்குர்ஆன் அருமறையை
அகிலத்துக்களித்த
அளவிலா அன்பும் நிகரிலா அருளும் நிறைந்த
அல்லாஹ்வின் திருநாமம் போற்றி!

அநுராதபுர மாவட்டம் இகள கொட்டியாகலையில்
( நூருனிய்யாபுரம் )
அழகுற அமைந்திருக்கும் கலாபீடம்

# நூருனிய்யா குர்ஆன் மத்ரஸா
# கட்டடத்திறப்பு விழா

காலம்: ஹிஜ்ரி 1407 றபீஉல் ஆகிர் 09 ( 12. 12. 86 )
வெள்ளிக்கிழமை மு. ப. 10. 30 மணி

**ஆலிஜனாப் A. M. ஹஸன் மௌலவி (ஷர்கிய்யி)**
([illegible] இமாம் மஸ்ஜிதுல் கபீர் - மருதமுனை
[illegible] மருதமுனை)
அவர்கள் திறந்து வைத்து

எமது நாயகத்தில் அமைந்துள்ள முஹையத்தீன் [illegible] 11ம் ஆண்டு நிறைவு [illegible] பிரசங்கத்தையும் [illegible] நடைபெறும் [illegible] மஜ்லிஸ், [illegible] ஜமாஅத், [illegible] மஜ்லிஸ், முஹையத்தீன் (ரழி) 11ம் மௌலூத், ரதீப்மஜ்லிஸ், கந்தூரி வைபவங்களிலும் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பார்கள்

மத்ரஸா திறப்பு விழாவிற்கும், 14. 12. 86 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மௌலூத், கந்தூரி வைபவத்திற்கும் வருகைதந்து சிறப்பிக்குமாறு சகல முஸ்லிம் சகோதரர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடிநிற்கும்

மஸ்ஜித் டிரஸ்டி சபையினரும் ஜமாஅத்தினரும்

அழைப்பாளர் I. M. S. M. பழீல் மௌலானா J. P.
மஸ்ஜித் [illegible], ஆயுட்கால போஷகர்.
கொட்டியாகலை அல் மதரஸதுந் [illegible]
நூருனியா [illegible].

1986. 12. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களைக் கொண்ட மக்கள் மத்தியில் பாடசாலை அபிவிருத்தி, மார்க்க விழிப்புணர்வு, பள்ளிவாசல் நிர்மாணம், பாதை அபிவிருத்தி, போக்குவரத்து வசதி, தபால் அலுவலகம் என்று ஒரு கிராமத்தின் நிலைமாறுதலுக்கு அவசியமான பிரதான கூறுகளை இரண்டே வருடங்களில் பழீல் மௌலானா அங்கு ஏற்படுத்தியிருக்கிறார் என்பது ஒரு சாமான்யமானவரால் முடியுமான சாதனை அல்ல.

அத்துடன், கரடு முரடான வாழ்க்கைக்குப் பழகியிருந்த ஒரு மக்கள் தொகுதியினரை, அவர்கள் அசாத்தியம் என்று கருதி ஒதுக்கிய ஒரு விடயத்தை சாத்தியமாக்கிக் காட்டிய தீரம், புத்திசாதுர்யம், மைத்திரி போன்ற அரசியல்வாதிகளைப் பயன்படுதிக் கொண்ட சாணக்கியம் என்பவற்றை உற்றுநோக்குகின்றபோது அவரது ஆளுமை கண்டு வியந்து நிற்கத் தோன்றுகிறது.

## குளியாப்பிட்டிய

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள குளியாப் பிட்டிய வட்டாரத்தில் கடமையாற்றியபோது கொடை வள்ளல் நளீம் ஹாஜியாரின் தொடர்பைப் பயன்படுத்தி நிதி உதவி பெற்று மடிகே அனுக்கண கிராமத்தில் 'ரஹ்மானியா' எனும் பெயரில் அல்குர்ஆன் மத்ரஸா ஒன்றை அமைத்தார். குருநாகல்-கண்டி வீதியில் குருநாகல் நகரை அண்மித்துள்ள தெலியாகொன்ன மஸ்ஜித் புனரமைப்பிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கேகாலையில் பணியாற்றிய பொழுது கேகாலை நகர ஜும்மா பள்ளியின் கட்டிட புனரமைப்புப் பணிகளில் தனது பங்களிப்பைச் செய்தார்.

## சன்மார்க்கப் பேச்சாளர் பழீல் மௌலானா

சன்மார்க்கப் பற்றாளரான பழீல் மௌலானா, தான் பெற்றிருந்த மார்க்க அறிவை தனது சமூகத்தினரிடையே எடுத்துச் சொல்வதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை முறையான சுன்னாவை மக்களிடையே கொண்டு செல்வ தற்கு மீலாத் மேடைகளை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். அக்கால மீலாத் மேடைகள் முஸ்லிம் சமூகத்தை விழிப்புணர்வூட்டவும் இஸ்லாமிய சிந்தனையை பரவலாக்கவும் பெரிதும் பயன்பட்டன. பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது பழீல் மௌலானா கொண்டிருந்த நேசமும் அவருக்கு அல்லாஹ் அருளியிருந்த பேச்சாற்றலும் அவரை நாடறிந்த ஒரு பேச்சாளராக ஆக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (1942-1944) படிக்கும் போதே மீலாத் மேடைகளில் பேச்சாளராக அவர் கலந்து கொண்டார். காலி, கொழும்பு, மாளிகாவத்தை, தெமட்டகொடை, குருநாகல், நாங்கல்ல, கேகாலை, ஹெம்மாதகம, திப்பிட்டிய, மாதம்பை, சிலாபம், வரகாபொல, அனுராதபுரம்-நொச்சியாகம, தள்கஹாவெவ, மதவாச்சி, மன்னார், எருக்கலம்பிட்டி, இக்கிரிக்கொல்லாவை, பலாங்கொட, ரம்பாவ, திருகோணமலை, மூதூர், தோப்பூர், காத்தான்குடி, மருத முனை, நற்பிட்டிமுனை, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், பதுளை, பசறை, கண்டி, கெலிஓய இன்னும் பல இடங்களில் நடை பெற்ற மீலாது மேடைகளில் பேச்சாளராக அவர் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

இவ்வகையில், ஏறத்தாழ நாடு முழுவதும் இச் சன்மார்க்கப் பணிக்காக அவர் பயணித்துள்ளார். இப்படிப் பார்க்கும்போது நாடறிந்த பிரபல மார்க்க அறிஞர்களின் பணிக்கு சற்றும் குறையாத பங்களிப்பை அவர் ஆற்றியுள்ளார் என்பது நோக்கத்தக்கது.

## மீலாத் விழாக்களின் ஏற்பாட்டாளராக பழீல் மௌலானா

அரச சேவையில் ஆசிரியராக, அதிபராக, சுற்று வட்டக் கல்வி அதிகாரியாக பணிபுரிந்த காலமெல்லாம் மீலாத் விழாக்கள், குர்ஆன்-ஹதீஸ் போட்டி நிகழ்ச்சிகள் முதலானவற்றை முன்னின்று ஏற்பாடு செய்தமையானது சமூகம் பற்றி அவர் கொண்டிருந்த பற்று, அகல் விரிவான பார்வை, கூடவே அத்துணை வேலைப்பளுவுக்கும் மத்தியில் சாதிக்கும் திறன் என்பவற்றை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

1945ஆம் ஆண்டு பழீல் மௌலானாவின் ஏற்பாட்டில் முதன் முறையாக மாளிகாவத்தை டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலையில் டாக்டர் ரீ.பி. ஜாயா அவர்களின் தலைமையில் மீலாத் விழா நடை பெற்றது. மௌலானா ஆசிரியராகக் கடமையாற்றிய மூதூர், காத்தான்குடி, மருதமுனை பாடசாலைளிலும், அதிபராகக் கடமை புரிந்த மருதமுனை வீரத்திடல், கொட்டியாவெவ பாடசாலைகளி லும் வருடாந்தம் மீலாத் விழாக்களை சிறப்பாக ஒழுங்கு செய்தார்.

வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பொறுப்பேற்ற பின் வட்டார ரீதியில் புத்தளம், கேகாலை, பொலன்னறுவை, கல்முனை, சம்மாந்துறை முதலிய பிரதேசங்களில் மீலாத் விழாக்களை பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சையாக நடத்தினார். இதன் மூலம் அப்பிரதேசங்களின் இஸ்லாமிய மறுமலர்ச்சிப் பணிகளுக்கு உந்துதல் வழங்கினார். ஏற்படுத்தினார். இவற்றுள் கல்முனை, கேகாலை மீலாது விழாக்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெரு விழாக்களாக அமைந்தன.

**கேகாலை மீலாத் விழா ஏற்பாடுகள் குறித்த பாடசாலை சம்பவத் திரட்டுக் குறிப்புகள் (1972)**


26. 4. 72 Visited the school today and had a discussion with H.m. regarding forth Coming Holy Prophets Birth Day which is to be held on 6.5.72. Todays Present teachers 9/12 Students 153/218 I.m.S. Moulana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய காலப் பகுதியில் பாடசாலை மட்டத்தில் அல்-குர்ஆன், ஹதீஸ் போட்டிகளை முதன் முதலாக நடத்தி மாவட்ட நீதிபதி ஹுஸைன், தென்னிந்திய 'இறைகவி' ஏ.கே. அப்துஸ் ஸமத் ஆகியோரின் சிறப்பு பங்குபற்றுதலுடனும் 'காயிதே மில்லத்' முஹம்மது இஸ்மாயில் தலைமையில் 'மீலாத் எழுச்சி மாநாடு' ஒன்றை ஏற்பாடு செய்தார். இவ்விழா சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாயலத்தில் நடை பெற்றது. இதில் கல்விப் பணிப்பாளர் வன்னியாராச்சி அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

1949இல் கல்முனை நகர மீலாத் ஷரீப் கமிட்டி செயலாளராக மௌலானா பணியாற்றியபோது ஒழுங்கு செய்த மீலாத் விழாவுக்கு எம்.எஸ். காரியப்பர் தலைமை தாங்கியதோடு அதிதிகளாக பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் கௌரவ சலீம்கான் அவர்களும் எஸ்.எப்.டீ. சில்வா அவர்களும் அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களும் பிரதம பேச்சாளராக ரீ.எம். தாவூத் ஷா அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கேகாலை மாவட்டம் மாவனல்லை கிரிங்கதெனிய கிராமத்தில் மௌலானா தலைமையேற்று ஏற்பாடு செய்த மீலாத் விழா சிறப்பான விழாவாக இடம்பெற்றது. நளீம் ஹாஜியாரின் நிதியுதவியுடன் நடை பெற்ற இவ்விழாவில் உயர் நீதிமன்ற நீதியரசர் எம்.எம். அப்துல் காதர் விசேட அதிதியாகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 'அபுல்கலாம்' பழீல் மௌலானா

1962ஆம் ஆண்டு அநுராதபுரம் புதிய பள்ளிவாசல் முன்றலில் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மீலாத் விழாவில் ஹரிச்சந்திர சிங்கள மத்திய மகா வித்தியாலய அதிபரும் மாதம்பை 'அல்கியாதிய்யா' அரபுக் கல்லூரி அதிபர் என்.எல். அபூஸாலிஹ் ஹஸ்ரத் அவர்களும் பழீல் மௌலானாவும் விசேட பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதிப் பேச்சாளரான பழீல் மௌலானா இரவு 7 மணிக்கு ஆரம்பித்து இரவு 9.45க்கு உரையை முடித்தார். மக்கள் அதிகம் திரண்டிருந்த கூட்டம் அது. சபாநாயகர் தமது உரையில் பழீல் மௌலானாவின் பேச்சின் கருத்துக்களையும் மணிப்பிரவாக முறையையும் நன்கு சிலாகித்து அதே மேடையில் வைத்து 'அபுல்கலாம்' (பேச்சின் தந்தை) என்ற பட்டத்தை சூட்டி கௌரவித்தார். இதனை மேடையிலிருந்தஃசமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளித்திருந்த அபூஸாலிஹ் ஹஸ்ரத் அவர்களும் அநுராதபுரத்தின் பிரபல வர்த்தகர் சி.பி. முஹம்மத் அவர்களும் மகிழ்ச்சியுடன் ஆதரிக்க, மக்கள் தக்பீர் முழக்கம் செய்து தங்களின் ஆமோதிப்பை வெளிப் படுத்தினர்.[53]



பழீல் மௌலானாவின் உரைகள் கனதியானவை என்பதை பேராசிரியர் எம்.எஸ். எம். ஜலால்டீன் அவர்கள் பின்வரும் தகவுரை மூலம் உறுதிப்படுத்துகிறார்:

*"அபுல்கலாம் அவர்கள் அழகு தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும் உரையாடும் திறமை கொண்டவர்கள். மீலாத் மேடைகளில், கல்வி மாநாடுகளில், கவியரங்குகளில், சமூக சேவைத் துறைகளில் இவர்கள் ஆற்றியுள்ள சொற்பொழிவுகளின் சாராம் சங்களை தொகுத்தாலே மிகவும் பெறுமதியான, சிறப்புமிக்க நூலொன்றை ஆக்கிவிடலாம்."*[54]

---

53. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயரிக் குறிப்புகள், 1976

54. ஜலால்டீன், எம்.எஸ்.எம். 'அணிந்துரை', அல்குர்ஆன் ஞானமணிக் கோவை, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி நிகழ்ச்சிகள்

பழீல் மௌலானா தனது பணிகளில் பெண்கள் விடயத்திலும் அக்கறை கொண்டிருந்தார். 1958ஆம் ஆண்டு பேராசிரியர் எம்.எம். உவைஸ் அவர்களின் அனுசரணையோடு இலங்கை வானொலியில் 'வீர முஸ்லிம் மங்கையர்' எனும் 8 தொடர் வானொலி நிகழ்ச்சிகளை பழீல் மௌலானா வழங்கியமை இதற்குச் சான்றாக அமைகின்றது. இதேபோல் மௌலானா ரூமியின் தத்துவக்களஞ்சியமான 'கிதாபுல் மஸ்னவி' குறித்து இலங்கை வானொலியில் தொடர் விரிவுரை நிகழ்த்தினார். [55]

## எழுத்தாளர், இலக்கியவாதி பழீல் மௌலானா

பழீல் மௌலானா சமூக, அரசியல் செயற்பாட்டாளராக மட்டுமன்றி, ஓர் அறிஞராக மதிப்பிடத்தக்க அறிவாளுமையைக் கொண்டிருந்தார். தனது வேலைப்பளுவுக்கு மத்தியில் கிடைக்கும் ஓய்வு நேரத்தை அல்குர்ஆனிய ஆய்விலும் சன்மார்க்கத் தேடலிலும் செலவிட்டார். அவர் தேடித் தொகுத்த ஆக்கங்கள் கோவைப்படுத்தப்பட்டு 'அல்குர்ஆன் ஞானமணி கோவை' எனும் தலைப்பில் ஒரு நூலாக 1995.12.31 ஆம் திகதி 'முனைப்பு' அச்சகத்தினால் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு விழாவை மருதமுனை 'ஈஸ்டர்ன் யூத்' விளையாட்டுக் கழகத்தின் கலாசாரப் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது.

இந்நூலைத் தவிர பல கவிதைகள், கட்டுரைகள் மற்றும் வரலாற்றுக் குறிப்புக்களை அவர் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதி வந்தார். அச்சு வாகனம் ஏறாத அவரது பின்வரும் ஆக்கங்கள் அவரது அறிவாளுமைக்கும் சான்றுபகர்கின்றன:

1) அல்குர்ஆன் அரும்பத விளக்கம் (2700 சொற்கள் அரபு, தமிழ், ஆங்கிலம்)

2) ஆசாரக் கோவைக்கான விளக்கவுரை- கவிதை வடிவம்

3) அஸ்மாஉல் ஹுஸ்னா (திருநாமங்களின் மொழியாக்கம்)

4) பெருமானார் பிறந்தனரே- 40 கவிதைகள்

---

55. இஸ்மாயீல், வீ.எம்., 'இலக்கியப் பங்களிப்பு', அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1997, பக்: 308



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*5) விஞ்ஞானமும் அல்குர்ஆனும்- தொகுப்பு*
*6) மருதமுனை மான்மியம்-வரலாற்று கையேடு*
*7) எனது டயறிக் குறிப்புகள்- தன் வரலாறு* (Biography)
*8) அல் குர்ஆன் ஞானமணிக் கோவை பாகம்- 2*



**09.06.1996** இல் மருதமுனை மக்கள் மண்டபத்தில் இடம்பெற்ற 'அல்குர்ஆன் ஞானமணிக் கோவை' நூல் வெளியீட்டு விழாவில் ஹாஜி உஸ்மான் சாஹிப் அவர்கள் நூலாய்வுரை நிகழ்த்துகிறார்.

## இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள்

அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளுக்கான காலாக அமைந்தது **02.07.1966**இல் மருதமுனை அல்மனார் மகா வித்தியாலய ஆசிரியர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு பேராசிரியர் அல்லாமா எம்.எம். உவைஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழா' என்பது வரலாறாகும்.[56] இவ் விழாவினை செய்யித் ஹஸன் மௌலானா ஒருங்கிணைத்தார். அவ் விழாவில் அமைக்கப்பட்ட 'சின்னாலிமப்பா அரங்கில்' இடம்பெற்ற

*56. மணவை முஸ்தபா, 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் பெரு விழாக்கள்', இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு சிறப்பிதழ், கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு, 2002, பக். 5*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் நாள் அமர்வில் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை உட்பட பலர் சிறப்புரையாற்றினர். அங்கு 'அறிவுக் கருவூலம் ஆசாரக் கோவை' எனும் தலைப்பில் பழீல் மௌலானா நிகழ்த்திய ஆய்வுரை சிறப்புக்குரியது. இக்கட்டுரையானது **1968** இல் அரசு வெளியீட்டார்களால் வெளியிடப்பட்ட 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள்' எனும் நூலில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

**1973**ஆம் ஆண்டு மே மாதம் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் நடைபெற்ற முதலாவது அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பழீல் மௌலானா கலந்து கொண்டார். மூன்றாவது அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு **1978**ஆம் ஆண்டு காயல் பட்டணத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் கலந்து கொண்ட மருதமுனை மைந்தர்களான புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களும் பழீல் மௌலானாவும் கவியரங்கில் கவிதைகள் பாடினர். விழாவின் ஒரு பகுதியாக இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்விற்கும் பழீல் மௌலானா தலைமை தாங்கினார். நிகழ்வில் அன்னார் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். [57]

பழீல் மௌலானாவின் தமிழறிவினையும் இலக்கியப் புலமையையும் முதுபெரும் கல்விமான் அருட் சகோதரர் முனைவர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ அவர்கள் பின்வருமாறு வியந்துரைகிறார்:

*"பழீல் மௌலானா என்ற தமிழ் பேரறிஞர் மறைந்தார் என்ற செய்தி அவருடைய வாழ்வுப்பதியாகிய மருதமுனைக்கு மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னார் பாரம்பரியத் தாலும், செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர். நூல்கள் பல எழுதாவிட்டாலும் ஏராளம் ஏராளம் கவிதைகளை எழுதிவிட்டுச் சென்றிருக்கின்றார். இவை சேகரித்து நூலாக்கப்பெற வேண்டியவை.*

*...பழீல் மௌலானா நாவில் தமிழ்க் கவிதை அருவியாக ஓடும். எனது துறவற வாழ்வின் **50** வருட நிறைவு குறித்து அவர் எழுதிய "வியப்பு" என்ற கவிதை வியப்பு என்ற சொல்லின் ஆழத்தைப் புரிய வைத்தது."* [58]

---

57. ஜின்னா ஷரிபுத்தீன் எம்.எஸ், நேர்காணல், *02.06.2020*

58. மத்தியூ எஸ்.ஏ.ஐ. 'தமிழறிஞர் பழீல் மௌலானா பாரம்பரியத்தினாலும் செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர்', *தினகரன், 28.02.2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமுனை பள்ளிவாசல்கள் அபிவிருத்தியில்

கல்விப் பணியில் ஒருபுறம் தனது கடமைகளை நிறைவேற்றிய அதேவேளை, மருதமுனையின் சன்மார்க்க சேவையிலும் பொதுப் பணியிலும் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். அவரது பணிகளைக் கூர்ந்து அவதானிக்கையில், அவர் செல்லுமிடங்களிலெல்லாம் பள்ளிவாசல் நிர்மாணம், புனரமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டிருப்பதைக் காண முடியும். பள்ளிவாசல்களின் ஸ்திரப் பாடானது மக்களின் சன்மார்க்க வாழ்வொழுங்கிற்கு மட்டுமன்றி, முழு சமூகத்தினதும் ஸ்திரப்பாட்டுக்கும் அது மத்திய தலமாக அமைவது அவசியப்படுகின்றது என்ற அவரது புரிதலே இம்முனைப்புக்குக் காரணமாகும்.

1976ஆம் ஆண்டு அல்ஹாஜ் ஏ.பி.எம். மரைக்காயர் தலைமையில் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசல் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. பழீல் மௌலானா புனர்நிர்மாணக் குழுவின் பொருளாளராக இருந்து நிதியீட்டுவதிலும் புனர்நிர்மாணப் பணியின் பிரச்சாரகராகவும் ஆலோசகராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். மேலும்



**மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசல் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்ப நிகழ்வில் பழீல் மௌலானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னா குடி மரைக்காயராகவும் பள்ளிவாசல் டிரஸ்டியாகவும் நம்பிக்கையாளர் சபையின் செயலாளராகவும் கடமை புரிந்தார். மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவராக எச்.எல். ஜமால்டீன் (எஸ்.எஸ்.பி) பணியாற்றிய காலப்பகுதியில் நம்பிக்கையாளர் சபையில் பழீல் மௌலானா அவர்கள் சமர்ப்பித்த முன்மொழிவின் பிரகாரம் பிரதான வீதியில் பள்ளிவாசல் நுழைவாயில் அமைக்கப்பட்டு முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. நுழைவாயிலுக்கு 'அருளின் கதவு' என பொருள்படும் விதமாக 'பாபுர் ரஹ்மா'[59] எனப் பெயரிட்டவரும் பழீல் மௌலானாவே ஆவார்.

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்மா பள்ளிவாசல் புனரமைப்புக் குழு உப தலைவராகப் பணியாற்றிய மௌலானா அவர்களே 'மஸ்ஜிதுந் நூர்' எனும் பெயரையும் பிரேரித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.



பாண்டிருப்பு அல்மினன் பள்ளிவாசலின் அழகிய தோற்றம்

மஸ்ஜிதுல் மினன் உருவாக்கத்தின் காரணகர்த்தா பழீல் மௌலானா ஆவார். பள்ளிவாசல் நிர்வாகத்தில் காத்திரமான பங்களிப்புச் செய்த அவர், பள்ளிவாசலின் தலைவராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய தோடு ஆயுட்கால போஷகராகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். மஸ்ஜிதுல் மினனின் முதலாவது ஹிப்ழு வகுப்பை மௌலானாவே ஆரம்பித்து வைத்தார். இம்மத்ரஸாவிலிருந்து முதல் ஹாபிழாக நஜ்முத்தீன் ஹாபிஸ் பட்டம் பெற்றார்.

அல்-மினன் உருவாக்கத்தில் பழீல் மௌலானாவின்

59. 'பாபுர் ரஹ்மா' நுழைவாயில் திறப்பு விழா அழைப்பிதழ், 19.01.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாட்டினை பின்வரும் சம்பவம் உணர்த்தி நிற்கின்றது:

"பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவில் பிறந்த நான், அல்-மினன் பள்ளி வாசல் உருவாக்கத்தில் பழீல் மௌலானாவின் பங்களிப்பை சிறு வயதி லிருந்தே அவதானித்து வந்துள்ளேன். 1985இல் ஆரம்பிக்கப்பட்ட அல்-மினன் பள்ளிவாசல் ஒரு தகரக் கொட்டிலில் இயங்கியது. அக்காலத்தில் பள்ளிவாசலில் பாங்கு சொல்வதற்கோ, இகாமத் சொல்வதற்கோ நேரத்தை அவதானிக்க சுவர்க் கடிகாரம் இருக்க வில்லை. பள்ளிவாசலுக்கு வரும் நபர்களின் கைக்கடிகாரத்தை அவதானித்தே பள்ளிவாசல் கடமைகள் மேற்கொள்ளப்படும். ஒரு நாள் இதனை அவதானித்த பழீல் மௌலானா, அஸர் தொழுகை முடிவடைந்தவுடன் அவரின் தலைமையில் பள்ளிவாசல் இமாம், எஸ்.பீ. முஹீதீன் முஅத்தினார், நான் உட்பட பலர் இணைந்து பள்ளி வாசலைச் சுற்றியுள்ள பல வீடுகளுக்கு சென்று மணிக்கூட்டின் தேவையை விளக்கி பணம் வசூலித்து அன்றே மஃரிப் தொழுகைக்காக சுவர்க்கடிகாரம் ஒன்றை கடையில் வாங்கி பொருத்திய செயலை நான் சிறுவனாக இருந்தபோது அவதானித்தேன்."[60]

## ஷர்க்கிய்யா நிர்வாக செயலாளராக (1981-1984)

36 வருட கால கல்விப் பணியாற்றியிருந்த பழீல் மௌலானா ஓய்வு பெற்றவுடன் வீட்டோடு ஒன்றியிராது, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி யின் நிர்வாக செயலாளராக தொடர்ந்து சன்மார்க்கப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அங்கு பணியாற்றிய காலப் பகுதியில் கல்லூரியின் மாணவர் களுக்கு பாடங்கள் கற்பித்ததோடு, கல்லூரிக்கு மாணவர் விடுதி, வாசிகசாலை மற்றும் வகுப்பறை என்பவற்றை உள்ளடக்கிய மாடிக் கட்டிடங்கள் இரண்டைப் பெற்றுக் கொடுப்பதில் தனது பங்கை சிறப்பாக ஆற்றினார். தனது கல்வித்துறை அனுபவத்தினூடாக மத்ரஸா கற்பித்தல் முறைகளில் பல புதிய நுட்பங்களை அறிமுகப் படுத்தினார். அவரது முயற்சியின் விளைவாக ஷர்கிய்யா மாணவர்கள் ஐவருக்கு எகிப்து அல்அஸ்ஹர் பல்கலைக்கழக பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு என்பவற்றைத் தொடர்வதற்கான புலமைப் பரிசில்கள் கிடைத்தன.

---

60. வஸீல், ஏ.ஜே.எல்., நேர்காணல், 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவின் மாணவர் அஷ்ஷெய்க் ஏ.ஆர். செயினு லாப்தீன் (ஷர்கியி) அவர்கள் தனது மாணவப் பருவ அனுபவங்ளை பின்வருமாறு பகிர்ந்து கொள்கிறார்:

*"பழீல் மௌலானா பின்னேர வகுப்புக்களை எங்களுக்கு எடுப்பார். அவரின் ஆங்கில வகுப்புக்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டும் எனும் பேரார்வத்தை மாணவர்கள் மத்தியில் தூண்டிவிட்டது. அவரிடம் ஆங்கிலம் கற்ற பலர் தற்போது ஆங்கில ஆசிரியர்களாக வும் கடமையாற்றுகின்றனர். தஹஜ்ஜத் தொழுகைக்கு எழுந்திருப்ப தும் எங்களை எழுப்பிவிடுவதும் இன்றும் என் மனக்கண்முன் இருக்கின்றன. கலாநிதி ஏ.எல். அஷ்ரப் (ஷர்க்கி), கலாநிதி மஹ்ரூப் (ஷர்க்கி) ஆகியோரை அவரது பெருமைமிகு மாணவர்களாகக் குறிப்பிடலாம். மொத்தத்தில் அவர் ஷர்க்கிய்யாவின் சொத்தாகக் கருதப்பட்டார்."*[61]

## அக்கரைப்பற்று மன்பஉல் ஹைறாத் (1986-1993)

ஷர்க்கிய்யாவில் பணியாற்றிய பின் பழீல் மௌலானா அக்கரைப் பற்று மன்பஉல் ஹைறாத் அரபுக் கல்லூரியின் நிருவாக செயலாள ராகப் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் கல்லூரிக்கு பல பௌதிக அபிவிருத்தி திட்டங்களை பெற்றுக்கொடுப்பதில் வெற்றி கண்டார். இக் காலத்திப் பகுதியில் மாணவர் விடுதி, 'கிங் பைஸல் இஸ்லாமிய நூலகம்', கல்லூரி நிருவாக செயலகம் என்பவற்றை உள்ளடக்கிய கட்டடத் தொகுதி முதலானவை கிடைக்கப் பெற்றன.

தனது நண்பரும் அமைச்சருமான முன்னாள் சபாநாயகர் கௌரவ எம்.எச். முஹம்மத் தலைமையில் முதலாவது பட்டமளிப்பு விழா நடை பெற ஏற்பாடுகளை மௌலானா மேற்கொண்டார். இக் காலத்தில் கல்லூரியிலிருந்து இரண்டு மாணவர்கள் ஈராக்கில் அமைந்துள்ள சத்தாம் ஹுஸைன் பல்கலைக்கழகத்துக்கு பட்டப் படிப்பைத் தொடர் வதற்கான புலமைப் பரிசிலை இவரது அரும் முயற்சியால் பெற்றுக் கொண்டனர். இப்பணிகளை அங்கு அவர் நிறைவேற்ற கல்லூரியின் ஆளுனர் சபையின் தலைவராகக் கடமையாற்றிய மௌலவி எஸ்.எல்.எம். ஹனீபா (மதனி) அவர்கள் பழீல் மௌலானாவிற்கு பெரிதும் துணை நின்றார். இச்சேவைக் காலப் பகுதியில் வீடமைப்பு நிர்மாணத்துறை

61. செயினுலாப்தீன், ஏ.ஆர்., நேர்காணல், 29.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், செனட்டர் எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா (மாகாண சபை உறுப்பினர்) முதலானோர் கல்லூரியை பார்வையிட்டனர்.

## முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த யோசனைகள்

*1956*ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள், குறைகள், யோசனைகள் என்பன தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா உட்பட்ட நிறுவனங்களுக்கு அவர் வரைந்த கடிதங்கள் தற்போதும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ. முபாரக் (மதனி) அவர்களினால் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. [62]

## வஹ்ததுல் வுஜூத் எதிர்ப்பு

அப்துல்லாஹ் பயில்வான் என்பவரால் பிரசாரப்படுத்தப்பட்ட 'வஹ்ததுல் வுஜூத்' எனும் இஸ்லாமிய அகீதாவிலிருந்து வழிபிறழ்ந்த அத்வைதக் கொள்கைக்கெதிராக உலமாக்களுடன் இணைந்து கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை பழீல் மௌலானா உட்பட மருதமுனையின் இஸ்லாமிய செயற்பாட்டாளர்கள் எடுத்திருந் தனர். இவ்விவகாரத்தில் மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்க்கி) அவர்களின் பங்களிப்பு ஈண்டு குறிப்பிடத்தக்கது. அப்துல்லாஹ் பயில்வானின் பின்வரும் கூற்றின் மூலம் இதனை உணரலாம்.

***"...Islam is not the private property of people like M.I.M. Salahudeen of Maruthamunai, Moulavi A. Abu Ubaidah, I.M.S.M. Faleel Moulana, Natpittimunai Hafis and Bisrul Haafi of Akkaraipattu who have all strayed from the straight path, Islam, the Quran and hadith are the common property of the people of the world...."*** [63]

## 'இறைநேசச் செல்வர்' பழீல் மௌலானா

பழீல் மௌலானா அவர்களின் சன்மார்க்க சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக *09.09.2001* தினத்தன்று 'சமாதானம்'

---

*62. முபாரக், எம்.எம்.ஏ., நேர்காணல், 2019*

*63. Abdulla, M.S.M. Holy Quran's Judgment, Part 2, page: 176*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை ஆசிரியர் ஈழபாரதி மருதூர் வாணர் அவர்களின் ஏற்பாட்டில் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். பதுறுதீன் அவர்களால் 'இறைநேசச் செல்வர்' (ஹபீபுல்லாஹ்) எனும் சிறப்புப் பட்டமளித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் அதிபர் ஏ.எம். மஜீத் அவர்கள் பாராட்டு மடல் வாசித்தளித்தார்.



### மருதமுனையின் பொது சன சமூக சேவா இயக்கங்களின் பிதா மகன் பழீல் மௌலானா

பழீல் மௌலானா பல்வேறு பொதுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒரு சமூக சேவகர். தான் பணியாற்றிய பிரதேசங்களிலும், குறிப்பாக மருதமுனையில் பல்வேறு மன்றங்களை அமைத்து சமூக சேவையாற்றினார். பல்வேறு சபைகளில் அங்கத்தவராகவும் நிருவாகப் பதவிகளிலும், ஆலோசகராகவும் இருந்து பணியாற்றினார்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரசியல் சமூக பொருளாதார எழுச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணி இயங்கியது. பழீல் மௌலானா அவ் இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர் பேரவையினால் ஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட பல்வேறு தலைமைத்துவப் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸிடம் நேரடியாகப் பயிற்சி பெற்றிருந்தார்.

மருதமுனை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் (R.D.S.) இன் தலைவராக 1957ஆம் ஆண்டு பொறுப்பேற்று அவரது முயற்சியால் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. பிற்காலத்தில் அக்கட்டிடம் பாடசாலையாக, மருந்தகமாக, சிசு பராமரிப்பு நிலையமாக பின்னர் வாசிகசாலையாகவும் பயன்படுத்தப்பட்டது. செயலாளராக ரசீத் மரைக்காயரும் பொருளாளராக ஈ.எல். அபூபக்கர் ஹாஜியார் அவர்களும் இப்பணிகளை சிறப்பாக முன்னெடுக்க துணை நின்றனர்.



கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவராக எம்.எம். இஸ்மாயீல் ஆசிரியர் தெரிவுசெய்யப்பட்ட நிகழ்வில் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா கௌரவிக்கப்பட்ட போது...

## முதலாவது வாசிகசாலை

மருதமுனையின் முதலாவது வாசிகசாலை 1949ஆம் ஆண்டு எம்.எம். இப்றாஹீம் ஹாஜியார், கே.எல்.எச். முஹம்மத் டிரஸ்டி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானா ஆகியோரின் முயற்சியினால் மருதமுனை பிரதான வீதியில் அமைந்திருந்த ஐதுரூஸ் மௌலானாவின் கடைத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை செய்யது அப்துல் காதர் மௌலானா (பாக்கவி) அவர்கள் திறந்து வைத்தார்.[64]

1957ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பின் வெள்ள நிவாரண நஷ்டஈட்டு மதிப்பீட்டு அதிகாரியாக பழீல் மௌலானா அரசினால் நியமிக்கப்பட்டார். இதன் ஊடாக பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதில் மும்முரமாகச் செயற்பட்டார். 1978ஆம் ஆண்டு வீசிய புயலினால் மருதமுனை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன்போது தனது வெளியூர் தொடர்பு களைப் பயன்படுத்தி மருதமுனை மக்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

அம்பாறை மாவட்ட கிராமங்களை ஒருங்கிணைத்த 'ஹிஜ்ரா கவுன்சில்' இன் நிருவாக அங்கத்தவராக, மருதமுனை ஜம்இய்யத்துல் உலமாவின் ஆலோசகராக செயற்பட்ட பழீல் மௌலானா, மருதமுனை ஷம்ஸ் ம.க, அல்ஹம்றா வித்தியாலயம், அல்-மினன் வித்தியாலயம் ஆகிய பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் அங்கத்தவராகவும் பணிபுரிந்தார். மருதமுனை சமாதான சபை, மருதமுனை பிரஜைகள் குழு அங்கத்தவராகவும் சமாதான நீதவானாகவும் செயற் பட்ட பழீல் மௌலானா மருதமுனையில் எழுந்த சமூகப் பிரச்சினைகள், தனிப் பட்ட குடும்பத் தகராறுகளை தீர்த்து வைப்பதில் முன்னின்றார்.

மருதமுனையின் பொது சமூக வேலைத் திட்டங்களில் பழீல் மௌலானாவின் பங்களிப்பினை முன்னாள் வலயக் கல்விப் பணிப் பாளர் எம்.எச். காதர் இப்றாஹீம் அவர்கள், *"புதுமைகளையும் புகழையும் மருதமண் காண வேண்டுமென அவாவிய பழீல் மௌலானா மருத முனையின் பொது சன சமூக சேவா இயக்கங்களின் பிதா மகன்"*[65] என சிலாகித்துக் குறிப்பிடுகின்றார்.

## 'சமூக ஜோதி' பழீல் மௌலானா

பழீல் மௌலானாவின் சமூக, பொதுப் பணிகளை கௌரவிக்கும் வகையில் எம்.ரீ. ராஜா அவர்களை தலைவராகவும் 'ஈழக்குயில்' இத்ரீஸ்

---

64. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., 'மருதமுனை வரலாறு', எழுச்சிக் கதிர், 2000
65. காதர் இப்றாஹீம் எம்.எச்., 'அன்பாளர்களின் மனம் ஆதங்கம் அடைய ஆசி வழங்கி அருகூட்டும் மழைமனத்தான் அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்கள்', அபுல்கலாம்' ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா வாழ்வும் பணியும், 2021, பக். 153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை செயலாளராகவும் கொண்டியங்கிய அந்-நுஸ்ரத் அமைப்பின் ஏற்பாட்டில் *18.01.2004*ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.எம் முஸ்தபா (மயோன்) அவர்களால் பொன்னாடை போர்த்தி, 'சமூக ஜோதி' எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



## 'சமூக மாமணி' பழீல் மௌலானா

பழீல் மௌலானாவின் சேவை நலனைப் பாராட்டி கௌரவிக்கும் இன்னொரு நிகழ்வு அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணியின் அம்பாரை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் *18.11.2006*ஆம் திகதி அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய அதாஉல்லா அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் அல்-ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் ஹாஜியார் அவர்களால் 'சமூக மாமணி' பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி பழீல் மௌலானா கௌரவிக்கப்பட்டார்.

## முடிவுரை

பழீல் மௌலானாவின் குடும்பப் பின்புலம் சிறுவயது முதல் அவரது ஆன்மிக விருத்தியில் மிகுந்த பங்களிப்புச் செய்திருக்கின்றது. பிற்காலத்தில் அவர் சன்மார்க்க பிரச்சாரகராகவும் சமூக சேவையாளராகவும் திகழ அவரது தந்தையினதும் சகோதரர்களதும் ஆளுமைகள் ஆழ்ந்த செல்வாக்கை அவரில் செலுத்தியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவின் ஆங்கிலப் புலமையும் அரபு மொழிப் பரிச்சயமும் ஒரு கற்றறிந்த ஆலிமை ஒத்ததான சமய பிரச்சாரகராக ஆக்கியிருக்கின்றது என்பதை நாம் இலகுவாக கிரகித்துக் கொள்ளலாம்.

தேசிய மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் அவருக்கிருந்த தொடர்புகள் அவரது செயற்திட்டங்களை இன்னுமொரு படிநிலைக்கு கொண்டு சென்றிருக்கின்றன. பழீல் மௌலானாவின் பிரதான வகிபாகம் கல்வி முன்னேற்றம் என இருந்த போதும் தனது மாணவர் களையும் தான் பணியாற்றுகின்ற கிராம மக்களையும் இறை நேசத்தின்பால் அழைத்துச் செல்கின்ற ஓர் அழைப்பாளராகவும் ஒருசேர அவர் இருந்திருக்கின்றார். தான் சார்ந்த சமூகத்தையும் மக்களையும் நேசிக்கின்ற ஒரு மனிதனால் மட்டுமே இவ்வாறான தன்னலமற்ற சேவைகளை ஆற்ற முடியும் என்பதற்கு பழீல் மௌலானா ஒரு சரித்திரச் சான்றாகத் திகழ்கின்றார்.



பழீல் மௌலானாவினால் எழுதப்பட்ட அரபுத் தமிழ் குறிப்பொன்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழீல் மௌலானாவின் அரசியல் சிந்தனையும் போராட்டமும் ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை

றுடானி ஸாஹிர்
Attorney -at-Law

## அறிமுகம்

இவ் ஆக்கமானது பழீல் மௌலானாவின் அரசியல் சிந்தனை மற்றும் அவர் பங்கேற்ற அரசியல் போராட்டங்கள் குறித்து ஆராய் கின்றது. அவர் தனது வாழ்வில் எதிர்கொண்ட சம்பவங்கள் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் அவரது டயறிக் குறிப்புகளிலிருந்து பெறப்பட்ட ஆதாரக் குறிப்புகளும் இவ் ஆய்வுக்கு வலுச்சேர்க்க பெரிதும் உதவியுள்ளன. பழீல் மௌலானாவின் இளமைக் காலத்தில் தேசிய ரீதியிலும் சர்வதேச முஸ்லிம் உலகிலும் நிலவிய அரசியல் மாற்றங்கள் அவரது அரசியல் செல்நெறியில் தாக்கம் விளைவித்திருக் கின்றன. கூடவே, அவரது குடும்பப் பின்புலம் அவருக்கு தேசிய மட்டத்தில் அரசியல் தலைவர்களுடனும் அரசியல் இயக்கங்களுடனுமான உறவுகளை பெற்றுக் கொடுத்திருந்தது. மட்டுமன்றி, அவரது கல்வி, சமூக, சமய சேவைகளை இன்னொரு கட்டத்திற்குக் கொண்டு செல்வதில் அவரது பின்புலம் பக்கபலமாக அமைந்தது என்பதை அவரது முழு வாழ்க்கை வரலாறையும் கற்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## குடும்பப் பின்புலம்

பழீல் மௌலானாவின் தந்தை செய்யித் ஐதுரூஸ் மௌலானா (பாகவி) தேசிய மட்டத்தில் செல்வாக்கான ஆன்மிகத் தலைவராக அக்காலத்தில் விளங்கினார். அக்கால தேசியத் தலைவர்களுடன் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய உறவை அவர் கொண்டிருந்தார். தேசிய அரசியலிலும் சமூகப் புனரமைப்பிலும் ஆர்வத்துடன் அவர் கருமமாற்றினார். உள்ளூரில் பழீல் மௌலானாவின் தமையனார் 'மத்ரஸா மௌலானா' பெரிய கல்லாறு, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதான கரைவாகு- வடக்கு கிராம சபையின் அங்கத்தவராக சுமார் 20 ஆண்டுகள் கடமையாற்றினார். 1954ஆம் ஆண்டு கரைவாகு பற்று கிராம சபைக்கான தேர்தலில் வெற்றிபெற்று வரலாற்றில் முதலாவது மருதமுனை மகனாக அக்கிராசனர் பதவியை அலங்கரித்தவர்.[66] அதேபோல் செயின் மௌலானா சுமார் 20 ஆண்டு கள் கிராம சபைத் தலைவராகவும் கடமையாற்றினார். பின்னாளில் மசூர் மௌலானாவும் புதல்வர் அன்ஸார் மௌலானாவும் அரசியலில் பிரகாசிக்கத் தொடங்கினர்.

அரசியல் செய்திகளைப் பகிர்வதும் கள அரசியல் குறித்து விவாதிப்பதும் மருதமுனையின் அரசியல் முன்னோடிகளாக இருந்த ஐதுரூஸ் மௌலானாவின் குடும்பத்தில் சகஜமான ஒன்றாக இருந்தது. தந்தையும் சகோதரர்களும் கொண்டிருந்த அரசியல் ஆர்வம் பழீல் மௌலானாவைத் தொற்றிக் கொண்டதில் வியப்பேதுமில்லை. இக் குடும்பப் பின்புலமானது உள்ளூரிலிருந்து தேசிய மட்டம் வரை அன்னாருக்கு வலுவான அரசியல் தொடர்புகளையும் தெளிவான அரசியல் புரிதலையும் பெற்றுக் கொடுத்தது.

## பாகிஸ்தான் விடுதலைப் போராட்டம்

*1929* முதல் *1940* வரையான காலப் பகுதி பழீல் மௌலானாவின் மாணவப் பருவமாகும். ஆங்கில மொழியில் ஜே.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்த இவர், *1940*இல் ஆங்கில மொழியில் எஸ்.எஸ்.சி. பரீட்சையிலும் சித்தியடைந்து பாடசாலைக் கல்வியில் மேலும் ஒரு படி உயர்ந்தார். இது சமூகத்தின் மத்தியில் அவருக்கு பெரும் மதிப்பும் மரியாதையும் ஏற்படக் காரணமாகியது. கல்வியறிவில் அவர் அடைந்த முன்னேற்றமும் விருத்தியும் கூட அவரை தாய்நாடு பற்றியும் முஸ்லிம் உலகு குறித்தும் சிந்திக்க வைத்தது எனலாம்.

இந்திய அரசியலில் சுதந்திரப் போராட்டம் உச்சக்கட்டமாக இருந்த காலம் அது. மகாத்மா காந்தி அகில இந்திய காங்கிரஸ் ஊடாக

---

*66.* பரகதுள்ளாஹ் ஏ.எம்., கல்முனை உள்ளூராட்சி நிருவாகம் 250 வருட வரலாற்றுப் பதிவுகள், *2019*, பக்: *105*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரப் போராட்டத்தை தலைமை யேற்று வழிநடத்திக் கொண்டிருந்தார். இதேவேளை, அகில இந்திய முஸ்லிம் லீக் தனது பழைமை வாதத்தை உதறித்தள்ளிவிட்டு முஹம்மத் அலி ஜின்னாஹ் அவர்களின் தலைமையில் முஸ்லிம்களுக்கென தனிநாடு கோரி நின்றது. முஸ்லிம் லீக்கின் எழுச்சி 10 கோடி இந்திய உபகண்ட முஸ்லிம்களையும் ஒரே கொடியின் கீழ் ஒன்று சேர்த்திருந்தது.

வடமேற்கு எல்லைப் புறத்தில் அப்துல் றவூப் நிஷ்தார், பஞ்சாப் மாகாணத்தில் சேர் பயரோஸ்கான் நூன், வங்காளத்தில் பஸ்லுல் ஹக், தென் இந்தியாவில் முஹம்மத் இஸ்மாயீல் போன்ற மாபெரும் முஸ்லிம் தலைவர்கள் முஹம்மத் அலி ஜின்னாஹ் அவர்களை 'காயிதே ஆஸம்' ஆக ஏற்றும் லியாகத் அலிகான் அவர்களை முஸ்லிம் லீக் செயலாளராகக் கொண்டும் பாகிஸ்தான் எனும் முஸ்லிம் தனிநாடு உருவாக போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்திய முஸ்லிம்களின் எழுச்சி இலங்கை முஸ்லிம்களிடையேயும் பாகிஸ்தான் சார்பு ஆர்வத்தைத் தூண்டியது. "ஜனாப் டி.பீ. ஜாயாவின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் லீக் பாகிஸ்தான் போராட்டத்தை இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒலிக்கச் செய்தது. பொதுக் கூட்டங்களை நடத்தியும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் இலங்கை மக்களை பாகிஸ்தான் கோரிக்கைக்கு சார்பானவர்களாக்க முஸ்லிம் லீக் முயற்சித்தது."[67]



**இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைப் பேச்சுவார்த்தையின்போது ஜவஹர்லால் நேரு, மவுண்ட் பேட்டன்ட் பிரபு, முஹம்மத் அலி ஜின்னா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவின் தந்தையார் செய்யித் ஐதுரூஸ் மௌலானா (பாக்கவி) தமிழ்நாட்டில் கல்வி கற்றவர். ஜின்னாவின் போராட்டம், இந்திய உபகண்ட அரசியல் விவகாரம் குறித்து ஆர்வமும் கொண்டிருந்தார். தந்தையாரும் சகோதரரான செய்ன் மௌலானாவும் பத்திரிகைகள் படிப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தனர். 'தாருல் இஸ்லாம்' 'சுதந்திர நாடு' என்ற இரு பத்திரிகைகளும் அப்போது தென்னிந்தியாவில் இருந்து வெளிவந்த இஸ்லாமிய தினசரிகளாகும். 'முஸ்லிம் முரசு', 'நூருல் இஸ்லாம்', 'பிறை' என்பன வார வெளியீடுகளாக வந்தன. பழீல் மௌலானாவும் இந்திய பத்திரிகைகள் ஊடாக செய்திகளை அறிந்து வந்தார். இந்திய முஸ்லிம்களால் இலங்கையில் அடிக்கடி அரசியல் கூட்டங்கள் நடத்தப்பட்டு இந்திய அரசியல் நிலைமை விவாதிக்கப்பட்டு வந்த காலம் அது.

## ஜின்னாஹ் தாசன்

காயிதே ஆஸம் முஹம்மத் அலி ஜின்னாஹ் அவர்களின் பாகிஸ்தான் போராட்டம் இளைஞன் பழீல் மௌலானாவை அதிகம் கவர்ந்தது. ஜின்னாவின் அரசியல் சித்தாந்தமும் அவரது ஆளுமையும் பழீல் மௌலானாவை ஆகர்சித்தது. அதனைப் பின்வருமாறு அவர் தனது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்துள்ளார் :



காயிதே ஆஸம்
முஹம்மத் அலி ஜின்னாஹ்

*"பத்திரிகைகளில் வெளிவரும் அவரின் சிறு போட்டோக்களை எனது சட்டையிலும், தொப்பியிலும் அணிந்து திரியும் பித்தனாக மாறி விட்டேன். இது எனது மூத்த தமையனாரான ஸாலிஹ் மௌலானாவின் கண்டனத்தையும் தந்தது. ஜின்னாஹ் எனது அரசியல் தலைவர். அம் மகானின் தன்னிகரற்ற தலைமையாலும் பாகிஸ்தான் நாடு கிடைத்தே விட்டது. என்னுடைய வீட்டில் இருக்கும் இரு உருவப் படங்கள் ஒன்று தந்தையுடையது; மற்றையது முஹம்மத் அலி ஜின்னாஹ்வுடையது என்பதை மக்களே நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்."* [68]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிடிவிறாந்தின் கதை

மகாத்மா காந்தியினதும் காங்கிரஸ் கட்சியினதும் எதேச்சாதிகாரப் போக்கை காரசாரமாகக் கண்டித்து 'தாருஸ் ஸலாம்' பத்திரிகை ஆசிரியர் பா. தாவூத்ஷா அவர்களுக்கு பழீல் மௌலானா 1940ஆம் ஆண்டில் எழுதிய கடிதம் மெட்ராஸ் மாகாண புலனாய்வுத் துறையின ரால் கைப்பற்றப்பட்டது. இதனை தென்னிந்திய புலனாய்வுத் துறை யினர் இலங்கை அரசிடம் ஒப்படைத்தனர். அப்போது பிரித்தானிய அரசின் பிரதிநிதியாக பிராந்திய வன்னிமை முதலியாராக[69] இருந்த கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பருக்கு அப்பிடியாணை (Arrest Warrant) அரசினால் அனுப்பப்பட்டு பழீல் மௌலானாவை கைது செய்யும்படி கட்டளையிடப்பட்டது.

விதானை மௌலானா ஊடாக இச்செய்தி பழீல் மௌலானாவுக்கு அறிவிக்கப்பட்டது. பதற்றமடைந்த குடும்பத்தினர் மூத்த சகோதரர் மத்ரஸா மௌலானாவை அழைத்துக் கொண்டு எம்.எஸ். காரியப்பரிடம் சென்று மன்னிப்புக் கோருமாறு பழீல் மௌலானாவை வற்புறுத்தினர். பழீல் மௌலானா இச்சம்பவம் குறித்து தனது மனக் கிடைக்கையை தனது டயறிக் குறிப்புகளில் பின்வருமாறு பதிவு செய்கிறார்:



கேட் முதலியார்
எம்.எஸ். காரியப்பர்

*"நான் மறுத்தேன் பிடிவாதமாகவும் இருந்தேன். காரியப்பர் பின் விளைவு களை விளக்கி, புத்தியாக இருந்து கொள்ளும்படியும் கூறினார். இப்படியாக நான் ஒரு அரசியல் கைதியாக இந்தியா சென்றிருந்தால் ஒரு சிறந்த சுதந்திர போராட்ட இலட்சிய வீரனாகத் திகழ்ந்தி ருக்க முடியும் அல்லவா?"*[70]

கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் அக்காலத்தில் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந் தார். எனவே, இளைஞர் பழீல் மௌலா னாவை அடையாளம் கண்டு

67. அமீன், எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள், அல்ஹஸனாத் வெளியீட்டகம், 2010, பக்: 117
68. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம். எனது டயறிக் குறிப்புகள், 1976
69. வன்னிமை முதலியார்- காலனித்துவக் கால பிராந்திய அரச பிரதிநிதி
70. பழீல் மௌலானா, ஐ.எம்.எஸ்.எம்., எனது டயறிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகப்படுத்தியதோடு, பழீல் மௌலானாவின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்பிடியா ணையை மீளழைப்பு (Recall) செய்தார்.

இக்கால கட்டத்திலேயே ஐதுரூஸ் மௌலானா அவர்களின் நட்புறவின் நிமித்தம் கலாநிதி ரீ.பி. ஜாயா அவர்கள் அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டாம் தரத்தில் (Second Class) சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த பழீல் மௌலானாவை கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் ஆசிரியராக இணைத்துக் கொண்டார். இதனால் 'இலங்கையின் ஜின்னா' என அறியப்பட்ட கலாநிதி ரீ.பி. ஜாயா அவர் களுடன் நெருங்கிப் பழகவும் அரசியல் நகர்வுகளை அளவளாவவும் அவரது அரசியல் பாசறையில் வளரவும் பழீல் மௌலானாவுக்கு சந்தர்ப்பம் வாய்த்தது.

இந்திய மக்களின் அரசியல் எழுச்சி இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இலங்கை முஸ்லிம்கள் 'முஸ்லிம் லீக்'கையும் இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் 'காங்கிரஸை'யும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரித்தனர். இந்தியாவும் பாகிஸ்தானும் இருவேறு நாடுகளாக சுதந்திரம் பெற்றன. கொழும்பில் ஆசிரியராகக் கடமை புரிந்த பழீல் மௌலானா பாகிஸ்தான் பிரிவினை ஆதரவு பிரசாரக் கூட்டங்களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். தினகரன் உதவி ஆசிரியர் மர்ஹூம் ஏ.எம்.எம். கியாஸ், ஹாதி புக் டிப்போ உரிமையாளர் மதார் ஸாஹிப், கொம்பனித் தெரு 'முஸ்லிம் லைப்ரரி' ஸ்தாபகர் பீ.கே. முகையதீன், பேராசிரியர் ரவூப் பாட்சா, ஓ.கே. முகையதீன் ஸாஹிப் முதலான அரசியல் செயற்பாட்டாளர்களுடன் பழீல் மௌலானாவும் அரசியல் மேடைகளில் தோன்றலானார். கொழும்பு ஸாஹிரா கல்லூரி தனியார் பாடசாலை என்பதனால் பழீல் மௌலானாவுக்கு இது சாத்தியமாயிற்று.

இவ்வாறு தலைநகரில் முன்னணி அரசியல் செயற்பாட்டாளராக மாறியிருந்த இளைஞர் பழீல் மௌலானா ஜின்னாவின் சிந்தனை களை மருதமுனையில் அறிமுகப்படுத்தும் நோக்கில் 'முஸ்லிம் யூத் லீக்' எனும் பெயரில் அரசியல் இயக்கத்தினை 1948ஆம் ஆண்டு தோற்றுவித்தார். அக்காலப் பிரிவில் இவ் இயக்கத்தினூடாக இளைஞர் களுக்கு அரசியல் பாடமும் அரசியல் சித்தாந்தமும் அவர் கற்றுக் கொடுத்தார். கிழக்கிலங்கையில் அக்காலப் பகுதியில் முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் மத்தியில் எழுந்திருந்த அரசியல் பிரக்ஞையையும் அதில் பழீல் மௌலானாவின் வகிபாகத்தையும் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் பின்வருமாறு விவரிக்கிறார்:

*"1940களில் சுதந்திர உணர்ச்சி உருவாகிய வேளை, கிழக்கு பிராந்தியத்திலிருந்து இந்திய சுதந்திரத்திற்காகவும், இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காகவும் குறிப்பாக இந்திய மக்களுக்கு பாகிஸ்தான் வேண்டும் என்ற கோஷத்தை கேட் முதலியார் காரியப்பருடன் இணைந்து சிம்மக் குரலில் முழங்கியவர் மர்ஹூம் பழீல் மௌலானா. அதன் அடையாளமாக பாகிஸ்தான் சிற்பி முஹம்மது அலி ஜின்னாவைப் போன்று தொப்பி அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நாங்கள் மாணவனாக இருந்தபோது அவருடைய பேச்சைக்கேட்க அணிதிரள்வோம். அவரது பேச்சு, சிந்தனை அன்றைய இளைஞர்களுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்தது."*[71]



புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் எழுதிய 'மருதமுனை வரலாறு' நூல் வெளியீட்டு நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களால் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுகிறார். அருகில் கல்முனை மாநகர மேயர் மசூர் மௌலானா (இடது) மற்றும் பொறியியலாளர் நியாஸ். ஏ சமத், காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் ஆகியோர் காணப்படுகின்றனர். **(04.05.2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜின்னா தொப்பி

புரட்சி வீரர் முஹம்மத் அலி ஜின்னா அணிந்திருந்த தொப்பி 'ஜின்னா தொப்பி' என பிரபல்யமடைந்திருந்தது. முஹம்மத் அலி ஜின்னா மற்றும் இஸ்லாமிய புத்திஜீவிகள் அணிந்த இத்தொப்பியை Karakul hat என அழைப்பர். ஜவஹர்லால் நேரு, சேர். செய்யித் அஹமது கான் முதலானோர் இவ்வகைத் தொப்பியை அணிந்த ஏனைய அரசியல் பிரமுகர்களாவர்.

1947இல் ஜின்னா முன்னெடுத்த போராட்டம் பாகிஸ்தான் உதயமாக வழிவகுத்தது. இம்மாபெரும் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய ஜின்னாவின் சிந்தனையும் அவரது தொப்பியும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கும் பரவியது. முஹம்மத் அலி ஜின்னாவால் கவரப்பட்ட அக்கால புரட்சிகர இளைஞனும் ஜின்னாவாதியுமான பழீல் மௌலானா ஜின்னா தொப்பி அணிந்து, அவ்வழக்கத்தை மரணிக்கும் வரை பின்பற்றினார். எனினும், பழீல் மௌலானா அத் தொப்பியை அழகுக்காக மாத்திரம் அணியாமல் எழுச்சியின் சின்னமாகவும் தனது அரசியல் சிந்தனையின் குறியீடாகவும் (Symbolism) அணிந்தார்; அச்சிந்தனையை செயல்படுத்தியும் காட்டினார்.

பெரும் தலைவர் ஜின்னா போன்று அரசியல் புரட்சிகள், சமூக சேவைகள் ஆற்ற வேண்டுமெனக் கருதிய பழீல் மௌலானா ஜின்னா தொப்பி அணிந்து மக்களுக்கு காட்சியளித்தது மட்டுமன்றி, சமய, சமூக, கல்வி கலாசாரப் பணிகளில் ஈடுபடவும் முன்வந்தார். முஹம்மத் அலி ஜின்னாவின் சிந்தனையை தான் மட்டும் அல்லாமல் தனது குடும்ப வழித்தோன்றல்களும் பின்பற்ற வேண்டும் என சிந்தித்த பழீல் மௌலானா தனது கனிஷ்ட புதல்வருக்கு முஹம்மத் அலி ஜின்னா மௌலானா எனப் பெயர்சூட்டி அழகு பார்த்தார். மேலும் ஒவ்வொரு வருடமும் ஜின்னா நினைவுதினத்தை ஏற்பாடு செய்து நினைவு கூர்வதும் அவரது வழக்கமாகியது. ஜின்னா தொப்பி அணிந்த பழீல் மௌலானா தனது சிந்தனையிலும் செயலிலும் முஹம்மத் அலி ஜின்னாவின் கிட்டவான சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தார்.[72]

---

71. மன்சூர், ஏ.ஆர்.எம். 'மருதமுனையில் கல்வி வளர்ச்சியில் முதன்மைமிக்கவர் பழீல் மௌலானா', சுடர் ஒளி ,26.02.2013

72. வஸீல் ஏ.ஜே.எல், நேர்காணல், 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழீல் மௌலானாவின் பாகிஸ்தான் ஆதரவுப் போக்கு அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்தது. அதனை பின்வரும் விடயம் ஒப்புறுதிப்படுத்துகின்றது. தற்போதைய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அவர்களுக்கு 1995இல் எழுதிய மடலில் பழீல் மௌலானா தனது இறுதி விருப்பங்களாக பின்வருவனவற்றை விபரிக்கின்றார்:

*"....my earnest ambition is to visit Pakistan and pay my last respect to the mausoleum of Kaide Azam Mohamed Ali Jinna, the father of Pakistan also to the mausoleum of your late mother (Moomin), pay a visit to the cancer hospital which you have established to serve cancer patients and finally to meet the recently wedded new couple " Mr & Mrs. Imran Khan at their recidence in Lahoor"*[73]

"பாகிஸ்தானின் தந்தை காஇதே ஆஸம் முஹம்மது அலி ஜின்னா அவர்களதும் தங்களது தாயார் மூமின் அவர்களது அடக்கஸ்தலங்களை தரிசிப்பது எனது இலட்சியமாக உள்ளது. அத்துடன், புற்று நோயாளிகளுக்கு சேவையாற்றவென தங்களால் ஸ்தாபிக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையை பார்வையிடுவதுடன் இறுதியாக அண்மையில் திருமணமான திரு., திருமதி இம்ரான்கான் தம்பதியினரை லாஹூர் இல்லத்தில் சந்திக்கவும் ஆவலாய் உள்ளேன்."

## பாலஸ்தீன் ஆதரவுப் போராளி

இலங்கையில் கிலாபத் இயக்கத்தை கலாநிதி ரீ.பி. ஜாயாவே முன்னெடுத்தார். கிலாபத்தை ஒழிக்க எடுக்கும் முயற்சிக்கு எதிராக தனது ஆதரவாளர்களின் துணையுடன் அக்காலத்தில் பல கூட்டங்களை அவர் நடத்தினார். 1924ஆம் ஆண்டு உஸ்மானிய கிலாபத் துருக்கியில் வீழ்த்தப்பட்டது. அதன் தொடராக பலஸ்தீனப் பிரச்சினை மேலெழுந்தது.

"பாலஸ்தீன குடிமக்களை அகதிகளாக்கி அவர்களின் தாயகத்தை அபகரித்து இஸ்ரவேலர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அயோக்கியத்தனம் இலங்கை முஸ்லிம்களின் உள்ளத்தைப் பெரிதும் பாதித்தது. ரீ.பி. ஜாயா உட்பட பிரமுகர்கள் பலர் நாடளாவிய ரீதியில் இக்கொடுமை பற்றி மக்களை அறிவுறுத்தினர். தமது எதிர்ப்பைக் காண்பிப்பதற்காக மருதானை ஜும்மா மஸ்ஜித்

*73. Faleel Moulana, I.M.S.M., The Letter to Imran Khan, 03.08.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்றலில் ஒரு பெரும் கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத் திற்கு அரசாங்க சபை உறுப்பினராக இருந்த சேர் முஹம்மது மாக்கான் மாக்கார் தலைமை தாங்கினார்."[74]

உலக அரங்கில் முஸ்லிம்களின் நிலை பரிதாபகரமான நிலைக்குச் சென்றிருந்தமையும் பலஸ்தீன் மீது அடர்ந்தேறிக் கொண்டிருந்த தெளிவான அநீதமும் இளைஞன் பழீல் மௌலானாவின் உணர்வு களைத் தட்டி எழுப்பின. 1947ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பலஸ்தீன விடுதலை/ஸியோனிச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பழீல் மௌலானா முன்னிலை வகித்தது மட்டுமன்றி, அதன் விளைவாக பிரித்தானிய பொலிசாரின் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டார்.



கலாநிதி ரீ.பி. ஜாயா

ஸியோனிச எதிர்ப்பு அரசியல் போராட் டங்களை அக்காலத்தில் வழிநடத்திய ரீ.பி. ஜாயா அவர்களே வியக்குமளவு பழீல் மௌலானாவின் செயற்பாடுகள் முனைப் புப் பெற்றிருந்ததை பின்வரும் சம்பவம் மூலம் அறியலாம்:

1946ஆம் ஆண்டில் மாளிகாவத்தையில் பாடசாலை மாணவர்களைக் கொண்டு பழீல் மௌலானா நடத்திய ஸியோனிச எதிர்ப்பு இயக்கம் மக்களிடையே ஒருவித பீதியை உண்டாக்கியது. இது குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெறவே டாக்டர் ஜாயாவினால் பழீல் மௌலானா விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பழீல் மௌலானாவின் தன்பக்க விளக்கத்தை ஏற்றுக்கொண்ட தலைமை ஆசிரியர் ரீ.பி. ஜாயா அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்: *"உங்களின் அரசியல் போக்கு எனக்கு நல்லதெனப்படுகிறது. ஆயினும், மாணவர்களை அரசியல் குட்டைக்குள் இறக்கி சேற்றைப் பூசச் செய்யக் கூடாது என்றார்."*[75]

1971ஆம் ஆண்டு, முஸ்லிம்களின் மூன்றாவது புனிதத் தலமான புனித அல்அக்ஸா யூத ஸியோனிச அரசினால் தீயிடப்பட்டதை

74. அமீன், எம்.ஐ.எம்., இலங்கை முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முன்னோடி கள், அல்ஹஸனாத் வெளியீட்டகம், 2010, பக்: 115-116
75. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயறிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டித்து மிகப் பிரமாண்டமானதோர் ஊர்வலத்தை மருதமுனையிலிருந்து கல்முனை வரை பழீல் மௌலானா உட்பட மருதமுனையின் பிரமுகர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இப்பேரணியை மௌலானா முன்னின்று தலைமை தாங்கி வழிநடத்தினார்.[76] சுமார் அரை மைல் நீளமான இந்த ஊர்வலம் இளைஞர்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பியது. "நாரே தக்பீர்" முழக்கம் விண்ணைப் பிளந்தது. மருதமுனை வாலிபர்களும் வயது வந்தவர்களும் இந்த ஸியோனிச எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். கல்முனையிலிருந்தான ஆர்ப்பாட்டத்தை சமூக செயற்பாட்டாளராக விளங்கிய இளைஞர் எம்.எச்.எம். அஷ்ரப் வழிநடத்தியமை குறிப்பிடத்தக்கது. கல்முனை டவுன் கவுன்சிலில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதில் பழீல் மௌலானா சிறப்புரை ஆற்றினார்.[77]




*19.04.1975ஆம் திகதி நற்பிட்டிமுனை அல்அக்ஸா மகா வித்தியாலயத்தின் பெயர்ப் பலகையை கல்வி அதிகாரி பழீல் மௌலானா அவர்கள் திறந்து வைக்கிறார். அருகில் பாடசாலை அதிபர் ஜனாப். யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பிட்டிமுனையில் அமைந்துள்ள 'அல்-அக்ஸா' மகா வித்தியாலயத்தின் பெயர் பழீல் மௌலானா கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் சூட்டப்பட்டது என்பது பலஸ்தீன் விடுதலைப் போராட்டம் தொடர்பாக பழீல் மௌலானா வுக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாட்டினையும் அப்போராட்டத்தை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனும் அவரது சிந்தனையையும் காட்டி நிற்கின்றது.

இவ்வாறு உலக முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு இப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பழீல் மௌலானாவிற்கு பெருந்துணிவு இருந்திருக்க வேண்டும். அவரின் இப்போக்கானது இலங்கையை அக்காலத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த காலனித்துவ ஆட்சியாளர்களின் நலன்களுக்கு முரணானவையாக இருந்தபோதும் அவற்றைப் பொருட்படுத்தாது பாகிஸ்தான், பலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களில் கலந்து கொண்டு குரல் கொடுத்தமையானது அவரது அபார துணிச்சலையும் தான் சார்ந்த சமூகத்தின் மீதான பற்றையும் இப்போராட்டங்களுக்காக எதனையும் இழக்கத் தயாராக இருந்த அவரது அர்ப்பண உணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

## மருதமுனையில் இயக்க அரசியல்

"இலங்கை சுதந்திரத்துக்கு முன்பிருந்த காலங்களில் முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் கட்சிகள் இருக்கவில்லை. முஸ்லிம் லீக்கும் இலங்கை சோனகர் சங்கமும் அப்பணியை ஆற்றின. இவ்விரு சங்கங்களும் 20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துவதிலும் கல்வி வாய்ப்பை வளப்படுத்துவதிலும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் நலன்களைப் பேணுவதிலும் அக்கறை செலுத்தின.


சேர் ராஸிக் பரீத்

இதற்காக இலங்கையில் முஸ்லிம்கள் பரவலாக வாழும் பகுதிகளில் இவ்விரு சங்கங்களும் தத்தம் கிளைகளை அமைத்துக் கொண்டன.[78]

---

76. ஆதம்பாவா, எஸ்.எச்., எனது நினைவுத் திரையில் அஷ்ரப், கலமுஷ் ஷர்க் வெளியீடு, 2006, பக். 18

77. இஸ்மாயில் மௌலானா, எஸ்.ஏ.எஸ், நேர்காணல், 29.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு இயக்கங்களும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தேசிய ரீதியில் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டன. இலங்கை முஸ்லிம் கள் அராபியர்களின் வழித்தோன்றல்கள் என்பதை முன்னிறுத்தி அகில இலங்கை சோனகர் சங்கத்தை (All Ceylon Moor's Association) சேர். ராஸிக் பரீத் அவர்கள் தலைமை தாங்கி வழிநடத்தினார். 'சோனகர்' எனும் இன அடையாளத்திற்கு மாற்றீடாக 'முஸ்லிம்கள்' எனும் அடிப்படையில் இலங்கைச் சோனகர்கள், மலாயர்கள் என்போரை இணைத்து முஸ்லிம் லீக் செயற்பட்டது. ரீ.பி. ஜாயா அவர்களின் பணிகள் முஸ்லிம் லீக்குடன் (All Ceylon Muslim Leaque) இணைந்ததாக அமைந்திருந்தன. இவ்விரு இயக்கங்களும் அரசியல் கட்சிகள் போல அக்காலத்தில் செயற்பட்டன. இவ்விரு தலை வர்களுடன் சமகாலத்தில் தேசிய ரீதியான நெருக்கமான உறவை பழீல் மௌலானா பேணி வந்தார்.*1945–1947* வரை சேர். ராஸிக் பரீத் அவர்களின் தலைமையின் கீழ் அகில இலங்கை சோனகர் சங்கத்தின் முழுநேர உழைப்பாளியாகவும் டாக்டர் எம்.பீ.எம். கவுஸ் மற்றும் எம்.டீ. தஹ்லான் ஆகியோருடன் இணைந்து கொள்கை பிரச்சாரகராகவும் தேசிய மட்டத்தில் அவர் பணியாற்றினார்.

இரு வேறு அரசியல் கருத்தியலில் செயற்பட்ட இவ்வியக்கங்க ளின் மருதமுனை கிளைகளை முறையே *1948*ஆம், *1951*ஆம் ஆண்டு களில் பழீல் மௌலானா அவர்களே நிறுவினார். அவற்றின் தலைவராகவும் செயற்பட்டார்.

## அரசியல் பார்வை

சர்வதேச முஸ்லிம் அரசியல் நகர்வுகள் குறித்தும் பூகோள அரசியல் மாற்றங்கள் குறித்தும் தெளிவான பார்வையுடையவராக பழீல் மௌலானா காணப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எனும் இரு பெரும் தேசியக் கட்சிகளை கொண்டியங்கிய இலங்கையின் துருவ அரசியல் அரங்கில் நடைபெறும் மாற்றங்களை சர்வதேச அரசியலுடன் ஒப்பிட்டு இலங்கை அரசியல் போக்கு குறித்த தனது கணிப்பினையும் நிலைப்பாட்டினையும் பின்வருமாறு அவர் விளக்குகின்றார்:

*"...எனது தாய்த்திரு நாடு இன்னும் அரசியலில் அரிச்சுவடியிலேயே இருக்கிறது. மக்களுக்கு பயன்படும் அரசியல் இன்னும் இலங்கையில் தோன்றவில்லை என்றே கூறுவேன். இனபேதம், மொழி, சாதிபேதம், ஊழல், இலஞ்சம், சமயபேதம், இனவெறி எல்லாம் கலந்து நிற்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எனது தாய்நாட்டிற்கு பொருத்தமான அரசியல் சித்தாந்தமும் இல்லை; தலைவனும் இல்லை. ஆகவே எக்கட்சியின் அரசியலையும் நான் நேசிப்பதில்லை. சுவிர்ஸர்லாந்து அரசியல் திட்டமும் சித்தாந்தமும் இந்நாட்டுக்கு மிகப் பொருத்தம் என்பது எனது கருத்து."*[79]



கல்முனையில் இடம்பெற்ற சமாதானப் பேரணியில் முதிர்ந்த வயதில் பழீல் மௌலானா. ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா. வெங்கடாசலம், த.தே.கூ. முக்கியஸ்தர் அ. ஸ்ரீஸ்கந்தராசா, தென்னிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் ஏ.எல்.எம். சலீம், அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் பொருளாளர் ஏ. புகாது, 'வாழ்வியம்' சமூகநல அமைப்பு பிரமுகர்கள் உட்பட ஆண்களும் பெண்களும் காணப்படுகின்றனர் (தினகரன் 13.02.2002)

## அரசியல் பல்லுறவுகள்

### எம்.எச். முஹம்மத்

முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமாக இருந்த எம்.எச். முஹம்மத் அவர்களின் தந்தையார் ஹனீபா புறக்டர் அவர்கள் பழீல்

78. அமீன், எம்.ஐ.எம். இலங்கை முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முன்னோடிகள், அல்ஹஸனாத் வெளியீட்டகம், 2010, பக்: 102

79. பழீல் மௌலானா ஐ.எம்.எஸ்.எம்., எனது டயறிக் குறிப்புகள், 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் சபாநாயகர்
எம்.எச். முஹம்மத்

மௌலானாவின் தந்தையார் செய்யித் ஐதுரூஸ் மௌலானா அவர்களுடன் மிகுந்த நெருக்கமும் மரியாதையும் வைத்திருந்தார். அந் நட்புறவானது அத்தலைமுறை தாண்டி எம்.எச். முஹம்மத்-பழீல் மௌலானா எனத் தொடர்ந்தது. பழீல் மௌலானா, எம்.எச். முஹம்மத் ஆகிய இருவரதும் முன்னோர்கள் யெமன் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்வி, சமூக, சன்மார்க்க பணிகளில் பழீல் மௌலானாவினால் விடுக்கப்படும் கோரிக்கைகளை அரசினூடாக அல்லது தான் நிறுவிய இஸ்லாமிய நிலையத்தினூடாக (Islamic center) எம்.எச். முஹம்மத் அவர்கள் பெருமனதுடன் நிறைவேற்றிக் கொடுத்தார். இந்நட்பின் விளைவாக 1981ஆம் ஆண்டு கிழக்கு மாகாண போக்குவரத்துச் சபையின் ஆலோசனை மண்டல கௌரவ தவிசாளராக பழீல் மௌலானாவை போக்குவரத்து அமைச்சராக இருந்த எம்.எச். முஹம்மத் அவர்கள் நியமித்தார். அதேபோன்று, 1987ஆம் ஆண்டு அரச ஹஜ் குழுவின் விசேட உறுப் பினராக புனித ஹஜ் கடமையை நிறை வேற்றும் சந்தர்ப்பமும் பழீல் மௌலானாவுக்கு இதன் மூலம் கிட்டியது. பழீல் மௌலானா மரணிக்கும் வரை எம்.எச். முஹம்மத் அவர்களுடன் இருந்த நட்புறவைத் தொடர்ந்தார்.

## சிறிய தந்தை-பெரிய மகன்

கல்முனை மாநகர முன்னாள் மேயர் செனட்டர் மசூர் மௌலானா பழீல் மௌலானாவின் இரண்டாவது சகோதரர் செய்ன் மௌலானாவின் புதல்வர். அவர் மசூர் மௌலானாவை தன் பெரிய மகனாகக் கண்டு அவரது உயர்வில் உச்சி குளிர்ந்தவர். எப்போதும் மசூர் மௌலானாவை 'மருதமுனையின் அரசியல் தந்தை' என சிலாகித்துப் பேசி மகிழ்வார்.

மசூர் மௌலானா போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் பழீல் மௌலானா தனது முழுமையான ஆதரவினை அவருக்கு வழங்கினார். இதன் பயனாக அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டு பல தூர, கஷ்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களுக்கு இடமாற்றப்பட்டார். இவ் அநீதியை பெரும் பொருட்டாக எண்ணாது தன் மூத்த மைந்தனை 'மருதமுனையின் முத்து' என்று போற்றி தான் செல்லுமிடமெல்லாம் அடையாளப்படுத்து வதில் பெருமை கொள்வார். மசூர் மௌலானாவின் தந்தை இளம் வயதில் மரணித்தமையால் தனது சிறிய தந்தையான பழீல் மௌலா னாவுக்கு தனது தந்தையின் அந்தஸ்த்தை வழங்கி கௌரவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிநேகிதன்- அஸ்வர் ஹாஜியார்

பழீல் மௌலானாவின் மூன்றாவது சகோதரர் செய்யத் பாரி மௌலானா (பஹ்ஜி) முன்னாள் அமைச்சர் அஸ்வர் ஹாஜியாரின் ஆசிரியர். மட்டுமன்றி, அவர் மசூர் மௌலானாவின் ஆருயிர் தோழரும் ஆவார். அஸ்வர் ஹாஜியாரின் இந்நட்பு பழீல் மௌலானா அவர்களு டனும் நீட்சி பெற்றது. தன் நட்புடன் கூடிய வாழ்த்துரைகளை பழீல் மௌலானாவுக்கு அனுப்புவதில் மகிழ்ச்சி அடைவார் அஸ்வர் ஹாஜியார். பழீல் மௌலானாவுடன் அஸ்வர் ஹாஜியாருக்கு இருந்த நட்பு மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்டதெனலாம்.

பழீல் மௌலானாவின் சமூக புத்தாக்க சேவைகளில் ஏ.எச்.எம். அஸ்வர் (பா.உ) தன் பங்களிப்பினை மறுக்காமல் செய்துள்ளார். கிழக்கு வரும் போதெல்லாம் பழீல் மௌலானாவின் வீடு வந்து நலம் அறிந்து உறவாடி செல்வதனை வழக்கமாயிருந்தார் முன்னாள் அமைச்சர் அஸ்வர். பழீல் மௌலானா 2000ஆம் ஆண்டு நிறுவிய 'பழீல் மௌலானா பவுண்டேஷன்' இன் வாழ்நாள் ஆலோசகராக முன்வந்தவர் அஸ்வர் ஹாஜியார் என்பதிலிருந்து இருவருக்கும் இடையிலான உறவு நிலையாக இருந்ததனை அறிந்து கொள்ளலாம்.

## முடிவுரை

பழீல் மௌலானா சர்வதேச முஸ்லீம் அரசியல் அரங்கில் உஸ்மானிய கிலாபத் வீழ்ச்சியடைந்த காலப் பகுதியில் பிறந்து வாழ்ந்தவர். இஸ்லாமிய சிந்தனையில் தெளிந்த, அரசியல் புரிதல் உள்ள குடும்பமொன்றின் மகனாய் இருந்தமை அன்னாரை சர்வதேச அரசியல் நிகழ்வுகளில் ஆர்வத்தைக் குவிக்கச் செய்திருக்கின்றது. அவ்வார்வம் அவரை போராட்டக்களங்கள் வரை இழுத்துச் சென்றிருக்கின்றது. தேசிய தலைவர்களுடனான அவரது நேரடி உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

10/06/1997.

என் அன்புக்கினிய பழீல் மௌலானா ஹாஜியார் அவர்கட்கு,

அஸ்ஸலாமு அலைக்கும், வ.வ.,

தங்கள் அன்புமடல் கிடைத்தது. பதிலெழுத ஏற்பட்ட தாமதத்திற்கு மன்னிக்கவும்.

தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், தங்கள் ஊர் மக்களும் எனக்கு [illegible] அன்று வைத்த அன்பும், பாசமும் இன்றுவரை சற்றும் குறைந்து விடவில்லை என்பதற்கு உங்கள் மடல் நல்ல சான்று பகர்கின்றது. அதனை வாசிக்கும் போது என் உள்ளம் பூரித்தது, கண்கள் பனித்தன, உங்களைப் போன்ற நல்லொழுக்க சீலர்களின் ஒரு பரக்கத்தினால் தான் என்றும் எமது சமய, சமுதாயப் பணிகளைத் தொடர முடிகின்றது.

மருதமுனை, என்றும் என் மனம் கவர் மருதமான ஊரே. இயற்கை எழில் பெய்யும் மக்கள் அவர்களின் உளத்தூய்மையான நேசங்களை எல்லாம் சம்பந்தப்படுத்தும் பெருமையில் நான் [illegible]

கடந்த கல மாதங்களாக பாராளுமன்ற உரைகளில் பெற்ற மருதமுனைக்கு மகத்துவம் அளித்து நான் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமான "ஹன்சார்ட்" பதிவேடுகளின் பிரதிகளை இத்துடன் தங்கள் பார்வைக்கென அனுப்பியுள்ளேன். அன்பு மைத்துனர் அன்வர் மௌலானாவின் கவனத்திற்கும் கொண்டு வரவும். எம்மால் செய்ய முடிந்த ஏதும் இருந்தால் தயக்கமின்றி எழுதவும்.

தங்கள் குடும்பத்தவர் உட்பட ஊர் மக்கள் அனைவருக்கும் எமது மேலான சலாத்தை தெரிவிக்கவும்.

பதில்.
18/6/97

இங்ஙனம்,
தங்கள் அன்புக்கினிய

(அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர்)
பாராளுமன்ற உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அரசியல் போக்கை மேலும் நெறிப்படுத்தி பட்டை தீட்டியிருக் கின்றது. பழீல் மௌலானா அடிப்படையில் ஓர் அரசியல்வாதியல்ல. அவர் தேர்தல் அரசியலில் ஒருபோதும் களம் கண்டதில்லை. அன்னார் தன் வாழ்க்கை முழுவதையும் சமூகத்தின் கல்வி எழுச்சிக்காகவும் சமூக, சமய மறு மலர்ச்சிக்காகவுமே செலவிட்டார்; அதனையே தனது இலட்சியமாகவும் தனக்குள் தெளிவாக வகுத்துக் கொண்டார். ஆனால், தனக்கிருந்த அரசியல் தொடர்புகளையும் உறவுகளையும் சமூகத்தினதும் தனிநபர்களினதும் வெற்றிக்காகப் பயன்படுத்துவதில் அவர் வெற்றி கண்டார். முஸ்லிம் தேசியத் தலைவர்கள், கல்வி மான்கள் ஈறாக அனைவரையும் தனது இலட்சியப் பணிக்காக பழீல் மௌலானா பயன்படுத்தியிருக்கிறார் என்பதை அவரது பணிகளைக் கற்பதன் ஊடாக தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்- 2**

**அனுதாபச் செய்திகளும் இரங்கற் கவிதைகளும்**

# மருதமுனையின் கல்வி வளர்ச்சியில் முதன்மைமிக்கவர் பழீல் மௌலானா

**- முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அனுதாபம்**

புகழ்மிகு மருதமுனையில் பிறந்து சிறப்புடன் பல ஆண்டுகள் கல்விக்காகவும் இஸ்லாமிய மக்களின் நல்வாழ்வுக்காகவும் வாழ்ந்த ஓய்வுபெற்ற கல்விமான் பழீல் மௌலானாவின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

இலங்கை இஸ்லாமிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டிய பெரியவர் பழீல் மௌலானா. மருதமுனைக் கிராமம் கல்வி, ஆத்ம சிந்தனையில் முதன்மைவகித்து இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு பெயரையும் கௌரவத்தையும் பெற்றுக்கொடுத்த பிரதேசம். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காலத்தில் கிழக்குவாழ் மக்களின் அரசியல், பொருளாதார வளர்ச்சியில் முன்னின்று வழிநடாத்திய கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் போன்றவர்களுடன் இணைந்து உலக முஸ்லிம்களின் நலனுக்காக குரல்கொடுத்து தியாகம் செய்த பெரியார்களுள் பழீல் மௌலானாவின் நாமம் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டியது. மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பானது காலத்தால் அழியாதது. இவரைப் போன்ற கல்விமான்கள் மருதமுனையில் உழைத்ததன் காரணமாகவே இன்று அக்கிராமம் கல்வியில் சிறந்து விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1940களில் சுதந்திர உணர்ச்சி உருவாகியவேளை, கிழக்குப் பிராந்தியத்திலிருந்து இந்திய சுதந்திரத்திற்காகவும் இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காகவும் குறிப்பாக இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு பாகிஸ்தான் வேண்டும் என்ற கோஷத்தை கேட் முதலியார் காரியப்பருடன் இணைந்து சிம்மக்குரலில் முழங்கியவர் மர்ஹூம் பழீல் மௌலானா. அதன் அடையாளமாக பாகிஸ்தான் சிற்பி முஹம்மது அலி ஜின்னாவைப் போன்று தொப்பி அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நாங்கள் மாணவனாக இருந்தபோது அவருடைய பேச்சைக் கேட்க அணிதிரள்வோம். அவரது பேச்சு, சிந்தனை அன்றைய இளைஞர்களுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்தது.*

*இஸ்லாமியப் பெருமகன் பழீல் மௌலானா பிரபல அரசியல்வாதி மசூர் மௌலானாவின் சிறிய தந்தை; பிரபல சட்டத்தரணி அன்ஸார் மௌலானாவின் தகப்பனார். அவரது மறைவால் துயருறும் மருதமுனை மக்களுக்கும் இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.*

***(சுடர் ஒளி, 26.02.2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர்

**- பழீல் மௌலானாவின் மறைவுக்கு செனட்டர் மசூர் மௌலானா அனுதாபம்-**

மருதமுனைப் பிரதேசத்தின் கல்வி, கலாசார, சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய முதுபெரும் கல்விமான் பழீல் மௌலானாவின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் செனட்டர் மசூர் மௌலானா தெரிவித்தார்.

கிழக்கிலங்கையின் மூத்த கல்விமான்களுள் ஒருவரும் மார்க்க அறிஞரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா திங்கட்கிழமை (25) காலமானார். அவரது மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் செனட்டர் மசூர் மௌலானா மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

யெமன் தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 'அஹ்லுல் பைத்' எனும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் குடும்ப வாரிசைச் சேர்ந்தவரான கலீபத்துஷ் ஷாதுலி அஸ்ஸெய்யித் அஷ்ஷெய்க் மௌலவி ஐதுரூஸ் மௌலானா அவர்களின் புதல்வர்களுள் ஒருவரான அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்கள் இஸ்லாமிய மார்க்க ரீதியாக மிகவும் பேணுதலுடன் வாழ்ந்து வந்த ஓர் உத்தமராவார்.

நேரத்திற்கு காரியமாற்றுதல், குடும்ப உறவை அனுசரித்தல், உற்றார் உறவினர்களை வழிநடத்துதல், சமூகப் பணியாற்றுதல் என்று வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் அவர் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவர் எனது சிறிய தந்தையாக இருந்த போதிலும் தந்தை எனும் ஸ்தானத்தில் இருந்து என்னையும் எனது கல்வி, அரசியல் மற்றும் பொது வாழ்வில் பக்க துணையாக நின்று என்னை உச்சத்தில் உயர்த்தி அழகு பார்த்தவர் என்றரீதியில் அவரது மறைவு என்னை மீளாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரில் ஆழ்த்தியுள்ளது. எனது தாய், தந்தை மரணித்த உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

மருதமுனைப் பிரதேசத்தில் அனைத்து இன்ப, துன்பங்களிலும் அவர் பங்கேற்றுள்ளார். மருதமுனையின் கல்வி எழுச்சிக்காக மாத்திர மின்றி அனைத்துத் துறைகளினதும் வள்ச்சிக்காக அவர் என்னுடன் இணைந்து பாடுபட்டுள்ளார். ஊரின் அபிவிருத்திக்காக நான் மேற் கொண்ட அனைத்து முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் அவ்வப் போது ஆலோசனைகள் வழங்கி பக்கத்துணையாக செயற்பட்டு வந்தார்.

அநுராதபுரம், பொலன்னறுவை, கேகாலை, புத்தளம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய பழீல் மௌலானா மிகவும் கஷ்டமான கால கட்டங்களில் மருதமுனை யின் இரு கண்களான அல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பொறுப்பேற்று அவற்றை மிகவும் சவால்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பினார். அதேவேளை, கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமையாற்றி முழுக் கல்முனைப் பிராந்தியத்திற்கும் கல்விச் சேவையாற்றியுள்ளார்.

***(தினகரன், 28.02.2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழீல் மௌலானாவின் மறைவு கல்வித்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்

**- அஸ்வர் எம்.பி. அனுதாபம்**

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஸ்தாபக உறுப்பினரும் அதன் உப தலைவருமான அபுல் கலாம் அஸ்ஸெயித் பழீல் மௌலானாவின் மறைவு கல்வித்துறைக்கு ஏற்பட்ட பேரிழப் பாகுமென பாராளுமன்ற பேரவை உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பி னருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்திய அவர் அறிவுத்திறமைமிக்க சிறந்த கல்விமானாவார். செனட்டர் மசூர் மௌலானாவின் சிறிய தந்தையான அவர் எமக்கு பல்வேறு ஆலோசனைகள் வழிகாட்டல்கள் வழங்குவார். நாம் கிழக்குக்கு விஜயம் செய்யும்போது அவரை மருதமுனைக்குச் சென்று சந்திப்பேன். அவர் தரும் வழிகாட் டல்கள் எமக்கு பெருந்துணையாக அமைந்தன. கல்வி ஆர்வம் மிக்க அவர் கல்விக்காக தனது இறுதிக் காலம் வரை பங்காற்றினார்.

அவரைப் போன்ற மூத்த அனுபவம்மிக்க கல்விமானைக் காண்பது அரிது எனவும் ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி.யின் அனுதாபப் பிரேரணை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***(தினகரன் 26.02.2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தலைவர்களை உருவாக்க கல்வியை கருவியாகக் கொண்டு கருமமாற்றியவர் பழீல் மௌலானா

**- மா.ச. உறுப்பினர் இராஜேஸ்வரன் அனுதாபம்**

சொல்லிலும் செயலிலும் ஒருமைப்பாட்டை பேணி, உண்மையாக வாழ்ந்த உத்தம புருஷர் பழீல் மௌலானா. அன்னார் மருதமுனை மண்ணின் முதிர்ந்த கல்வி வைரம். அவரது மறைவு தமிழ் பேசும் மக்களுக்கேற்பட்ட பேரிழப்பாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

மருதமுனையின் மூத்த கல்விமானும் மார்க்கசீலருமான ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானாவின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி பழீல் மௌலானா நாட்டின் நாலா திசையிலும் காத்திரமான கல்விப் பணியாற்றியவர். சமூகப் பொருத்தப்பாடுமிக்க தலைவர்களை உருவாக்க கல்வியை கருவியாகக் கொண்டு கருமமாற்றியவர்.

மூத்த அரசியல்வாதி மசூர் மௌலானாவின் சிறிய தந்தையாக விளங்கிய அன்னாரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

***(வீரகேசரி, 26.02.2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிஞர் பழீல் மௌலானா பாரம்பரியத்தினாலும் செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர்

– அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ

பழீல் மௌலானா என்ற தமிழ் பேரறிஞர் மறைந்தார் என்ற செய்தி அவருடைய வாழ்வுப்பதியாகிய மருதமுனைக்கு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னார் பாரம்பரியத்தாலும் செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர். நூல்கள் பல எழுதா விட்டாலும் ஏராளம் ஏராளம் கவிதைகளை எழுதிவிட்டுச் சென்றிருக் கின்றார். இவை சேகரித்து நூலாக்கப்பெற வேண்டியவை.

இவ்வாறு முதுபெரும் கல்விமான் அருட் சகோதரர் முனைவர் எஸ்.ஏ.ஐ. மத்தியூ பழீல் மௌலானாவின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பழீல் மௌலானா தனது 92வது அகவையில் வல்ல இறைவனை நோக்கி பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார். இருப்பினும் அவர் விட்டுச் சென்ற எச்சங்கள், அவர் ஆற்றிய பணிகளின் மூலம் அவர் எம்மிடையே என்றும் வாழ்வார். மருதமுனை பல சான்றோர்களை ஆன்ற கிராமம். அறிஞர் முகைதீன் பாவா, புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.எல். ஜமால்தீன் போன்ற பெரியார்களை இலகுவில் மறந்துவிட முடியாது. புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீன் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் மாணவர். அவர் வழிவந்த பழீல் மௌலானா ஓர் கல்வி விருட்சம்.

அரசியலிலும் சமூகப் பணிகளிலும் பேசப்படும் முன்னாள் செனட்டர் மசூர் மௌலானாவின் சிறிய தந்தையார், மௌலானா குடும்பத்தைச் சேர்ந்த பழீல் மௌலானா பண்பு நலன் சார்ந்த தலைவர். இவர் வழியைப் பின்பற்றியவர்களுள் பிரபல எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர்க்கொத்தன், கல்வியியலாளர் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் ஆகியோர் அடங்குவர்.

பழீல் மௌலானா நாவில் தமிழ்க் கவிதை அருவியாக ஓடும். எனது துறவற வாழ்வின் 50 வருட நிறைவு குறித்து அவர் எழுதிய 'வியப்பு' என்ற கவிதை வியப்பு என்ற சொல்லின் ஆழத்தைப் புரிய வைத்தது.

கல்வியதிகாரிகள் மத்தியில் அன்று அவர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர். இன்றைய கல்வி அதிகாரிகளுக்கு அவர் ஓர் இலக்கணம். இன்று அவர் ஒரு தொல்காப்பியம். அவர் ஒரு அருள் வரம் பெற்றவர். நன்மக்களைப் பெற்றவர். வாழ்வில் றொபின்சன் குருசோவாகத் திகழ்ந்தவர். சுயதேடலுள்ள குழந்தைகளைப் பெற்றவர். ஏன் மற்றவர் களையும் அஃதே வளர்த்தவர்.

அன்னாரின் மூத்த மகன் எனது மாணவன். அவர்தான் சட்டத் தரணி அமீருள் அன்ஸார் மௌலானா. என்னை எங்கு கண்டாலும் காரைவிட்டு இறங்கிவந்து மரியாதை செய்வார். இதனையே பழீல் மௌலானா தனது செல்வங்களுக்குப் போதித்தார்.

எம்மத்தியில் பெருவாழ்வு வாழ்ந்த அந்த மகனின் ஆன்ம ஈடேற்றத்திற்காக யாவரும் இறைவனை மன்றாடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

***(தினகரன் 28.02.2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழீல் மௌலானாவின் மறைவு முஸ்லிம் கல்விச் சமூகத்திற்கு பெரும் இழப்பு

**- முஸ்லிம் கல்வி மகாநாட்டின் பொதுச் செயலாளர் தேசமான்ய எம்.வை.ஏ. பாவா**

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாடு 1964இல் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஸ்தாபக உறுப்பினராகவும், உப தலைவர்களில் ஒருவராகவும் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் சாபி மரைக்காருடன் இணைந்து நம் நாட்டின் முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய மருதமுனையைச் சேர்ந்த மூத்த கல்விமான் பழீல் மௌலானாவின் மறைவு முஸ்லிம் கல்விச் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும்.

மருதமுனையின் கல்விக் கலங்கரை விளக்குகளாக விளங்கும் ஷம்ஸ், அல்-மனார் மத்திய கல்லூரிகளின் அதிபராகக் கடமையாற்றி பல கல்வியியலாளர்களைத் தோற்றுவிப்பதில் முனைப்பாக இருந்த கல்விமான். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பல உயர் பதவிகளில் இவரின் கல்விச் சிந்தனைகளை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

மருதமுனையின் கல்வி வளர்ச்சியோடு மட்டுமன்றி ஆத்மீக, சமூக துறைகளிலும் பின்னிப் பிணைந்து செயற்பட்டார். கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரியாக சிறந்த ஆளுமைமிக்க அதிகாரியாக அன்பான, பண்பான வழிகாட்டியாக ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் மத்தியிலும் நீங்காத இடம்பிடித்தவர். பழீல் மௌலானா அவர்கள் தனது 93வது வயதில் இறையடி சேர்ந்ததையிட்டு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் பொதுச் செயலாளர் தேசமான்ய எம்.வை.ஏ. பாவா கல்வி மகாநாட்டின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரை இழந்து நிற்கும் குடும்பத்தவர்களுக்கும் மருதமுனை மக்களுக்கும் ஆறுதல் கூறுவதோடு அல்லாஹ் அவரின் சமய, சமூக, கல்விப் பணிகளை அங்கீகரித்து சொர்க்கத்தில் இடம்கொடுக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஸ்ஜிதுல் மினன் உருவாக்கத்தில் மர்ஹூம் பழீல் மௌலானாவின் பங்களிப்பு காத்திரமானது

**- கே.எல்.ஏ.வாஹித், ஓய்வு பெற்ற அதிபர்**

*பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவு 1980 களில் கவனிப்பாரற்று, கலாசார சீரழிவுகளுக்கு உட்பட்டிருந்தபோது அதன் பேரில் கவலையை வெளிப்படுத்தி இப்பகுதி வாழ் முஸ்லிம்களுக்காக ஒரு மஸ்ஜிதை "மஸ்ஜிதுல் மினன்" என்ற பெயரில் உருவாக்கிய ஆத்மீகத் தந்தை அறிஞர் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் தனக்கென ஒரு நிலையான தர்மத்தை இதன் மூலம் விட்டுச் சென்றுள்ளார் என மஸ்ஜிதுல் மினன் ஆயுட்காலத் தலைவர் அல்-ஹாஜ் ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.ஏ. வாஹித் தெரிவித்தார்.*

*மஸ்ஜிதுல் மினன் பரிபாலன சபையால் மறைந்த பழீல் மௌலானா அவர்களின் பெயரில் குர்ஆன் ஓதி தமாம் செய்தலும் இரங்கல் கூட்டமும் வெள்ளிக்கிழமை 01.03.2013 இல் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த வைபவத்திலேயே மேற்படி கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன.*

*மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசலின் பொதுச் செயலாளரும் ஓய்வு பெற்ற அதிபருமான அல்-ஹாஜ் ஏ.எம்.ஏ. சமத் அவர்கள் உரையாற் றும் போது "மர்ஹூம் பழீல் மௌலானா தனது வாழ்வில் பல்வேறு பரிணாமங்களை கல்வி மூலம் அடைந்தார். கல்வியின் நோக்கு, இலக்கு, விளைவு பற்றி தெளிவாக விளங்கிய கல்விமான். விழுமியங் களை அறிமுகப்படுத்தி அவற்றை தமது நடத்தையில் நிலைநாட்டியவர். 1978 சூறாவளியைத் தொடர்ந்து மருதமுனையில் உருவான கல்விச் சூறாவளிக்கு முகம் கொடுத்து, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தரமுயர்த்தப்பட்ட போது பெரிய பதவியான வட்டாரக் கல்வி அதிகாரி பணியைத் துறந்து பாடசாலை அதிபராக தனது அந்திமகாலத்தில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய விதம் அவரை ஆளுமையுள்ள அதிபராக அலங்கரிக்க வைத்தது.

மஸ்ஜிதுல் மினன் வளர்ச்சிக்கு நாடு தழுவிய ரீதியில் அன்னார் எமது பரிபாலன சபையை அழைத்துச் செல்லும்போதெல்லாம் அவரது தேசிய அறிமுகம் எமக்கு நன்கு புலப்பட்டது. ஸலாம் சொல்லி அறிமுகமாகி நன்கொடையாளர்களுக்கு அன்னார் மேற்கொள்ளும் துஆப் பிரார்த்தனை பலரது மனங்களை நெகிழ வைக்கும். அவரது வழிகாட்டல், ஆலோசனை காரணமாகவே இன்று எமது மஸ்ஜிதுல் மினன் பூரணமும் அழகும் நிறைந்த மஸ்ஜிதாக மலர்ந்திருக்கின்றது.

மேற்படி நிகழ்வின் ஏற்பாட்டாளர் அல்-ஹாபிழ் எஸ்.எம். நஜ்முத்தீன் (ஹஸனி) அவர்கள் உரையாற்றும்போது "பழீல் மௌலானாவின் பரம்பரை எமன் தேசத்து அறபு வம்சத்தோடு தொடர்புபடுவது மட்டுமல்ல, சாதுலியா தரீக்காவின் கலீபாவான இவரது தந்தை ஐதுரூஸ் மௌலானா 'கலீபத்துஸ் ஷாதுலி' என தென்னிலங்கையில் பிரசித்தமானவராக 1930 களில் விளங்கினார். தந்தையின் வழிகாட்டல் தனயனுக்குச் சிறப்பாகக் கிடைத்ததால் மௌலானா அவர்கள் மௌலவியாக இல்லாத போதிலும் ஒரு தகுதி வாய்ந்த மௌலவி போன்று சன்மார்க்கப் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் பழீல் மௌலானாவின் குடும்பம் சார்பில் நன்றியுரை நிகழ்த்திய அஷ்-ஷெய்க் எப்.எம். அஹ்மத் அன்சார் மௌலானா (நளீமி) அவர்கள் எனது தந்தைக்கும் மஸ்ஜிதுல் மினனுக்கும் இடையிலான உறவு அவரது மறைவுக்குப் பின்னரும் தொடர வேண்டுமெனவும் மேற்படி நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்காக மௌலானாவின் குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*25.02.2012 திங்கள் இன்று இறையடியெய்திய எமது முன்னாள் அதிபர்*
**அபுல்கலாம் அல்ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஜே.பி.**
*அவர்களுக்காக மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி கல்விச் சமூகம் வெளியிடும்*

## இரங்கற்பா

*பெப்ரவரி இறுதித் திங்கள் விடிகாலைப் பொழுது இன்று*
*ஒப்பற்ற உயர்ந்த செம்மல் மௌலானா பழீல் அவர்கள்*
*இப்புவியை நீங்கி தம் இறைவனடி சேர்ந்துவிட்டார்*
*எப்பொழுதுமே இறை அழைப்புக்குக் காத்திருந்த*

*மருதத்தின மகுடம் ஒன்று மண்ணினில் சாய்ந்த சேதி*
*காற்றினில் கலந்து வந்து காதினில் வீழ்ந்தபோது*
*மூச்சையும் விட மறந்து மூழ்கினேன் துயரச் சேற்றில்*
*பேச்சையும் இழந்து மனம் பேதலித்து அமர்ந்துவிட்டேன்.*

*செல்வங்கள் எட்டு பெற்று சீர்பெற வாழவைத்த*
*நல்மகன் அரபி ஆலிம் ஐதுருஸ் நீடு வாழ்ந்தார்.*
*செய்யது வம்சம் ஒன்று எழுந்தது மருதமண்ணில்*
*உய்ய நற்பணிகளீந்து உதவினார் மனிதம் வாழ*

*செல்வங்கள் எட்டிலொன்றாம் மௌலானா பழீல் அவர்கள்*
*அல்மனார் கற்றுத்தேர்ந்தறிவினைப் பெற்றுயர்ந்தார்*
*அல்மனார் கலையகத்தின் ஆசிரிய பணியமர்ந்தார்*
*அல்மனார் கல்விச்சாலை அதிபராய் உயர்ந்து நின்றார்.*

*மண்ணினில் வாழ்ந்தபோது மணி முடி பல தரித்தார்*
*முன்னணி வாலிபர்கள் சமூகசோதி பட்டமும் தந்து நின்றார்*
*அபுல்கலாம் என்ற பட்டம் பேச்சாற்றல் தந்த சொத்து*
*பொன்மனம் கொண்ட பழீல் மௌலானா தங்களானார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பத்தி எட்டாம் ஆண்டு சேர்ந்துகொண்டார்
நாட்டினில் பல நகர்கள் பணிகளும் புரிந்து நின்றார்
பதவியில் உயர்ந்து கல்வி அதிகாரி பணியும் ஏற்றார்
உதவிகள் பல புரிந்து தாழ்ந்தவர் வாழச் செய்தார்.

பூவினில் வாழ்வதற்கு சின்னலெப்பை ஹாஜியின் மகள் வரித்தீர்
ஏழினை மகவாய்ப் பெற்று வாழ்வினில் பயனடைந்தீர்
போற்றிடும் வண்ணம் அவர்தம் வாழ்வையும் ஏற்றி வைத்தீர்
நாற்றிசையெங்குமே நற்பெயர் பெற்று அவர் வாழுகின்றார்.

கல்முனை நகரமர்ந்து கல்விப்பணி புரிந்தபோது
ஷம்சுல் இல்ம் பெயரும் சூட்டி சரித்திரம் படைத்து நின்றார்
ஷம்சுல் இல்ம் தரம் உயர்ந்து மகா பெயர் தரித்தபோது
தம்பெரும் பதவி நீங்கி எம்முயர் அதிபரானார்.

ஷம்ஸ் இல்ம் தடம் பதிக்க தூங்காது பணி புரிந்தீர்
ஷம்சுல் இல்ம் கல்வி வாழ ஆசிரியர் பெற்றுத் தந்தீர்
கல்லூரி வாழ்வதற்கு நல்வார்த்தை கூறி நின்றீர்
எல்லோரின் உள்ளமெங்கும் நீங்காது இடம்பிடித்தீர்...

சென்ற இடங்களெல்லாம் சேவையின் சிகரமானார்
குன்றிய பல இடங்களில் சன்மார்க்கம் தழைக்கச் செய்தார்
கேகாலை நகரத்திலோர் பள்ளியை அமைத்து வென்றார்
ஏகனின் இல்லஞ்சென்று ஹஜ்ஜைப் பூர்த்தி செய்தார்.

ஆத்மீகம் தழைக்க என்றும் அயராது பணி செய்தீர்
சாத்வீகமாய் நடந்து கபீர் ரஷ்டியாய் சேவையீந்தீர்
மாற்றாரும் போற்றும் பல மாண்புகள் பெற்றுத் தந்தீர்
போற்றும் நற்போசகராய் மினன் மஸ்ஜித் காத்து வந்தீர்.

மண்ணினில் வாழ்ந்தபோது மகிமைகள் பல பெற்றீர்
எண்ணிலா மக்கள்தம் இதயத்துள் சென்றிருந்தீர்
கண்ணிலும் மேலாம் சன்மார்க்கத்தின் வழிநடந்தீர்
புண்ணியம் தேடி நற் புனிதராய் வாழ்ந்து வந்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிரந்தரம் இல்லா வாழ்வை நேசிக்க மறுத்து நின்றீர்
பரந்த இவ்வுலகில் என்றும் பற்றின்றி வாழ்ந்து வந்தீர்
படைத்தவன் நினைவு கொண்டு பள்ளியில் தரித்திருந்தீர்
படைத்தவன் குர்ஆன் ஓதி நேரத்தைக் கழித்து வந்தீர்
சுபுஹினில் தொழுதுவிட்டு சோர்வாகிச் சாய்ந்தபோது
ஓய்ந்தது உங்கள் மூச்சு நோய் நொடி தீண்டவில்லை
சேய்களும் சேரவில்லை நீரமுதம் ஊட்டவில்லை.
ஆய்ந்திதைக் கற்க வேண்டும் அனுதினமும் பேண வேண்டும்*

*எல்லாரும் அறிந்த வல்லான் நும்பிழை பொறுத்து
வல்லாரைச் சேர்த்து வைக்கும் நற்சொர்க்கமாம்
பிர்தௌசில் சேர்த்துவிட வேண்டுமென்று
கரமேந்திக் கொள்கின்றோம் கருணைமிகு நாயனிடம்.*

*இவ்வண்ணம் :*

*அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
SDC, OBA *மற்றும் நலன் விரும்பிகள்*
*மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி*

*வரிகள்:*

***அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. சமது***
***ஓய்வுபெற்ற ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர்***
***25.02.2013***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரியும் எமது கல்லூரியின் முன்னாள் அதிபருமான*

## பழீல் மௌலானா சேர் அவர்களின் மறைவையொட்டி...

*நேற்று*
*இன்று நாளை...*
*இதே வரிசையில் நீயுமாக.*
*1920 டிசம்பர் கடைசியில் பிறந்தீர்*
*அல்மனார் மத்திய கல்லூரியிலும்*
*கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலுமாக*
*முதற்கல்வி தொடர்ந்தீர்.*

*1950 –1951 வரையில்*
*அதிபராக அல்மனாரிலும்*
*1962 – 1978 வரை*
*வட்டாரக் கல்வி அதிகாரியாக*
*கல்முனை தொடங்கி*
*குருநாகல், பொலநறுவை, அனுராதபுரம், புத்தளம்*
*என தீவின் முழுப் பகுதியிலும்*
*அறிவுக் கல்வியைத் தெளித்தீர்*

*ஆங்கிலத்தில் ஓர் அதிபராய்*
*முதற் கண்டது உன்னையே என்று- இன்று*
*ஊர் பேசுகிறது- அது 1979 களில்*
*தரமுயர்த்தப்பட்ட ஷம்ஸ் மத்திய கல்லூரியின்*
*முதல் அதிபர்.*

*1981 இல் ஓய்வுக்குப் பாத்திரமானீர்*
*சமயத்தோடு அதீத தீவிரப்பட்டதாரி*
*அட்டாளைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை*
*அறபுக் கல்லூரி, எட்டு வருடங்கள் உனைப் பயன்படுத்தியது*
*எமது மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பள்ளிவாயலில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கால் நூற்றாண்டு கடமைபுரிந்தீர்*
*அல்மினன் பள்ளி எழுந்தது உம்மார்வத்தால்*
*அதனால்தான் அதிலும் 'ஆயுட்கால நம்பிக்கையாளர்'*
*'சமாதான நீதவான், பேச்சின் தந்தை,*
*இ.போ. சபையின் பணிகள் சபையின் கௌரவ தலைவர்'*
*இவைகளெல்லாம் நீ தேடாமலே கிடைத்த பட்டங்கள்.*

*எதிலும் நிதானம்*
*ஏழு பிள்ளைகள் பராமரித்ததிலும்*
*உன் வீரம் குறைந்துவிடவில்லை.*

*சரி...*
*இத்தனைக்கும் நேற்றை வரைக்கும்*
*தொழுகையின் ஆரம்ப ஸப்புகளில்தான்*
*உன் பாதங்களை மக்கள் பார்த்திருக்கின்றனர்*
*மாஷா அல்லாஹ்...*

*பிரார்த்தனைகள் மட்டுமே*
*எங்களிடமிருப்பவை*
*இறைவா..*
*ஜன்னதுல் பிர்தௌஸ் நாடிவிடு யா அல்லாஹ்...*
*என்றும் பிரார்த்தனைகளுடன்*

*அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு, அல்மனாரின் நலன் விரும்பிகள் உள்ளிட்ட அல்மனாரின் மகா சபை.*
*25.02.2013*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியின் ஆசிரியர் ஜனாப் F.M.A. ஜின்னா மௌலானா
அவர்களின் அன்புத் தந்தை

**ஐ.எம்.எஸ்.எம். பழீல்மௌலானா J.P**

(ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி) அவர்களுக்கு எமது

# விழிநீர் அஞ்சலி

வந்தது உங்கள்
பிரிவுச் செய்தி- நொந்து
வெந்தது எங்கள் சுற்றங்கள்
சொல்லி ஒரு வார்த்தை
சென்றாயோ விண்ணுலகம்

மௌலானா என்ற சொல்லுக்கு
நீங்கள் காட்டும்
மென் சிரிப்பு மண்ணுடன்
சங்கமமாகியது சத்தமில்லாமல்
எப்படிக் காண்பது உங்கள்
திருமுகத்தை ஏங்குகிறோம் நாங்கள்

எண்ணங்கள் போல இவ்வூரில்
சுற்றங்களுடன் கொண்டிருந்த உறவுகள்
உதடு மூடி கிடக்கிறதே
உங்களின் சொர்க்க பயணத்தால்

பற்றிமா என்று சொன்னால்
பரந்த மனம் கொள்வாய்
உற்றவனாய் எம்மோடு- உறவாடி நின்றாய்.

**கார்மெல் பற்றிமா கல்லூரி (தேசிய பாடசாலை)**
**கல்முனை**
***25.02.2013***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த வாழ்வுக்கு நீங்கள் ஒரு சிறப்பு!

### மருதமுனையை நேசிக்கும் அனைத்துப் பொதுமக்கள்

புன்னகையின் பூவொன்று
உதிர்ந்துவிட்டது.
மருதமண்ணை மகிழ்வித்த
சந்தோசப் பூவொன்று
சருகாயிற்று.
பசுமையின் ஈரம் காய்வதற்குள்
கருக்கிவிட்டது எங்கள்
காயங்களற்ற இதயங்களை
துயரத்தின் மௌனத்தால்
துயில்கொண்டு கிடக்கிறது
மீளாத் துயர் கண்டு.

ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா
உங்கள் மரணச் செய்தி
மனித மனங்களில்
இறுக்கமாய் இருக்கைபோட்டு
உறக்கம் கொள்வது போல்
ஓர் உணர்வு.

மேகம் இருட்டாமல்
இடி, மின்னல் ஏதும் நடக்காமல்
காற்றுக்கூட பெருமூச்சு எறியாமல்
கண்ணீர் மழை கொப்பளித்து
இதயம்-
கவலை கொண்டு நனைந்துவிட்டது.

ஐதுரூஸ் மௌலானா பரம்பலில்
அறுதியாய் இருந்த ஆவணமும்
அழிந்தாலும் அதன் பதிவுகள்
அழியாமல்-
தெளிந்த நீரோடை தெரியும்
நிழலாகி-
கல்விப் பேரூற்றில் சுழியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மருதமுனை மண்ணுக்கு
புகழைப் புயலாக்கி
புதுப் புரட்சி கண்டது.
பெற்றார் பேணுதலால்
நீங்கள் பெற்ற கல்வி
ஆசிரியப் பெருந்தகையாய்
உங்களை
1950 இல் அழகுபார்க்க
அல்மனார் அதிபராய்
ஷம்ஸ் தரம் உயர்வு பெற்றபோது
அதிபராய்
உங்கள் சேவை கண்டு பயன்பெற
அநுராதபுரம், கேகாலை
பொலநறுவை வட்டாரக் கல்வி அதிகாரியாய்
கிழக்கிலங்கை அரபுக் கலாசாலை
அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத்
மத்ரஸாவும் உங்கள் பயனால்
பெரும் உயர்வு கண்டதுவே.

அமைதியாய் வாழ்ந்து அழகாக்கி
அன்பை இன்னுமழகாக்கி
பெருமையற்ற கொள்கை
பேணுதல் கொண்டு
பெருவாழ்வால் சிறந்த பெருமகனே
நிரந்தர-
உறக்கம் கொள்கின்ற கண்கள்
சிரித்த முகமாய் பூத்திருக்கும்
உங்களுருவம்
சிறந்த வாழ்வுக்கு ஒரு சிறப்பு

மறுமையிலும் நீங்கள்
சிறப்புற்று வாழ
அல்லாஹ்வைப்
பிரார்த்திக்கின்றோம்.

**கவிதை வரிகள் :**
**கலைதாஸன் ஹக்கீம்**
***25.02.2013***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும் சமாதான நீதிபதியுமான
**மர்ஹூம் அல்ஹாஜ் ஐதுரூஸ் மௌலானா செய்யது முஹம்மது பழீல் மௌலானா அவர்கள்**
25.02.2013 அன்று காலமானதையிட்டு
மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தினரால்
வெளியிடப்படும்

## இரங்கல் குறிப்புக்கள்

இன்னாலில்லாஹி வயின்னாயிலைஹி ராஜியூன்
இறைவனின் அஜலோடு
பொருந்திக் கொண்டாலும்
நீங்கள் விட்டுச் செல்லும் அடையாளங்கள்
எங்களுக்குள் முத்துக்கள்தான்

மண்ணிற்கு முகவெற்றிலை தந்த
கல்விச் சிகரம் நீங்கள்
அதனால்தான்
உங்களால் பிரகாசம் கொண்டது ஊர்
இன்றைய பௌர்ணமியைப்போல

கல்வியே ஊரின் கண்ணென
கருக்கொண்டு
அல்மனார், ஷம்ஸ் பாசறைகளில்
அதிபர் மகுடம் சூட்டினீர்

மஸ்ஜிதுல் மினனின்
உருவாக்க உயர்ச்சியில்
தளபதியாய்த் திகழ்ந்து
மஸ்ஜிதுல் கபீர்
நம்பிக்கையாளர் சபையிலும்
டிரெஷ்டியாக வீற்றிருந்தீர்.

கலாசார விழுமியங்களை
வேரூன்றச் செய்து
அழகு பார்த்த பெருந்தகை நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரம், கள்-எலிய, கேகாலை
பொலநறுவை, குருநாகல், புத்தளம் மண்ணிலும்
போற்றும் கல்வி அதிகாரியாய்
அணி சேர்ந்தீர்.

இலக்கியம், அரபு, ஆங்கிலம்,
செந்தமிழும் உமக்குள்
வசப்பட்டவை.
இதனால்தான் நீங்கள் பிரசவித்த
அல்குர்ஆன் ஞானமணிக்கோவையை
எங்கள் வீரர்களால்
வெளிக்கொணர முடிந்தது.

சின்னலெவ்வை ஹாஜியார் ஆமினா
உம்மாவை நல்மணம் செய்து
சித்தி நூறுல் ஐன்
தாஜுல் ஐன்
பௌசுல் ஹினாயா
அமீருல் அன்சார் மௌலானா
அஹமதுல் அன்ஸார் மௌலானா
இஸ்ஸதுல் ஹினாயா
ஜின்னா மௌலானா
மகவுகளையும் அழகாய் கிடைக்கப் பெற்றாய்.
செனட்டர் மசூர் மௌலானாவின்
சிறிய தந்தையாய் வாய்க்க
ஹஸன் மௌலவி
முஸ்தபா அதிபர்
ஸாஹிர் மனேஜர்
விளையாட்டு அதிகாரி மஃதூம்
அன்பு மாமனாராய் மிளிர்ந்து
ஜெமீல் (லக்கி)
ஜமால்தீன் ஜே.பி.
இவ்வுள்ளங்களுக்கும்
இளைய மாமனாராய் வலம் வந்தீர்.

ஈருலகிலும் ஈடேற்றம்பெற இரு கரம் ஏந்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்- 3
## நினைவுக் கட்டுரைகள்

# Faleel Moulana - A Beacon Light

Eng I.A. Hameed, Former Chairman of REPPIA, Former Chairman of Kalmunai Pradeshya Sabha, Former Director of SLILG

*A beacon of light in the village Maruthamunai in Ampara district, I.M.S.M. Faleel Moulana breathed his last on February 25 at the age of 93. He was one of the most loved persons in Maruthamunai, being versatile as a teacher, School inspector, Principal, community leader, social worker, spokesman for the under- privileged and a fighter for social justice.*

*A well-dressed person from his middle age (I came to know him only at this stage), he believed in a polished look, quite different from the attitude of those of his age who hardly cared for their dress or appearance. Despite his age, he was physically and mentally agile and insisted on walking to the mosque half a kilometer away for his five time prayers daily.*

*This soft spoken gentleman was very polite in addressing people even if they were young children. Well versed in Tamil and English, he was an orator and earned a name for himself as 'Abul kalam' (Father of words). He is a paternal uncle of former Senator Al-Haj. S.Z.M. Mashoor Moulana. My acquaintance with him started when I was in the 4th standard in Al-Hidhaya Maha Vidyalaya, at Veerathidal, Central Camp at which time he assumed*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*duties as the Head Master of that School. He was an immense inspiration for both teachers as well as the students in the School, giving equal weight to educational as well as extra-curricular activities. The days when I acted in numerous school plays under his stewardship are still fresh in my mind. He had a talent in spotting a student's inborn abilities. He encouraged me to write poems in Tamil, having noticed my literary orientations.*

*He was unhappy when he came to know that I was unable to read the holy Quran easily and flawlessly. Therefore, he donated me a copy of the Holy Quran and instructed me to be able to read it effortlessly.*

*May almighty Allah grant Faleel Moulana sir Jannathul Firthous, Ameen.*

***(Daily News, 17th Wednesday, April 2013)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டின் சிகரம் பழீல் மௌலானா

## தேசகீர்த்தி அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. சமது ( ஓய்வுநிலை அதிபர் )

சான்றோர்கள். தவச்செல்வர்கள், தன்னலமற்ற சேவையாளர்கள், ஞானர்கள், கொடையாளர்கள், குடிகொண்டிருந்த அமைதித்தலம் மருதமுனை. இறையச்சம் பயபக்தியுடையவர்களைச் சுமந்த பூமி. நல்லவர்களே நடந்தேறிய நன்னிலம். இப்பூமியில் உருவான எண்ணற்ற மக்களால் கண்ணியம் நிறைந்த இம்மண்ணிற்கு மாற்றாரிடத்திலும் மகோன்னத மதிப்பும் மரியாதையும் உண்டு. புகழுடன் தோன்றி புகழோடு மறைந்த மாசற்ற பல மனிதகுல மாணிக்கங்களால் இருளகன்ற பூமி, நாடி வந்த தவசீலர்களை ஆரத்தழுவி ஆட்கொண்ட பூமி.

'அறபி ஆலிம்' அல்ஹாஜ் ஐதுரூஸ் மௌலானாவை அரவணைத்துக் கொண்டது. எமன் தேசத்து அரபு வம்சாவழியைச் சேர்ந்த அன்னார் பெற்றெடுத்த அன்புச் செல்வங்களில் ஒன்றுதான் அல்ஹாஜ். ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள். இளமைப் பராயத்தில் தந்தை சொல் ஏற்ற நற்றனையனாக வாழ்ந்து ஆத்மீக இலௌஹீக கல்வியினைக் கற்றுச் சிறப்புற்றார்கள். அன்னாரின் நடத்தையிலும் செயற்பாடுகளிலும் இறையச்சம் மேலோங்கியிருந்தது. இதனைக் கண்டு பெற்றோரும் பெருமிதம் கொண்டனர். சிறுபராயம் முதல் மக்களை மதித்து மனங்குளிரச் சிரித்து மகிழ்வாகப் பேசிப் பழகும் பால்குடையவர். ஸலாம் கூறுவதிலும் உறவுமுறை சொல்லி அழைப்பதிலும் சமூகத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர். தனது உடைகளின் தூய்மையினாலும் அவற்றை அணிவதன் நேர்த்தியினாலும் முன்மாதிரிமிக்கவர்.

பாகிஸ்தானின் விடுதலைத் தந்தை 'காயிதே ஆஸம்' முகம்மதலி ஜின்னா அவர்களை நேசித்து மதித்து அவர் அணிந்த வண்ணமே தொப்பி அணிந்தவர். தான் பெற்ற அன்புப் புத்திரன் ஒருவருக்கும் முஹம்மத் அலி ஜின்னா மௌலானா என்று பெயரிட்டு மன நிறைவடைந்தவர்.

கற்ற கல்வியை, ஞானத்தை மற்றவர்கட்கு புகட்டுவதில் நிகரற்றவர். பல மணித்தியாலங்கள் மேடைகளில் பேசும் வல்லமை உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய காலகட்டத்தில் நடைபெறும் மீலாத் விழாக்களில் பிரதம பேச்சாளராக பழீல் மௌலானா அவர்களே திகழ்வார். இதனால்தான் 'அபுல்கலாம்'- பேச்சின் தந்தை விஷேட பட்டப்பெயர் சூட்டப்பட்டது.

தனது செயற்பாடுகள் அனைத்தையும் இறைவனை முன்னிறுத்தியே ஆரம்பம் செய்வார். அனைவருக்கும் அதீத உணர்வையூட்டி நெறிப்படுத்துவதிலும் திறமைமிக்கவர். எவரின் அவச்சொல்லையும் அவமதிப்பினையும் பொருட்படுத்த மாட்டார். கருணையுணர்வு இவரிடம் காணப்பட்ட மிகப்பெரும் குணமாகும். தன்னைப்போன்றே மாற்றாரையும் நேசிக்கும் மனப்பாங்குடையவர். வலியாரை மட்டுமின்றி, எளியவர்–தாழ்ந்தவர் அனைவரையும் ஒன்றாகவே நேசித்தவர்.

கற்பித்தல் கடமைக்காகச் சென்ற ஊர்களிலும் அண்டிய இடங்களிலும் தாழ்ந்த நிலையிலிருந்த சன்மார்க்க நெறிமுறைகளைச் சீர் படுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் உறுதுணை புரிந்தவர். தனக்கு அவசியமற்றது என்று ஒதுங்கிக் கொள்ளும் சுபாவம் இல்லாத பெருந் தன்மையாளன். மார்க்கப் பணிகளை நெறிமுறையுடன் நிறைவேற்று பவர். தன்னால் முடியுமானவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கி அதனை வழிநடாத்தி நிறைவுறும் வரை முனைப்புடன் ஈடுபடுவார்.

பாண்டிருப்பு மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசல் கட்டிட நிருமாணத்திற்காக பணவசூல் செய்யும் நோக்குடன் ஒரு றமழான் மாதத்தில் அன்னாருடன் இலங்கையின் பல நகரங் கட்கும் சென்றோம். ஒருநாள் ஜெய்லாணி என்ற இடத்தில் தங்க வேண்டிய நிலையேற்பட்டது. நாம் அங்கிருந்த பள்ளிவாசலுக்கு தறாவிஹ் தொழுகைக்காகச் சென்றோம். அன்றிரவு பெருமழை பெய்தது. வழமையாக தொழுகை நடாத்தும் இமாம் அவர்கள் வரவில்லை. பள்ளியில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் தொழுகை நடைபெறுமா, இல்லையா என்ற தவிப்பில் இருந்தனர். இவ்வேளையில் பழீல் மௌலானா அவர்கள் தான் கற்றிருந்த மார்க்க அறிவின் துணையினால் தறாவிஹ் தொழுகையை மிகவும் நிதானமாகவும் சிறப்பாகவும் பயபக்தி உணர்வுடன் தொழுவித்தார்கள். அங்கு அன்னாருக்கு மிகவும் அன்புடன் கூடிய மரியாதையையும் நன்றியையும் அம்மக்கள் வழங்கினர், கூட இருந்த எம்மையும் சகலருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கல்வி ஞானத்தால் அகந்தை கொள்ளாது எளிமையாக வாழ்ந்த அன்னாரின் மார்க்கப் பணி இளமையிலிருந்தே சுடர்விட்டுப் பிரகாசித்தது. தான் அறிந்தவற்றை தன்னையண்டிய அனைவரிடத்திலும் திணித்துச் சேர்த்துவிடும் சிறப்பம்சம் இவருக்கேயுரித்தான குணப்பாங்காகும். அடுத்தவரின் இகழ்ச்சி, இழிச்சொல்லுக்கு கிஞ் சிற்றும் தயங்காது துணிந்து செயற்படுபவர். சமூகத்தில் ஊடுருவும் சன்மார்க்கத்திற்கு எதிரான கருத்துக்களை மறுத்துரைப்பதிலும் செயற்பாடுகளைச் செய்வதிலும் முன்னின்று செயற்படுவார். இளைஞராக இருந்தபோதே இவருடைய சன்மார்க்கச் செயற்பாடுகள் ஏனைய இளைஞர்களால் பிரமிப்பாக நோக்கப்பட்டது. அவர்களால் அன்னார் நேசிக்கப்பட்டதன் பிரதிபலிப்பே வழங்கிய 'சமூகஜோதி' பட்டம்.

பாடசாலையில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதுடன் நில்லாது பள்ளிவாசல்களின் குறைபாடுகளை அகற்றுவதிலும் அல்லும் பகலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவர். தனது பொருள், நேரம் அனைத்தையும் ஈந்தேனும்தான் தொடங்கிய பணியை நிறைவுசெய்வதில் வல்லவர். இதனால், தான் கற்பித்த கிராம மக்களாலும் அயற்கிராம மக்களாலும் உயர்ந்த மார்க்கப் பக்தியாளராக மதிக்கப்பட்டவர்; மேன்மைப்படுத்தப்பட்டவர். கேகாலைப் பிரதேசத்தில் கல்வியதிகாரியாகப் பணிபுரிந்தபோது கேகாலை நகரில் பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிக்க அன்னார் பங்களித்த பாங்கை வசூலுக்குச் சென்றிருந்த வேளையில் நகர வர்த்தகர்கள், கல்விமான்கள் பொதுமக்கள் சொல்லி வியந்த போது மனமகிழ்வுடன் பூரித்துப் போனோம்.

1979இல் தரமுயர்த்தப்பட்ட மருதமுனை ஷம்சுல் இல்ம் மஹா வித்தியாலயத்தின் முதல் அதிபராகப் பொறுப்பேற்று ஓர் இளம் அதிபரைப் போன்று துடிப்புடன் செயற்பட்ட மௌலானா அவர்கள் பல்வேறு பற்றாக்குறையுடன் ஓலைக்கொட்டில்களில் இயங்கிய கல்லூரிக்கு வளங்களைப் பெறுவதற்கும் அரச உதவிகளை ஈர்ப்பதற்கும் துரிதமாகச் செயற்பட்டார். புதிய ஆசிரியர்களை உடனடியாகப் பெறுவதற்கும் பொருத்தமான ஆசிரியர்களை இடமாற்றம் மூலம் உள்வாங்குவதற்கும் எடுத்த முயற்சிகள் பாராட்டப்பட்டன. அன்னாருடன் இணைந்து ஷம்சுல் இல்ம் மஹா வித்தியலாயத்தில் செயலாற்றிய போது அவரின் நிருவாகத் திறனையும் கண்டிப்பையும் ஆளுமையையும் கண்டு வியப்படைந்தேன். கனவானாக இருந்தபோதும் அகம்பாவமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் அரவணைத்து அமைதியாக ஆலோசனைகளை செவியேற்று செயற்பட்டார்.

பாண்டிருப்பு அல்-மினன் பள்ளிவாசல் தகரக்கொட்டிலாக அநாதரவுடன் காணப்பட்டபோது அதற்காக வருந்தி பூரணமான ஒரு நிரந்தர கட்டிடமுடைய பள்ளிவாசலாக நிர்மாணிக்க அன்னார் சபத மெடுத்து தனது முதுமையிலும் காட்டிய அக்கறையும் அவசரமும் முக்கியத்துவமும் இளையவர்களால் கூட பின்பற்ற முடியாதிருந்தது. கட்டடப் பணிகளுக்கு பணம், பொருள் வசூலிப்பதற்கு இலங்கையின் பல நகரங்களுக்கும் பள்ளிவாசல் பரிபாலன சபையினரை தனது தலைமையில் அழைத்துச் சென்றார். சென்ற இடங்களிலெல்லாம் மனம் சரியாது இதமாகவும் கனிவாகவும் அன்புடனும் பேசி பல்லாயிரக் கணக்கான ரூபா பணத்தை ஈட்டுவதற்கு காரண கர்த்தாவாகச் செயற்பட்டார். மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசல் பரிபாலன சபையின் ஆயுட்கால ஆலோசகராகச் செயற்பட்ட அன்னாருடன் 15 வருடங்களாக கடமை புரிந்தேன். பள்ளிவாசல் கட்டிடப் பணியினைப் பூர்த்தி செய்ய அன்னார் காட்டிய அக்கறையும் அவசரத்தையும் வேறொருவரிடமும் கண்டு கொள்ள முடியாதிருந்தது. அன்னாரின் கபடமற்ற தூய மனப்பாங்கினால் இன்று முழுமையுற்று அழகான தோற்றத்துடன் இப்பள்ளிவாசல் எழுந்து நிற்பதைக் காண முடிகிறது.

மௌலானா அவர்களை எனது இளம் பருவத்திலிருந்தே அவதானித்து வந்துள்ளேன். 1950 முதல் 1953 வரை அல்-மனார் மஹா வித்தியாலயத்தின் அதிபராகப் பணிபுரிந்தபோது தனது ஆற்றல் ஆளுமையினை வெளிப்படுத்தினார். காற்சட்டை கோர்ட்டுடன் தலைக்கு தொப்பியும் அணிந்து தனது இஸ்லாமிய கலாசார நடத்தையை தொடர்ந்தவர். இஸ்லாமிய நெறிமுறையில் இம்மியளவும் பிசகாது வாழ்ந்து வழிகாட்டியதும் தனது பணிகளை மற்றவரும் பின்பற்றி இறையை நேசித்த வாழ்வு வாழவேண்டும் என்ற அவாவுடன் திகழ்ந்தவர். தனது செயற்பாட்டிற்கெல்லாம் இயன்றவரை நேர்மையையே கடைப்பிடித்தார். மற்றவர்க்கு தொல்லையின்றி உதவும் மனிதனாகத் திகழ்ந்தார். தனது செயற்பாடுகளை மற்றவரும் பின்பற்ற வேண்டும் என்பதற்காக சிறந்த வாழ்க்கை வாழ்ந்தார். தன்னை ஓர் இஸ்லாமியனாகவே வெளிக்காட்டி கலாசார வணக்க வழிபாடுகளைச் சீராகச் செயற்படுத்தி வாழ்ந்தவர். தனது வாழ்க்கை மற்றவர்களால் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக தூய்மையைக் கடைப்பிடித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச் செயற்பாடுகளிலும் வணக்கங்களிலும் மிகையாக ஈடுபாடு காட்டியவர். தான் செலவழித்த ஒவ்வொரு நிமிடத்திலும் இறை வசனங்களை உச்சரித்தே வாழ்ந்தவர்; பாடமாகப் புகட்டியவர்.

ஒவ்வோர் இஸ்லாமியனும் தனது செயற்பாடுகள் விழுமியங்கள் மூலம் உதாரண புருஷனாக வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர். இவர் போன்று வாழ்ந்தவர்களைக் காண்பது மிக அரிதாகவே உள்ளது. மருதமுனையின் ஆத்மீக எழுச்சிக்கும் அரபிக் கல்வி வளர்ச்சிக்கும் குர்ஆன் மத்ரசாக் கல்விக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்த 'அறபி ஆலிம்' பெற்ற எட்டுச் சகோதர சகோதரிகளுடன் இணைந்திருந்து வாழ்ந்து அவர்களுள் இறுதியாக மரணித்தவர்.

ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்த அன்னார், தனது இல்லறத்தை இனிமையாக நடாத்தி ஆண்களும் பெண்களுமாக 07 மக்களைப் பெற்று சீராகக் கல்வியூட்டி, நெறிபிறழாது தூய்மையாக வாழ வைத்தவர். மக்களின் உயர்வுக்காக இறைவனிடத்தில் பிரார்த்தித்தவர். தனது பிள்ளைகளின் உயர்வினைக் கண்டு பூரித்து வாழ்ந்தவர். தான் எதிர்கொண்ட இன்னல்களை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக உணர்ச்சிவசப்படாமல் இறைநியதியை முழுமையாக அங்கீகரித்து வாழ்ந்ததனால் நீண்ட ஆயுளைப் பெற்றவர். தனது செல்வங்களின் நல்வாழ்வினை மட்டுமின்றி பேரக் குழந்தைகளின் இல்லற வாழ்வையும் கண்டு மகிழ்ந்து முழுநிறைவான வாழ்வு வாழ்ந்த ஓர் சிறப்பான செம்மலாக அன்னாரை எண்ணுந்தோறும் மனம் பூரிப்படைகிறது. அன்னாரின் வாழ்வைப் பொருந்தி இறைவன் பிர்தௌஸ் என்ற சொர்க்கத்தை வழங்கி வைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பாளர்களின் மனம் ஆதங்கம் அடைய ஆசி வழங்கி அருகூட்டும் மழைமனத்தான் அபுல்கலாம் பழீல் மௌலானா அவர்கள்

**மர்ஹூம் எம்.எச். காதர் இப்றாஹீம்,**
**ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர்**

அன்றொரு நாள்- அது 1950களிலாக இருக்கலாம்... அரிவரி வகுப்பிலே அமர்ந்திருந்தவேளை புன்னகை பூத்த பூவொன்று உள்ளே நுழைந்தது.சிந்து சிதறும் சின்னப் பாடலும் சிரிப்பும் இறையடி எய்தும் வரையும், இன்றும் அந்நாள் நினைவு வந்தால் நினைவிற்குவரும் போதெல்லாம் பூவொன்று மலர்ந்து சிரிக்கும். இது என் நினைவு.

இறையச்சமும் தஸ்பீஹூம் அண்ணலார் புகழ்ச்சியும் ஸலாமும் ஸலவாத்தும் நடையிலும் இருப்பிலும் படுக்கையிலும் கூடவே ஒலித்து மணக்கும் பழீல் மௌலானாவுடன் இணைந்து சங்கமித்த சங்கதி அது.

ஆசானாக வகுப்பறையில் கல்வி கற்பித்த காலத்தில் சிறந்த ஆசானாகப் பணிபுரிந்த இவர்கள்- அதிபராக தம்மை அலங்கரித்த வேளை ஆஜானுபாகனாக நின்று அதனை நிறைவேற்றி ஆற்றிய சேவையும் எண்ணிப் பார்ப்பதற்கு இனிமையானவை. வித்தியாதரிசி பதவியை கல்யாண குணங்களுடன் நிறைவுசெய்த அன்னார், இளைப் பாறிய பின் சமூக சேவையையும் பொதுப்பணியையும் இஸ்லாமிய பணியையும் தன் முதற் கடமையாக தெரிவு செய்தார்.

பொதுப் பணியில் ஈடுபாடு காட்டிய மௌலானா அவர்கள் சமூகச் சீர்கேடுகளை கவலையோடு உணர்ந்தார். நோன்பு காலத்திலே ஈத்தம் பழத்தை பதுக்கி வைத்து விலை கூட்டி விற்ற வர்த்தக நிலையங்களை இளைஞர்களைக் கொண்டு எதிர்த்தார் ஈத்தம்பழக் கூடைகளை வெளியே கொணர்ந்து கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனவு செய்து மக்கள் துயர் துடைத்தார்.

இதுபோல நல்லதை நாடுவதும் அல்லாததை அழிக்க முனைவது மான ஒரு கருத்தேற்றத்தை இளைஞர் மத்தியிலே பரப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களை "ஏன்? எதற்கு?" என வினா எழுப்பும் சக்தியாக இளைஞர்களைக் கவர்ந்தார். அவர்பால் ஈடுபாடு காட்டியவர்களுள் எனது நண்பர்களும் நானும் அடங்குவேன். எதையும் அன்புடனும் பணிவுடனும் அணுகும் மௌலானா அவர்கள் அடக்குமுறைக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிராக குரல்கொடுக்கும் பான்மையையும் கொண்டிருந்தார். இம் முன்னெடுப்புகளுக்கு அவரது பேச்சுவன்மையும் காரணமாக துணை நின்றது என்பது மிகப் பொருந்தும்.

புதுமைகளையும் புகழையும் மருதமண் காண வேண்டுமென அவாவிய பழீல் மௌலானா மருதமுனையின் பொது சன சமூக சேவா இயக்கங்களின் பிதாமகன் என்பது மிகப் பொருத்தமென நம்புகிறேன்.

வித்தியாதரிசி பதவி வழங்கப்பட்டபோது இலங்கையின் பல பாகங்களும் அவரது காலடி பட்டமையால் புகழோடும் மண்ணின் மகிமையும் மாறா வண்ணம் பதவி வழியும் பணி வழியும் நடைபயின்ற மௌலானா அவர்கள், தூர இட உத்தியோகத்தை மோட்டார் வண்டியில் பயணம் செய்து காட்டிய முதல் மனிதரும் இவரே. YMMA இயக்கம், முஸ்லிம் கல்வி மாநாடு என்பவற்றில் அங்கம் வகித்ததுடன் ஊரின் புகழுக்கு சான்றாக தேசிய மட்டத்தில் சங்கமித்தார்.

கல்லோய திட்டத்தின் ஐந்தாம் கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் கட்டும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தமையும் ஹக்கீம் முஸாபர் என்பவரோடு இணைந்து நிர்மாணப் பணியில் ஈடுபட்டமையும் பசுமையான நினைவுகள். எம் போன்ற இளைஞர்களை அப்பணியில் ஈடுபட இயன்ற மட்டும் முனைந்த பெரு மனிதன்.

மௌலானா அவர்களின் சேவை குறித்து பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளமையால் நான் விரிவாக்கம் செய்யவில்லை. வேறாக "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற வரிசையில் சில துளிகளைத் தரலாமென்று நினைக்கிறேன்.

அழகிற்கினியாள் அன்புடைய துணையாள்
அன்னை தயை, அடியார் நற்பணி
மந்திரி மதி கொண்ட
ஆமினாவை மனைவியாகக் கொண்டு
மூன்று ஆண்மகவும் நான்கு பெண்களும்
பிள்ளைகளாக பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மக்கள்...
ஒப்புடன் உண்மை பேசி, உவப்புடன் புன்முறுத்து
இருந்தோம்பி இல்வாழ்தல் எல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு என்பதற்கொப்ப
விருந்தோம்பல் பண்பும் வருவோரை போற்றும்
பக்குவமும் பாரம்பரியச் சொத்தாக மதித்து
சேவகம் செய்யும் நற்குணப் பெண்களை
அல்லாஹ் அருளினான்.
மூத்த மகளின் கணவர் ஹஸன் மௌலவி
ஷர்க்கி என்றால்–
உள்ளம் நெகிழ உரையாற்றும் சமர்த்தன்
இஸ்லாம், வரலாறு, பொது, அரசியல்
அதற்கப்பாலும் கனகதி வேகம் கொண்டு
மக்களின் மனதை வெல்லும் சமர்த்தன்
ஒரு ஆக்கம் அழித்தல்
சமாதானத்தின் தந்தை, தலாக்கு என்பதை
காதால் கேட்கவும் கூடாதென்ற கொள்கையை
சமகாலத்தில் கட்டியெழுப்பிக் காட்டிய வித்தகன்.
இது அல்லாஹ் அவருக்குக் கொடுத்த அருள்.
அவர் மரணித்த செய்தி கேட்டு
பகைவனும் கண்ணீர் விட்டான்
இது பழீல் மௌலானாவின் மனத்தூய்மைக்கு
அல்லாஹ் கொடுத்த பரிசு

இரண்டாம் மகளின் கணவர்
முஸ்தபா அதிபர்
சமூகவியல் பாடமும் புவியியலும்
பாடம் நடத்தும் அழகை கேட்டு
மூச்சு விடும்.
சொல்வதும் செய்வதும் பாடம்தான்
பரீட்சை முடிவுதான் சித்தி தவிர வேறில்லை
அன்னாரின் கற்பித்தல் களம் அல்மனார் மத்திய கல்லூரி
மாணவர்கள் சான்று பகர்ந்து நிற்பர்

மூன்றாம் மாப்பிள்ளை
யோக்கியம் நிறைந்த கூட்டுறவுச் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையாளர் ஸாஹிர் மனேஜர்
மணமுடித்த குடும்பத்தினர்
புகழையும் மேன்மையையும் புகுந்த வீட்டு
கௌரவத்தையும் நேர்மையையும் விட்டுக்
கொடுக்கா வண்ணம் கடமையில் இருந்து
ஓய்வு பெறும் வரை தலைநிமிர்ந்து நின்ற
ஒழுக்கம் கொண்டவர்.

நான்காம் கதாநாயகன் வீர புருஷன்
அகில இலங்கை **400** மீற்றர் ஓட்டத்தில்
தங்கப் பதக்கம் பெற்று அதோடு தொடர்பான
பணியிலும் அமர்ந்து தம்மை அர்ப்பணித்து
நாடு எல்லாம் அறிந்த நாயகனாக இன்று
வாழ்ந்து வருகிறார் ஏ.வீ.எம். மஹ்தூம்

அமீருல் அன்சார் மௌலானா–
ஆண் மக்களில் முதலாம் அவர் சிம்மக் குரலோன்
செழுமைமிகு சிரிப்பழகன்
வார்த்தைக்கு வார்த்தை வடிவமைத்து
சொற்சிலம்பாடும் சொல்லின் செல்வன்
சட்டத்தரணி–
சட்டத்தரணி தொழிலாயினும்
சங்கையுடன் அதனை நிறைவு செய்ய
சங்கமிப்பான் சேவை நாடுனரோடு
ஆசிரியத் தொழில் செய்து ஒன்றாம் தர அதிபராகவும்
கல்விச் சேவை கற்பித்தல் நெறியில்
களம் கண்டவர்
இந்த ஊரின் செல்வங்களில் எண்ணிப்
பேண வேண்டிய ஒரு செல்வம்
பழீல் மௌலானா அவர்களின் மனநிறைவின் கனவு!

அடுத்தவர் அஹமதுல் அன்ஸார் மௌலானா
உயர்பீடமான நளீமிய்யாவில் கற்றுத் தேர்ந்த
முதுமாணிப் பட்டதாரி
தமிழிலும் அரபியிலும் மிகப் பொருத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மார்க்க சொற்பொழிவுகளையும்- அறிவியல்
உரைகளையும் ஆழமாக சொற்புகுத்தி
வழிமொழிய நடை பயில்வார்
உயர்ந்த பண்பும் உண்மைத்தன்மையும்
முன்னுக்குப் பின் முரண்படா வடிவமைப்பும்
அவரது சொத்து...*

*பழீல் மௌலானா அவர்களின் மனம் அடைந்த
மூன்றாமவர் ஜின்னா மௌலானா- ஆங்கில பாடத்தைப்
போதிக்கும் படித்துப் பட்டம் பெற்றவர்
சிறந்த ஆசானாகவும் பொதுப் பணி மிக்கவராகத்
தன்னை வளர்த்து வருகிறார்.
அவரது வளர்ச்சிக்கும் ஆசிகள் அனைவரின்
நல்வாழ்விற்கும் துஆ கேட்டு விடைபெறுகிறேன்.*

***30.03.2020***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனை லஜ்னதுல் உலமாவின் வழிகாட்டலில் சன்மார்க்க சேவை செய்த பெருந்தகை மர்ஹூம் பழீல் மௌலானா

**அல்ஹாஜ்.எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா (JP),**
ஓய்வுநிலை அதிபர்
தலைவர், மருதமுனை ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

"மக்கம் தப்பினால் மருதமுனை" என்ற சான்றோர் வாக்கிற்கிணங்க மருதமுனை மண் பல முத்துக்களை, மரகதங்களை, மாணிக்கங்களை அறுவடையாகத் தந்தது. அதிலொரு முத்துத்தான் மர்ஹூம் அல்ஹாஜ் பழீல் மௌலானா என்றால் அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

இன்றைய மருதமுனை ஜம்மியத்துல் உலமாவின் உருவாக்கத்துக்கு முன்னர் மருதமுனையின் மூத்த மறைந்த உலமாக்களின் சபையாக மருதமுனை லஜ்னதுல் உலமா 1953 இல் மர்ஹூம் எஸ்.கே.எஸ். அப்துல் காதர் மௌலானா அவர்களைத் தலைவராகவும் மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம். ஸாலிஹ் மௌலானா அவர்களை காரியதரிசியாகவும் கொண்டு மருதமுனை சமூகத்தின் சமய, பண்பாட்டு, கலாசார அம்சங்களுக்கு பங்களிப்பு வழங்கி வந்தமை முக்கிய வரலாறாகும்.

மேற்படி லஜ்னதுல் உலமா 1968.02.06 மருதமுனை அல்-ஹிறா வித்தியாலயத்தில் இறைமறையின் 1400 ஆவது ஆண்டு விழாவை 04 அங்கங்களாகச் சிறப்பாக நடாத்தியது. அதற்கான தலைமைத்துவச் சபையின் ஓர் முக்கியஸ்தராக பழீல் மௌலானா அவர்களுடன் விழாக் குழு இணைப்புச் செயலாளராக என்னுடன் மர்ஹூம் மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்கி) அவர்களும் இணைந்து பணியாற்றியமை பசுமரத் தாணி போல் மனதில் பதிந்துள்ளது. மர்ஹூம் மௌலவி எஸ்.எம். முஸ்தபா மௌலானா (ஜமாலி) அவர்களின் பிரதான வழிகாட்டலில் விழாக்குழு தலைவராக அவர் அன்று எழுதியிருந்த குறிப்பொன்றில் "மருதமுனை வாழ் பெருங்குடி மக்கள் இவ்விழாவினைச் சிறப்பாக கொண்டாட 06 மாதத்திற்கு முன்பிருந்தே ஆயத்தமாகி விட்டனர். அங்கம் அங்கமாக விழாவினைக் கொண்டாடுகின்றனர்" என விதந்துரைப்புச் செய்து எழுதியமைக்கு வரலாற்றுப் பிரசுரம் சான்று பகர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் அல்ஹாஜ் பழீல் மௌலானா அவர்கள் செயற்திறன் மிக்க ஓர் வட்டாரக் கல்வி அதிகாரி என்ற வகையில் மருதமுனை கல்வி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பினை நல்கியுள்ளார். கரைவாகு வடக்கு முஸ்லிம் பாடசாலைகளின் பெற்றார் ஆசிரியர் சம்மேளனம் P.T.T.A உருவாகவும் அதன் மூலம் 1975இல் முஸ்லிம் கல்விச் சகாயநிதி தோற்றம் பெறவும் பாடுபட்டமையை மறக்க முடியாது. மேற்படி சம்மேளனத்தின் செயலாளராகவும் அன்னாருடன் இணைந்து பல கல்வி கலாசாரப் பணிகளைச் செய்தமை பெரும் திருப்தியையும் மனநிறைவையும் எனக்குத் தந்தது, அல்ஹம்துலில்லாஹ்.

21.07.1975இல் மசூர் மௌலானா சதுக்கத்தில் கல்முனைப் பாடசாலையின் குழந்தைகளின் குதூகல விழா இனிதே நடைபெற்ற தோடு பின்வரும் நிகழ்ச்சிகள் பொதுமக்களின் ரசனையையும் ஆவலையும் தூண்டின.

1. உடற்பயிற்சிக் காட்சி
2. குழந்தைகளின் குதூகலக் கும்பி
3. பாலர்களின் பைலா நடனம்
4. மைந்தர்களின் மந்திரக்கோல் நிகழ்ச்சி
5. செல்வச் சிறார்களின் சங்கீதக் கதிரை நிகழ்ச்சி
6. கருத்துணர்த்தும் கதைப் பாட்டு
7. சிறுவர்களின் சமநிலைச் சாகச விளையாட்டுக்கள்

மர்ஹூம் அல்ஹாஜ் பழீல் மௌலானா அவர்கள் கல்வியில் உயர்ந்து செல்லும் மருதமுனை மாணவர்களையும் ஆசிரியர்களை யும் பெற்றோரையும் வீடு தேடிச் சென்று வாயார வாழ்த்தும் விரிவான மனப்பாங்கினை கொண்டிருந்தார். அவ்வாறான விரிவான மனத்தவர் களைக் காண்பதரிது. என்னுடன் பிரத்தியேகமான அன்பையும் நீடித்த நட்பினையும் கொண்டிருந்த அன்னாரின் கப்றுடைய வாழ்வு விரிவான தாய் அமையவும் ஜன்னத்துல் பிர்தவஸ் எனும் உயர் சுவனம் கிட்டவும் இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆத்மார்த்த வழிகாட்டி
## மர்ஹூம் அல்ஹாஜ் அபுல்கலாம் பழீல் மௌலானா

**ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி**
**எம்.எஸ்.எம். ஜலால்தீன் (கபூரி)**
**தென் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

பிறப்பால் நூற்றாண்டை எய்துள்ள, இருபத்தோராம் நூற்றாண்டில் மருதமுனையின் அதிஉயர்ந்த கௌரவத்தையும் அல்லாஹ்வின் அருளையும் பெற்றுக் கொண்ட மர்ஹூம் அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் இறையடி சேர்ந்து ஆறு வருடங்கள் கடந்தும், இன்றும்கூட இவ்வூர் மக்களால் மட்டுமல்ல இலங்கை வாழ் முஸ்லிம் உலமாக்களால், அறிஞர்களால் நினைவுகூரப்படும் அருள்பெற்ற ஒருவராகத் திகழ்கின்றார்.

மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் ஓர் இஸ்லாமியக் கல்வி மானாக மட்டுமல்லாது எனது தந்தையின் வழியில் மிக நெருங்கிய உறவினராகவும் எனக்குக் கிடைக்கப்பெற்றது வல்ல அல்லாஹ் எனக்கு அருளிய பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். அதிலும் 1982ல் எனது அன்புத் தந்தையை இழந்ததினால் தந்தையின் விலை மதிக்க முடியாத, எதற்கும் நிகரற்ற ஆலோசனைகளையும் வழிகாட்டு தல்களையும் பெறமுடியாத கால கட்டத்திலேயே எனது அன்பு மச்சான் (எனது தந்தையின் மருமகன்) மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் என் குடும்பத்தோடு இரண்டறக் கலந்து எனதும் எனது மனைவி மக்களினதும் அனைத்து வித உயர்வுகளுக்கும் இம்மை மறுமை பெறுபேறுகளுக்கும் விலைமதிக்க முடியாத ஒரு வழிகாட்டி யாக, ஆத்மார்த்த குருவாக அமையப் பெற்றார்கள்.

இன்று எனது மூன்று பெண் குழந்தைகளும் அவர்கள் வாழ்வில் அடைந்துள்ள கல்விப் பின்புலம், இறையருள் நோக்கிய வாழ்வு முறை, நான் பெற்றுக் கொண்ட பலவித முன்னேற்றங்கள், பொதுவாக எனது குடும்பத்தின் வாழ்வின் ஒவ்வோர் அடைவிலும் மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் படிக்கற்களாக, அல்லாஹ்வின் அருளுக்குப் பிறகு காணப்படுகின்றார்கள் என்றால் அது மிகையாகாது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுபவை எவையும் வெறும் வர்ணனைகளும் வார்த்தைகளு மல்ல. மாறாக, மர்ஹூம் பழீல் மௌலானாவோடு ஒன்றிணைந்த நிதர்சனங்கள், யதார்த்தங்கள்.

அல்லாஹ் தான் நாடிய அடியார்களுக்கு அவர்களுக்காக வெற்றிகளை அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத வழிகளிலெல்லாம் அருளுகின்றான் என்ற திருமறையின் நிதர்சன உண்மையில் நான் மிக ஆழமான நம்பிக்கையும் உறுதியும் உடையவன். நான் சாய்ந்தமருதில் திருமணம் செய்த போதிலும் எனது வாழ்விடமாக மருதமுனையையே மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் திருமணத்துக்கு முன்பிருந்தே மிக வைராக்கியம் கொண்டிருந்தேன். திருமணம் செய்து சில வருடங்கள் சாய்ந்தமருது, கண்டி போன்ற ஊர்களில் எனது குடும்பம் (தொழில் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால்) வாழ்ந்த போதிலும் ஒரு சில வருடங்களிலேயே எனது உறுதிபோல் மருதமுனையிலேயே எனது நிரந்தர வாழ்விடத்தை மாற்றிக்கொள்ள அல்லாஹ் எனக்கு அருள் புரிந்தான். அதிலும் மிக அதிஷ்டவசமாக மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் மூத்த மகள் நூருல் ஐன் அவர்களின் (கௌரவ மர்ஹூம் ஹசன் மௌலவி அவர்களின் மனைவி) வீட்டுக்குப் பக்கத்திலேயே எனது நிரந்தர வதிவிடம் அமைந்து இன்றுவரை எனது குடும்பத்தோடு வாழ்ந்து வருகின்றேன். இவ்வேற்பாட்டின் மூலமே மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்களுடனான எனது குடும்ப உறவு மிக நெருக்கமான கட்டத்தை அடைந்து கொண்டது. இது அல்லாஹ் கூறுவதுபோல் அவன் எனக்கருளிய வெற்றிகளின் முதற்படி என்றே கூறுவேன்.

2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் எனது கலாநிதி உயர் கல்வியைத் தொடர லண்டன் நகருக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. எனது சகோதரர் கள் மருதமுனையிலேயே குடும்பத்தோடு வசித்து வந்தபோதும் எனது வீட்டுக்கு அண்மையில் அவர்கள் யாருமே வசிக்காததால் எனது குடும்பத்தின் பாதுகாப்பு, உதவிகள் போன்றவை சம்பந்தமாக எனக்கு குழப்பமான மனநிலை ஏற்பட்டது. அதிஷ்டவசமாக மர்ஹூம் அபுல் கலாம் பழீல் மௌலானா அவர்களிடம் வழமை போன்று எனது இக் கட்டான சூழ்நிலை பற்றி கலந்துரையாடினேன். எனது ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட பழீல் மௌலானா அவர்களே எனது குடும்பத்துக்குரிய மூத்த தந்தையாக வழிகாட்டியாக பாதுகாவலராக செயற் படுவதாக உறுதிமொழி தந்ததுடன் எனக்கு பல வழிகளிலும் துஆ செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனுக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். சுமார் நான்கு வருடங்கள் லண்டனில் நான் உயர்கல்வியை மேற்கொண்டு 2004ஆம் ஆண்டி லேயே நாடு திரும்பினேன். அந்த நான்கு வருடங்களும் என் குடும்பத்தின் சகலவித இன்ப துன்பங்களிலும் மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் மிகப் பொறுப்புவாய்ந்த வழிகாட்டியாக, பாதுகாவலராகத் திகழ்ந் தார்கள். வல்ல அல்லாஹ்வின் வழிகாட்டல் பாதுகாப்புக்குப் பிறகு, மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் உயர்ந்த வழிகாட்டல் பாது காப்புக் கவசத்தை என் குடும்பமோ என் பிள்ளைகளோ இன்றுவரை மறக்காது. அவர்களுக்காக தினமும் துஆ செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

அது மட்டுமின்றி, மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் இறை தியானத்தோடு கூடிய நல்லமல்களும் என் குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினரையும் இன்றுவரை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக அதிகமான குர்ஆன் திலாவத், திக்ருகள், தஹஜ்ஜுத், ழுஹா போன்ற சுன்னத்தான தொழுகைகள், நல்ல விடயங்களைக் கலந்து ரையாடல், புறம், கோள், பொய் பேசுவதை முற்றாகத் தவிர்த்தல் போன்ற பல விடயங்களில் எனது பிள்ளைகள் பற்றுறுதியோடு செயல் படுவதற்கு மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் அக்கால வழி காட்டுதல்கள், உபதேசங் கள் என்பனவே முக்கிய காரணங்கள் என என்னால் உறுதியாகக் கூற முடியும். எனது பிள்ளைகளோடு அன்பு மிகுந்த ஒரு தந்தையாக, நண்பனாக செயற்பட்ட மர்ஹூம் பழீல் மௌலானா என்னால் வழங்க முடியாத கண்டிப்புக் கலந்த வழிகாட்டு தல்களை வழங்கினார்கள். அவர்களின் ஆகர்சிக்கத்தக்க தோற்றம், கருணை கலந்த பேச்சுக்கள் இவற்றை மிக இலகுவாக வழங்கின.

மொத்தத்தில், எனது குடும்பத்தின் இம்மை, மறுமை வெற்றிக்கு வல்ல அல்லாஹ் மர்ஹூம் பழீல் மௌலானா அவர்கள் மூலம் வழி சமைத்துத் தந்தான் என்றால் அது மிகையாகாது. எனதும் எனது குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் துஆக்களும் சாட்சியோடு கூடிய பிரார்த்தனைகளும் மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் மறுமை வெற்றிக்காக என்றும் நிலைத்திருக்கும்.

வல்ல அல்லாஹ் மர்ஹூம் பழீல் மௌலானா அவர்களின் சகல பாவங்களையும் மன்னித்து அவர்களின் நல்லமல்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு ஜன்னதுல் பிர்தௌஸை வழங்குவானாக, ஆமீன்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM
# PROFESSOR Dr. M.A.M. SIDDIQUE

*Retired Professor in Oral and Maxillofacial Medicine, Faculty of Dental Sciences, University of Peradeniya*

*I am pleased to send this message to the publication of the book commemorating the life and services of the late 'Abulkalam' I.M.S.M. Faleel Moulana.*

*Seyyid Faleel Moulana was the fourth younger brother of my maternal grandfather Seyyid Muhammad Salih Moulana. So he was my mother's younger paternal uncle ('chacha'). But among all my mother's paternal uncles, Faleel Moothavappa was the one I had the opportunities to closely associate with. My own grandfather Seyyid Muhammad Salih Moulana also known as 'Madrasa Moulana' and his immediately younger brother Seyyid Zain Moulana or 'Vidhanai Moulana' passed away in close succession when I was 6-7 years old. So, Faleel Moothavappa filled the void I had in my mind, yearning for a grandfather. Sadly, my paternal grandfather had passed away long before I was born.*

*Faleel Moothavaappa and I had great mutual affection. During my childhood he used to visit our home whenever he return to Maruthamunai from his outstation work places. On all those occasions he used to play with me, teasing me endearingly. When I left for my studies in Batticaloa and later in Jaffna, he visited me at home and invoked Allah's blessings on me. In all other major*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*steps in my life such as entrance to university, my wedding, departure to the U.K for higher studies and all my academic visits overseas, he would be there to greet me or send me off with prayers.*

*When he passed away, in 2013 I felt the great sadness of losing one's grandfather for the first time because I was too young when my own maternal grandfather passed away. Faleel moulana's demise had an impact beyond what the families immediately closure to him endured. With his demise, Maruthamunai had lost one of her great sons someone who had earned wider respect among all sections of the populace of the village. No doubt, even his former students in far off villages and towns in the country*

*where he served as a teacher, head master and Circuit Education Officer would have grieved at his demise.*

*May Allah Subhanahu wa ta' Aala shower his choicest blessings on Faleel Moothavappa and grant him the Jannath al Firdaus.*

***(13.06.2020)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Father of Human Values

*'Kalabhooshanam' Abdul Majeed.M. Parouque, J.P. Maruthamunai*

*Al-Haj Idroos Moulana Seyyed Mohamed Faleel Moulana, retired Circuit Education Officer (C.E.O) who served in the several parts of the country is no more. He hails from 'Ahdal' family of Seyyid clan in the Maruthamunai in Ampara district. He breathed his last on 25.02.2013 without any malady & ailments at the ripe age of 92 years.*

*During his Educational service, he firstly joined as a Pedagogue at Colombo Zahira College. Later, he was promoted to the post of Head Master. During his head mastership, he produced a number of lawyers, doctors, teachers, engineers, artists, poets and leading business tycoons as well. Following his promotion of Circuit Education officer, he did his best at Puttalam, Kalmunai, Kurunegala, Kegalle, Anuradhapura and Kuliyapitiya Educational circuits.*

*During his lifetime, he evinced great diligence and keen interest towards the religious activities too. He sacrificed his energy, time, thought and perseverance for the betterment and the upliftment of the Islamic bounded life among the people in Maruthamunai and wherever he served.*

*After his retirement from the state service, he joined Arabic Colleges at Addalaichenai and Akkaraipattu as Administrative Secretary, where he imparted Holy prophet Mohamed's way and life and guidance among the students and later on they became as Islamic scholars and priests. He had been at the helm of several*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*posts in the Board of Trustees of Masjithul Kabeer Grand Jumma Mosque Maruthamunai.*

*He had been well-versed in the English language and, he rendered immense service to the laity by the office of Justice of Peace as well. His devotion and keenness towards the spheres of educational and the religious affairs are highly appreciated. His beloved spouse late Ummu Aamina beloved younger daughter of Marhoom Sinna lebbe Hajiyar then headman of Masjithul Kabeer Grand Jumma Mosque breathed her last several years ago.*

*Mr. F.M. Ameerul Ansar Moulana (B.A, LLB), leading Lawyer in the Kalmunai Bar, Ash-sheik F.M. Ahamadul Ansar Moulana (Naleemi), M.A, lecturer of College of Education, Addalaichenai, Mr. F.M. Mohamed Ali Jinna Moulana, English teacher are the glistening sons of late Abulkalam Faleel Moulana.*

*Following his demise, we pray to the Almighty omnipotent to have the paradise of Jannathul Firdous and blessings for eternal blaise.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்-எலிய கண்ட பழீல் மௌலானா...

**எம்.வை.எம். நஸீர், கள்-எலிய**

*1924ஆம் ஆண்டு வைகாசி மாதம் 02ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கள்-எலிய அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஐந்தாவது தலைமை ஆசிரியராக 1951.05.01ஆம் திகதி பழீல் மௌலானா அவர்கள் பதவி யேற்றார்கள். அப்போது ஏழாம் வகுப்பு வரைதான் வகுப்புக்கள் இருந்தன. கிராமத்தில் கல்வி கற்றோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. அப்போது கிராமத்தில் கற்றவர்களாக இருந்த மர்ஹூம் டாக்டர் மௌஜூத், காலித் விதானை, கஸ்ஸாலி ஹாஜியார், சட்டத்தரணி சலீம் ஹாஜியார், அபூதாஹிர், யூசுப் ஆலிம் ஆகியோருடனும் பொதுப்பணிகளில் ஈடுபடக் கூடியவர்களுடனும் நெருங்கிய தொடர்பை பழீல் மௌலானா ஏற்படுத்திக் கொண்டார்.*

*பாடசாலைக்கு வந்த தலைமை ஆசிரியரின் முதற் பணியாக பள்ளிக்கூட ஆரம்ப வகுப்பு மாணவிகளை அழைத்து, இனிமேல் பாடசாலைக்கு வரும்போது தலையில் தாவணியும், நீட்டக் கால் சட்டையும் நீட்டக் கைச்சட்டையும் அணிந்து வருமாறு கூறினார். இதனை அனைத்து மாணவிகளும் பின்பற்றினர். மாணவர்களை அழைத்து தொழுகைக்காக பள்ளிவாசல் செல்வதன் முக்கியத்து வத்தை வலியுறுத்தினார்.*

*இரவு நேரங்களில் கிராமத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று மாணவ மாணவிகள் வீட்டில் படிக்கின்றார்களா, ஓதுகின்றார்களா என்பதனை அவதானித்து மறுநாள் பாடசாலையில் புத்திமதிகளைக் கூறிய அவர், கிராமத்திலுள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு படிப்பதற்கு புத்தகம் இல்லை என்பதனையும் அறிந்துகொண்டார். டாக்டர் மௌஜூதுடன் கலந்தாலோசித்து 29.01.1952 முதல் வருடாந்தம் ஏழை மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் பெற்றுக் கொள்ளும் நடைமுறையை ஆரம்பித்து வைத்தார். அது அரசாங்கம் இலவசப் புத்தகம் வழங்க ஆரம்பிக்கும் வரை நீடித்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியா ஒழிப்பு நடவடிக்கைக்காக மாணவர்களுடன் வீடு வீடாகச் சென்று துப்புரவு செய்து 26.05.1952 இல் சுகாதார வாரம் ஒன்று கள்-எலியவில் அனுட்டிக்கப்பட்டது. 1952ஆம் ஆண்டு முதல் முறையாக J.S.C பரீட்சைக்காக மாணவர்களைத் தயார் செய்து ஐந்து மாணவர்களை சித்தியடையச் செய்ததோடு, 1953ம் ஆண்டு S.S.C வகுப்புக்கான அனுமதியும் பெற்று வகுப்பை ஆரம்பித்தார். அதே ஆண்டு இளைஞர் சாரணர் இயக்கத்தையும் ஆரம்பித்தார். மாணவர் களுக்கு விளையாட்டுத் துறையிலும் பயிற்சியளித்து மீரிகமையில் உள்ள முன்னணி சிங்களப் பாடசாலையுடன் போட்டியிட்டு முதலிடம் பெற்றுக் கொடுத்தார்.

அக்காலத்தில் 'நெய்ச் சோற்றுக் கந்தூரி' என்பது கிராம மக்கள் ஒன்றுகூடும் நாளாகக் காணப்பட்டது. அத்தினத்தில் பள்ளிவாசலில் மாணவர்களுக்கான இஸ்லாமிய வினா-விடைப் போட்டிகளையும் நடத்தி பரிசில்களும் வழங்கினார்.

நாளுக்கு நாள் மாணவர்களின் வருகை அதிகரித்ததனால் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் காதர் ஹாஜியாரின் ஆலோசனையுட னும் ஊர்மக்களின் உதவியுடனும் 50 x 20 அளவான தற்காலிகப் பாடசா லைக் கட்டடம் ஒன்றைக் கட்டி 1954.01.04ஆம் திகதி திறந்து வைத்தார். அவ்வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர் களைத் தயார் செய்து பரீட்சைக்குத் தோற்றச் செய்து ஆ. அஸாப் தாஹிர் என்ற மாணவர் சித்தியும் எய்தினார். 1954இல் நடைபெற்ற S.S.C பரீட்சைக்கு மாணவர்களை முதல் முறையாக தயார் செய்து அனுப்பியதோடு 1955.03.25ஆம் திகதி வெளியான பெறுபேற்றில் இருவர் சித்தியடைந்து பின்னாட்களில் இருவரும் ஆசிரியர் தொழி லையும் பெற்றுக் கொண்டனர்.

நாலரை வருடங்கள் சேவையாற்றிய தலைமை ஆசிரியர் மௌலானா அவர்கள், ஏழாம் வகுப்பு வரை இருந்த பாடசாலையை S.S.C வகுப்பு வரை தரமுயர்த்தியதோடு மாணவர் தொகையையும் ஏறத்தாழ இருமடங்காக அதிகரிக்கச் செய்து விட்டு 1955ம் ஆண்டு 11ம் மாதம் 30ம் திகதி இடமாற்றம் பெற்று வீரத்திடல் அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு சென்றதைத் தொடர்ந்து தமிழ் பாடசாலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பாடசாலை அரசினர் முஸ்லிம் பாடசாலையாக பெயர் மாற்றப்பட்டது.

கள்-எலியவில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற பழீல் மௌலானா அவர்கள் கேகாலை, குளியாப்பிட்டிய வட்டாரக் கல்வியதிகாரியாக சேவையாற்றிய காலங்களில் மாத்திரமின்றி, சென்றது முதல் அவரின் 93 வயது வரை குறைந்தபட்சம் ஒரு கடிதம் மூலமேனும் கள்-எலிய மக்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். அன்னாரின் தொடர்பின் காரணமாக கள்-எலிய 'ஹமீத் பௌண்டேசன்' மூலம் கள்-எலிய அலிகார் மகா வித்தியாலயத்திற்கு வாசிகசாலைக் கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொடுக்குமாறு ஆலோசனை வழங்கினார். அதற்கிணங்க, அதே அமைப்பின் மூலம் கட்டிடம் ஒன்றைக் கட்டி அதன் திறப்பு விழாவின் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டு 2006.02.12ம் திகதி அன்னாரின் கையால் வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் கள்-எலிய மண்ணில் பழீல் மௌலானா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். பெரியார் மௌலானா அவர்கள் கள்-எலிய மக்களின் மனங்களில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

***(2014.02.25)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான ஆளுமை கொண்டவர் மர்ஹூம் பழீல் மௌலானா

கலாபூசணம் பி.எம்.எம்.ஏ. காதர்

1920.12.31ஆம் திகதி மருதமுனையில் மௌலானா வம்சத்தில் பிறந்த பழீல் மௌலானா 2013.02.25 ஆம் திகதி இறையடிசேர்ந்தார். பழீல் மௌலானா மரணித்து 6 வருடங்கள் கடந்த நிலையில் மருத முனையின் சிரேஷ்ட பிரஜைகளுள் ஒருவராக இன்றும் நினைவு கூரப்படுகின்றார். மருதமுனையைச் சேர்ந்த மௌலவி செய்யிது ஐதுரூஸ் மௌலானா–ஆயிஷா உம்மா ஆகியோரின் புதல்வரான பழீல் மௌலானா, தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்திலும் பின்னர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் கற்று ஆசிரியராக, அதிபராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக பல உயர் பதவி களை வகித்துள்ளார். பொலனறுவை, கேகாலை, அனுராதபுரம், புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கல்விப் பணியாற்றியுள்ளார்.

1940ஆம் ஆண்டு தொடக்கம் 1943ஆம் ஆண்டு வரை அல்மனாரில் அதிபராகப் பணியாற்றி மருதமுனைக்கு மகத்தான சேவை செய்தார். கள் எலிய மாணவர் சமூகத்தால் 1965ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரிய மாமணிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அனுராதபுரம் கொட்டியாவெவ மக்களால் 1985 காலப்பகுதியில் 'நூரானியா மௌலானா' என்ற பட்டம் சூட்டி வாழ்த்தப்பட்டார்.

1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியைத் தொடர்ந்து மருதமுனை ஷம்சுல் இல்ம் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டபோது அதன் முதல் அதிபராக 1979–1981 வரை சிறப்பாகப் பணி செய்து அங்கேயே ஓய்வு பெற்று ஷம்ஸ் பாடசாலை சமூகத்தால் பாரிய பிரியாவிடை வைபவம் நடத்தி கௌரவிப்பு செய்யப்பட்டார்.

ஓய்வு பெற்ற பின்பும் ஓயாமல் பணி செய்வதற்காக அட்டாளைச் சேனை ஷர்க்கிய்யா அரபுக் கல்லூரியில் 08 வருடங்களும் அக்கரைப் பற்று மன்பஉல் கைறாத் அரபுக் கல்லூரியில் 06 வருடங்களும் நிருவாகச் செயராளராகச் செயற்பட்டு அரபுக் கல்லூரி சார்ந்த மௌலவி மாணவர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். மர்ஹூமா சின்னலெப்பை ஹாஜியார் உம்மு ஆமினா இவரது மனைவியாவார்.

1960ஆம் ஆண்டு அனுராதபுரம் மீலாது விழாவில் ஆற்றொழுக்காகப் பேசியமைக்காக அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னைநாள் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களால் 'அபுல் கலாம்' பேச்சின் தந்தை என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார். 1983 இல் நீதியமைச்சால் சமாதான நீதிபதி என்ற கௌரவ நியமனம் வழங்கப்பட்டது.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்து சபையின் தவிசாளராக 1985 இல் அன்றைய அமைச்சர் எம்.எச். முகம்மது அவர்களால் கௌரவ நியமனம் வழங்கப்பட்டது. மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளிவாசலில் கால் நூற்றாண்டாக மரைக்காயராகவும் நம்பிக்கையாளராகவும் இருந்து சமயப் பணி செய்ததோடு, 1976இல் அந்த மஸ்ஜிதின் புனர் நிர்மாணப் பணியில் அன்றைய தலைவர் ஏ.பி.எம். மரைக்காயரோடு இணைந்து செயற்பட்டார்.

1983இல் பாண்டிருப்பு முஸ்லிம் பிரிவில் மஸ்ஜிதுல் மினன் என்ற பெயரில் ஒரு பள்ளிவாசல் உருவாக முன்னோடியாத் திகழ்ந்ததோடு, அதன் ஆயுட்கால ஆலோசகராகவும் இருந்து செயற்பட்டார். அவரால் தொகுக்கப்பட்ட 'அல்-குர்ஆன் ஞானமணிக் கோவை' நூலை மருதமுனை ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக் கழகம் 1993ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. ஹதீஸ் தொகுப்பு முயற்சிகளில் ஈடுபாடு காட்டிய போதிலும் அவை இன்னும் அச்சேறவில்லை. தேசிய பத்திரிகைகளுக்கு அவ்வப்போது கவிதைகள். வாழ்த்துப்பாக்கள் மற்றும் செய்திகள், கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

(வீரகேசரி, 25.02.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மனத்திரையில்
# 'அபுல்கலாம்' பழீல் மௌலானா

**கலாநிதி எம்.ஐ.எம். அமீன்**

*முன்னாள் துறைத் தலைவர், அரபு-இஸ்லாமிய நாகரிகத் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட 'அபுல் கலாம்' பழீல் மௌலானா அவர்களுடன் மிகக் குறுகிய காலம் ஒன்றில் பழகக் கிடைத்ததனால் ஏற்பட்ட மனப் பதிவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது பல்கலைக்கழக படிப்பை முடித்த பின் ஹெம்மாதகம அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் போது மௌலானா அவர்கள் கேகாலை கல்விப் பிரிவில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான சுற்றுவட்ட கல்வி அதிகாரியாக கடமையாற்றினார். மேலதிகாரியான பழீல் மௌலானா எனும் கல்வி அதிகாரியின் கீழ் பணிபுரிகின்ற ஓர் உதவி ஆசிரியர் என்ற நிலையில்தான் எமது தொடர்பு முதற்கண் ஆரம்பமாகியது. எனினும், கேகாலை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளை மையமாகக் கொண்டு அவர் ஆரம்பித்த 'மீலாத் விழா' எம் இருவருக்குமிடையிலான தொடர்பை நெருக்கமாக்கியது. அடிக்கடி அவரை சந்திக்கும் வாய்ப்பை அது எனக்குத் தந்தது. அதன் போதுதான், அவர் ஒரு கல்வி அதிகாரி என்ற நிலைக்கு அப்பால் சமயத்தில் ஆழ்ந்த அறிவும் பக்தியும் நடைமுறை வாழ்வில் சமய ஈடுபாடும் கொண்டவர் என்பதை நான் கண்டு கொண்டேன். அவரது இப்பண்பு அவர் பற்றிய நல்லெண்ணம் கொள்ளவும் அவரது கடந்த கால பணிகள் பற்றித் தேடிப் பார்க்கவும் என்னைத் தூண்டியது.

தான் முன்பு பணிபுரிந்த கல்வி மாவட்டங்களில் மீலாத் விழாக்களை நடத்தியும் நாடளாவிய ரீதியில் பல நகரங்களில் மீலாத் மேடைகளில் பேச்சாளராகப் பங்குபற்றியும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார் மத்தியில் இஸ்லாமிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, நபி (ஸல்) அவர்களின் புகழைப் பரப்பும் வாய்ப்பை அவர் ஏற்படுத்தினார். கேகாலை மாவட்டத்தின் மீலாத் போட்டிகளில் 'ஸலவாத் ஓதல்' என்பதையும் ஒரு போட்டியாகப் புகுத்தி நபி (ஸல்) அவர்கள்மீது அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளச் செய்யவும் அவர்களை நினைவில் வைத்துக் கொள்ளவும் தூண்டியமை என் மனதைக் கவர்ந்தது.

அது பற்றிச் சிந்தித்தேன். இலங்கையில் 'மௌலானா' என்ற பதம் நபிகளாரின் பரம்பரையில் வந்தவர்களைக் குறிக்கவே பயன்படுத்தப்படு கிறது. இவரது பெயரிலும் இவரது தந்தையின் பெயரிலும் 'மௌலானா' என்ற பதம் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பது என் சிந்தனையைக் கிளறியது. இவர்கள் 'மௌலானா' பரம்பரையில் பிறந்து வளர்ந்தமைதான் நபிகளாரின் புகழ் பாடுவதிலும் அவர்களை நினைவில் வைப்பதிலும் அதிக ஈடுபாடு காட்ட அவர்களைத் தூண்டிய காரணிகளில் ஒன்றாக இருக்கும் என நினைத்தேன்.

என்னைக் கவர்ந்த மற்றோர் அம்சம், அவர் எப்போதும் அல்லாஹ்வை மனதில் வைத்திருப்பதற்காக 'திக்ரு'களிலும் 'அவ்ராது'களிலும் ஈடுபட்டமையாகும். அவரது இச்சிந்தனை உலகியல் நிகழ்வுகளிலும் ஆதிக்கம் செலுத்தியது.

கேகாலை மாவட்ட கல்வி அதிகாரியாகக் கடமையாற்றும் காலப் பகுதியில்தான் திப்பிட்டிய நகரத்தில் இருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் உள்ள 'கடபேரிய' எனும் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்குப் பெயர் சூட்டுவது பற்றி ஊர் மக்கள் கலந்துரையாடும்போது ஊர்ப் பெயரை இணைத்து பாடசாலைக்குப் பெயர் சூட்டுவதைத் தவிர்த்து, அல்லாஹ்வின் பெயருடன் இணைத்து பெயர் சூட்டுமாறு ஆற்றுப்படுத்தினார். அக்கருத்தை அக்கிராம மக்கள் ஏற்றே அப்பாடசாலைக்கு 'அல்-ஜலால் வித்தியாலயம்' என்று பெயர் சூட்டினர். அந்நிகழ்வை அக்கிராம மக்கள் இன்னும் நினைவில் வைத்துள்ளார்கள்.

தான் பிறந்து வளர்ந்த ஊரிலும் தான் தொழில்புரிந்த இடங்களிலும் தொழிலுடன் சேர்த்து இஸ்லாத்தை உயிர்ப்பிக்கும் பணியையும் பழீல் மௌலானா செய்துள்ளார் என்பது மகிழ்வைத் தருகிறது.

அல்லாஹ் அவருக்கு குறைவில்லாத மறுமைப் பாக்கியங்களை நிறைவாகவே கொடுப்பானாக!

***(23.12.2019)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலனறுவை மாவட்டத்தில் கல்விப் பணிபுரிந்த மர்ஹூம் பழீல் மௌலானா

**அஷ்ஷெய்க். எஸ்.எச். ஆதம்பாவா (மதனி), MA**
**தலைவர், அம்பாரை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா**

*பின்தங்கிய பகுதிகளில் அர்ப்பணிப்புடன் பணிபுரியும் பல அதிகாரிகளின் சேவைகள் அதிகம் மதிக்கப்படுவதில்லை. மாறாக, வளர்ச்சியடைந்த பகுதிகளில் பணிபுரிவோர் அதிகம் சேவையாற்றுவதாக பாராட்டுக்களைப் பெறுகின்றனர். பொலனறுவை மாவட்டத்தில் தமிழ்–முஸ்லிம் பாடசாலைகளுக்கு 1973 தொடக்கம் 1974ஆம் ஆண்டு வரை அர்ப்பணிப்புடன் செயலாற்றிய வட்டாரக் கல்வி அதிகாரியாக மர்ஹூம் பழீல் மௌலானா மதிக்கப்படுகின்றார்.*

நாட்டின் பல பகுதிகளில் கல்விப் பணியாற்றிய மௌலானா அவர்கள் 1973இல் பொலநறுவை தமிழ்–முஸ்லிம் வட்டாரக் கல்வி அதிகாரியாக இடமாற்றம் பெற்று வந்தபோது நாங்கள் அன்று மாணிக்கம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம் என அழைக்கப்பட்டு வந்த இன்றைய பொலனறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தோம். எம்மோடு பாடசாலை விடுதியில் தங்கியிருந்த கல்வியதிகாரி மௌலானா அவர்கள் பிரதேசத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக எம்முடன் மனம் திறந்து பேசுவார். இம் மாவட்டம் கல்வியில் அபிவிருத்தி குன்றியிருப்பதை பற்றிக் கவலையடைவார்.

பொலனறுவை அக்காலத்தில் போக்குவரத்து குறைந்த ஒரு பிரதேசமாகும். ஒரு கல்வியதிகாரி பாடசாலையொன்றுக்கு மேற்பார்வைக்காக செல்வதாக இருந்தால் பல மைல்கள் சேறும் சகதியும் நிறைந்த பாதைகளை அவர் கால்நடையாகக் கடக்க வேண்டும். எனவே, கல்வியதிகாரிகள் அவ்வாறு சிரமப்படுவதைத் தவிர்த்து அதிபரை அவரது கந்தோருக்கு அழைத்து வருடாந்தப் பரீட்சையை முடித்து விடுவதுண்டு. ஆனால், மௌலானா அவர்களோ அந்த மோசடியைத் தவிர்த்து எந்தக் கஷ்டம் வந்தாலும் அதனை எதிர்கொண்டு உரிய பாடசாலைக்குச் நேரில் சென்று ஆசிரியர்கள், மாணவர்களைச் சந்தித்து வருவது அவரது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமடுவில்

வெலிக்கந்த சந்தியிலிருந்து 15 மைல் தூரத்தில் மகாவலி கங்கை அருகே திருகோணமடு என்ற ஒரு சிறிய முஸ்லிம் கிராமம் அமைந்திருந்தது. அங்கே சென்று வருவதற்கு எவ்வித போக்குவரத்து வசதியும் இருக்கவில்லை. ஏறாவூரிலிருந்து புகையிலை செய்வோரை ஏற்றி வரும் வாகனங்களிலேயே அங்கு செல்ல வேண்டும். கடைகள், தபாற் சேவை, ஆஸ்பத்திரி வசதிகள் அவ்வூரில் அப்போது கிடையாது. ஆனால், அங்கும் ஒரு பாடசாலை; அதில் சுமார் 30 மாணவர்கள். அப் பாடசாலையை தரிசிப்பதற்காக கல்வியதிகாரி மௌலானா சென்றார். அங்கு சென்றால் மறுநாள்தான் திரும்ப முடியும். அங்கு அதிபராகப் பணிபுரிந்தவர் கல்முனைக்குடியைச் சேர்ந்த பின்னாளில் கல்முனை ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராகப் புகழ்பெற்ற எம்.எம். இஸ்மாயில் அவர்களும் மௌலானாவும் இரவு உணவு உண்டபின் பாடசாலைக் கட்டடத்தில் மாணவர்களின் மேசைகளை அடுக்கிப் படுத்துக் கொண்டனர்.

இரவு வேளைகளில் அவ்வூரை யானைகள் ஆட்சி செய்வதும் விடிந்து எழும்பினால் சிறுவர்கள் யானைகளைத் துரத்திக் கொண்டு காட்டிற்குள் விடுவதும் நாளாந்த நிகழ்வுகள். ஓர் இரவு பாடசாலை மண்டபத்தில் இவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் வேளை வளவுக்குள் நுழைந்த யானை துதிக்கையால் தடவியபோது விழித்துக் கொண்ட இருவரும் தமது ஆடைகளை விட்டுவிட்டு போர்த்திய துப்பட்டிகளுடன் ஓடி அறையினுள் புகுந்த செய்தியை அடிக்கடி இலக்கியநயத்துடன் மௌலானா கூறுவார். இவ்வாறான ஆபத்தான பூமியிலும் அரும்பணி புரிந்தவர் அவர். இதேபோல் அவர் அனுராதபுர மாவட்டத்தில் அதிபராகப் பணியாற்றியபோது ஆற்றிய பணிகளையும் எதிர் நோக்கிய பிரச்சினைகளையும் வசதியீனங்களையும் எடுத்துக் கூறுவார். 'நூராணியா மௌலானா' என்று தன்னை அவ்வூர் மக்கள் அழைப்பர் எனவும் கூறுவார்.

மௌலானா அவர்கள் பொலனறுவை வந்த வேளை மாவட்டத்தில் சுமார் 20 தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளே இருந்தன. அவற்றில் க.பொ.த. சாதாரண தர பாடங்கள் போதிக்கும் பாடசாலையாக நாம் கடமை புரிந்த மாணிக்கம் பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம் மட்டுமே இருந்தது. கட்டுவன்வில, அளிஞ்சிப்பொத்தானை, தம்பாளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுங்காவில், மன்னம்பிட்டி போன்ற தூர இடங்களிலிருந்து மாணவர்கள் வந்து இங்கு கல்வி பயின்றனர். பின்னர் மௌலானா அவர்களின் காலத்திலேயே தம்பாளை, மன்னம்பிட்டி, பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் மாணிக்கம்பிட்டி மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் கல்வி அமைச்சராக கலாநிதி பதியுதீன் மஹ்மூத் கடமையாற்றியதால் மௌலானா பின்தங்கிய பகுதியில் கடமை புரிபவர் என்ற வகையில் இருவருக்குமிடையே நல்ல தொடர்புகள் ஏற்பட்டன. இன்று பொலநறுவை மாவட்டம் கல்வியில் சிறந்து விளங்குகின்றதென்றால் அதற்கு உரமூட்டிய பல கல்விப் பணிப்பாளர்கள் பின்னணியில் உள்ளதை அம் மாவட்டம் மறந்துவிடாது என நம்புகின்றேன்.

## பிறரை மதிக்கும் பண்பாளர்

பொலநறுவையில் ஆசிரியர் விடுதியொன்றில் ஒன்றாக இருந்து ஒரே மேசையில் உண்டு மகிழ்ந்த அந்த அன்புப் பிணைப்பு தொடர்ந்தது. என்னால் எழுதப்பட்ட 'மதீனாவின் மாண்புகள்' நூலின் வெளியீட்டு விழா சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அவ்விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட மௌலானா அவர்கள் உரையாற்றும்போது என்னைப் பற்றி நிறையப் பேசிவிட்டு, மதனிகளில் சிறப்பான இடம்வகிக்கும் இவருக்கு 'அல்-மதனியுல் பழீல்' என பட்டம் வழங்கி கௌரவிக்கின்றேன் என அறிவித்தார். அச்செய்தி பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெற்றது. பின்னர் அந்த நூல் வடகிழக்கு மாகாண சாஹித்திய மண்டலப் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டபோது மகிழ்ச்சியடைந்த மௌலானா அவர்கள் அதனைப் பாராட்டி மகிழ்ந்தார். அப்பாராட்டுப் பத்திரத்தையும் என்னிடம் கையளித்தார். இவ்வாறு பிறரை மதிக்கும் பண்பாளராக மௌலானா திகழ்ந்தார். எனது மதீனாவின் மாண்புகள் நூலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்ததைப் பாராட்டி அவரது இளைய புதல்வர் அஷ்ஷெய்க். அன்சார் பழீல் மௌலானா (நழீமி) அவர்களும் வாழ்த்துக் கடிதத்தை அனுப்பி வைத்தமையும் 2009-2013 வரை என்னோடு அவர் அம்பாரை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியமையையும் நன்றியோடு இக்கட்டத்தில் நினைவுகூர்ந்து தனயன் தந்தைக்கு செய்யும் நன்றிக் கடனை அல்லாஹ் அங்கீகரிக்க துஆ செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்று மன்பஉல்-கைறாத்தின் வளர்ச்சியில் பழீல் மௌலானாவின் பங்களிப்பு

**அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹனீபா (மதனி)**

*முன்னாள் தலைவர், அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள், நிறுவனங்களின் சம்மேளனம்*

பழீல் மௌலானா நாடறிந்த கல்விமான். தனது 33 வருட கால கல்வி சேவையை நிறைவு செய்த பின் அறபு கல்லூரிகளில் தனது பணிகளை ஓய்வின்றி தொடர்ந்தார். 1987ஆம் ஆண்டு அவர் அக்கரைப் பற்று மன்பஉல்–கைறாத் அரபு கலாசாலையில் நிருவாகச் செயலாள ராக இணைந்து கொண்டார். அக்காலத்தில் நான் அக்கல்லூரியின் ஆளுனர் சபையின் தலைவராக கடமையாற்றினேன். நிருவாகச் செயலாளர் என்றவுடன் அலுவலக வேலைகளுடன் தன்னை மட்டுப் படுத்திக் கொள்ளாமல் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டு வந்தார். தனது சேவைக்கால அனுபவத்தை கல்லூரியின் அபிவிருத் திக்கு முற்றிலுமாக பிரயோகித்தார்.

1990ஆம் ஆண்டு கல்லூரியின் வெள்ளி விழா பெரு விமர்சையாக இடம்பெற்றது. அது முப்பெரும் விழாவாக அமைந்தது. வெள்ளி விழா, முதலாவது பட்டமளிப்பு விழா, புதிய கட்டத் திறப்பு விழா என்பன ஒன்றுசேர இடம்பெற்றன. அக்கரைப்பற்று வரலாற்றில் அரசு அல்லாத தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடம் இதுவாகும். இது கிங் பைசல் மாணவர் விடுதி என அப்போது பெயரிடப்பட்டது. இவ்விழாவின் பிரதம அதிதியாக முன்னாள் சபாநாயகரும் இஸ்லாமிய விவகார அமைச்சரும் றாபிதத்துல் ஆலமுல் இஸ்லாமியாவின் இலங்கை ஸ்தாபகப் பிரதிநிதியுமான அல்ஹாஜ் எம்.எச். முஹம்மத் அவர்களும், சிறப்பு விருந்தினராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும் அதிதிகளாக எம்.ஏ. உதுமா லெப்பை (பா.உ), எம்.ஏ.அப்துல் மஜீத் (பா.உ) ஆகியோரும் கலந்து சிறப்பித் தனர். அக்காலத்தில் மக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாக இருந்த இவ்விழா வெற்றியடைவதற்கு தனது முழு செயற்திறனையும் ஆளுமையையும் உச்சபட்சம் பயன்படுத்தி மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியின் பௌதிகவள விருத்தியில் அவர் அரச பிரதிநிதி களுக்கும் கல்லூரி நிருவாகத்திற்கும் இடையே ஒரு ஒருங்கிணைப் பாளராக கரிசனையுடன் அவர் செயற்பட்டவிதம் இன்னும் என் மனக் கண்முன்னே நிற்கின்றது. கல்லூரியின் புதிய கட்டடமொன்றிற்கு கூரைத்தகடுகளை இட்டு பரிபூரணப்படுத்த முடியாமல் நிருவாகம் தடுமாறிக் கொண்டிருந்தது. இவ்வேளை, மௌலானாவினூடாக வீடமைப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்றை நிர்வாகத்தின் சார்பில் அனுப்பியிருந்தோம். அக்கடிதத்திற்கு பதில் வரவில்லை. உடனே நான் மர்ஹூம் மீரா அதிபருடன் மௌலானாவையும் அழைத்துக் கொண்டு நேரடியாக அமைச்சுக்குச் சென்றோம். எமது வேண்டுகோள் என்றோ அங்கீகரிக்கப்பட்டு தேவையான பொருட்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதை தெரிந்து கொண்டோம்.

நிருவாகச் செயலாளர் எனும் பணியில் இறைவனை முன்னிறுத்தி தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உயர் நோக்கம் அவரது அடி மனதில் இருந்ததை அவர் கங்கணம் கட்டி செயற்பட்டுக்கொண்டிருந்த பாங்கு வெளிக்காட்டி நின்றது. இக் கல்லூரியின் முப்பெரும் விழாக்கள் நடைபெற இருந்த சந்தர்ப்பத்தில் பெரும் நிதி நெருக்கடியை கல்லூரி நிருவாகம் சந்தித்தவேளை, இது நிருவாகத்தின் பொறுப்பு என எண்ணி விலகி நின்றுவிடாது இது தன்மீதும் சுமத்தப்பட்ட பணியும் கடமையும் என உணர்ந்து அந்நெருக்கடிகளிலிருந்து கல்லூரியையும் நிருவாகத் தையும் மீட்டெடுப்பதற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு இலகுவில் மறந்துவிட முடியாதது. எடுத்த காரியம் வெற்றிபெற உயிர், பொருள், ஆளுமை, மானம் என எல்லாவற்றையும் தியாகம் செய்து கல்லூரியை இன்னுமொரு கட்டத்திற்கு அவர் அழைத்துச்சென்றார்.

தனது ஆழ்ந்த அனுபவம் இஸ்லாமிய ஷரீஅத்தில் அவருக்கிருந்த பரிச்சயம் என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு அவர் பாட மெடுத்துக் கொண்டிருந்தார். மேலுமவர் ஒரு தந்தையைப் போன்று மாணவர்களுடன் நடந்து கொண்டார். அவரது கற்பித்தல் நடவடிக்கை கள் மூலம் பல மாணவர்கள் புடம் போடப்பட்டனர்.

அவரது பங்களிப்பினால் ஈராக் சதாம் ஹூசைன் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை முன்னெடுக்க இரு மாணவர்கள் புலமைப் பரிசில்கள் பெற்றனர். அவர்களுள் ஒருவர் தற்போது தென்கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் மற்றையவர் அரபு ஆசிரியராக வும் கடமையாற்றுகின்றனர். அம்மாணவர்களுக்கு எவ்வாறாவது அந் நுழைவினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என அம்மாணவர்களது பெற்றோர்கள், கல்லூரியின் நிருவாகிகள் என எவருமே எடுத்துக் கொள்ளாத முயற்சியை அவர் எடுத்த விதத்தினை நான் இன்றும் வியந்து நிற்கின்றேன். ஈராக் தூதுவராலயத்திற்கு செல்வது, கல்வி அமைச்சு, கலாச்சார அமைச்சு என்பவற்றின் படிகளில் ஏறி இறங்கு வது என முழு மூச்சாக அவர் இயங்கினார்.

தனக்குத் தரப்பட்ட வேலைப்பட்டியலும் குறிக்கப்பட்ட வேதனமும் என இல்லாமல் மிக விசாலமான பரந்த மனதுடன் அவர் தனது பணிகளை ஆற்றியதை கல்லூரி வளாகத்திற்கு அண்மையிலிருந்த பெற்றோர்கள் முதற்கொண்டு அனைவரும் அறிவர். அவரது பணியை கல்லூரி எல்லைச்சுவருக்குள் அவர் மட்டுப்படுத்திவிடவில்லை. அயலிலிருந்த பொதுமக்களுடன் ஊடாடி பழகிவிடுவார். மாணவர்கள், நிருவாகிகள் ஆகியோரது குடும்பத்தினருடனும் அயலவர்களுடனும் அவரது தொடர்புகள் விரிவுபெற்றன. இதன் பயனாக அக்கரைப் பற்றிற்கும் மருதமுனைக்கும் சில திருமண பந்தங்களும் ஏற்பட்டன.

காயிதே ஆஸம் முஹம்மதலி ஜின்னா, சேர் செய்யிது அஹ்மத் கான், ஆஸாத் மௌலானா போன்ற இந்தியத் தலைவர்களை நான் வாசித்திருக்கின்றேன், படித்திருக்கிறேன். அவர்களுக்குப் பின் நேரடியாக அவ்வாறான ஒரு தலைவராக தலையிலே தொப்பியணிந்த கல்விமானை நான் பார்த்தது பழீல் மௌலானா அவர்களைத்தான். என்னுடைய இளமைக் காலத்திலேயே மௌலானா அவர்கள் மீலாத் விழாக்களுக்கு சொற்பொழிவாற்ற வருகின்றார் என்றால் நான் ஆர்வமுடன் சென்று அவரது உரையைக் கேட்பது வழக்கம். தொப்பி அணிவது நாகரிகமானதா அல்லது நாகரிகம் குறைந்ததா என நமது சமூகம் சிந்தித்துக் கொண்டிருந்த அக்காலத்திலேயே ஜின்னா தொப்பியை அணிந்து "இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி" என அவர் பேசிக் கொண்டிருந்தார்.

***(30.03.2020)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கல்வி வாழ்க்கையில் மறக்க முடியாத பேராளுமை பழீல் மௌலானா

அல்ஹாஜ் எம்.வை.எம். முஸ்லிம் ஜே.பி
மத்திய மாகாண முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்,
முன்னைநாள் கல்வி நிபுணத்துவ ஆலோசகர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

எனது வாழ்வில் மறக்க முடியாத ஆசிரியப் பெருந்தகை பழீல் மௌலானா அவர்கள் குறித்து இச்செய்தியை எழுதுவதில் பேருவகை அடைகிறேன். மருதமுனை பெற்றெடுத்த அருந்தவப் புதல்வர்களுள் சிரேஷ்டமானவர் பழீல் மௌலானா அவர்களாவார். அவர் குறித்து இந்நினைவுக் குறிப்பினை எழுதுவதில் இறும்பூதெய்துகிறேன்.

மௌலானா அவர்களது குடும்பம் மருதமுனையின் முதன்மை யான குடும்பமாகும். அதன் கொடுமுடி ஐதுரூஸ் மௌலானா (பாக்கவி) அவர்களாவார். அரேபிய வழித்தோன்றலான அவர்களது ஆளுமையும் தோற்றப்பொலிவும் மக்கள் மத்தியில் பெருமதிப்பையும் செல்வாக்கினையும் அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. அவரது வாரிசு களான கிராம சபைத் தலைவர் செய்யித் ஸாலிஹ் மௌலானா, கிராமத் தலைவர் செயின் மௌலானா, மௌலவி பாரி மௌலானா, கல்வி அதிகாரி பழீல் மௌலானா ஆகியோர் மருதமுனை மண்ணுக்கு பெருமை தேடித்தந்த பெருமகன்களாவர்.

அல்மனாரில் எனது ஆசானாக பழீல் மௌலானா அவர்களுடன் ஆரம்பித்த உறவு அந்திமக் காலம் வரை தொடர்ந்தது. அல்மனாரில் அவர் ஆரம்பித்து வைத்த சாரணப் பாசறையில் வளர்ந்தவர்களுள் நானும் ஒருவன். அவரது ஆசிரியம் இன்றைய ஆசிரியப் பரம்பரை யினருக்கு ஒரு முன்னுதாரணம். தலைமை ஆசானாக அவரது பொழுதுகள் பாடசாலையை முன்னேற்றுவதிலும் மாணவர்களை நெறிப்படுத்தி உற்சாகமூட்டுவதிலுமே கழிந்தன. அவரது காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்பட்ட பாடசாலை ரேடியோ மாணவர்களான எம்மை பிரம்மிப்பூட்டியது. பின்னேர வேளைகளில் கல்வி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி அவர் எங்களது ஆர்வத்தைத் தூண்டும் பாங்கே தனியானது. மாணவர்களை இன்முகத்துடன் அன்புகூர்ந்து "மகன்" என்றே விளிப்பார். மூடிக் கிடந்த வாசிகசாலையை எமக்காகத் திறந்து வாசிப்பின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்தோதியவர். இலக்கிய ஆர்வலரான அவரது வழிகாட்டுதலில் கலையமுதம் என்ற பெயரில் கையெழுத்து சஞ்சிகையை நான் பத்திரிகையாசிரியராய் இருந்து வெற்றிகரமாக நடத்தினேன். 'தேனீ' எனும் புனைபெயரில் அவரும் பல ஆக்கங்களை எழுதி எம்மை மேலும் உற்சாகப்படுத்தினார். பின்னாளில் நானும் மருதூர்க் கொத்தனும் இணைந்து நடத்திய 'மருதம்' எனும் கையெழுத்து சஞ்சிகைக்கும் பேராதரவு தந்தவர் அவர்.

இலங்கையிள் கல்விப்பணிப்பாளர் நாயகமாக அக்காலத்திசல் கடமையாற்றிய ஆங்கிலேயரான H.W. ஹவுஸ் இன் அல்மனார் வருகையை சிறப்பிக்குமுகமாக ஆசிரியர்களான உதுமாலெப்பை, இப்றாஹிம், ஜீவரட்ணம், வெற்றிவேலு, சாமித்தம்பி இணைந்து நடத்திய பொருட்காட்சியில் சிறப்பு அதிதியாக பழீல் மௌவானா அவர்களும் கலந்து கொண்டார். அதிதிகளை சாரண அணியின் ட்ரூப் லீடராக நான் வரவேற்ற பள்ளிக்கால நினைவுகள் இன்னும் பசுமையாகவுள்ளன.

இஸ்லாமியப் பற்றாளரான அன்னார் மார்க்கத்திற்காக முன்னணியில் நின்று பாடுபட்டவராவார். 1950 களில் M.S. காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற வஹ்ஹாபிய எதிர்ப்பு மாநாட்டில் அன்னாரும் அவரது தந்தையார் மௌலவி ஐதுரூஸ் மௌலானா அவர்களும் மசூர் மௌலானா அவர்களும் முன்னணியில் நின்றதுடன் நான் உட்பட பல இளைஞர்களும் பழீல் மௌலானா அவர்களின் தூண்டுதலில் கலந்து கொண்டோம்.

1957ஆம் ஆண்டு கல்வி மந்திரி பதியுதீன் மஹ்மூத் அவர்களை கௌரவிக்குமுகமாக கம்பளை ஸாஹிராவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வில் நாடு தழுவியரீதியில் நூற்றுக்கணக்கான அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அவ்விழாவில், "பதியுஸ்ஸமாவாத்தி" எனும் திருக்குர்ஆன் வசனத்தை அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியுத்தீனுடன் தொடர்புபடுத்தி மௌலானா அவர்கள் பேசிய விதம் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தமை இன்றும் எனது நினைவில் இருக்கின்றது.

தனிப்பட்ட ரீதியில் என்மீது பேரன்பு கொண்டிருந்த அன்னார் எல்லோரது வெற்றிகளையும் அவரது வெற்றி போன்று பாவித்து மகிழ்பவர்; தன்னைத் தாழ்த்தி எம்மைப் பெருமிதமாகப் பேசும் பெருமனம் கொண்டவர். இன்றைய ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகளுக்கு முன்னோடியான அவரது வாழ்க்கை வரலாற்றினைத் தொகுப்பதானது நிச்சயம் நாளைய சந்ததிக்கும் முன்னுதாரணமாய் அமையுமென நம்புகிறேன்.

***(06.06.2020)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் கலாச்சாரமும் செழித்தோங்க தம்மை அர்ப்பணித்த செம்மனத்தான் மர்ஹூம் பழீல் மௌலானா

**எம்.சி.எம். அப்துல் காதர்**
**ஆசிரியர், அல்-மருதமுனை**

*மார்க்கக் கல்வி அல்லாத மற்றைய துறைகளில் கல்வி கற்பது ஹறாம் என்ற மனப்பாங்கு நிலவிய காலத்தில் துணிந்து நிமிர்ந்து தமிழ் கல்வி கற்றவர் ஆ.மு. ஷரிபுத்தீன் வாத்தியார் அவர்கள். அவரை முன் மாதிரியாகக் கொண்டு மருதமுனை ஊரின் பெருமக்களின் பிள்ளை களும் படித்தனர்; ஆசிரியர்களும் ஆயினர். அவர்களுள் பழீல் மௌலானா அவர்களும் ஒருவராவார்.*

*மௌலவி செய்யது ஐதுரூஸ் மௌலானா-ஆயிஷா உம்மா தம்பதிகளுக்கு 1920-12-31ஆம் திகதி பழீல் மௌலானா அவர்கள் மகனாகப் பிறக்கிறார்கள். மௌலானா அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை அல்மனார் மத்திய கல்லூரியிலும் உயர்நிலைக் கல்வியை கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் கற்றார்கள்.*

*1947ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்ற அவர்கள் ஆசிரியராக, அதிபராக, வட்டாரக் கல்வியதிகாரியாக நாட்டின் நாலா பக்கங்களி லும் கல்விச் சேவை புரிந்து தடம்பதித்தார். மருதமுனையின் இரு கண்களான அல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றி மருதமுனை மண்ணுக்கு அளப்பரிய சேவை புரிந்துள்ளார். அவர் மருதமுனையில் சமய, கலாச்சார மேம்பாட்டுக்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட ஒரு பெரியார் ஆவார். இவரது சேவை மனப்பாங்கை கருத்திற் கொண்ட சமூகம் அன்னாரை கௌரவப்படுத்தி பாராட்டியுள்ளது.*

*சின்னலெப்பை ஹாஜியார் ஆமினா உம்மாவை 1947ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட பழீல் மௌலானா அவர்களுக்கு நான்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் மக்களும் மூன்று ஆண் மக்களும் செல்வங்களாகக் கிடைக்கப் பெற்றனர். மௌலானாவின் பிள்ளைகள் சட்டத்தரணியாக, உயர் கல்விப்பீடங்களில் விரிவுரையாளராக, ஆசிரியராகப் பணிபுரிந்து வருவ தோடு எமது ஊரின் அரசியல், கல்வி மற்றும் சமய, பொதுப்பணிகளில் முனைப்புக் காட்டி வருவதும் நாம் அனைவரும் அறிந்த விடயங்க ளாகும். முதுமையிலும் திடகாத்திரமாக வாழ்ந்த இப்பெரியார், மருதமுனையின் முன்னோடிகளில் ஒருவராக வாழ்ந்து *93*ஆவது வயதில் *2013.02.25* அன்று காலமானார்.

அன்னாரின் மறுமை ஈடேற்றத்திற்காய் இரு கரமேந்திப் பிரார்த்திப்போம்!

***(அல்-மருதமுனை, அக்டோபர்-டிசம்பர் மலர்: 05 இதழ்: 12, 2015, பக்.11)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌலானா நீங்கள் பெருமகன்...

*இறைநேசச் செல்வர்*
*அபுல் கலாம் பழீல் மௌலானா ஹாஜியார்*
*மதுரமுனை!*
*உழுவல் அன்புடை உயர்*
*மௌலானா!*
*அபுல்கலாம் ஆஸாத்*
*இந்தியப் பெருமகன்!*

*எனதுயிர் பழீல் மௌலானா*
*சகலர் அன்பும் உறவும்*
*மதுரம்! மதுரம்!! மதுரம்!!!*

*மௌலானா நீங்கள் பெருமகன்..*
*என்னையும் ஒருவனாக்கி வாழ்த்துரைத்தீர்கள்*
*மக்கள் வாழ்த்தினால் வாழ்வேன் நீண்ட பன்னாள்..*
*உங்கள் மலரும் முகமும்! மனமும் மதுரம்!!*
*நயனம் மதுரம்! நாவும் மதுரம்!!*

*நட்போ அதிமதுரம்!!!*
*ஆக, உங்களை எங்கனம் வாழ்த்துவேன்.*
*நபி பெருமானார் சாற்றிய மறைவழி*
*நவின்ற மக்களை நல்வழிப்படுத்தி*
*இனப் பகை யற்று எல்லோரும் வாழ வாழ்த்துக! வாழுக!*
*கல்முனை வெளி வயல் காய்த்துக் குவித்த*
*நெல்லிலும் பொலிக பல்லாண்டு பலவென*
*வாழ்த்துவேன் யானே வாழ்த்துவேன் யானே!*

இஃது
அன்பு சொரியும் அன்பன்
**காசுபதி தெய்வநாயகம் ஜே.பி. (ஓய்வு பெற்ற அதிபர்)**
**'இமாலயம்' நற்பிட்டிமுனை,**
**கல்முனை**
***09.06.2003***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம்- 4**

**பழீல் மௌலானாவினால் பாடப்பட்ட கவிதைகள் சில...**

# அல்குர்ஆன் தீன்வழி நிற்போம்!

*முன் பதிந்த அழகிய சூரா பாதிஹா எழில் மிகு வசனங்கள் ஏழு*
*அல்குர் ஆனின் அடிநாதம் அவை தொல்புகழ் தொழுகையின்*
*தனித்துவமும் அதுவே*

*தீனின் இதயம் தொழுகையே ஆகும் ஈமானின் தொட்டிலும்*
*அதுவே அவனது அருள் பெற்று ஒளியுறச் செய்ய நாமும்*
*தொழுவோம் அவன் வழிநடப்போம்*

*அல்குர் ஆன் உண்மையின் வழிகாட்டி ஈருலகவாழ்க்கையின்*
*ஒளிவிளக்கு அதுவே உண்மையை ஓதுக்குவோர் விழிப்புலனற்றோர்*
*அன்னவர் இதயம் இறுகியே விட்டது*

*ஏ!மனிதா! உன் நிலைதான் என்ன? புவியினில் பரமனின் பிரதிநிதி*
*நீயே! அமரர்களுக் கடுத்த உயர்வும் உனதே! ஆயினும் நீயோ*
*பாவத்தின் புதையல்*

*உண்மையும் உறுதியும் உயர்நிலை பெற்றிட மென்மையாம்*
*மனோநிலை என்றுமே தேவை வாழ்வும் மறைவும் வல்லவன்*
*கரத்தில் வென்றிட எவரும் முயலவே கூடாது*

*உயர்நிலை உயர்குணம் உயர்வழி மூன்றும் துயர்நிலை போக்கி*
*தூயோன் அருள் சேரும் முஸ்லிமின் முழுவாழ்வும் மேலவன் தந்த*
*இஸ்லாமின் வழியில் இயைந்திட வேண்டும்*

*முத்துநபி முஸ்தபா முழுமையாய்த் தந்த சத்திய இஸ்லாம் நமது*
*ஸிராத்தாகும் ஹக்கனின் ஆணைக்கு அடிபணிந் தொழுகி மிக்கவே*
*இனித்திடும் பிர்தௌஸ் நுழைவோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் இதுவென சாற்றும் இஸ்லாம் முத்திபெற மக்களை அழைக்கிறது முஸ்லிம் மக்கள் மேதினியில் ஒன்றாகி இஸ்லாம் வகுத்த இறைவழி நடப்போம்

சொல்லிலும் செயலிலும் உண்மையே மிளிரட்டும் தொல்லை தரும் சுயநலம் தொலைந்தேபோகட்டும் இறையருள் பெற்று ஈருலக அன்பம் பெற மறையருள் போதனையை மகிழ்வுடன் பேணுவோம்

பாலைவனத்திலே இஸ்மாயீல் பாதம் பதிய சில்லெனப் பாய்ந்த ஸம்ஸம் எல்லையில்லா ஆண்டுகள் ஓடியும் வல்லவன் குதரத்தை வழுத்தியே நிற்கும்

மக்கநகர் மாநபியின் மண்குடிசை இல்லம் ஹக்கனது வஹீவளமாக வளர்ந்த பெருவீடு ஆமினாவின் அருமை மகன் அகமதுவின் மெய்மை மலர் மேனியரின் மேலான இல்லம்

நல்லன நன்றேநயம்பட முடியும் பொல்லாப்பிணிகள் பொசுங்கியே போகும் உண்மை ஒன்றே உலகினை வெல்லும் பொய்மை யாவும் பூதலத் தழிந்தே போகும்

சுத்தம் பரிசுத்தம் பக்தியின் அடிநாதம் பக்தி பொங்க பரவசம் சுரக்க ஓதுவோம் திருமறை நாளும் சாத்வீகம் துணைநிற்க வாழ்வோம் வாரீர்

பெண்மைக்கும் அனாதைக்கும் பேரன்பு காட்டிடு உண்மையை வென்றிட உறுதியாய் நின்றிடு பெற்றோர் உற்றோர் உறவினர் ஆயினும் மாற்று வழிநின்று சத்தியத்தை வென்றிடு

மானிடர்க்கோர் மணிவிளக்காம் முகம்மத் தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய் அல்லாவின் அருள்மறையை ஓதி ஓதி அஞ்ஞான இருளோட்டி மெஞ்ஞான மேற்றினார்

அல்குர்ஆன் கூறிடும் அசல்வழி நின்று பொல்லா உலகின் பிணியதைப் பொசுக்குவோம் சத்தியவேதம் சகத்தினில் நிலைக்க புத்தியைத் தீட்டி தீன்வழி நிற்போம்

**அபுல்கலாம் பழீல் மௌலானா**
**(THE HOLY QURAN- Mowlana A. Yusuf Ali *அவர்களின் ஆங்கில கவிதைகளின் தழுவல்)***
***அல்குர்ஆன் ஞானமணிக் கோவை, பக். 44***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளங்கி வரும் திருக்குர்ஆன்

வேதமாய் இஸ்லாமியருக்கு விளங்கிவரும் திருக்குர்ஆன்
விளைந்திட்ட வரலாறும் வியப்பிற்கே உரியதுவாம்
நாதமாய் கீதமாய் நற்கருணை அல்லாவின்
நற்றூதர் ஜிப்ரயீல் நயம்படவே எதிர்நின்று

தூய நல் நபிகள் நாயகம் தனக்கே
தொடரெனச் சொல்லிய இறைவனின் வாக்குகள்
மாயமாய் வந்தவை மறையாய் ஒளிர்பவை
மண்ணிலே மறையாது என்றென்றும் வாழ்பவை

பள்ளியிலே சென்றென்றும் படிப்பறியா திருந்தவர்க்கே
பாரினிற்கே அல்லாஹ்வின் மறை மொழிகள் ஓதுவதற்கே
உள்ளொளியாய்ப் பெற்றயிறை உணர்வேதான் காரணமாய்
உண்மையிலே அமைந்ததென உலகோரும் அறிந்தனரே!

இறையருட் செல்வமாய் இருக்கின்ற திருக்குர்ஆனை
என்றென்றும் அறநூலாய் வழிகாட்டும் திருக்குர்ஆனை
முறையாக மக்கட்குப் போதிக்கும் திருக்குர்ஆனை
மார்க்கமே இஸ்லாமிய வேதமாய் திருக்குர்ஆனை

அல்லாஹ்வே அருளிய அருள்மறை திருக்குர்ஆன்
அனைத்தும் போற்றிடும் அற்புதத் திருக்குர்ஆன்
எல்லாம் நிறைந்தே இலங்கிடும் திருக்குர்ஆன்
எடுத்திட எடுத்திடக் குறைந்திடாத திருக்குர்ஆன்

ஓதுவார் தமக்கெல்லாம் உயர்வு தரும் திருக்குர்ஆன்
உள்ளத்திற் பதிந்தே அமைதிதரும் திருக்குர்ஆன்
தீதெலாம் தவிர்த்திடும் வேத மொழித் திருக்குர்ஆன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குர்ஆன் பேரொளியாய் வையம் முற்றும்
திகழ்கிறது ஒளிபெற்று மகிழ்கிறது மணக்கிறது
அருமருந்தாய் மனநோய்கள் அகற்றியே வைத்து
அகிலத்தை ஓர் குடைக்கீழ் வாழ்ந்திடச் செய்கிறது

வேதமென விளங்குகின்ற திருக்குர்ஆன் தனையே
நாதமென நாள்தோறும் ஓதிடுவார் எல்லோரும்
பேதமற உலகிடையே பெருவாழ்வு பெற்றிடுவார்
பிறப்பொக்கும் எல்லா உயிருமென வாழ்வாரே

ஆண்டாண்டு காலமாய் அணுவளவும் மாற்றமின்றி
அகிலத்தில் நிலைத்திருக்கும் அறமறை திருக்குர்ஆன்
வேண்டுமெனச் சேர்க்கவோ வேண்டாமெனக் குறைக்கவோ
விதிகளை மாற்றவோ யிடந்தராது திருக்குர்ஆன்

உண்மை அன்பு உழைப்பு அமைதியினை
உலகிடை நல்கியே மக்கள் தமக்கெலாம்
நன்மை சத்தியம் சமத்துவம் சான்றுரை
நீதிகள் யாவையும் திருக்குர்ஆன் புகட்டிடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதூரின் முதல் ஆசான்

பு-புலவர் மணியின் மாலையை அணிந்தவர்

ல-இலக்கியக்கலையில் இறும்பூதெய்தியவர்

வ-வளம் மிகு அறிவாழியில் அரும் முத்தெடுத்தவர்

ர்-பூர்வீக பூந்தமிழ் கற்று இறும்பூ தெய்தியவர்

ம-மருதூர் மண்ணின் பெருமை மிகு முதலாசான்

ணி-தணியாத் தமிழ்த் தாக தீந்தமிழ்ச்செல்வன்

ஆ-ஆதம் தந்தை பெற்ற அரும் பெரும் முதல்வர்

மு-முத்தமிழ் சுவாமியின் முதல் முஸ்லிம் மாணவர்

ச-சந்ததி பெருக்கிய சற்குருநாதர்

ரி-பெரியோருள்ளும் பெருமைக்குரியவர்

பு-புகழ் உடம் பெய்திய மருதூர் மணி

தீ- தீதெதுவும்அணையாத் தீந்தமிச் செம்மலர்ச்செல்வர்

ன்-தன்னிகரிலா தனித்தமிழ் முஸ்லிம் கவிஞர்

அன்னாரின் ஆத்மா "பிர்தௌஸ்"சுவனத்தில்
நிலைபெற்று சாந்தியின்பம் அடையுமாக!

புலவர்மணியின் முதல் மாணவன்
அபுல்கலாம் பழீல் மௌலானா ஹாஜியார் ஜே.பி
முன்னாள் கல்வி அதிகாரி
மருதமுனை
**3.12.2000**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செனட்டர் மசூர் மௌலானாவின் அரசியல் வாழ்வை கௌரவிக்குமுகமாக மருதமுனை மக்களால் 24.02.2008 அன்று எடுக்கப்பட்ட இரட்டை விழாவின்போது வெளியிடப்பட்ட 'விடிவெள்ளி' சிறப்பு மலரில் இடம்பெற்ற ஓய்வுபெற்ற சுற்றுவட்ட கல்வி அதிகாரியும் மசூர் மௌலானாவின் சிறிய தந்தையுமான அல்ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஜே.பி அவர்களின் வாழ்த்துப்பா*

# சிறிய தந்தையிடம் இருந்து பெரிய மகனுக்கு

*மௌலானா விதானையாரின் மகிழ்வு நிறை*
*பொன்னான செல்ல மகன்*
*மஷூர் மௌலானா மருதூரின் மாண்பு மகன்*
*ஆங்கிலமும் தீந்தமிழும் தீதறக்கற்று*
*ஓங்கு புகழ் பெற்ற மண்ணின் மைந்தன் அவர்*
*ஊராட்சி மன்றத் தலைவனாய் தாயகம் தந்த*
*பேராளும் பொற்செல்வன் எம்பதியின் பேராளன்*
*காரிய கர்த்தனாய் கடமைமிகு செனட்டராய்*
*பேர்மிகு சொல்வேந்தராகி நாவலராய் புகழ் பெற்று*
*ஊரின் உயர்விலே ஊக்கமே காட்டி வந்தாய்*
*எழுபத்தைந்தாம் வயதினிலே இரட்டைவிழாக்கள்*
*வாழும் பதியினிலே கண்டுவளமாக இனிதே வாழ*
*சிறிய தந்தையாம் பழீல் மௌலானா ஆகிய நான்*
*தொழுது இருகரமேந்தி இறையை வேண்டுகிறேன்.*

**அல்ஹாஜ் அபுல்கலாம் பழீல் மௌலானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வின் நல்லருள் நேசர் அஸ்வர் ஹாஜியார்

ஏகனாம் அல்லாஹ்வின் அன்பான அடியான்
ஹம்தும் பந்தமம் புரையோடிய புகழேந்தி
மும்மொழிவல்லான் மகிமை மிகு கலையாசான்
அழகு ஒழுகும் ஆத்மீக அகமுடையான்
இஸ்லாம் ஈன்ற இகபர இறைத்தோழன்
வல்லவரும் நல்லவரும் எல்லோரும் ஏற்ற சொல்லாசான்
பார்புகழும் வல்லவன் அல்லாஹ்வின் நல்லடியான்
ஷாதிலியா கலீபா மௌலான ஐதுரூஸின் தில்மீத்
பாரி மௌலான மௌலவியின் பாங்கான தில்மீத்
அபுல்கலாம் மௌலானாவின் பக்திமிகு நண்பர்
நாவலர் மசூர்மௌலானாவின் இறுகத்தழுவிய தோழர்
ஹாஜி அன்சாரின் மும்மொழி அன்பர்
மாண்பு நிறை மருதூரின் தேனினுமினிய தோழர்
மகிந்தவின் தேர்வில் மிகுந்த நலம் பெற வாழ்த்துகிறேன்
இஃது அபுல்கலாமின் கல்பில் கனிந்த கவிதை...

***அபுல்கலாம் பழீல் மௌலானா***
***“பெனாஸிர் மன்சில்” மருதமுனை***
***2006.03.10***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Whole Hearted Greetings for Selfless Educational Services
Of All Ceylon Muslim Educational Conference Life time President

## S.L.M. Shafee Marikkar

S - Sun of the Educationalist
L - Luminous of Muslim Society
M - Magnanimity of Sri Lankan Muslims
S - Sensible Man
H - Honourary Servant
A - Admirable Leader
F - Faithful Servant
I - Ingenious Gentleman
E - Exceedingly Valuable servant
M - Monumental Faithful Leader
A - Amazement Author
R - Respectful Gentleman
I - Internationally Accepted Thinker
K - Kinsmen of Muslims Brotherhood
A - Authority of Wisdom
R - Religious Pandit

***Abul Kalam Faleel Moulana***
***01.12.2000***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி எஸ். முகையதீன் பாவா அவர்களுக்கு மருதமுனைப் பொது மக்களால் மனமுவந்தளிக்கப்பட்ட பாராட்டு விழாவின்போது ஓய்வு பெற்ற சுற்று வட்டக் கல்வி அதிகாரி அல்ஹாஜ் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா ஜே.பி. அவர்களால் வாசித்து வழங்கப்பட்ட

## வாழ்த்து மடல்

அல்ஹம்தென்றோதி எப்புகழும் வல்லவன் அல்லாஹ்வுக்கென உரைத்து
எல்லையிலா உயர் தகவனைத்தும் அல்லர்'வின் தூதருக்கென்போம்!

அல்மனார் அளித்த ஆரம்ப வழிகாட்டலில் பல்புகழ் பட்டிருப்பு மவியில்
A/L படித்து பாஸ் செய்த முகையதீன் பாவாவிற்கு
தொல்புகழ் பேராதனை BA பட்டமும் சூட்டியதே !
ஈருபத்துமூன்றாண்டுகளாக ஈராக் - ஈரான் நாடுகளில்
கருமமே கண்ணாகி உழைத்து மேதகு உயர் பதவி பெற்று
பெருமைமிகு ஜெனிவாவில் ஜயசீலனாய் உயர்ந்து
பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில்
ஏகியே ஏகனருள் பெற்று சேவை நலம் புரிந்து வெற்றி
வாகையே சூடி தொல்பொருள் பாரசீகம் சென்றவர் அவர்
ஏக உலகின் Chief UNHCR ஆக உயர்பதவி பெற்றனரே

மங்கையர் திலகம் செல்வி நிலூபர் M.Sc. பட்டம் பெற்று
எங்களூர் கோமகன் முகைதீன் பாவாவை
மங்களம் கமழும் மணவறைக்கழைத்து
தங்கமகன் பாவாவை தனதாக்கி கொண்டனரே!
முகைதீன்பாவாவை நல்லாள் நிலுபரும் வாழ்வில்
ஈகை பல புரிந்து மருதூரின் வாரிசுகள்
தோகை மயில்கள் ஐவருக்கும் சகோதரர்க்கும்
அழகிய அனைத்தும் கொண்ட நல்வாழ்வு அளித்தனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அல்குர்ஆன் அழகுறக்கூறும்*
*நற்பெயர் தாஹா நனிதே பெற்ற மகனும்*
*பொற்புவி புகழும் கத்தாபின் உமர் நாமமும் பெற்ற செல்வனும்*
*மருதூரின் முதல் மகன் முத்தான வித்து*
*முகைதீன் பாவா கக்கனருள் பெற்ற மக்களின் சொத்து*
*கடல் கடந்த சேவையின் கனிவான முத்து*
*கலாநிதி பட்டமும் கடின உழைப்பால் பெற்ற*
*அவர் நம்மூரின் வித்தகர் - வித்துவ சிரோன்மணி*

*வாழ்க! வாழ்க! பல்லாண்டு வளமுடன் வாழ்க!*
*ஆமீன் யாறப்பல் ஆலமீன்.*

***- மக்கள் மண்டபம், மருதமுனை***
***14.04.1999***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்ற சுற்றுவட்ட கல்வி அதிகாரி அபுல்கலாம்
அல்ஹாஜ் I.M.S.M. பழீல் மௌலானா J.P அவர்கள்
ஜே.எம்.எம். அப்துல் காதிர் அவர்களின் பெயரிலுள்ள
எழுத்துக்களைக் கொண்டே அன்னாரின் குணாம்சங்களையும்
திறமைகளையும் காண்கின்ற உத்தி.

# மருதூர் மண்ணின் மூதறிஞர்

ஜனரஞ்சக ஜயசீலர் அபதுல்காதிர்
மாண்புமிகு மருதூரின் மாதவம் பெற்றவர்
நல்வழி வாழ்ந்து நலம் பல புரிந்த நல்லவர்
முத்தமிழ் நுகர்ந்த முழு முதலறிஞர்
கசடறக் கற்றாங்கொழுகிய கௌரவர்
எம்மூர்க் கலையம் அல் மனாரீன்ற செம்மை மிகு அதிபர்
மக்களைப் பெற்ற மகராசன்
வித்துவக் கலையின் வியத்தகு விற்பன்னர்
அறிஞர்கள் போற்றும் அறிஞர் திலகம்
ஒப்பிலா முத்தமிழைத் தப்பிலாது போதித்தவர்
துய்ய தமிழ் ஆய்வில் துறைபோனவர்
நல்லோர்க்கினிமையாய் வல்லவனருள் பெற்றவர்
காரண காரியங்களை ஆய்ந்தறிந்த காவலர்
தித்திக்கும் தீந்தமிழ் கற்றுத் தரணி புகழ் பெற்றவர்
ஊர்புகழ் ஓதும் உத்தமோத்தமர்

## குறிப்பு

மேற்படி கவிதை 'இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி அறிஞர்' மர்ஹூம் ஜே.எம்.எம். அப்துல் காதிர் நினைவாக ஏப்ரல் 2000ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஒரு சிறிய நினைவுப் பேழை' என்ற நூலின் 32ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. மேற்படி நூல் பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ.எம். சித்தீக் அவர்களால் அவரது தந்தையின் நினைவாக தொகுக்கப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதூரின் மணிக்கவிஞன் மருதூர் கொத்தன்

அல்மனார் அன்புடன் வளர்த்த பெருமை மிகு கவிஞர்
ஆற்றல் ஆய்வு ஆளுமை நிறை பேராசான்

இன்பத் தமிழில் இனியன தந்த இஸ்மாயில்
ஈழ வள நாட்டின் இணையிலாக் கவியரசன்

உயிரினும் மேலாய் ஷம்ஸ் கலையகத்தை உயர்த்தியவர்
ஊக்கமது கைவிடாது உயர்தமிழில் ஆக்கம் பல தந்தவர்

எம்மினத்தின் புகழ் ஓங்க இன்பக்கலை படைத்தவர்
ஏற்றமிகு கவின் கலை படைத்த கலாபூசணம்

ஐயமறக்கற்று இன்பத்தமிழிலே இனிதே இணைந்தவர்
ஒப்புவமையற்ற ஓங்கு தமிழ் கவிமணி

ஓயாது கற்பித்து உத்தமர்களை உருவாக்கிய செம்மல்
ஔடதமென தீந்தமிழ்கற்று தொல் புகழ் பெற்றவர்

மருதூர் கொத்தனின் ஆசிரியரும்
முன்னாள் சுற்றுவட்டக் கல்வி அதிகாரியுமான
ஐ.எம்.எஸ்.எம். அபுல்கலாம் பழீல் மௌலானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூமா பாத்திமா ஹிஷாமா

வங்கக்கடல் வளமாகமோதும்
மங்கள மாண்பு நிறை மருதூரின்
தங்கநிற தரையினிலே
மங்கை பாதிமா ஹிஷாமா
நாங்களெல்லாம் ஏங்கி அழும் நிலையினிலே
சங்கை மிகு கபுறினுள்ளே
எங்களை விட்டேகி அமைதி பெற்றார் ஆகிறாவில்
அன்னை நூறுல் அய்னின் முதல் கொழுந்து
நன்னயம் பெற்று நலமே வாழ்ந்து மகிழ்ந்தது
புன்னகை பொழிந்து பேறு பல பெற்று
ஜன்னத் வாழ்வின் நன்னயம் பெற்று
2004.06.20 ஞாயிறு நாளில் சன வெள்ளம்
அல்லாஹ்வின் பால் இருகரமேந்தி துஆ ஒத
மௌலவி ஹஸனின் மங்கை ஹிஷாமா
தௌஹீத் செம்மல் ஜிப்ரி ஆசானின் தெய்வத் துனைவி
பாதிமா ஹிஷாமா ஜன்னதுல்
பிர்தௌஸில் ஜயமுடன் வாழ அல்லாஹ் அருள்வாயாக
ஆமின்!

**21.06.2004** மூத்தவாப்பா பழீல் மௌலானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனை அல்-ஹம்றா

மருதூர் மண்ணின் முன்னாள் மகளிர் கலையகம் அல்-ஹம்றா
பெருமை பெற்ற கலை ஒளிபரப்பு இந் நாள் கலையகம் அல்-ஹம்றா
தூய்மை மேன்மை ஆளுமை கோலோச்சும் கலையகம் அல்-ஹம்றா
ஆசான்கள் அழகுறப் பணிபுரியும் கலையகம் அல்-ஹம்றா
பரீட்சைப் பேறுகள் பளிச்சிடும் கலையகம் அல்-ஹம்றா
அணியணியாய் அறிவுப்பணி அலை வீசும் கலையகம் அல்-ஹம்றா
அல்லலின்றி அமைதிபெற்ற கலை ஒளிவீசும் கலையகம் அல்-ஹம்றா
பெற்றோர் மற்றோர் பெரிதும் போற்றும் கலையகம் அல்-ஹம்றா
அணையாக் கலங்கரையாய் அறிவொளி பரப்ப வாழ்த்துகிறேன்!

**'இறைநேசச் செல்வர்'**
**அபுல்கலாம் பழீல் மௌலானா ஹாஜியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.06.2003 இல் ஏ.எல். மீரா முகைதீன் அதிபர் அவர்களுக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழாவில் வித்தியாஜோதி என பழீல் மௌலானா அவர்கள் அவருக்கு பட்டம் சூட்டி வழங்கிய வாழ்த்து மடல்**

# வித்தியாஜோதி

*ஏ.எல். மீரா முஹைறதீன் பீஏ அவர்கள்*
*ஓய்வு பெற்ற அல்மனாரின் அதிபர்*
*உங்கள் தந்தை அஹ்மது லெப்பை*
*ஊர் புகழ்ந்த வைத்திய மேதை*
*ரஹ்மத் பெற்று நல்வாழ்வில்*
*நயம்பட வாழ்ந்தவர்*
*புத்தியும் ஞானமும்*
*மெத்தகு பெற்ற மேன்மையாளர்*
*திக்கு திசை பெற்றுயர்ந்த புதுமையாளர்*
*பைங்காளைகள் பெற்று கல்வி*
*ஞானமூட்டியவர்*

*மீகாமன் மீரா முகைதீன் மினுக்கிய*
*மன்புகழ் அல்மனார்*
*ராத்திரியும் பகலும் காத்திரமாக*
*கல்விச் சேவை செய்தவர்*
*முகம் மலர்ந்து அகம் குளிர*
*முழு உறவு கொண்டு பழகுபவர்*
*ஹைய்யலல் பலாஹ் கேட்டு*
*இறையில்லம் ஏகுபவர்*
*தீன்வழி நின்று தீதறு சேவை*
*செய்யும் தகைமையாளர்*
*நன்னெறி வாழ்வில் நயம் பல*
*பெற்று நாளும் புகழுடன் வாழ்க!*

**அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர்

*கேள்வி ஆய்வில் கலங்கரை*
*கற்றாரை கனமாக்கி களிப்புற நேசிப்பவர்*
*முத்தான முத்தாக முழுமையும் பெற்றவர்*
*தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவர்*
*நலிவுறாது நல்லன நயம்பட புரிந்தவர்*
*யாதும் ஊரே யாவரும் கேளிர் என சேவைகள் செய்தவர்*
*நேர்மையும் நுண்ணாய்வும் நயம்பட பெற்றவர்*
*எம்மவர் ஏற்றிப் போற்ற எழிலுற வாழ்ந்தவர்*
*சுற்றம் பேணி சாதனை புரிந்த சான்றோன்*
*காரியப்பர் ஆய்வு காரியங்கள் செய்தவர்*
*அரிய பெரிய அறம்பல புரிந்த ஆய்வாளர்*
*ஐயம் திரிபற அழகாற்றல் அணிந்த அண்ணல்*
*எப்போதும் தப்பேதும் புரியா பண்பாளர்*
*பண்பும் பாசமும் பக்தியும் விசுவாசமும் பூண்டவர்*
*ஆர்வமும் ஆய்வும் நேர்மையும் அழகுற கொண்டவர்*

***அபுல்கலாம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா***
***கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் ஞாபகார்த்த நினைவு மலர்-2009***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதூரின் முதலாவது பெண் சட்டத்தரணி

*முனையூரின் முதல்வர் ஐயூப் ஹாஜியார்*
*சமாதானம் காக்கும் சனப் பிரியர்*
*ஐம்பெரும் கடமை அழகுறப் பேணுபவர்*
*மருதூர் மங்கை முதல் சட்டத்தரணி*
*அஹ்மத் நபிவழி வாழும் மங்கை மஹ்பூபா*
*பூங்கோதை ஷம்சுன் நஹார் பெற்றெடுத்த*
*பாவையர் திலகம் மஹ்பூபா*
*ரப்பனருள் பெற்ற ரபாய்தீன் கடிமணம் செய்த சட்டத்தரணி*
*பாவையர் திலகம் மஹ்பூபா வாழ்க*
*காய்தல் உவத்தலின்றி முதல் கன்னியுரை*
*நிகழ்த்தி பெருமை பெற்ற மஹ்பூபா*
*தீந்தமிழில் தூய உரை நிகழ்த்தி*
*சார்ந்தோரின் வாழ்த்தினைப் பெற்ற மகள்*
*நலமே நீடுழி வாழ்க*
*நன்னயம் பெற்று நாளும் வாழ்க*

***இறைநேசச் செல்வர் அபுல் கலாம்***
***பழீல் மௌலானா***
***05.10.2001***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கள் எலிய அலிகார் தேசிய பாடசாலையின் பவள விழாவை முன்னிட்டு முன்னாள் அதிபர் அபுல்கலாம் பழீல் மௌலானா ஹாஜியார் ஜே.பி. அவர்கள் பாடியளித்த**

# வாழ்த்துப்பா

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மா னிர்ரஹிம்*

*வல்ல பொரியோன் அல்லாஹ் வளமான நம் கள் எலிய நகருக்கு நாளுமே குறைவிலா எல்லையிலா நல்லருளை நல்கியே பல்வேறு துறையெல்லாம் பகிர்ந்தளிக்க வேண்டுகிறேன்.*

*மஸ்ஜித் சுப்ஹானி மாண்புநிறை மாமறையாம் இஸ்லாத்தின் இன்ப ஒளி வீசும் இறையில்லம் முஸ்லிம் ஜமாஅத்தின் முதுசொமாம் அம்மாளிகை விசுவாசிகளாம் முஃமீன்கள் வாழ்ந்துயர வரந்தருமே!*

*அறபு உலகம் அன்புடனே போற்றும் மாதர் அறபுக் கலலூரிக் கலையகம் அவனிதனில் மறை ஒளி பரப்பி மாண்புறும் அல்குர்ஆன் திறனுடன் ஓதும் தையலார் உலகில் திகழட்டுமே!*

*நாற்பத்தெட்டாண்டு முன்னர் நாமறிய நலிந்து மெலிந்து நொடிந்திருந்த வேளையிலே துணிந்து நம் மாணவ மணிகள் மீரிகமை நகர் தந்த மணியான பொற் கிண்ணம் வெண்றெடுத்து வந்தனரே!*

*ஐம்பத்து இரண்டினிலே அழகான விழாவினிலே நம்நாட்டு பிரதமர்கள் டீ.ஸ். டட்லி உடன் எம்மினத்து தலைவர் றாசிக் பரீத் துரையும் நம் கலையகம் வந்து வாழ்த்துப் பரிசில்கள் தந்தனரே!*

*கண்ணின் மணியான கள் எலிய கலையகத்தை எண்ணி எண்ணி ஏற்றம் பெற நாம் உழைத்தோம் புண்ணியவான்களும் பெற்றாரும் மற்றவரும் பண்ணிசை பாட அலிகார் அழகுறத் தோன்றியதே!*

*கம்பஹா மாவட்டக் கனி நிறை கள் எலிய கலையகத்தை நகரில் எம்மவர் போற்றும் எழிலுறு அலிகார் செம்மையாய் செழித்தோங்கு கலை ஒளிவீச எம்மிறை அல்லாஹ்வை நாளுமே வேண்டுவோமே!*

*கள் எலிய நகர் மாந்தரும் மாமனிதர்களும் சொலல்றகரிய செயலாற்றும் ஆசியச் செம்மலரும் பல்லாண்டு பறந்தோடியும் மறக்காது எந்தனிடம் பரிவுடன் வாழ்துரை கேட்டமைக்கு நன்றி சொல்வேன்.*

***2002.01.19***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு- 1**

***02.07.1966*** *இல் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழாவில் பழீல் மௌலானா அவர்கள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை*

# ஆசாரக் கோவை

ஆசாரக் கோவை என்னும் நூல் இராமநாதபுரம் கீழைக்கரை அப்துல் மஜீத் புலவர் அவர்களால் இயற்றப்பட்டது. 1902ஆம் ஆண்டில் அச்சு வாகனம் ஏறிய இந்நூல், கட்டளைக் கலிப்பாவினாலானது. எழுத்தெண்ணிப் பாடப்படும் நூறு கட்டளைக் கலிப்பாக்களைக் கொண்ட இந்நூல், புலவர் அவர்களின் தமிழ்ப் புலமையையும் மார்க்க சட்ட ஞானத்தையும் ஒருங்கே எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சன்மார்க்க வாழ்க்கைக்கு ஒழுக்கம் இன்றியமையாதது. உயர்ந்த வாழ்க்கையின் ஊன்றுகோலும் அதுவே. ஆசாரம் என்பது 'ஒழுக்கம்' என்னும் சொல்லின் மறுகருத்தே. ஒழுக்கங்களின் திரட்டுக்கு ஆசாரக் கோவை என நயம்பட பெயரிடப்பட்டுள்ள இந்நூல், தமிழ் உலகம் போற்றி நிற்கும் நூல் வரிசைகளுள் ஒன்றித்து விட்டது.

தமிழ் இலக்கிய நூல்களில் பல இடங்களில் 'ஆசாரம்' என்ற சொல் ஒழுக்கம் என்றே வழங்கப்பட்டுள்ளது. 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என குறள் கூறுகின்றது. நான்மணிக்கடிகை 'ஆசாரம் என்பது கல்வி' என நவில்கின்றது. 'அறியாத் தேயத்து ஆசாரம் பழியார்' என்று முது மொழிக் காஞ்சி எடுத்தோதுகின்றது. பெருவாயில் முள்ளியார் பாடிய 'ஆசாரக் கோவை'யில் ஆசாரம் ஒழுக்கம் என்றே குறிப்பிடப்படுகிறது.

அப்துல் மஜீதுப் புலவர் அவர்கள் இளமையிலேயே மார்க்கக் கலையைக் கற்றுத் தேர்ந்தார். கீழைக்கரையிலுள்ள பெரிய வித்தியா சாலைத் தலைமைப் பண்டிதர் குதுபுதீன் சாகிபு அவர்களிடம் தமிழ் பயின்ற காரணத்தால், தமிழிலும் இஸ்லாம் மார்க்கத்திலும் புலமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பியவராகத் திகழ்ந்தார். வித்தைக்கண் விருப்புடையாராய் இருந்த அப்துல் மஜீதுப் புலவர் அவர்கள் இளமையிலேயே புலமை நிரம்பிய வராய்க் காணப்பட்டார். புலவர் அவர்கள் தமது இளமைப் பருவத்தில் இயற்றிய பாடல்களை வித்தையிற் தோழராயிருந்த மாணவர்கள் பாராட்டினர். ஆசிரியத் தந்தையாரும் ஆர்வங் காட்டி ஊக்கங் கொடுத்தார்கள்.

இபுறாகீம் நயினார் என்னும் தக்காரை அடுத்து இலக்கண அறிவு பெற்றுக் கொண்ட இவர், முஸ்லிம் மக்களால் விரும்பிப் பாடப்படு கின்ற பண்ணூல் ஒன்றினையும் ஆக்கியுள்ளார். புலவர் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல் பாடிய செம்பொருள் கீர்த்த னங்கள் என்றும் வாடா மலர்களாகும். அன்பு ததும்பப் பாடியுள்ள 'கீர்த்தனை மஞ்சரி' எவரையும் கவருந் தன்மையது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரில் புலவர் அவர்கள் பாடிய கீர்த்தனை மஞ்சரியைக் கேள்வியுற்றதும் முகம்மதுத் தம்பி மரக்காயர் அதனை அச்சு வாகனமேற்ற ஆவல் கொண்டார். அது நூல் வடிவில் சிறிதாயமையுமென்றெண்ணிய போழ்துதான் மேலும் நூறு கட்டளைக் கலிப்பாவையும் புலவர் அவர்கள் பாடினார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் முகம்மதுத் தம்பி மரக்காயரை வாழ்த்துகின்றார். ஒவ்வொரு பாட்டும் திருமறை குர்ஆனின் கருத்தையும் திருநபி (ஸல்) அவர்களின் கருத்தையும் கொண்டு விளங்குகின்றது. எமது கிராமத் திலுள்ள எமது தந்தைமார்கள், தாய்மார்கள் நாவில் இன்றும் இந்தப் பாட்டுக்கள் மனனம் பண்ணப்பட்டு பல சந்தர்ப்பங்களில் படித்துக் காட்டுகின்றார்களென்றால் அந்நூலின் பெருமையை நாம் சொல்ல வேண்டியதில்லை.

இவர் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ள பதினொரு முஸ்லிம் புலவர்களும் இவர் திறனைப் பாராட்டியுள்ளார்கள். இவர்களில் நாகூர் மகா வித்வான் குலாம் காதிறு நாவலர், திரிசிபுரம் இலக்கண வள்ளல் பிச்சை இபுறாகீம் புலவர் ஆசிகளெல்லாம் இவரைச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்றன.

நூலாசிரியர் இஸ்லாமிய நீதி நெறிமுறைகளை இலகு தமிழில் நயம்படப் பாடி முஸ்லிம் பெருங்குடி மக்கள் வாழ்க்கையில் பின்பற்றி ஒழுக வேண்டிய ஒழுக்கநெறிகளைப் பெரிதும் வலியுறுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மக்கள் சமுதாயத்தில் கருத்துக்கள், ஒழுக்க நெறிகள், ஆசாரங்கள், பண்பாடுகள் ஒரு பொதுத் தன்மையோடு அமைந்திருப் பதை யாரும் ஏற்றுக் கொள்வர். கல்வி, போதனை, ஆசாரங்கள் மனித குலத்தைச் சீராக்கி செம்மைப்படுத்தி உயர்நிலைக்கு உந்திச் செல்வன வாயமைந்துள்ளதால் இவை நித்தியமானவையே.

ஓர் இனத்தின் ஆசார சீலங்கள் காலப் போக்கால் சீரழிந்து விடாது நிலைபெறச் செய்த பெரும் பணியைப் புலவர்கள், ஆசிரியர்கள் காலத் துக்குக் காலம் செய்து வந்துள்ளார்கள். அவர்கள் தோற்று வித்த உன்னதப் படைப்புக்கள் நூல் வடிவாயமைந்து மக்கள் சமுதா யத்தை நேர்வழியில் நடத்திச் செல்கின்றன.

அறியாமையை அகற்றி, ஆத்ம விடுதலைக்கு வழிகாட்டி, நெறி கெட்ட வாழ்க்கைப் போக்கினைத் தடுத்து நிறுத்தி, மனிதன் தன் உயர் இலட்சியத்தை அடைவதற்குரிய ஆசாரங்கள் என்ன என்பதையே 'ஆசாரக் கோவை' கூறுகின்றது எனச் சுருக்கமாகக் கூறலாம். ஒழுக்க நெறிகளையும் வாழ்க்கை முறைகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறித் தனது இஸ்லாமிய சகோதரனையும் சமயநெறியோடு வாழ்பவனாகக் காண ஆசைப்படுகிறார் அப்துல் மஜீத் புலவர்.

'அணுக்களின் திரட்சியே அண்டங்களின் வளர்ச்சி' என்பது போல், உன்னத கருத்துக்களின் திரட்சியே இலக்கியமாக அமைந்து விடுகிறது. கருத்துக்கள், உபதேசங்கள் போதனைகளாக மாத்திரம் தனியே இலக்கியமாகாது. இங்கு கருத்துக்களே பேசப்படும் பொருளாக, நீதிகளே போதனைகளாக அமைந்துள்ளமை இந்த ஆசாரக் கோவை யின் பெருமையை உயர்த்துவதாக அமைந்துள்ளது. பிற இனத்தவரும் சமயத்தவரும் ஆசாரக் கோவையின் இலட்சியத்தை உயர்ந்த இடத்தில் வைத்து மதிப்பீடு செய்துள்ளனர். ஆகவே, எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியது இந்நூல்.

அப்துல் மஜீத் புலவர் அருளிய ஆசாரக் கோவையில் உள்ள சில பாடல்களை இங்கு கையாள விரும்புகிறேன். நூலின் இரண்டாவது பா வருமாறு:

**'ஆதி தன்னை நினைத்திட வேண்டுமே**
**அகத் துண் மாய்வை நினைத்திடவேண்டுமே**
**நீதியாகவேதான் செயு நன்றியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பை விட்டு மறந்திட வேண்டுமே
வாதியாய்ப் பிறர் செய்யவ நன்றியை
மனம் பொறுத்து மறந்திட வேண்டுமே.'

"ஆதியை அதிகமதிமாக ஞாபகம் செய்து கொள்ளுங்கள்." இது அல்குர்ஆனின் போதனை. "ஆதிபகவன் முதற்றே உலகு" "நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் வள்ளுவர் வாக்கும் நோக்குதற்குரியதே. மனிதனையும் மற்றும் ஜின்களையும் இறைவனான அல்லாஹ்வை வணங்குவதற்கே படைத்தேன் என அல்லாஹ் கூறுகின்றான். "ஆதி தன்னை நினைத்திட வேண்டுமே" என ஆசாரக் கோவை கூறுவதை நோக்கின், மனித வாழ்வின் தலையாய கடமை இறைவணக்கமே என்பது வலியுறுத்தப்பட்டு விட்டது.

"அக்திறூ திக்ரல் மவுத்" "மரணத்தை அதிகமாக ஞாகப்படுத்திக் கொள்ளுங்கள்" என நபிமணி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அகத்துள் மரணத்தை எண்ணிப் பார்த்தல் பாவச் செயல்களில் நின்றும் மனிதனைத் தடைசெய்கின்றது. இதனை வலியுறுத்தவே புலவர் அவர்களும் "அகத்துள் மாய்வை நினைத்திட வேண்டுமே" என அழகுறக் கூறி நிற்கின்றார்.

"நீங்கள் செய்த தான தருமங்களைச் சொல்லிக் காட்டுவதன் மூலம் கெடுத்துவிட வேண்டாம்" என்னும் திருக்குர்ஆன் வசனமும் "இடக்கரம் அறியாது வலக்கரத்தால் தருமம் செய்" என்ற நபிகள் வாக்கும் "இரகசியக் கொடை கொடுப்பவன் மனிதப் புனிதன்" என்னும் நீதி மொழியையும் நன்கு அறிந்த புலவர் பெருமானும் 'நீதியாகவே செயு நன்றியை நினைப்பை விட்டு மறந்திட வேண்டும்' என்று கூறுகிறார்.

'மனிதனுக்கு நன்றி செய்யாதவன் இறைவனுக்கு நன்றி செய்ய மாட்டான்' என்ற நபிமொழியை மனதில் கொண்டு "வாதியாய்ப் பிறர் செய்யவ நன்றியை மனம் பொறுத்திட வேண்டுமே" என்று கூறுகிறார். போதனையோடு நில்லாது தமது நண்பரான தம்பிமா மரைக்காயருக்கு நன்றி தெரிவித்து சாதனையிலும் காட்டியுள்ளார். 'அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையான் சடையப்பன்' என்று கம்பர் கடையப்ப வள்ளலை என்றும் உலகம் நினைவுகூரச் செய்தது பொன்று அப்துல் மஜீத் புலவரும் நன்றிக் கடனை நலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றியுள்ளார். தம்மிலும் மேம்பட்ட கற்றோர் முன் நாவடக்கம் மிக அவசியம். மனித சமாதானம் அவன் நாவிலேயே தங்கியுள்ளது என்பது நபிமொழி. குறளுடையாரும் 'சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்று கூறுவதையே "திடமுறும் பெரியோர் சபைக்கேகினால் செப்பும் நாவினைப் பேணுதல் வேண்டுமே" என்று ஆசாரக் கோவையும் அழகாகக் கூறுகின்றது.

**"மடவியர் மனைக்கேகினால்**
**மாற்றிப் பார்வையைப் பேணுதல் வேண்டுமே"**

என்று புலவர் கூறும்போது "பிறர்மனை நோக்காத பேராண்மை" என்ற குறளின் கூற்றுக்கு இணையாக நிற்பதைக் காண்கிறோம்.

மார்க்க நெறியை அறிந்து, மனமாசு களைந்து, சற்குருவினிடம் மார்க்க தீட்சை பெற்று, ஆணவத்தை ஒழித்து உன்னத நற்பிரசையாக மனிதன் வாழ வேண்டும் என்னும் உயர்ந்த கருத்தை புலவர்,

**"மார்க்கம் தன்னை அறிந்திடவேண்டுமே**
**மனத் தழுக்கையகற்றிட வேண்டுமே"**

**"மூர்க்கமான குணத்தையடக்கியே**
**முழுது மஞ்சி நடந்திட வேண்டுமே"**

என்று அழகுறக் கூறியிருப்பது நோக்கற்பாலது.

அறிவுக் கருவூலமாய் விளங்கும் ஆசாரக் கோவையில் புலவர் அவர்கள் குற்றம் என்பது எது என்பதை விளக்குகின்றார். படித்தவர்கள் தாம் கற்ற கல்வியை மற்றவர்ளுக்கும் போதிக்க வேண்டுமென்பதும் கல்வியறிவிலாதவர்கள் கற்றவரிடம் சென்று படிக்க வேண்டும் என்பதும், கற்றபடி ஒழுக வேண்டுமென்பதும் புலவர் கூறும் கொள்கை யாகும். இதனையே புலவர்,

**'கற்ற றிந்தவர் கற்றறியார்க்குறக்**
**கற்பியா மலிருப்பதுங் குற்றமே**
**கற்றிலாதவர் கற்றறிந்தோரிடம்**
**கற்றிடாமலிருப்பதுங் குற்றமே**
**கற்றறிந்தவர் கற்றவை போலவே**
**கடமையாய் நடவாமையுங் குற்றமே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பதந்தனி வாய்ந்த முகம்மதுத்
தம்பிமா ரைக்காய சகாயனே'

எனக் குற்றங் களையும் நெறியை ஓதுகின்றார். பழமில்லாத விருட்சத்தையும் மழை பெய்யாத மேகத்தையும் உப்பில்லாத உணவையும் புலவர் அவர்கள் கீழ்க் காணும் பாடலில் பக்தி ஈகையில்லாத செல்வந்தருக்கும் புத்தியுடன் ஒழுகாத ஆலிமுக்கும் நாணமில்லாத பெண்ணுக்கும் உவமிக்கின்றார்.

பத்தி யீகையில் லாப்பணப் பாக்கியர்
பழமில்லா விருட்சத் தினைப் போல்வரே
புத்தியாய் வணங்காத்தகை ஆலிமும்
புனல்பெய்யா வெறுங் கொண்டலைப் போல்வரே
ஒத்த நாணமில்லா மடமங்கையர்
உப்பில்லா வெறு முண்டியைப் போல்வரே
தத்தமுள்ள தயாளமுகம்மதுத்
தம்பிமா மரைக்காய சகாயனே

பின்வரும் பாடலில் புலவர் அவர்கள் இறந்தும் இறவாதவர்கள் யாவர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். 'கல்விக்கு உயிர்கொடுத்தோன் என்றும் மரணிப்பதில்லை' என்பது நாயக வாக்கு. ஆகமங் கற்று உணர்ந்தவர்கள், ஏழைவரியைத் தருமங் கொடுத்தவர்கள், நீதி செலுத்தியவர்கள், சற்குண மக்களைப் பெற்றெடுத்தவர்கள், நூல்களை எழுதி வைத்தவர்கள் என்றும் இறவாதவரே எனப் பாடுகிறார்.

'முன்சொலாகமங் கற்றுணரந்தோர்களும்
முதலினைத் தருமங் கொடுத்தோர்களும்
மன்சொனீதி செலுத்திய பேர்களும்
மதிக்குஞ் சற்குண மக்களுள்ளோர்களும்
இன்சொனூற் களியற்றி வைத்தோர்களும்
இறந்துதந் தாமிறவா தவர் தாமரோ
தன் சொனித்தியம் பேணு முகம்மதுத்
தம்பிமா மரைக்காய சகாயனே

இவ்வாசாரக் கோவையைப் பாடிய அப்துல் மஜீத் புலவர் அவர்கள் தென்னிந்தியாவில் தமிழ் மணக்கும் சோலையிலே பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து தீந்தமிழ் மலர்த் தேன் பருகி கொழும்பு மாநகரில் தமது இறுதிக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். புலவரின் உறவு தற்செயலாகக் கிடைக்கப் பெற்ற கற்பிட்டி தம்பிமா மரைக்காயர் என்னும் பெருந்தகை இந்நூலை அச்சு வாகனமேற்றி வைத்தார். வித்தியாரத்தினம் எம்.எம். உவைஸ் அவர்களின் பெரு முயற்சியால் மீண்டும் தமிழ் இலக்கியச் சோலையிலே நறுமணம் வீசிக் கொண்டிருக்கும் இந்நூல், வாசிகசாலைகளிலும் பாடசாலைகளிலும் மத்ரசாக்களிலும் கருத்தரங்குகளிலும் இடம்பெறும் பொழுது ஆசாரக் கோவையின் அணிநடையை கல்வியுலகம் நன்கு அறியும் என்பது எனது கருத்து.

***இஸ்லாமிய தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள் (பக். 160-169) அரசு வெளியீடு, 1968***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு- 2**

# மர்ஹூம் மௌலவி ஏ.எம்.ஹஸன் (ஷர்கி)

**எம்.எச். அல்இஹ்ஸான்- விரிவுரையாளர்,**
**தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை**

*எனது மதிப்புக்குரிய தந்தை காலஞ்சென்ற அல்ஹாஜ் மௌலவி ஏ.எம். ஹஸன் (ஷர்கி) ஜே.பி அவர்களின் நினைவுகளை ஒரு கணம் மீள்பார்வை செய்வது ஒரு பெரிய பாக்கியமகக் கருதி இவ்நினை வேந்தலை உங்கள் மனக்கண் முன்பாக கொண்டுவர விரும்புகின்றேன்.*

*அன்னாரின் வாழ்வு ஒரு சரித்திரமாக உருவாகுவதற்கு அவருடைய வாழ்க்கையை 3 பெரும் பகுதிகளைாக வகுத்துப் பார்ப்பது மிகவும் பொருத்தம் என்று கருதுகின்றேன்.*

*1944ஆம் ஆண்டு பிறந்த அவர் மார்க்கக் கல்விக்காக கிழக் கிலங்கை அரபுக் கல்லூரியில் 1957ஆம் ஆண்டில் இணைந்து 1963ம் ஆண்டு ஒரு மௌலவியாக பட்டம் பெற்றார். இக்காலப் பகுதியில் அவருடய குறும்புத்தனம், தாய் தந்தையை இளம் வயதில் இழந்த நிலை, மார்க்கக் கல்வியும் அதனுடன் தொடர்பான விடயங்களும் தான் கற்றுக் கொண்ட மார்க்க விடயங்களை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தலும் பின்னர் திருமண பந்த பிரயத்தனமும் உடன்பட வைத்தலும் பெரும் போராட்டத்திற்கு மத்தியில் அல்ஹாஜ். பழீல் மௌலானா (ஓய்வுபெற்ற வட்டாரக்கல்வி அதிகாரி) அவர்களின் மூத்த மகளான சித்தி நூறுல் ஐன் (பேபி) என்று செல்லமாக அழைக் கப்பட்ட எனது அன்புத்தாய் அவர்களை 1966இல் மணமுடித்து 7 குழந்தை களுக்கு தகப்பனாக மாற்றம் பெற்று தான் மரணிக்கும் வரை வாழ்ந்த வாழ்க்கை ஒரு கட்டம். இதுவே அவருடைய வாழ்க்கையில் திருப்பு முனைகளை ஏற்படுத்தியதும் இன்பமான நேர்மறையான மேலும் பல்வேறு சவால்கள் நிறைந்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலமாக பரிணாமம் பெற்றது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் கட்டம். இதுவே விலாவாரியாகப் பேசப்பட வேண்டியது. மூன்றாவது 2005ம் ஆண்டு அவரது மறைவுக்குப் பின்பு மருதமுனையின் தலைமைத்துவம் மார்க்க சம்மந்தமான தீர்மானங்கள் அரசியல் தீர்க்கதரிசனம் மற்றும் குடும்ப வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கான சமரசம் போன்றவற்றிற்கு விடைகாண ஹஸன் மௌலவியின் வகுத்தரம் இல்லையேயென்று ஏங்கும் அங்கலாய்க்கும் மருதமுனை மக்களின் ஆதங்கம் மூன்றாம். கட்டம். ஒன்று இருக்கும்போது அதன் பெறுமானம் விளங்குவதில்லை. அது கைதவறிப்போன பின்தான் அதன் பெறுமதி விளங்குவது போல் இவர் இல்லாத இடைவெளி இன்றும் இருப்பதுதான் துரதிஸ்டவசமான மூன்றாம் கட்டம்.

அவரது மூத்த மகன் என்றவகையில் அவரை நான் பல கோணங்களில் பார்த்து ரசித்த மற்றும் கற்றுக் கொண்ட பல விடயங்களிலிருந்தும் ஒருசிலவற்றை பகிர்ந்து கொள்வது பொருத்தம் என்று கருதுகின்றேன். தான் ஒரு மார்க்கவாதியாக இருந்தும் முற்றிலும் மாறுபட்ட பல கதாபாத்திரங்களை தன்னகத்தே கொண்டிருந்தார். அவரிடம் இருந்த மிகப்பெரிய அறிவாற்றல், தீர்மானம் மேற்கொள்வதில் அவரிடமிருந்த விவேகமும், அரசியல், கலை உணர்வுகள், வாசிப்புத்திறன், பேச்சாற்றல், இலக்கியம், சாத்தியமான குடும்ப நடைமுறைக்கோவை, சமயோசிதம், நுட்பம், விளையாட்டு, வியாக்கியானம் என இன்னும் பல பொக்கிசமாக மருதமுனை மண்ணில் அவர் அகலக்கால் பதித்த மாமனிதன். இதனூடாக மருதமுனை மக்களிடம் வயது வித்தியாசமின்றி மக்களுடன் பழகுவதினூடாக மக்கள் மனதில் பெரும் இடத்தைப்பிடித்தவர் என்பது அவரின் ஜனாசா நல்லடக் கத்தில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கையே சான்று பகரும்.

மனிதன் என்ற வகையில் அவரிடம் எல்லோரிமும் இருப்பது போன்று பலமும் பலயீனமும் இருந்திருந்தது. ஆனால் பலவீனத்தை மலினப்படுத்தி அதை பலமாக மாற்றிக் கொண்டவர் அவர். மரணத்துக்கு ஒருபோதும் அவர் அஞ்சியதில்லை. மரணத்தறுவாயில் மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்த போது அவர் என்னிடம் சொன்னார். "நான் உயிருடன் இருக்கும் வரை எனக்கு மரணம் வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் எனக்கு வந்தால் நான் உயிருடன் இருக்க மாட்டேன்." அதனால்தான் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் உடல்நிலை சம்மந்தமாக வைத்தியரின் அறிவுரை கூறியும் கவனயீனமாக இருந்தாரோ என்னவோ. இன்று எம்மில் தனக்கு மரணம் வந்து விடுமோ என்று எண்ணி புசிக்காமல் இருக்கின்றனர். ஆனால் சாப்பாடே அஞ்சுமளவுக்கு கொஞ்சிச்சாப்பிட்டவர் அவர்.

அவரை ஒரு நல்ல கலைஞனாக நான் பார்த்திருக்கின்றேன். முன்னாள் தமிழக முதல்வரான கலைஞர் கருணாநிதியின் குரலில் பேசுவார். அவரது எழுத்துக்களில் உள்ள நல்ல சமூகக் கருத்துக்களை எமது சமூகத்திற்கேற்றவாறு படிப்பினையாகவும் குடும்பரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வுகளாக மாற்றி வெற்றி கொண்டவர். மார்க்க ரீதியான கொள்கைகளையும் விழுமியங்களையும் தற்கால சூழ்நிலைக் கேற்ப தர்க்கரீதியான படிப்பினைகளோடு ஒப்பிட்டு அதனை சமூகக் கருத்துக்களாக முன்மொழிந்து சுவாரசியமாகவும் நுட்பமாகவும் கையாள்வதில் வல்லவராகத் திகழ்ந்தார். தனது கருத்துக்களை தயவுதாட்சண்யமின்றி முன்வைக்கும் ஆற்றல், தைரியம் என்பன அவரிடமிருந்த சிறப்பம்சங்களாகும்.

மருதமுனையில் ஜும்ஆப் பிரசங்கங்களுக்கு பெயர்போன அவர் மக்களுடைய எண்ணங்களை நாடிபிடித்து அதன்பால் தனது கருத்துக்களை சொல்லும்போது ஜும்ஆப் பள்ளியிலிருந்த கொண்டே ரசித்தவர்கள் ஏராளம். இவரது ஜும்ஆப் பிரசங்கங்களுக்கு பள்ளி வாசலுக்கு முண்டடியடித்துக் கொண்டு வருபவர்கள் ஏராளம்.

அஞ்சா நெஞ்சம் கொண்ட அவர் தனியாக நின்று ஏனைய உலமாக்களின் உதவியுடன் ஏகத்துவக்கொள்கைக்காக மருதமுனை, கல்முனை, மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் இடம்பெற்ற வரலாற்றில் தடம்பதித்த வழக்குகளுக்குச் சென்று அதில் வெற்றி கண்ட பெருமை அவருக்குரியது. அதுமாத்திரமல்ல, விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டவர்களை விடுவிக்கும் பாரிய முயற்சியில் சளைக்காமல் சென்று முகம்கொடுத்து கடத்தப்பட்டவர்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்தவர். மேலும் சுனாமி அனர்த்தத்தின் பின்பு, நிர்க்கதியான மக்களின் அடிப்படைத் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காக வீதிமறியல் போராட்டம் நடாத்துவதில் முன்னோடியாக நின்று அவர்களின் துயரத்தில் தானும் பங்குபற்றியதை அச்சமூகம் மறந்துவிட முடியாது. மருதமுனை மக்களுக்கும் மருதமுனை சார்ந்த கல்வி பொருளாதார விளையாட்டு மற்றும் அரசியல் முன்னேற்றத் துக்காக கடுமையாக உழைத்தவர்.

முன்னாள் கல்முனை மாநகரசபை மேயர் காலஞ்சென்ற செனட்டர் எஸ்.இசட்.எம். மசூர் மௌலானா அவர்களுடன் தோளோடு தோள் நின்று அவரின் அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து கொண்டு பிரசாரப்பணிகளில் மேடைப் பேச்சுக்கள் என்று பல விடாமுயற்சிகளை மேற்கொண்டவர் அவர்.

இது இவ்வாறு இருக்க, அவர் தனது குடும்ப வாழ்விலும் சோரம் போகவில்லை. ஒரு நல்ல கணவராக நல்ல தகப்பனாக மற்றும் மனைவியின் தாய் தந்தை மற்றும் சகோதர சகோதரிக்கும் நல்ல மச்சானாக ஏன் அவருடைய மருமகன் மற்றும் மருமகளுக்கு நல்ல மாமனாராகவும் திகழ்ந்தார். தன்னுடைய மூத்த மகள் பாத்திமா ஹிசாமாவின் மறைவு அவருக்கு மிகவும் துக்கத்தையும் துயரத்தையம் கொடுத்ததை நான் அவதானித்தேன். வைத்தியத்துக்காக குறை வில்லாமல் நிறைய பணத்தை அவர் செலவு செய்து எப்போதும் அன்போடும் பாசத்தோடும் கவனித்தவர் அவர். தன் மகள் மரணித்து நல்லடக்கம் செய்யும் வரை அவர் அழுததை நான் பார்க்கவில்லை. ஆனால் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஜனாசாவை அடக்கம் செய்து வீடு வந்த பின்புதான் என்னிடம் கண்ணீர் மல்க ஹிசாமாவின் பிரிவை பகிர்ந்து கொண்டார். எதையும் பெரிதாக அலட்டிக்கொள்ளும் பண்பு அவரிடம் கிடையாது. அதற்கு மிகவும் முக்கிய காரணம் முதிர்ச்சியடைந்த அறிவு மற்றும் பக்குவமுமாகும். அவரை மேலதிக சிகிச்சைக்ககாக கொழும்பு அப்பலோ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது வாகனத்தில் சேலைன் ஏற்றப்பட்டே கொண்டு சென்றோம். அப்போது எனது தாய் அவரைத் தட்டி நான் யாரென்று தெரியுமா? என்று கேட்க அவர் "நீங்கள் தான் எனது மக்களைப் பெற்ற மகராசி" என்று சொல்ல எல்லோரையும் சிரிக்க வைத்த பெருந்தகை அவர். இருப்பினும் அவரின் மறைவு மனதில் ஆழமாக பதிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாடிக்கு வினாடி மனக்கண் முன்னால் தோன்றிக் கொண்டே இருக்கின்றது. அன்னாரின் மரணம் மாத்திரமல்ல, தொடர்ச்சியாக பெறுமதி வாய்ந்த உயிரிழப்புக்களை எமது பழீல் மௌலானா பவுண்டேசன் சந்தித்துள்ளது. பலமான அத்திவாரத்தில் முதல் கல் எனது சகோதரி பாத்திமா ஹிசாமா, எனது சாச்சா முஸ்தபா அதிபர், எனது தந்தை, எனது சகோதரர் அல்-றசான், மூத்த வாப்பா, எனது தாய் மற்றும் எனது மச்சான்களதன ஷர்மில், அம்ஜத் என்று தொடர்ச் சியான மரணங்கள். இவர்களின் மண்ணறை வாழ்வு மிகவும் ஈடேற்றம் பெற்றதாகவும் ஜன்னதுல் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கம் கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்திப்பதோடு பழீல் மௌலானா குடும்ப உறுப்பினர்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பு களோடு பலமாக அமைந்திருக்க எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய வேண்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்னிணைப்பு- 3**

# நட்புக்கு இலக்கணமான நற்றோழன் முஸ்தபா அதிபர்

**-அல்-ஹாஜ் எஸ்.எம். பீர்முஹம்மது, ஓய்வுபெற்ற அதிபர்**

*"உடுக்கை இழந்தவன் கைபோலவாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"*

என்னும் குறளடிக்கொவ்வ பல தசாப்தங்கள் என்னுடன் கலந்துறவாடி என் இன்பதுன்பங்களில் பங்கேற்று வந்த உற்ற தோழனை நினைவு கூர்ந்து சில வரிகள் வரையக் கிடைத்த வாய்ப்பை வழங்கிய வல்ல அல்லாஹ்வை வாழ்த்துகிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

**1944.02.21ம்** திகதி ஜனனமான அலியார் முஹம்மது முஸ்தபா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (தற்போதைய அல்மனார் மத்திய கல்லூரி) யில் பெற்றார். 1956ம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்வுற்று காத்தான்குடி மத்தியக் கல்லூரியில் தன் இடைநிலை கல்வியைத் தொடர்ந்து 1959ம் ஆண்டில் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பதிவு பெற்று GAQ தேர்வில் சித்தி பெற்றார். அன்றைய சூழ்நிலையில் பட்டப்படிப்பை அவரால் தொடர முடியவில்லை.

**1964.06.01** ஆம் திகதி மாணவ ஆசிரியராக நியமனம் பெற்று சம்மாந்துறை அல்-மர்ஜான் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய தையடுத்து **1967-1968** ஆம் ஆண்டுகளில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறி கொழும்பு ஹமீட் அல்ஹுசைனிய்யா கல்லூரியிலும் பின்னர் அல்மனார் மத்திய கல்லூரியிலும் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றினார். அடுத்து அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து **01.06.1989** இல் மூன்றாந்தர அதிபராக நியமனம் பெற்று மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் உதவியதிபரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபுல்கலாம் பழீல் மௌலானாவின் இரண்டாவது மகள் சித்தி தாஜுல் ஜன் அவர்களை மணந்து 03 ஆண்குழந்தைகளை பெற்றெடுத்தார். M.M.A. பஸீல் அவர்களில் முதல் மகன். இவர் கொழும்பு துறைமுகத்தில் பணிபுரிந்தார். இவரது இரண்டாவது மகன் M.M.A. நபீல். இவர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றுபவர். மூன்றாமவர் M.M.A. ஹபீல். இவர் ஆரம்பக் கல்வி ஆசிரியராக கடமையாற்றி தற்போது வலயக்கல்வி அலுவலகத்தில் சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப் பாளராக கடமையாற்றுபவர். இவர்கள் அனைவரும் தந்தை பெயர் சொல்லும் பிள்ளைகளாக வலம் வருபவர்கள்.

தன்சேவையில் பெரும்பகுதியை அல்மனார் மத்திய கல்லூரிக்கு அர்ப்பணித்த அவர், அங்கு சமூகக் கல்விப் பாடத்தை கற்பிப்பதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் விளங்கினார். அவரது திறமையான போதனையில் நிறைவுகண்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகங்கள் மூலம் பட்டம் பெற்று இன்றளவும் உயர் பதவியை வகித்து வருவது கண்கூடு.

நண்பர் முஸ்தபா அவர்களும் எனது சகோதரர் முகம்மது மூஸா அவர்களும் ஆரம்பகால வகுப்பு தோழராக இருந்தது தொடக்கம் புலமைப்பரிசில் பெற்று காத்தான்குடி மத்திய கல்லூரிக்குச் சென்றமை, முதல் ஆசிரிய நியமனம் பெற்றமை, அல்மனார், அல்-ஹம்றா பாடசாலைகளில் சேவையாற்றியமை போன்ற பல விடயங்களில் சமகாலத்தில் இணைந்திருந்ததால் அவர்களிடையே நெருங்கிய நட்புறவு காணப்பட்டது. இதனால் எனக்கும் முஸ்தபா சேர் அவர்களுடன் நட்புப்பூணும் சந்தர்ப்பம் கிட்டியது. அதனைத் தொடர்ந்து நாம் அல்மனாரில் பணியாற்றிய காலத்தில் 1989இல் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து நானும் அவரும் பிரதி மற்றும் உதவி அதிபர்களாக நியமிக்கப்பட்டோம்.

பின் 1994 தொடக்கம் 1996 இறுதி வரை நற்பட்டிமுனை அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட பிரிவுக்கான பிரதியதிபராக நானும் ஆரம்பப் பிரிவுக்கான பகுதித்தலைவராக அவரும் சேவையாற்றி ஒரே தினத்தில் இருவரும் ஓய்வு பெற்றோம். எனினும் அடுத்து வந்த ஒருவருட காலம் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி அதிபரின் விஷேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளின் மீது நாமிருவரும் க.பொ.த.சா. தர வகுப்புக்களின் கற்பித்தலை மேற்கொண்டோம்.

முஸ்தபா அதிபர் அவர்கள் கற்பித்தலில் மட்டுமின்றி மெய் வல்லுனர் விளையாட்டுக்களான சீனடி, கம்பு வீச்சு, சுருட்டுவாள் வீச்சு போன்றவற்றிலும் விஷேட ஆற்றல்களைக் கொண்டிருந்தார். மேலும் சித்த வைத்தியத்தைக் கற்று வந்த அவர் காலக்கிரமத்தில் அதனைத் தொடராது கைவிட்டு சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் நிர்வாகத்தில் இணைந்து மரைக்காராகவும் நம்பிக்கையாளர்களில் ஒருவராகவும் நீண்டகாலம் பணியாற்றினார். நான் பள்ளிவாசல் தலைவராகவும் கரைவாகு வடக்கு முஸ்லீம் சமாதானசபை, பிரசைகள் குழு என்பவற்றின் செயலாளராகவும் பணிபுரிந்த சுமார் 25 வருட காலத்தில் நண்பர் முஸ்தபா அதிபர் அவர்கள் தோளோடு தோள் நின்று, என்னை வலுவூட்டி எனது கடமைகளைச் செவ்வனேயாற்ற உதவினார். இக்கட்டான காலகட்டங்களில் காத்திரமான ஆலோசனைகளையும் உடலுழைப்புக்களையும் வழங்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுவார். இதனை மனதிற்கொண்டே இக்குறிப்புரைக்கு நட்புக்கிலக்கணமானவர் எனத் தலைப்பிட்டேன்.

மேலும் இவரது சிறப்பியல்புகளில் என்னை ஈர்த்தது ஒன்று தினமும் சுபுஹுத் தொழுகையை முடித்துப் பள்ளியிலிருந்து வெளியேறித் தன் ஈருருளியில் ஏறினால் தன்குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளை மின்னல் வேகத்தில் வலம் வந்து அவர்களின் நலன்களையறிந்து கொண்டு அங்குள்ள சிறுவர்களுக்கு எப்போதும் தன்னிடம் வைத்திருக்கும் இனிப்புக்களை வழங்கி அவர்களை மகிழ்விப்பார். இதனால் சிறுவர்களிடையே "டொபி மாமா" எனும் சிறப்புப் பெயரும் அவருக்குண்டு. "ஆரம்ப வகுப்பு மாணவர் சொல் அகராதி" எனும் நூலை எழுதி ஆரம்பக் கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்காக இந்நூல் மூலம் சேவை புரிந்துள்ளார். இப்புத்தகத்தை இலவசமாகவே மாணவர்களுக்கு வழங்கியமை ஈண்டு குறிப்பிடத் தக்கது. மேலும் அவரது சேவைகளின் முத்தாய்ப்பாக 'முருங்கையன்' சிறுகதை, 'மருதமுனையின் அருஞ் செல்வங்கள்' எனும் எழுத்தாவணமொன்றை யாக்கும் பணியில் ஈடுபட்டார். அதற்கென இக்கிராமத்துக்குப் பெறுமதிவாய்ந்த பங்களிப்புக்களை வழங்கிய தலைவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உத்தியோகத்தர்கள், சமய, சமூக சேவையாளர்கள், சாதனையாளர்கள், கலைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களைப் பற்றிய தகவல்களைத் தேடி ஆவணப்படுத்தலில் தன் உச்சபட்ச உடலுழைப்பையும் தன் ஊதியத்தின் பெரும்பகுதியையும் செலவிட்டார். எம்போன்ற அவரது நண்பர்கள் அவரது இப்பாரிய முன்னெடுப்புக்கு எம்மாலான ஒத்தாசைகளையும் பூரணமாக வழங்கி வந்தோம். ஆயினும் அவரது சடுதியான மரணம் அவரின் உழைப்பின் அறுவடையைப் பெற்றுக்கொள்ள இடம்தரவில்லை. அம் முயற்சிக்கு மீளுருக் கொடுத்து பூரணப்படுத்த அவரது உறவினர்களோ மாணவர்களோ முற்படுவார்களாயின் அது சிறந்ததொரு செயற்பாடாக அமையும்.*

*நண்பர் முஸ்தபா அவர்களின் சிறப்பியல்பு பற்றி எழுத நிறைய விடயங்களிருப்பினும் அது ஒரு நூலுருப் பெறுமளவிற்கு விரிவடைந்து விடும் என்பதால் நிறைவு செய்கிறேன். அவரது இம்மை வாழ்வின் இறுதிநாளை நினைக்கையில் என் இமைகள் நனைவடைவதனைக் கட்டுப்படுத்த இயலவில்லை. 10.06.2005 அன்று காலை வேளையில் என் உறவினர் ஒருவர் ஓடி வந்து முஸ்தபா சேர் மரணித்துவிட்டார் என என்னிடம் கூறினார். அச்செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. ஏனெனில் வழமைபோல் சுபஹ் தொழுகையை அடுத்து குடும்ப நலன் அறியும் அவரது காலைப்பயணத்தில் அன்றும் ஈடுபட்டதை நானறிந்தேன். அதனால் சில நிமிடங்கள் அதிர்ச்சியில் உறைந்து விட்டேன். பிறப்புக்கு முன்னரே இறைவனால் எழுதப்பட்டுவிட்ட இறப்புத் தீர்ப்பை யாரால் மாற்றியமைக்க முடியும்!*

*அவரது மவுத்து அவரைச் சாந்தோருக்கு எத்தகைய இழப்பை ஏற்படுத்தியதோ அவ்வாறே எம்மையும் சோகத்திலாழ்த்தியது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு சுவன வாழ்வை அளிப்பானாக!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமீருல் அன்சார் மௌலானா அவர்களின் திருமண நிகழ்வில் அல்ஹாஜ் ஐ.எல். எம். இஸ்மாயில் (சீப் பலஸ்) அவர்களுடன் பழீல் மௌலானா



ஜின்னா மௌலானா அவர்களின் பட்டமளிப்பு நிகழ்வில்



அமீருல் அன்சார் மௌலானா அவர்களின் பட்டமளிப்பு விழாவின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும் பதச் சொற்கள்

1. மஸ்ஜித்- முஸ்லிம்கள் தொழுமிடம்
2. மத்ரஸா- அல்-குர்ஆன் ஆரம்ப பாடசாலை
3. ஜனாப்- திருவாளர் என்பதற்கு சமமான அரபிப் பதம்
4. ஹாஜி/அல்-ஹாஜ்- முஸ்லிம்களின் இறுதிக் கடமையான ஹஜ் கடமையை நிறைவேற்றியவரைக் குறிக்கும்
5. காயிதே அஃலம்- சர்வதேச தளபதி
6. மர்ஹூம்- மரணித்த முஸ்லிம் நபரைக் குறிக்கும்
7. கிலாபத் - இஸ்லாமியப் பேரரசு
8. ஜும்ஆ- பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் விசேட பிரசங்கம்
9. புரக்டர்- சட்டத்தரணி
10. ஹஜ்- முஸ்லிம்களின் இறுதிக் கடமை
11. செய்யித்- இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வழித் தோன்றல்கள்
12. ஜமாஅத் - கூட்டமைப்பு
13. வஸிய்யத்- இறுதி விருப்பம்
14. ஹய்ய அலல் பலாஹ்- வெற்றியை நோக்கி வாருங்கள்
15. தலாக்கு- விவாகரத்து
16. அல்-குர்ஆன்- முஸ்லிம்களின் வேதநூல்
17. மக்காம்- இறைநேசர்களின் அடக்கஸ்தலம்
18. ஷரீஅத்- இஸ்லாமிய சட்டம்
19. ஆலிம்- இஸ்லாமிய அறிஞர்
20. ஸியாரத்- அடக்கஸ்தலத்தை தரிசித்தல்
21. மக்பரா- அடக்கஸ்தலம்
22. தரீக்கா- ஆன்மீக பாதை/ஆன்மீக இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23.** ஷாதிலீய்யா- அபுல் ஹஸன் ஷாதிலியினால் தோற்றுவிக்கப்பட்ட ஆத்மீக இயக்கம்

**24.** ஜம்இய்யதுல் உலமா/லஜ்னத்துல் உலமா- அறிஞர்களின் கூட்டமைப்பு

**25.** உலமா- அறிஞர்கள்

**26.** இமாம்- தலைவர்

**27.** குத்பா- பிரசங்கம்

**28.** ஹிஜ்ரி- இஸ்லாமியர்களின் வருடக் கணிப்பு

**29.** நிகாஹ்- திருமணம்

**30.** கலீபத்துஷ் ஷாதிலி- ஷாதிலியா தரீக்காவின் படிநிலையில் உயர் அந்தஸ்த்தில் உள்ளவர்

**31.** தோம்புதோர் - பதிவாளர்

**32.** மௌலவி- இஸ்லாமிய மார்க்க அறிஞர்

**33.** ஜிப்ரயீல்- வானவர்களின் தலைவர்

**34.** முறப்பி- பயிற்றுவிப்பாளர்

**35.** பாரகல்லாஹ்- அல்லாஹ் அருள்புரிவானாக

**36.** கன்ஸுல் அர்ஷ்- ஒரு மார்க்கக் கிரந்தம்

**37.** ஸாவியா- ஷாதிலிய்யா தரீக்காவின் மத்திய நிலையம்

**38.** சுன்னா- நபிவழி

**39.** யா லத்தீப்- இரக்கமுள்ளவனே

**40.** சுபஹ்- அதிகாலை தொழுகை

**41.** அஸ்மாஉல் ஹுஸ்னா- இறைவனின் திருநாமங்கள்

**42.** அக்கிராசனர்- அவைத் தலைவர்

**43.** தில்மீத்- மாணவர்கள்

**44.** ஸலவாத்- நபியவர்கள் மீது கூறப்படும் வாழ்த்து

**45.** தக்பீர்- அல்லாஹ் பெரியவன் என்று முழங்குதல்

**46.** தப்லீக் ஜமாஅத்- இஸ்லாமிய அமைப்பு ஒன்றின் பெயர்

**47.** முஃமின்- விசுவாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48.** தவ்ஹீத்- ஏகத்துவம்

**49.** அல்ஹம்து- அல்லாஹ்வைப் புகழ்தல்

**50.** கல்பு- இதயம்

**51.** திக்ரு- இறை தியானம்

**52.** ஜன்னத்துல் பிர்தவ்ஸ்- உயர்ந்த சுவனம்

**53.** ஆமீன்- ஏற்றுக் கொள்வாயாக

**54.** (ஸல்) - ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (நபி மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்பதன் சுருக்கம்

**55.** ஆகிரா- மறுமை

**56.** ஜன்னத்- சுவனம்

**57.** துஆ- பிரார்த்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்:


1. எனது டயரிக் குறிப்புகள்- ஐ.எம்.எஸ்.எம்., பழீல் மௌலானா (1976)
2. மருதமுனை மாண்மியம் (கையேடு)- ஐ.எம்.எஸ்.எம்., பழீல் மௌலானா (1997)
3. Wikepedia
4. அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, (1997)
5. தினகரன் 1950.10.16
6. ஐதுரூஸ் மௌலானா கையெழுத்துப் பிரதி (கடிதம்)
7. இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை- கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி (2010)
8. நேர்காணல்- பீ.எம். பீர் முஹம்மது ஆசிரியர்
9. நேர்காணல்- எஸ். ஏ. செய்யது இஸ்மாயில் மௌலானா (அதிபர்)
10. நேர்காணல்- பழீல் மௌலானா (2002)
11. எனது கிராமத்தைத் தேடுகிறேன், மருதமுனை மஜீத்
12. இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள், எம்.ஐ.எம். அமீன் (2010)
13. கல்முனை உள்ளூராட்சி நிருவாகம் 250 வருட வரலாற்றுப் பதிவுகள் ஏ.எம். பறக்கத்துள்ளாஹ் (2019)
14. மருதமுனையின் வரலாறு (ஆள்சார் கண்ணோட்டம்) முஹம்மதுத் தம்பி முகம்மது நெளபல், பாகம் 01 (2011)
15. கலங்கரை- அல்மனார் 75 ஆவது ஆண்டு நிறைவு மலர் (1987)
16 மாண்புறும் மருதமுனை- ஏ.ஆர்.அப்துல் சத்தார் (2015)
17. மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் வரலாறு, எம்.எம். நெளபல் (2013)
18. அல்-மருதமுனை (சஞ்சிகை) (1999 - 2014)
19. புத்தள முஸ்லீம்கள் வரலாறும் வாழ்வியலும்- எம்.எஸ்.எம். அனஸ் (2009)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பழீல் மௌலானாவின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட இரங்கல் உரைகள், துண்டுப் பிரசுரங்கள்

21. ஒப்பீட்டுக் கல்வி- திறந்த பல்கலைக்கழகம் (2002)

22. மர்ஹூம் சாபி மரைக்காயர், நஹியா

23. வித்தியாலயம்- இஸட்.எம். ஸன்ஹீர் (2019)

24. Diamond Jubilee '99, (Souvenir), Aligarh Maha vidyalaya, Kal Eliya (1999)

25. எழுவான், ஷம்ஸ் மத்திய கல்லூரி 35 வருட நிறைவு மலர் (1995)

26. எழுச்சிக் கதிர் (சஞ்சிகை) (2000)

27. மன்பஉல் ஹைறாத் வெள்ளி விழா மலர்

28. நேர்காணல், ஏ.எம்.ஏ. சமது (ஓய்வுநிலை அதிபர்)

29. Abdulla M.S.M, Holy Quran's Judgment, Part 2

30. நேர்காணல்- ஏ.ஆர்.செயினுலாப்தீன் (ஷர்க்கி) (2020)

31. நேர்காணல்- டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் (2020)

32. சமாதானம் (சஞ்சிகை)- ஈழபாரதி மருதூர் வாணர்.

33. இலங்கை முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட முன்னோடிகள், எம்.ஐ.எம். அமீன் (2010)

34. எனது நினைவுத் திரையில் அஷ்ரப்- எஸ்.எச். ஆதம்பாவா (2006)

35. மருதமுனையின் முத்து மசூர் மௌலானா- ஏ.எச்.எம். அஸ்வர் (2013)

36. 'விடிவெள்ளி' இரட்டை விழா மலர் (2008)

37. விமர்சனக் கட்டுரைகள்- எம்.ஏ.எம். சமீம் (1999)

38. எம் நினைவில் எம்.சீ. அஹமட் (2007)

39. M.H. Mohamed A Life Sketch- A.C.M. Saly (1996)

40. கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள்- எஸ்.எச்.எம். ஜமீல் (1998)

41. ஐம்பது ஆண்டு கால பொதுப்பணி சுருக்கக் கோவை (கையேடு) - ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா (1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. மருதமுனை வரலாறு- ஆ.மு. ஷரிபுத்தீன் (2009)

43. எச்.எஸ். இஸ்மாயில் ஒரு சமூக அரசியல் ஆய்வு- எம்.எஸ்.எம். அனஸ் (1995)

44. Encyclopedia of Islam, Kate Fleet, Gudrun Kramer, Denis Matringe, John Nawas, Everett Rowson (2010)

45. இலங்கை அரசியல் யாப்புக்கள், சி.அ. யோதிலிங்கம் (2004)

46. எங்கள் தலைவர் பதியுத்தீன், ஏ.டபிள்யூ.எம். ஹன்ஸீர் (1989)

47. அறிவோர் பார்வையில் ஏ.எம்.ஏ. அஸீஸ், எஸ்.எச்.எம். ஜெமீல், எம். அலி அஸீஸ் (2014)

48. Daily News (1964)

49. அல்குர்ஆன் ஞானமணிக் கோவை- ஐ.எம்.எஸ்.எம் பழீல் மௌலானா (1995)

50. இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுச் சிறப்பிதழ் (2002)

51. நேர்காணல்- ஏ.எல். மீரா முகைதீன் (ஓய்வுநிலை அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இஸ்லாமிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டிய பெரியவர் பழீல் மௌலானா. மருதமுனைக் கிராமம் கல்வி. ஆத்ம சிந்தனையில் முதன்மை வகித்து இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பெயரையும் கௌரவத்தையும் பெற்றுக்கொடுத்த பிரதேசம். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காலத்தில் கிழக்கு வாழ் மக்களின் அரசியல். பொருளாதார வளர்ச்சியில் முன்னின்று வழிநடாத்திய கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் போன்றவர்களுடன் இணைந்து உலக முஸ்லிம்களின் நலனுக்காக குரல் கொடுத்து தியாகம் செய்த பெரியார்களுள் பழீல் மௌலானாவின் நாமம் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டியவை. மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பானது காலத்தால் அழியாதது. இவரைப் போன்ற கல்விமான்கள் மருதமுனையில் உழைத்ததன் காரணமாகவே இன்று அக்கிராமம் கல்வியில் சிறந்து விளங்குகிறது.

1940களில் சுதந்திர உணர்ச்சி உருவாகிய வேளை. கிழக்குப் பிராந்தியத்திலிருந்து இந்திய சுதந்திரத்திற்காகவும் இலங்கை மக்களின் சுதந்திரத்திற்காகவும் குறிப்பாக இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு பாகிஸ்தான் வேண்டும் என்ற கோஷத்தை கேட் முதலியார் காரியப்பருடன் இணைந்து சிம்மக்குரலில் முழங்கியவர் மர்ஹூம் பழீல் மௌலானா. அதன் அடையாளமாக பாக்கிஸ்தான் சிற்பி முஹம்மது அலி ஜின்னாவைப் போன்று தொப்பி அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நாங்கள் மாணவனாக இருந்தபோது அவருடைய பேச்சைக் கேட்க அணிதிரள்வோம். அவரது பேச்சு. சிந்தனை அன்றைய இளைஞர்களுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்தது.

**முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர்**

பழீல் மௌலானா என்ற தமிழ் பேரறிஞர் மறைந்தார் என்ற செய்தி அவருடைய வாழ்வுப்பதியாகிய மருதமுனைக்கு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னார் பாரம்பரியத்தாலும். செல்வத்தாலும் புடம்போடப்பட்ட அறிஞர். மௌலானா குடும்பத்தைச் சேர்ந்த பழீல் மௌலானா பண்பு நலன்சார்ந்த தலைவர். இவர் வழியைப் பின்பற்றியவர்களுள் பிரபல எழுத்தாளர் மருதூர்க் கொத்தன். கல்வியியலாளர் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் ஆகியோர் அடங்குவர். கல்வியதிகாரிகள் மத்தியில் அன்று அவர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர். இன்றைய கல்வி அதிகாரிகளுக்கு அவர் ஓர் இலக்கணம். இன்று அவர் ஒரு தொல்காப்பியம்.அவர் ஒரு அருள் வரம் பெற்றவர்.

**முதுபெரும் கல்விமான் அருட் சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ. மத்தியூ**

பழீல் மௌலானா பவுண்டேஷன்
மருதமுனை

ISBN: 978-624-5409-00-6
9 786245 409006
#001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org